
இறைவாசநல்லூர்த் தலபுராணம்



மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்,
பெசன்ட் நகர், சென்னை-90.

புராணத் திருமலைநாதர் இயற்றிய

எலவானாசூர் என வழங்கும்

இறைவாச நல்லூர்த்தல புராணம்

Iraivāsa Nallur Thala Purānam

திருமுதுகுன்றம், வீரசைவ சுப்பராயதேசிகர்

இயற்றிய உரையுடன்

பதிப்பாசிரியர்

வித்துவான் சு. பாலசாரநாதன்

மகாமகோபாத்தியாய

டாக்டர். உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்

பெசன்ட் நகர், சென்னை-600 090

1984

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல்நிலைய வெளியீடு எண்–85

முதற் பதிப்பு—1984—1000 பிரதிகள்

விலை:– ரூ. 18.00

Published with the Financial assistance from the
Ministry of Education, Department of Culture,
Government of India, New Delhi

Printed at Kalakshetra Publications
Thiruvanmiyur, Madras-600 041

உள்ளுறை

பதிப்பாசிரியர் குறிப்பு

கருணை நாயகி விரத நாயகி கடவுள் நாயகியே
ஒருவர் நாயகி அறிஞர் நாயகி உலக நாயகியே
தரும நாயகி மறைகள் நாயகி சமய நாயகியே
பெருமை நாயகி இறைசை நாயகி பெரிய நாயகியே.
(இறைசைப் புராணம்)

தமிழன்னையின் அருந்தவப் புதல்வரான ஐயரவர்கள் தம் புகழுடம்பை நிறுத்தி மறைந்ததும் தமிழ்கூறும் நல்லுலகம் ஆழ்ந்த வருத்தமடைந்தது. அவர் தொகுத்து வைத்திருந்த இலக்கியச் செல்வம் வீண் போகாமல் எந்நாளும் தமிழுலகுக்குப் பயன்படவும், அவர் செய்துவந்த அரும்பணிகள் அவர்சென்ற முறையிலேயே தொடர்ந்து நடைபெறவும், அவரது கீர்த்தி என்றென்றும் விளங்கவும் ஏற்ற முறையில் அவர் பெயரால் ஒரு நினைவு ஆராய்ச்சிக்கூடம் அமைக்க வேண்டுமென்று அவரது அரும்புதல்வர் **எஸ். கலியாண சுந்தரையர்** அவர்கள் எண்ணி, கலாக்ஷேத்திரம் என்ற கலைக்கூடத்தை நிறுவி நுண்கலைகளை உலகறிய வளர்த்து வருபவருமான திருமதி **ருக்மிணி தேவியார்** அவர்களிடம் ஐயரவர்கள் சேகரித்துவைத்த ஏடுகளை அன்பளிப்பாக அளித்தார். அவற்றைக் கொண்டு 'மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்' என்ற பெயருடன் தோன்றி, **திருமதி ருக்மிணிதேவி** அவர்கள் ஊக்கத்தினாலும் ஆக்கத்தினாலும் இன்று அடையாறு ஆலமரம் போன்று பல்லாயிரக்கணக்கான நூல் களைத் தன்னகத்தே கொண்டு எல்லோருக்கும் பயன்படும் வகையில் வளர்ந்துகொண்டு வருகிறது.

நூல்நிலையம் தோன்றியது முதல் இற்றைய நாள்வரை வெளிவராத நூல்கள் எண்பத்து நான்கினையும், ஐயரவர்கள் பதிப்பித்த நூல்களை மறுபடியும் பதிப்பித்துக் கொண்டும் வரு கின்றது. பொருளாதாரப் பற்றுக்குறைவினால் ஐயரவர்கள் பதிப்பித்த புராணங்களையும், பிரபந்தங்களையும் மீண்டும் பதிப்பிக்க முடியவில்லை.

கடந்த இரண்டு ஆண்டுகளாகச் சுவடிகளிலிருந்து வெளி வராத நூல்களைப் பதிப்பிக்க மத்திய அரசு பொருளுதவி செய்து

வருகின்றது. அவ்வுதவியால் சென்ற ஆண்டு பதின்மூன்று நூல்களை நூல்நிலையம் தமிழுலகுக்கு அளித்தது. இவ்வாண்டும் அத்திட்டத்தின்கீழ் சில நூல்களைத் தமிழுலகிற்கு நூல்நிலையம் அளிக்க இருக்கின்றது. அவ்வாறு அளிக்கும் நூல்களில் **இறைவாச நல்லூர்த்தல புராணமும்** ஒன்று.

இந்நூலைப்பதிப்பிக்க 84-ஆம் எண்ணுள்ள கையெழுத்துப் பிரதி ஒன்றுமட்டும் இருந்தது. இதற்குரிய மூலப்பிரதி எங்கும் இல்லை. இப்புராண நூல் ''மறைந்துபோன தமிழ் நூல்களில் ஒன்று'' என்று மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் தாம் இயற்றியுள்ள ''மறைந்துபோன தமிழ் நூல்கள்'' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். வேறு சிலரும் மறைந்து போனதாகவே எண்ணி விட்டார்கள். ஆனால் மறைந்து போகவில்லை. ஐயரவர்கள் பெயரால் திருவான்மியூரில் இலங்கிவரும் நூல்நிலையத்திலிருந்து பீடுநடை போட்டுக்கொண்டு வெளிவருகின்றது.

இந்நூலின் ஆசிரியர் **புராணத் திருமலை நாதர்**. இந்நூலுக்குத் திருமுதுகுன்றம் வீரசைவ சுப்பராய தேசிகர் உரைகண்டுள்ளார்.

நூலின் உரையில் வடமொழிச் சொற்கள் நிரம்ப உள்ளன. ஆயினும் எல்லோருக்கும் புரியும் வகையில் உரை அமைந்துள்ளது. நூலாசிரியரைப் பற்றியும், நூலினைப்பற்றியும் முகவுரையின் மூலமாக ஓரளவு அறியலாம்.

நூலினைப் பதிப்பிக்க ஊக்கம் அளித்த நிர்வாகக் கமிட்டித் தலைவர் திரு. **எஸ். குகன்** அவர்களுக்கும், நூல்நிலையக் கௌரவப் பாதுகாவலர் திரு. **க. சுப்பிரமணிய** ஐயரவர்களுக்கும் நன்றி.

எலவானாசூரைப்பற்றி அறிய உதவி செய்த வலையப்பேட்டை திரு. **கிருஷ்ணன்** அவர்களுக்கு நன்றி.

நூலினைச் சிறந்த முறையில் அச்சிட்டுக்கொடுத்த கலாக்ஷேத்திர அச்சகத்தார் அவர்களுக்கு நன்றி.

மத்திய அரசு இப்பதிப்பு வெளிவருவதற்கு ஓரளவு மானியம் அளித்தமைக்கு நன்றி.

வித்துவான். **சு. பாலசாரநாதன்**
ஆராய்ச்சித்துறைப் பிரிவு
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல்நிலையம்

பெசன்ட் நகர்
15-3-1984

முகவுரை

திருநாம மஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
    தீவண்ணர் திறமொருகாற் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
    உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
    அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
    பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின் றாரே.
(நாவுக்கரசர்)

வேதத்தின் கருத்தைக் கதைமூலம் விளக்கத் தோன்றின இதிகாசமும், புராணங்களும். ஐயம் வரக்கூடிய இடங்களில் அரைகுறையாகப் படிப்பவர்கள் விபரீதப் பொருளைக் கூறக் கூடும் என்று வேதம் அஞ்சுகிறது. அவ்வச்சத்தை நீக்க இதிகாச புராணங்கள் உண்மைப்பொருளை விளக்கத் தோன்றின. பாமரர் களுக்கும் கதைகளின் மூலம் வேதார்த்தங்களை விளக்கும். நடுத்தரத்தவர்களுக்கு அக்கதைகளில் உள்ள நீதி மூலமாக வேத தத்துவத்தை விளக்கும். உயர்ந்தோர்களுக்கு வேதாந்தக்கருத்துக்களை விளக்கும்.

புராணம் என்ற சொல்லுக்குப் பழைமை என்பது பொருள். பழைமையாக இருப்பினும் புதிய பொருள்களையும் விளக்கும். ஒரு சிலர் புரா+நவம் என்று பிரித்துப் பழைமையும் புதுமையும் கொண்டது புராணம் என்று கூறுவார்கள்.

புராணகர்த்தா:— வேத வியாசர். இவர் துவாபரயுகத்தின் இறுதியில் வித்வத் பரம்பரையில் தோன்றி வித்தையைப் பரப்பி யவர். வசிட்டரின் கொள்ளுப்பேரர்; சக்தியின் பேரர்; பராசரரின் புத்திரர்; சுகரின் தந்தை; விஷ்ணுவின் அவதாரம். பதினெட்டு என்ற எண்ணிக்கையுள்ளதெல்லாம் வெற்றியைக் கொடுக்கக்கூடியதாகும். புராணம், உபபுராணம், ஸ்மிருதி, வித்யை, பாரதபர்வம், கீதை அத்தியாயம், பாரதப்போர், போரில் கலந்த அக்ஷௌஹிணி சேனை, மொழி, மற்றும் பலவற்றைப்

பதினெட்டாக அமைத்து வெற்றிபெற வழிகாட்டியவர் வியாசர். புராணத்தில் கலப்புக் கூடாது; எண்கணக்கு 18; சுலோகக் கணக்கு நான்கு லட்சம்.

புராணத்தின் தொன்மை:—
நான்கு வேதங்களிலும், உபநிஷத்துக்களிலும் புராணத்தின் சிறப்பு சொல்லப்படுகிறது.

''ரிச: ஸாமாநி சந்தாம்ஸி **புராணம்** யஜுஷா ஸஹ உச்சிஷ்டா ஜஞ்கிரே ஸர்வே திவி தேவாதிபி: ச்ரிதா:'' என்று அதர்வண வேதம் கூறுகின்றது. மேலும் அதர்வண வேத ஸம்ஹிதை புராணம், ருக், சாம, சந்த, யசுஸ் இவை ஒன்றாகத் தோன்றியவை என்று கூறுகிறது. புராணம் வேதங்களோடு தோன்றிய காரணத்தால் சதபதப்பிராம்மணம் புராணத்தை வேதம் என்றே குறிப்பிடுகிறது.

கோபதப்பிராம்மணம். ''ஏவம் இமே வேதா: நிர்மிதா: ஸகல்பா: ஸரஹஸ்யா: ஸபிராம்மணா: ஸோபநிஷத்கா: ஸேதிஹாஸா: ஸாந்வயாக்யாதா: **ஸபுராணா:** ஸஸ்வரா: என்று கூறுகின்றது.

சதபதப்பிராம்மணத்தில் ''ஸோயம் இதி கிஞ்சித் **புராணம்** ஆசக்ஷீத'' என்று கூறப்பட்டுள்ளது.

''ஜகத: ப்ராகவஸ்தாம் அநுக்ரம்ய ஸர்க்க பிரதிபாதகம் வாக்ய ஜாதம் **புராணம்**'' என்று **ஐதரேய பிராம்மணம்** கூறுகின்றது. **பிரகதாரண்யக** உபநிஷத்தில் ''இதிஹாஸா: **புராணம்** வித்யா உபநிஷத:'' என்று கூறப்பட்டுள்ளது.

சாந்தோக்ய உபநிஷத் ''ரிக்வேதம் பகவோ அத்யேமி, இதிஹாஸ **புராணம்** பஞ்சமம் வேதாநாம் வேதம்'' என்று கூறுகிறது.

ஆபஸ்தம்ப தர்ம ஸூத்திரம் ''அத **புராணே** சுலோகாந் உதா ஹரந்தி அஷ்டாசீதி ஸஹஸ்ராணி இதி'' என்று கூறுகின்றது. சங்கரரும், குமாரில பட்டரும் புராணத்தைப் பற்றிக் கூறியிருக்கின்றார்கள். பாணபட்டன் என்ற கவிஞன் ஹர்ஷ சரிதத்தில் ''**புராணேஷு** வாயு ப்ரலபிதம்'' என்று கூறியுள்ளான். தர்ம சூத்திரங்களில் புராணத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

கௌடில்ய அர்த்தசாத்திரத்தில் ''தத்ரஹி விநயேப்ய: ராஜ புத்ரேப்ய: **புராணநி** உபதேஷ்ட்வ்யம் இதி நிர்த்திஷ்டம்'' என்று சொல்லப்பட்டுள்ளது. சந்திர குப்தருடைய காலத்திற்கு முன்பே புராணங்கள் இருந்தன என்று தெரியவருகிறது.

யாக்ஞவல்க்ய ஸ்மிருதியில் ''**புராண** ந்யாய மீமாம்ஸ தர்ம சாஸ்த்ராங்க மிச்ரிதா: வேதா ஸ்தாநாநி வித்யாநாம் தர்மஸ்யச சதுர்தச'' என்று புராணத்தைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. புராணங்களில் கலியுகங்களில் இருக்கின்ற அரசர்களின் வரலாறுகள் காணப்படுகின்றன. விஷ்ணு புராணத்தில் மௌரிய வம்ச வரலாறு காணப்படுகின்றது. மத்ஸ்ய புராணத்தில் ஆந்திர அரசர்களைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. பிரம்ம யக்ஞ தர்ப்பணத்திலும் ''இதிகாச **புராணம்** தர்ப்பயாமி' என்று சொல்லப்படுகிறது.

பிரம்ம சூத்திரங்களுக்கும் புராணங்களையே பிரமாணமாக எடுத்துக் காட்டுகிறார்கள் பெரியோர்கள். புராணத்தின் சிறப்பை உணர்ந்து அரசர்கள் ஆலயங்களில் இதற்கெனத் தனி மண்டபம் அமைத்துப் புராணங்களைச் சொல்லச் செய்தார்கள். அவர்களுக்கு மானியமும் அளித்துவந்தார்கள். மடங்களிலும், நதிக் கரையிலும் புராணப் பிரசங்கங்கள் நடந்து வந்தன.

அமர கோசம் என்னும் வடமொழி நிகண்டு நூல் ''ஆக்யாயிகா உபலப்தார்த்தா **புராணம்** பஞ்சலட்சணம்'' என்று கூறுகிறது.

புராணம் படிப்பதின் பயன்: வேதத்தின் பொருளைத் தெளிவாக இதிகாசமும், புராணங்களும் விளக்குகின்றன. மிகவும் நுட்ப மான வேதப்பொருளைப் பூதக் கண்ணாடிபோல் நன்கு விளக்குவது புராணம். அறுபத்து நான்கு கலைகளுக்கும் பிறந்த வீடாக உள்ளது புராணம். புராணங்களைப்படிப்பதால் புண்ணியம் உண்டாவது ஒருபுறமிருக்க, நீதிகளைக்காட்டி நம்மை நல்வழிப் படுத்துகின்றன.

சத்ரபதி சிவாஜி வீரனாக விளங்கியது புராணக்கதைகளைக் கேட்டதினால். குலசேகரர் போன்றவர்கள் பெருமை பெற்ற தற்குக் காரணம் புராணமே. புராணக் கதைகளை நன்கு கேட்ட பெரியோர்கள் நீண்ட ஆயுளைப் பெற்றனர்; நல்வாழ்வு வாழ்ந் தனர். சாதிச்சண்டை, மொழிச்சண்டை, சுயநலம் முதலியன இல்லாதிருந்தனர். அறச்செயலிலே நாட்டங்கொண்டனர்; பொருளோபொருள் என்று பறக்கவில்லை; இவ்வளவுக்கும் மூல காரணம் புராணமே. எல்லோர் அறிவையும் வளர்த்தது புராணமே.

புராணம் பாரதத்தின் கருவூலம்:— சரித்திரம், பூகோளம், சங்கீதம், சோதிடம், வைத்தியம், விஞ்ஞானம், மொழிகள், சாகித்தியம், காவிய நாடக அமைப்பு, ஆலய அமைப்பு, கற்புக் கரசிகள் தருமம், காயத்திரியின் மகிமை, மரணம், அண்டம், நமது உடலில் உள்ள எலும்புகள் எத்தனை? நரம்புகள் எத்தனை? காயகல்பம், சமுகத்தில் நடக்க வேண்டிய முறை, குளம்

வெட்டுதல், திருடர்களைத் தண்டிப்பது முதலிய எண்ணிறந்த ரத்தினங்கள் அமைந்த பொக்கிஷம் புராணம்.

எந்த வகையிலாவது மனிதர்களை மனிதர்களாக ஆக்கி, அடிக்கடிப்பிறவாமல், துக்கங்களை அனுபவிக்காமல் இறைவனிடம் இரண்டறக்கலக்கச் செய்வதே புராணங்களின் நோக்கம். வேதத்தின் உண்மைப்பொருளைப் பண்டிதர் பாமரர் அனைவரும் அறிந்து அநுஷ்டிக்கும்படி செய்வது புராணத்தின் நோக்கமும், தத்துவமுமாகும்.

மகாபுராணங்கள் பதினெட்டு:— அவையாவன: பிரம புராணம், பாத்மம், வைணவம், சைவம், பாகவதம், பவிஷ்யம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரமவைவர்த்தம், இலிங்கம், வராகம், வாமனம், கூர்மம், மத்ஸ்யம், காருடம், ஸ்காந்தம், பிரமாண்டம்.

உபபுராணங்கள் 18. அவை:- சநத்குமாரம், நாரசிம்மம், ஸ்காந்தம், சிவதருமம், நந்தி, துருவாசம், நாரதம், காபிலம், மாநவம்,, ஔசநசம், பிரம்மாண்டம், வாருணம், காளிகா, மாகேசுவரம், சாம்பம், சௌரம், பாராசர்யம், மாரீசம்.

இவற்றில் **சைவ புராணங்கள் பத்து:—** சைவம், பவிஷ்யம், மார்க்கண்டேயம், இலிங்கம், வராகம், காந்தம், மாத்ஸ்யம், கூர்மம், வாமநம், பிரமாண்டம்.

வைணவ புராணம் நான்கு:— விஷ்ணு, பாகவதம், நாரதம், காருடம்.

பிரம புராணம் இரண்டு:— ப்ராம்மம், பாத்மம்.

அக்நி புராணம் ஒன்று:— ஆக்நேயம். **சூரியபுராணம் ஒன்று:—** பிரமவைவர்த்தம்.

சாத்துவிக புராணங்கள ஆறு:— வைணவம், நாரதீயம், பாகவதம், காருடம், பாத்மம், வராகம்.

இராசத புராணங்கள் ஆறு:— பிரமாண்டம், பிரமவைவர்த்தம், மார்க்கண்டேயம், பவிஷ்யம், வாமநம், பிராம்மம்.

தாமச புராணங்கள் ஆறு:— மஸ்த்யம், கூர்மம், இலிங்கம், சைவம், காந்தம், ஆக்நேயம்.

இவை தவிர உபபுராணங்களில் கணேச, மௌத்கல, தேவீ, கல்கி முதலிய புராணங்களும் இருக்கின்றன.

புராணத்தில் சில குறிப்புக்கள்:— இராமாயணம், பாரதம்போல் ஒரே கதாநாயக நாயகி பற்றிய கதைத் தொடர்ச்சி இராது. கேட்பவருக்கு ஏற்றபடி துண்டு துண்டாகக் கூறப்படும். ஒவ்வொரு கல்பத்தில் நடந்ததைக் கூறுவதால் ஒரே கதை ஒவ்வொரு புராணத்திலும் சிறிது வேருகக் காணப்படும். உபபுராணங்களால் 1500 சிவஸ்தலங்களையும், 500 விஷ்ணுத் தலங்களையும் அறியலாம்.

1 **பிரம புராணம்:**— பிரமாவின் பெருமையைக் கூறுவது; பத்தாயிரம் சுலோகங்களும் இருநூற்று நாற்பத்து மூன்று அத்தியாயங்களும், உத்தரபாகம் நூற்று ஐந்து அத்தியாயங்களும், கௌதமீ மாகாத்மியம் என்ற தீர்த்த மகிமையும் கொண்டது.

2 **பதுமம்:**— பிரமனின் பெருமையைக் கூறுவதாயினும் சிவன், விஷ்ணு இவர்களுடைய பெருமையையும் நன்கு கூறுகின்றது. ஆறுகாண்டங்களும், 628 அத்தியாயங்களும், ஐம்பத்தைந்தாயிரம் சுலோகங்களும் உள்ளன.

பத்ம கல்பத்தில் பூமி சுவர்ண தாமரைப்பூப் போல் இருந்தது. அதைப் பற்றிக் கூறுவதால் பாத்மம் என்று வழங்கப்பட்டது. பிரமன் சிருட்டி நிமித்தம் ஒரு பதுமத்தில் தோன்றிய சரித்திரங்கள், தீர்த்த ஆலயங்களின் விசேடங்கள், இலக்குமி நாராயண மந்திரங்கள் முதலியவற்றை விளக்கிக் கூறுகின்றது.

3 **வைணவம்:**— 23000 சுலோகங்களைக் கொண்டது. ஆறு அம்சங்களையுடையது. அண்ட நிலைமை, வேத சாகைகளின் பிரிவு, விஷ்ணுவின் மகிமைகள் முதலியன சொல்லப்படுகின்றன.

4 **சைவம்:**— வாயு புராணம் எனவும் பெயர் பெறும். பரம சிவனல் இயற்றப்பட்ட லட்சம் சுலோகமும், 12 சம்ஹிதைகளையும் கொண்ட சிவ மகாபுராணம் ஒன்று உண்டு. அது பூர்த்தியாகக் கிடைக்கவில்லை. வேதவியாசர் இருபத்து நாலாயிரம் சுலோகங்களையும் ஏழு சம்ஹிதாரூபமாக இயற்றினர்.

5 **பாகவதம்:**— பதினெண்ணுயிரம் சுலோகங்களையுடையது. பன்னிரண்டு காந்தங்களாலும், இருநூறு அத்தியாயங்களாலும், புனையப்பட்டுள்ளது. சுக முனிவர் ஏழு நாட்களில் பரீட்சித்துக்குக் கூறினர்.

6 **நாரதீயம்**:— இருபத்தைந்தாயிரம் சுலோகங்களையுடையது. இந்நூலில் விஷ்ணு சம்பந்தமான தோத்திரங்கள், அவரைப் பூசித்தற்குரிய காலவிதிகள், துருவ சரித்திரம், பிரகலாத சரித்திரம், பலவித தருமங்கள் கூறப்படுகின்றன.

7 **மார்க்கண்டேயம்**:— ஒன்பதினாயிரம் சுலோகங்களைக் கொண்டது. இந்நூலில் பதினான்கு மன்வந்தர சரிதம் கூறப்பட்டுள்ளது. இதில் தேவீ மாகாத்மியம் பதின்மூன்று அத்தியாயங்கள் உள்ளன.

8 **ஆக்நேயம்**:— பதினைந்தாயிரம் சுலோகங்களையுடையது. அக்கினி பகவான் வசிட்டருக்கு உபதேசித்தது. யாகம், அக்கினியின் பெருமை, விஷ்ணுவின் அவதாரங்கள், சிவபெருமானைக் குறித்துச் செய்யும் ஞானபூசை முதலியவற்றைக் கூறுகின்றது. இந்நூலில் மாயா தேவியின் பெயர்கள் அடங்கிய கீழ்க்கண்ட சுலோகம் உள்ளது. இதை மூன்று வேளைகளிலும் ஜபித்தால் **சகல கார்யங்களும்** கைகூடும்.

''ஆர்யா துர்க்கா வேதகர்ப்பா அம்பிகா பத்ரகாள்யபி
பத்ரா க்ஷேம்யா க்ஷேமகரி நைகபாஹு: நமாமி தாம்.''

9 **பவிஷ்யம்**:— 14000 சுலோகங்களைக் கொண்டது. பிரமன் மநுவரசனுக்கு உபதேசித்தது. சர்வ பூத இலக்கணம், உலக நீதி, ஆதித்திய மான்மியம், எதிர்கால உலகநிலைமை முதலியவற்றை உணர்த்துகின்றது.

10 **பிரம வைவர்த்தம்**:— பதினெட்டாயிரம் சுலோகங்களையுடையது. உலக சிருஷ்டி, சரசுவதி பூசை, தியானம், கவசம், யாக்ஞவல்க்யர் கூறிய சரசுவதி தோத்திரம், வாணி, லக்ஷ்மி, கங்கை இவர்கள் வாதம் முதலியன இந்நூலில் உள்ளன.

11 **இலிங்கம்**:— 11 ஆயிரம் சுலோகங்களையுடையது. சிவன் சப்தவடிவினன்; ஓங்காரமே சிவஸ்வரூபம்; ரிக் வேதம் வாய். சாமவேதம் நாக்கு; யசுர் வேதம் கழுத்து; அதர்வ வேதம் இதயம். சிவ சத்தியே மாயை. ஈசன் அருளைக்கொண்டு மாயை உலகை உண்டு பண்ணுகிறது முதலிய விஷயங்கள் இந்நூலுள் கூறப்பட்டுள்ளன.

12 **வராகம்**:— இருபத்துநான்காயிரம் சுலோகங்களையுடையது. பகவான் வராக ரூபம் எடுத்தபோது திருமாலினாற் பூமிதேவிக்கு உபதேசிக்கப்பட்டது. சய விசயர் என்ற

இருவரும் சாபமேற்று, இரணியகசிபு, இரணியாக்கனுய்த் திதிவயிற்றில் தோன்றியதும், இரணியாக்கன் வராக மூர்த்தியால் வதஞ்செய்யப்பட்டதும், விஷ்ணு வராக ரூபத்தை நீக்கிக் கொண்ட தன்மையும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

13 **ஸ்காந்தம்**:— லட்சம் சுலோகங்களையுடையது. சனற்குமார சங்கிதை, சூத சங்கிதை, பிரம சங்கிதை, விஷ்ணு சங்கிதை, சங்கர சங்கிதை, சூர சங்கிதை என்னும் ஆறு சங்கிதைகளையுடையது.

14 **வாமனம்**:— பதினன்காயிரம் சுலோகங்களையுடையது. வாமனனுகிய் திருமாலினல் உபதேசிக்கப்பட்டுப் பின்னர் பிரம தேவனல் சொல்லப்பட்டது. தக்கன் யாகம், திருமாலின் வாமனவதாரம், திரிமூர்த்திகளின் மகிமை, மாவலி சக்கரவர்த்தியின் அரசியல் முதலியவற்றைக் கூறுகின்றது.

15 **கூர்மம்**:— ஆறுயிரம் சுலோகங்களைக்கொண்டது. பூர்வ காண்டம், உத்தரகாண்டம் என்ற இரு காண்டங்களையுடையது. 97 அத்தியாயங்களையுடையது. வேதாந்த சித்தாந்த சாரங்களைத் தன்னகத்தே கொண்டது. திருமால் பாற்கடல் கடைந்த காலத்துக் கூர்மாவதாரம் எடுத்ததைக் கூறுகின்றது.

16 **மத்ஸ்யம்**:— பதினன்காயிரம் சுலோகங்களையுடையது. சோமகன் என்னும் அசுரன் வேதத்தை அபகரித்துச் செல்ல அதை மீட்டு வரத் திருமால் மத்ஸ்யாவதாரம் எடுத்ததை விளக்குகின்றது. மத்ஸ்யம் மநுவுக்கு எல்லா விஷயங்களையும் கூறியதால் மத்ஸ்ய புராணம் என்ற பெயர் ஏற்பட்டது.

17 **காருடம்**:— பத்தொன்பதாயிரம் சுலோகங்களையுடையது. ஆசார காண்டம், பிரேத காண்டம், பிரம காண்டம் என்ற மூன்று காண்டங்களையுடையது. உலக சிருட்டி, சோதிடம், சாமுத்திரிகாலக்ஷணம், ஔஷதம், விசு என்பவன் ஆண்ட காலமாகிய கருட கற்ப விருத்தாந்தங்களைக் கூறுகின்றது.

18 **பிரும்மாண்டம்**:— பன்னிரண்டாயிரம் சுலோகங்களைக் கொண்டது இந்நூல். பிரம அண்டங்களின் மகிமை பூகோள ககோளவியல் முதலிய பிரமாண்ட கற்பவிருத்தாந்தங்களை விளக்குகின்றது.

வேதங்களுடன் கூடவே இதிகாச புராணங்கள் தோன்றின என்று வேதங்களில் கூறப்பட்டுள்ளன. முதன்முதலில் புராணங்களைத் தோற்றுவித்துப் பிரளயத்தில் மறைந்திருந்த வேதங்களையும் பகவான் அருளினார்.

''புராணம் சர்வசாஸ்த்ராணும் பிரதமம் பிர்ம்மணுஸ்ம்ருதம்.
அநந்தரம் ச வக்த்ரேப்ய: வேதா: தஸ்ய விநிர்கதா.'' என்று

இந்தச் சுலோகத்தின் மூலமாக அறியலாம்.

நான்கு வேதங்களையும் அங்கங்களுடன் கற்றிருந்தாலும் புராணம் கற்காதவன் சமர்த்தன் ஆகமாட்டான்.

ஸ்ம்ருதிகள் ஒரு கண், புராணம் ஒரு கண். வேதம் தர்ம சாத்திரம் இவை இரண்டு கண்கள். புராணம் மூன்றாவது கண் என்றும் கூறுவர். புராண ஞானமுடையவன் சிவாம்சம் பெற்றவனாவான். இவ்வளவு சிறப்பினைத் தன்னகத்தே கொண்டுள்ள புராணங்களைக் கட்டுக்கதைகள் என்றோ பொய் என்றோ எண்ணக் கூடாது. புராண நூல்களில் தற்காலக் கல்வியிலுள்ள சகல விஷயங்களும் நிரம்பியிருக்கின்றன. புராணங்களில் சில விபரீதமான விரசமான கதைகள் உண்டு. ஆனால் அவை நடந்தாலும், நடக்காவிட்டாலும் ஒரு நீதியைப் புகட்டத் தோன்றியவைகளே என்பதை ஓர்ந்து ஆழ்ந்து சிந்தித்துப்படிப்பின் நன்கு விளங்கும்.

புராணங்களில் ஆதி புராணங்கள் புத்தர் காலத்திற்கு முன்னும், ஏனைய புராணங்கள் புத்தர் காலத்திற்குப் பின்னும் தோன்றின என்றும் தெரியவருகின்றது.

புராண இலக்கணம்:

''சர்க்கச்ச பிரதிசர்க்கச்ச வம்சோ மன்வந்தராணி ச
வம்சாநுசரிதம் சைவ புராணம் பஞ்ச லக்ஷணம்''

சர்க்க:— படைப்பு. பிரதி சர்க்க:— படைப்பின் முடிவு. மீண்டும் படைப்பின் ஆரம்பம்.

வம்ச: — படைப்பில் முதலில் வம்சாவளி.

மந்வந்தரங்கள்:— எந்த எந்த மநுக்கள் எப்பொழுதெப்பொழுது உண்டானார்கள் என்ற வருணனைகள்.

வம்சாநு சரிதம்:— சூர்ய, சந்திர வம்ச வருணனை. இவ்வைந்தும் புராணங்களில் காணப்படும்.

பாரதீய இதிகாசத்தில் புராணம் வேதங்களைப் போன்று தொன்மை வாய்ந்தது. புராணம் ஐந்தாவது வேதமாகக் கூறப் படுகின்றது. பதினான்கு கலைகளில் புராணத்திற்குத்தான் முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. வேதங்களில் சுருக்கமாகச் சொல்லப்பட்டவை புராணங்களில் விரிவாகச் சொல்லப் பட்டுள்ளன. மேலும் புராணங்களில் பௌராணிகர் தம் கற்பனைத் திறத்தால் கருத்துக்களைச் சுதந்திரமாக விளக்கும்போது அவற் றின் புகழ் அதிகமாகின்றன. குப்தர்கள் காலத்தில் புராணங்களை இயற்றுவோரும், தரும பரிபாலகர்களும் மகத்தான கற்பனையில் சிறந்த புராணங்களை உருவாக்கிப் புகழைப் பெற்றனர் என்ப தற்குப் பல சான்றுகள் உள்ளன. மக்களின் தருமங்கள், கடமைகள், பழக்க வழக்கங்கள், அனுஷ்டானங்கள், கலாசாரங்கள், பக்தி மார்க்கங்கள் முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டு மாறி வரும் சூழ் நிலைக்கேற்ப இயற்றினர். விஷ்ணு புராணம் வைதிக விஷயங்களைப் பற்றிக் கூறுகின்றது. மற்றப் புராணங்கள் கடவுளைப் பற்றியும், புண்ணிய இடங்களைப்பற்றியும், தீர்த்தங்களைப் பற்றியும், நீதிகளைப்பற்றியும் கூறுகின்றன. வேதங் களில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்கள் கற்றோர்களுக்குத்தான் விளங்கும். புராணங்களில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்கள் சாதாரண மக்களுக்கும் நன்கு விளங்கும்.

புராணங்கள் மூன்றுவகை:—

சான்றோர்கள் வரலாற்றினை எடுத்துக் கூறுவது ஒருவகை. **எடுத்துக்காட்டு:—** சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராணம், திருவாதவூரடிகள் புராணம், முருகதாச சுவாமிகள் இயற்றிய புலவர், புராணம், உமறுப்புலவர் இயற்றிய சீறாப் புராணம் முதலியவை.

கடவுளின் சிறப்பினை எத்தலத்துடனும் சேர்த்துக் கூறாமல் கடவுளின் செயலை மட்டும் கூறும் புராணங்கள் இரண்டாவது வகையைச் சார்ந்தவை. கந்த புராணம், கூர்ம புராணம், சிவ மகாபுராணம், விநாயக புராணம், விஷ்ணு புராணம் முதலியவை.

கடவுளின் சிறப்பினை ஒரு தலத்துடன் சேர்த்து அத்தலத்தின் பெருமையினையும், அத்தல இறைவனின் பெருமையினையும் கூறுவது மூன்றாவது வகையாகக் கூறலாம். இதுவே தல புராணம் என்று வழங்கப் பெறும். எடுத்துக்காட்டு:—

திருவிளையாடற் புராணம், காஞ்சிப் புராணம், திருக்குற்றாலத்தல புராணம் முதலியவை. தல புராணங்களே அதிகமாக உள்ளன.

16, 17, 18 ஆம் நூற்றுண்டுகளிலும், 19 ஆம் நூற்றுண்டின் முன்பகுதியிலும் தல புராணங்கள் ஆட்சி பீடத்தில் இருந்தன என்று கூறலாம்.

தலபுராணத் தோற்றம்:—

ஆழ்வார்கள் நாயன்மார்கள் இறைவனின் மீது பக்திப் பாடல்களை இயற்றினார்கள். அப்பக்திப் பாடல்களைக் காப்பிய வடிவில் புலவர்கள் தல புராணங்களாக ஆக்கித் தந்தார்கள். பக்திப் பாடல்களின் வளர்ச்சியே தல புராணத் தோற்றத்திற்குக் காரணம்.

12-ஆம் நூற்றுண்டில் தோன்றிய பெரிய புராணம் காட்டிய வழியை மக்கள் விரும்பினர். எனவே புராணங்கள் தோன்றலாயின. நாயன்மார்கள், ஆழ்வார்கள் வளர்த்த சமயப்பற்று, சைவசமயத்தவர் சிவனையும் அவன் எழுந்தருளியிருக்கும் தலத்தையும் மையமாக வைத்துத் தல புராணங்கள் இயற்றத் தொடங்கினார்கள். வைணவ சமயத்தவர் விஷ்ணுவையும், அவன் உறையும் தலத்தையும் பாடினர். இரு சமயப்போட்டி காரணமாகப் பல தலபுராணங்கள் தோன்றின.

தலபுராணத் தோற்றத்திற்கு அரசாட்சியும் காரணமாக இருந்தது. முதற் குலோத்துங்கன் காலத்தில் அட்டாதச புராணம், கன்னிவன புராணம் என்ற இரண்டு புராணங்கள் தோன்றின என்று சாசனவாயிலாக அறிகிறோம்.

சோழ அரசாட்சிக்குப்பின் விசய நகரப் பேரரசு காலத்தில் தல புராணங்கள் பல எழுந்தன. இந்நூலின் ஆசிரியர் புராணத் திருமலை நாதர் இயற்றிய சிதம்பர புராணம் குறிப்பிடத்தக்கது. பின்பு வடமொழிப் புராணங்களைத் தமிழ்ப்படுத்தும் பழக்கம் உண்டாகவே பல தலபுராணங்கள் வளர்ந்தன. தென்னாட்டிலுள்ள மடங்களைச் சேர்ந்தவர்கள் புராணங்கள் இயற்றுவித்தனர்.

தருமபுர மடத்தைத் தாபித்த குருஞான சம்பந்தருடைய ஆசிரியரான கமலை ஞானப் பிரகாசர் திருமழுவாடிப் புராணம் பாடினார். இவருடைய மாணவர் திருவொற்றியூர் ஞானப் பிரகாசர் திருவொற்றியூர்ப் புராணம் பாடினார். இவ்வாறு தல புராணங்கள் வளர ஆரம்பித்தன.

பதினெண் புராணங்களின் ஓர் அங்கமாக மட்டுமே இருந்து வந்த தலமகிமைச் செய்திகள் பிற்காலத்தில் தமிழிலக்கிய உலகில் காப்பிய இலக்கண அமைதியைப் பெற்றுத் தமக்கெனத் தல புராணங்கள் என்ற பெயரில் முழுமையான இலக்கிய நூலுக்குரிய இடத்தைப் பெற்றன.

பெரும்பாலும் சிவஸ்தல புராணங்கள் பதினெண் புராணங்களில் உள்ள அந்தந்தச் சிவத்தலங்களுக்குரிய சிறப்புக்களோடு சிவ தோத்திரத் திருமுறை நூலாகிய தேவாரத்தில் உள்ள தலச் சிறப்பு, மூர்த்திச் சிறப்பு, தீர்த்த மகிமை ஆகிய மூன்றும் ஒரு சேரப் பெற்றுப் பதினெண் புராணங்களின் அங்கமாக மட்டும் அமையாமல், தமிழில் தல புராணங்கள் பாடும் பெரும் புலவர்களின் கற்பனைத் திறமும் சேர்ந்து முழுமையான தனி நூல்களாக வரலாயின.

தல புராணங்கள் மக்களுக்குத் தம் ஊரைப் பற்றிய வரலாறுகளையும், பெருமைகளையும், பண்டைய நிலை, இன்றைய அமைப்பு முதலியவற்றையும் தெரிவித்துத் தளராத நம்பிக்கையை வளர்த்து வருகின்றன. மனிதனுக்கு முக்கியமாக இருக்க வேண்டியது தன்னம்பிக்கை. தன்னம்பிக்கையில்லையெனில் வளர்ச்சி குன்றும். வளர்ச்சிக்கு உறுதுணை கடவுள் நம்பிக்கை ஒன்றே. 'இடரினும் தளரினும் இறைவர் துணை செய்வார்' என்ற வரலாறுகளே மக்களுக்குப் புதுத் தெம்பை ஊட்டுவன. அவற்றைக் கொடுப்பன புராணங்கள்.

தலபுராணங்களில் பெருங்காப்பிய இலக்கணம் பொருந்தியிருக்கும். நாட்டு வருணனை, நகர வருணனை, மலை வருணனை, மழை வருணனை, புராண வரலாறு, தலத்தைப் பற்றிய வரலாறுகள், மூர்த்தி, தீர்த்த வரலாறுகள், விழா, வேள்வி, வழிபட்டார் வரலாறுகள், அவர்கள் அடைந்த பேறுகள் முதலியன கூறப்பட்டிருக்கும். பல நூல்களைப்படித்து அறிய வேண்டிய பல கருத்துக்களைத் தன்னகத்தே அடக்கிக் கொண்டிருக்கும் கருவூலம் தல புராணங்கள்.

சமுதாயத்தைத் தன்னம்பிக்கையாலும், கடவுளின் துணையாலும் வாழவைப்பன தலபுராணங்கள்.

பல குறுநிலமன்னர்களும், பெருநிலக்கிழார்களும், பெருஞ் செல்வர்களும், தங்கள் செல்வம், செல்வாக்கு ஆட்சிகளைக் கொண்டு புலவர்களால் பல புராணங்களைச் செய்வித்து மக்களிடையே நல்லொழுக்கத்தை வளர்த்துச் சமுதாய நலத்தைப்

போற்றி வந்தனர் என்பதை இடைக்கால நூல்களின் வழியாக அறிகிறோம்.

தலபுராணங்கள் தோன்றுவதற்கு வித்திட்டவர்கள் ஞானசம்பந்தப் பெருமானும், திருநாவுக்கரசரும் ஆவார்கள்.

தலபுராணங்களில் சிறப்பாகக் கூறப்படும் பொருள்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் ஆகிய நான்குமாகும்.

''மூர்த்திதலந் தீர்த்தம் முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.''

என்ற தாயுமானவர் வாக்கிலிருந்து விருட்சத்தைத் தலத்துக்குள் வைத்து மூன்றாகவும் கூறலாம் என்று தெரிகிறது.

தொல்காப்பியத்தில் புராணத்திற்குரிய கரு தென்படுகிறது.

''தொன்மை தானே.
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே.''

தொன்மை என்பது உரைவிராய்ப் பழமையவாகிய கதைப் பொருளாகச் செய்யப்படுவது என்றவாறு. அவை, பெருந்தேவனாராற் பாடப்பட்ட பாரதமும், தகடூர் யாத்திரையும் போல்வன. என்று **பேராசிரியர்** பொருள் காண்கின்றார்.

நச்சினார்க்கினியர் சிலப்பதிகாரமும் இதன்பாற்படும் என்று கூறிப் போந்தார். இங்குள்ள தொன்மை என்ற சொல்லுக்குப் **புராணம்** என்று பொருள் கொள்ள இடமிருக்கின்றது.

பிரபந்த மரபியல் என்னும் நூலில்

''வானவர் ஏத்தும் மறையோர் முதலிய
மக்களின் னோர்க்குத் தக்க தன்மையில்
பிள்ளைக் கவிமுதல் **புராணம்** ஈறாகத்
தொண்ணூற் றாறெனும் தொகைய தான
முற்பக ரியல்பை முன்னுறப் பாடும்
பிரபந்த மரபியலது பிரபந்த மரபியலே.''

என்று புராணத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

வெண்பாப் பாட்டியல்

''கருதுசில குன்றினுமக் காப்பியமாம் என்பர்
பெரிதறமே யாதி பிழைத்து – வருவதுதான்
காப்பிய மாகும் குலவரவு காரிகை
யாப்பிற் புராணமே யாம்.''

காப்பியம் குன்றாத சிறப்புடன் பெருமித நடையுடைய தாகும். புராணம் சற்றுத் தளரினும் பொருளுக்குச் சிறப்புத் தரக் கூடியது.

சிதம்பரப் பாட்டியல்

''அறையுமிதிற் சிலகுறைபா டெனினும் குன்றா
தறம்பொருளின் பம்வீட்டிற் குறைபாடாகப்
பெறுவது காப்பியமாகும் **புராண**மாகும்''.
என்று கூறுகிறது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய இம்மூன்றும் தலபுராணங் களுக்கு முக்கியம்.

ஞானசம்பந்தர் தேவாரத்தில் தீர்த்த மகிமைக்கு ஓர் எடுத்துக்காட்டு:—

''பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு **முக்குளநீர்**
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே.''

தலமகிமைக்கு ஓருதாரணம்: (திருநாவுக்கரசர் தேவாரம்)

''நிலையும் பெருமையும் நீதியும் சால அழகுடைத்தாய்
அலையும் பெருவெள்ளத் தன்று மிதந்தஇத் தோணிபுரம்
சிலையில் திரிபுர மூன்றெரித் தார்தண் கழுமலவர்
அலருங் கழலடி நாடொறு நந்தமை யாள்வனவே.''

மூர்த்தி மகிமைக்குத் திருநாவுக்கரசர் தேவாரத்திலிருந்து ஓர் எடுத்துக்காட்டு:

''பிறப்பு மூப்புப் பெரும்பசி வான்பிணி
இறப்பு நீங்கியிங் கின்பம்வந் தெய்திடும்
சிறப்பர் சேறையுட் **செந்நெறி யான்கழல்**
மறப்ப தின்றி மனத்தினுள் வைக்கவே.''

புராண வளர்ச்சி:—

10 ஆம் நூற்றாண்டில் சாந்தி புராணமும், 12 ஆம் நூற்றாண்டில் அட்டாதச புராணமும், கன்னிவனப் புராணமும் தோன்றின.

13 ஆம் நூற்றுண்டில் பெரும்பற்றப் புலியூர் நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் தோன்றியது.

14 ஆம் நூற்றுண்டில் உமாபதி சிவாச்சாரியார் கோயிற் புராணம் இயற்றினர். இவரே புராணப் பெருக்கத்திற்கு வித்திட்டவர் என்று கூறலாம்.

15-16 ஆம் நூற்றுண்டில் வடமொழிப் புராணங்கள் பல தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. அதிவீரராம பாண்டியர் கூர்ம புராணம், இலிங்க புராணம், கந்த புராணத்தின் ஒரு பகுதியாகிய காசிக் காண்டம் முதலியவற்றை இயற்றினர்.

வரதுங்கராம பாண்டியன் பிரமோத்திர காண்டத்தை வடமொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்த்தார். வடமலையப்பர் என்பவர் மச்ச புராணத்தை மொழி பெயர்த்துள்ளார். மறை ஞானசம்பந்தர் கமலாலய புராணம், அருணகிரிப் புராணம் என்ற நூல்களை யாத்துள்ளார். கமலை ஞானப்பிரகாசர் தந்தி வனப்புராணம் என்ற நூலை இயற்றியுள்ளார்.

17 ஆம் நூற்றுண்டில் சைவ எல்லப்ப நாவலர் திருவெண் காட்டுப்புராணம், திருச்செங்கோட்டுப் புராணம். தீர்த்தகிரி புராணம், செவ்வந்திப் புராணம் முதலியவற்றை இயற்றினர். தருமபுர மடத்தைச் சார்ந்த சம்பந்த சரணலய சுவாமிகள் என்பவர் கந்த புராணச் சுருக்கத்தினை இயற்றினர்.

வேதாரணிய புராணம், கும்பகோணப் புராணம் ஆகிய இரண்டையும் **அகோர முனிவர்** என்பவர் இயற்றினர்.

திருக்கூவப் புராணம் சிவப்பிரகாச சுவாமிகளால் இயற்றப் பட்டது. திருக்கழுக்குன்றப் புராணம் என்ற நூலை அந்தகக்கவி வீரராகவ முதலியார் இயற்றினர். 17 ஆம் நூற்றுண்டில் தோன்றிய புராணங்களுள் பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணமும் ஒன்று. பரஞ்சோதி முனிவர் திருமலை நாயக்கர் காலத்தில் இருந்தவர் என்று தெரிகிறது.

18 ஆம் நூற்றுண்டில் திருக்குற்றலத் தலபுராணம் தோன்றியது. இதன் ஆசிரியர் மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராயர். சிவஞான முனிவர் காஞ்சிப் புராணத்தின் முற் பகுதியை இயற்றினர். சிதம்பர நாத முனிவர் என்பவர் திருப் பாதிரிப்புலியூர்ப் புராணம் என்ற நூலை இயற்றினர். கச்சி யப்ப முனிவர் விநாயக புராணம், காஞ்சிப் புராணத்தின் பிற் பகுதி, திருவானைக்காப்புராணம், பேரூர்ப்புராணம், பூவாளூர்ப் புராணம், தணிகைப் புராணம் முதலியவற்றைப் பாடினர்.

19 ஆம் நூற்றுண்டில் புராண கருத்தாவாக விளங்கியவர் திரிசிரபுரம் **மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை** அவர்கள். இவர் ஐயரவர்களின் ஆசிரியர். இவர் பாடிய புராணங்கள் பல. அவை: அம்பர்ப்புராணம், உறையூர்ப்புராணம், கும்ப கோணப்புராணம், திருக்குறுக்கைப்புராணம், கோயிலூர்ப் புராணம், சூரை மாநகர்ப் புராணம், தனியூர்ப் புராணம், திருத் துருத்திப்புராணம், திருநாகைக்காரோணப்புராணம், திருப் பெருந்துறைப்புராணம், திருமயிலைப்புராணம், திருவரன்குளத் தல புராணம், திருவாளொளி புற்றூர்ப் புராணம், பட்டீசுவரப் புராணம், மண்ணிப்படிக்கரைப் புராணம் முதலியன.

மணிவாசகப்பெருமான் இயற்றிய திருவாசகத்தில் சிவபுராணம் ஒரு பகுதியாக ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது. கச்சாலையர் என்பவர் காஞ்சிப் புராணம் என்ற நூலை இயற்றி யுள்ளார். இந்நூல் நூலக வெளியீடாக அண்மையில் வெளி வந்துள்ளது.

தீர்த்த மகிமையைப் பற்றிக்கூறும் புராணங்கள் இரண்டு. அவை: காவேரிப் புராணம், பொன்னிச்சிந்து மான்மிய புராணம்.

சோழ அரசர்களுடைய காலத்தில் பல கோயில்கள் தோன்றின. புலவர்களை அழைத்து அக்கோயில்களுக்குப் புராணம் பாடச் செய்தனர். சோழ நாட்டில் உள்ள கோயில்களுக்குத்தான் புராண நூல்கள் அதிகம்.

சைவம், வைணவம், சமணம், இஸ்லாம், ஆகிய நான்கு சமயத்தவர்களும் புராணங்களை இயற்றினர். அவற்றுள் சைவ புராணங்களே அதிகம். கும்பகோணம், மாயூரம், நாகப் பட்டினம், திருப்பெருந்துறை, மதுரை போன்ற ஊர்களுக்கு இரண்டு மூன்று புராணங்கள் உள்ளன.

இறையானரையூர் என்ற எலவானாசூர்:— பழைமையும் சிறப்பும் உடைய ஊர்கள் தமிழகத்தில் எண்ணற்றவை உள்ளன. அவை காலப் போக்கில் சீரும் சிறப்பும் குன்றி, இன்று சிற்றூர் களாக இருக்கின்றன. அவை ஆயிரம் ஆண்டுக் கதையைக் கூறத்தக்க சிறந்த கல்வெட்டுக்களைத் தன்னிடத்தே கொண்டுள்ளன. அப்படிப்பட்ட சிற்றூர்களில் **எலவானாசூர்** என்பதும் ஒன்று.

இவ்வூரில் காணப்படும் கல்வெட்டுக்கள் சிவன் கோயிலிலும், ஒட்டைக்குளத்திற்கு அருகிலுள்ள குன்றுகளிலும் உள்ளன என்று

ஆ

தெரிகிறது. அவற்றைச் சோழர் காலம், பாண்டியர் காலம், விசய நகர வேந்தர் காலம் என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம். இவை. கி.பி. 10 ஆம் நூற்றுண்டு தொடங்கி, கி.பி. 16 ஆம் நூற்றுண்டு முடிய உள்ள காலத்தைச் சார்ந்தவை என்றும் தெரிகின்றது.

இவ்வூர், திருக்கோவலூரிலிருந்து ஆசனூர்ச் செல்லும் சாலேயில் 30 கி.மீ. தொலேவில் உள்ளது. உளுந்தூர்ப் பேட்டையிலிருந்து கள்ளக்குறிச்சி செல்லும் வழியில், மேற்கே 11. கி.மீ. தொலேவு சென்றுலும் இவ்வூரை யடையலாம். தற்சமயம் ஒரு சிற்றூராக இருந்தாலும் கி.பி. 10 ஆம் நூற்றுண்டு முதல் 18 ஆம் நூற்றுண்டு வரை சிறப்புற்று விளங்கியதாகத் தெரிய வருகிறது. இவ்வூரிலுள்ள கல்வெட்டுக்கள் இதன் பழமையான பெயரை **இறையானரையூர்** என்றே கூறுகின்றன.

> ''இவ்வூர் சிவப்பிராமணரில் கௌசிகன் நாரணக் கரியான் **இறைசை** நாயகனுன சோழ கோன் பட்டன்''
>
> ''இந்நாயனுர் கோயில் காணியுடைய சிவப்பிராமணன் கௌசிகன் நாரணக் கரியான் **இறைசை** நாயகமான சோழன்.''
>
> ''இவ்வூர் சிவப்பிராமணரில் கௌசிகன் **இறைசை** நாயகன் ஊர்பாகங் கொண்டானுன சோழ கேரள பிரமராயன்.''

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கல்வெட்டுக்களின் மூலம் இவ்வூர் **இறைசை** என்று வழங்கி வந்துள்ளதாக அறியலாம். இறைவாச நல்லூர்த்தல புராணம் என்ற இத்தல புராணத்தின் மூலமாகவும் இவ்வூர் இறைசை என்று பெயர் பெற்றுள்ளதை நன்கு அறியலாம். இறைசை என்னும் பெயர் இரண்டாம் இராசராச சோழன் காலத்துக் கல்வெட்டுக்களில் மட்டும் தொடர்ந்து வந்துள்ளது. விசயநகர வேந்தர் காலத்துச் சாசனத்தில் ஒன்றில் மட்டும் இறைசை என்று குறிக்கப்பட்டுள்ளது.

இவ்வூர் முற்காலத்தில் அந்தணர்களுக்குப் பிரமதேய உரிமையாகக் கொடுக்கப்பட்டது. ஆகவே முதலாம் இராசராச சோழன், அவன் ம கன் இராசேந்திர சோழன் சாசனங்கள் பிரமதேயம் இறையானரையூர் என்றே வழங்குகின்றன.

இராச மகேந்திர சோழனின் கல்வெட்டினுல் இவ்வூருக்குச் சோழ கேரளச் சதுர்வேதி மங்கலம் என்ற பெயர் வழங்கியதாகத் தெரிய வருகிறது. சோழ கேரளன் என்பது முதலாம் இராசேந்திர சோழனுக்குரிய சிறப்புப் பெயர்களில் ஒன்று.

அம்மன்னனின் மகன் இராசமகேந்திரசோழன் **சோழகேரளச் சதுர்வேதி மங்கலம்** என்று இவ்வூர்க்குப் பெயரிட்டான் என்றும் தெரிகிறது.

பல்வேறு காலங்களில் **இறையானரையூர்** சோழ கேரளச் சதுர்வேதி மங்கலம், சோழ கேரள நல்லூர், பிடாகம் எனப் பல பெயர்களைப்பெற்றிருந்தது. தற்சமயம் **எலவானாசூர்** என்று வழங்கப்படுகிறது. இப்பெயர் இறையானரையூரின் மருவிய பெயர்.

[1]இராம ராவணப் போர் முடிந்து, இராமன் இவ்வூரின் வழியாக வந்தபோது, அனுமனைப்பார்த்து **''எலே! வானர** சூரா!'' என்று அழைத்தாராம். அவ்விளிப்பெயரே **எலவானாசூர்** என்றாயிற்று என்று செவிவழிக்கதை தெரிவிக்கிறதாகக் கூறுவர்.

எலவானாசூரில் நடுவே மேற்குப் பார்த்தவாறு சிவன் கோயில் ஒன்று உள்ளது. அக்கோயிலின் இரண்டாம் பிரகாரத்தில் கிழக்குப் பார்த்தவாறு அம்மன் சந்நிதி உள்ளது.

மூலவரை நோக்கி அமைய வேண்டிய நந்தி, அதற்கு மாறாக மேற்கு நோக்கி அமைந்துள்ளதாகத் தெரிகிறது. தெய்வீக மன்னனுக்கும், காருண்டனுக்கும் நடந்த யுத்தத்தைக் காண்ப தற்காக நந்தியெம்பெருமான் மேற்கு நோக்கித் திரும்பினார். அதுமுதற்கொண்டு நந்தி மேற்குப்பார்த்ததாகவே அமைந்துள்ளது போலும். மூல லிங்கம் குன்றின்மீது நிறுவப்பட்டுள்ளது. இதன்தல விருட்சம் பலா மரம்.

முதலாம் இராசராசனுக்குப்பிறகு உண்டான சாசனங்களில் இறைவனின் பெயர் 'ஊர்பாகம் கொண்டருளிய மகாதேவர்' என்றும் 'ஊர்பாகங் கொண்டருளிய நாயனார்' என்றும் குறிக் கப்பட்டுள்ளன.

பாண்டிய விசய நகர வேந்தர்கள் கல்வெட்டுக்களில் 'ஊர் பாகங்கொண்டருளிய நாயனார்' என்றும், 'ஊர்பாகங்கொண்ட ருளிய தம்பிரானார் என்றும் குறிக்கப்பட்டுள்ளன. பிற்காலத் தில் **கிராம அர்த்த நாரீசுவரர்** என்ற வடமொழிப் பெயர் வழங்க லாயிற்று. இந்நூல் சுவாமியின் பெயர் **சிகரசிகாமணி நாதர்** என்று கூறுகிறது. ஊர்பாகங் கொண்டார் என்ற பெயர் எவ்வாறு ஏற்பட்டது என்பதற்கு இந்நூலிலுள்ள **நீரேற்ற சருக்கத்தின்** மூலமாக நன்கு அறியலாம்.

[1]Madras District Gazetteers, South Arcot (1906) pp 373 [W. Francis]

இவ்வூருக்கு **அரசவனம், நீரேற்றபுரி** என்ற வேறு பெயர்களும் உண்டு. (செய். 324.)

ஊர்பாகங்கொண்டாருக்கு (சிகரசிகாமணி நாதர்) முக்கால பூசைகள் நன்கு நடைபெற்றன: காலைப்பொழுதில் திருப்பள்ளியெழுச்சி பாடப்பட்டது. **மஞ்சள் நீராட்டு** நடந்த நாள்தோறும் மூன்று வேளைகளிலும் இசைக் கருவிகள் ஒலியெழுப் பப்பட்டன. நந்தா விளக்குகள் எந்நேரமும் ஒளியைச் செய்தன. ஆண்டுதோறும் இக்கோயிலில் பல்வேறு விழாக்கள் சிறப்பாக நடைபெற்றன என்று தெரிகிறது.

ஆண்டுதோறும் நடைபெற்ற தேர்த் திருவிழாவிற்காக, விசயநகர மன்னரின் பிரதிநிதியான ஆனந்த தாண்டவதொண்டைமான் என்பவரால் கி.பி. 1539 ஆம் ஆண்டில் **வீரமங்கலம்** என்னும் சிற்றூர் தேவதானமாகக் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. (A. R. E. 1937–38. No 483) ஆறும் நாள் விழாவிற்காக வேலூர் பொம்மு நாயக்கர் ''**பிச்சாண்டன் குறிஞ்சித்தாங்கல், செட்டியெந்தல் தாங்கல்**'' என்ற இரண்டு ஊர்களையும் தானமாக வழங்கினர் என்றும் தெரிகிறது. (A. R. E. 1937–38, No 487&488.)

எலவானசூரிலுள்ள சோழ மன்னர் மூவரின் கல்வெட்டுக்களின் மூலமாக **அம்மனைப்** பற்றிய விவரங்களை அறியலாம். பழமையான கல்வெட்டு, முதலாம் குலோத்துங்க சோழனின் 48 ஆவது ஆண்டில் (கி.பி. 1118) வரையப்பட்டது என்று ஊகிக்க முடிகிறது. அக்கல்வெட்டில் **இறைவியின்** பெயர் **திருப் பள்ளியறை 'நம்பிராட்டியார்'** என்று குறிக்கப்பட்டுள்ளது.

இவ்வூரில் சிவன் கோயிலைப் போன்று பழமை வாய்ந்த சிறப்புடைய வைணவக் கோயில்கள் இருந்தன. அவற்றுள் **வானவன் மாதேவி விண்ணகர், இராசநாராயண விண்ணகர்** என்ற இரண்டு கோயில்கள் சிறப்புப் பெற்றிருந்தன என்று தெரிகிறது.

இவ்வூரிலுள்ள சிவன் கோயிலிலும் வைணவக் கோயிலிலும் பணியாளர்கள் பலர் இருந்தார்கள் என்று கல்வெட்டுக்களின் மூலம் அறியலாம்.

கோயிலுள்ள விக்கிரகங்களுக்கு நீராட்டுதல், திருவமுது படைத்தல் முதலிய காரியங்களுக்குச் சிலர் நியமிக்கப்பட்டிருந் தனர். அவர்கள் **தேவகன்மிகள்** என்று வழங்கப்பெற்றனர். தற்காலத்தில் சிவாசாரியார் என்று கூறுகின்றோம். அவர்களை

அறுபது வட்டத்துச் சிவப்பிராமணர்கள் என்று சாசனங்கள் கூறுகின்றன.

கோயிற் காரியங்கள் செவ்வனே நடைபெறுகின்றனவா? என்று பார்க்க அறங்காவலர்கள் தற்சமயம் நியமிக்கப்பட்டுள்ளனர். அக்காலத்தில் அறங்காவலர்களை ஸ்ரீ **காரியம் ஆராய்வார்** அல்லது **ஸ்ரீ கார்யப்பெருமக்கள்** என்று அழைத்தனர். கோயில்களுக்கு வரவேண்டிய வருவாய்களை வசூலிக்க வேண்டியது அவர்களது கடமையாகும்.

ஊர்ப்பொது நலத்தை எண்ணிக் கூலியின்றிச் செய்யும் வேலைக்கு **வெட்டி** என்பர். இதைச் செய்பவர்களை நாளடைவில் **வெட்டியரன்** என்று அழைக்கலாயினர்.

கோயில்களுக்கு அரசர்களாலும், அதிகாரிகளாலும், அறவோர்களாலும் கூலியின்றி உழைப்பதற்காக நியமிக்கப்படும் பணியாளர்களை '**வெட்டி முட்டையாள்**' என்று கல்வெட்டுக் கூறுநிற்கும்.

இவ்வூர்ச் சிவன் கோயிலிலும் 'வெட்டி முட்டையாட்கள்' உண்டு. இக்கோயிலுக்கு வெட்டி முட்டையாட்களை இராசராச மலையகுலராயன் என்னும் சிற்றரசன் நியமித்திருந்ததாக ஒரு கல்வெட்டின் மூலம் அறியமுடிகிறது.

முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் திருவரங்கன் என்பவன் இவ்வூர்ச்சிவன் கோயிலுக்குத் **தேவரடியாள்** ஒருத்தியை நியமித்ததாகக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது.

துர்க்கை நீரேற்ருளான விக்கிரம சோழ மாணிக்கம் என்ற பெயருடைய தேவரடியாள் இக்கோயிலுக்கு விளக்குத்தானமாகப் பதினைந்து பொற்காசுகள் மூலதனமாகக் கொடுத்துள்ளாள் என்று குலோத்துங்கன் கல்வெட்டுக் கூறுகின்றது. இவள் இக்கோயிலில் பணியாற்றியவள்.

இராச சுந்தரி என்ற தேவரடியாள் ஒருத்தி இறைவனுக்குத் திருவமுதிற்காக நிலம் வழங்கியதாகக் குலோத்துங்க சாசனம் பறை சாற்றுகின்றது.

இக்கோயிலில் ஆடல் பாடல்களுக்காக நியமிக்கப்பட்டுத் தொண்டு செய்துவந்த தேவரடியார்களுக்கு **அரும்புலிப் பாடி** என்னும் ஊர் வழங்கப்பட்டதாகத்தெரிகிறது.

கோயில்களில் தேவாரம் திருவாசகம் முதலியவற்றை ஓதுவதற்காக நியமிக்கப்பட்டனர். அவர்கள் அக்காலத்தில்,

பிடாரர் என்று அழைக்கப்பெற்றனர். நாள் தோறும் திருப் பள்ளியெழுச்சி பாடப்பட்டது. விக்கிரம சோழன் காலத்தில் ஞாயிற்றுக் கிழமை தோறும் திருச்சாழல் பாடப்பட்டதாகத் தெரிகிறது. இங்கு முறையாகப் பாடியவர்கள் **பிடாரர்கள்.**

விலையுயர்ந்த பொருள்களையும், அணிகலன்களையும் ஆடை களையும், பொற்காசுகளையும், நவமணிகளையும் பாதுகாப்பாக வைக்குமிடத்திற்குத் **தேவர் பண்டாரம்** என்று பெயர். விளக்கு ஏற்றுவதற்காக வழங்கப்பட்ட 32 பசுக்கள் தேவர் பண்டாரத்தில் சேர்க்கப்பட்டதாக, மூன்றும் இராசராச சோழன் கல்வெட்டுக் கூறுகின்றது.

செம்பியன் மாதேவி என்னும் ஊரிலுள்ள நிலங்களுக்கு விதிக்கப்பட்ட வரிகள் அனைத்தும் தேவர் பண்டாரத்தில் சேர்க்கப் படவேண்டும் என்று கிருஷ்ண தேவராயரின் சாசனம் கூறுகிறது.

முற்காலத்தில் இப்பகுதியில் இருந்த மரக்கால் இறைவனின் பெயரால் **ஊர்பாகங் கொண்டான் மரக்கால்** என்று பெயர் பெற்றிருந்தது.

முதலாம் இராசேந்திரனின் ஐந்தாவது ஆண்டில் (கி.பி. 1017). ஊர்ச்சபையினர் சிவன் கோயிலில் **நந்தவனம்** ஏற்படுத் துவதற்காக நிலங்கள் ஒதுக்கினர் என்று கல்வெட்டுக் கூறுகின்றது. அக்கல்வெட்டில் நிலத்தின் எல்லைகள் தெளிவாகக் கூறப் பட்டுள்ளன. ஆராயுமிடத்து எலவாஞ்சூரிலுள்ள நம்பி குளத்திற்கு கிழக்கிலும், வடக்கிலும் உள்ள நன்செய் நிலங்கள் அக்காலத்தில் நந்தவனமாக இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

தரம்பியன்கிழான் பட்டாலகன் சிந்தாமணியான **நரேந்திர சிகாமணி மூவேந்த வேளான்** என்பவன் காசியபன் சதாசிவன் திருவெண்காட்டடிகள் பட்டன், ஆரிதன் திவாகரன் என்ற இரு வரிடமும், ஊர்ச்சபையாரிடமும் நிலங்களை விலைக்கு வாங்கி நந்தவனம் அமைப்பதற்காகச் சிவன் கோயிலுக்கு நன்கொடை யாக வழங்கினான். அந்த நந்தவனத்திற்குச் **சிந்தாமணி நந்த வனம்** என்று பெயர் என்று கல்வெட்டுக் கூறுகிறது.

சிவன் கோயிலுக்கும், பெருமாள் கோயில்களுக்கும் சொந் தமாக இருந்த நிலங்களுக்குத் **தேவதான நிலங்கள்** என்றுபெயர். சிவன் கோயிலுக்குரியவை **திருநாமத்துக்காணி** என்றும் பெருமாள் கோயிலுக்குரியவை **திருவிடையாட்டம்** என்றும் பெயர் பெறும்.

நிலம், தொழில் முதலியவற்றிற்கு வரிகள் விதிக்கப்பட்டன. அவற்றுள் நிலவரி, கடமை, தற்கடமை என்று வழங்கப்பட்டது. அவையே **காணிக்கடன்**, பிறவரிகள் **குடிகை** என்று வழங்கப் பட்டன.

வரியின் பெயர்களைக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. அவற்றில் சில:— அந்தராயம், இடங்கைவரி, இனவரி, ஏரிமீன் பாட்டம், கருவிப்பணம், காசாயம், கீழிறை, குதிரைக்காணிக்கை குற்றத்தெண்டம், கூற்றிலக்கை, சில்வரி, தட்டாரப்பாட்டம், தலையாரிக்கம், தறியிறை, நல்லெருது, பெரும்பாடிக்காவல். அக்கால நாணயங்களின் பெயர்:— பொன், மாடை, காசு, பணம்.

சிவன் கோயிலின் தேவைக்கென்று பல்வேறு காலங்களில் அரசர்களாலும், அரசு அலுவலர்களாலும் நிலங்களேயன்றிச் சிற்றூர்களும் மானியமாகக் கொடுக்கப்பட்டன என்று கல்வெட்டுக் களின் மூலம் அறியலாம். அவ்வாறு விடப்பட்ட ஊர்கள்:— நல்லரைசூர், செம்பியன்மாதேவி, அரும்புலிப்பாடி, குஞ்சரம், பரிந்தல், மலையனூர், புத்தூர், சீயமங்கலம், விக்கரச்சிமங்கலம், நெடுமானூர், மாம்பட்டு, அதகூர், சீதேவி முதலியன.

நல்லரைசூர்:- இது எலவானசூருக்குக் கிழக்கே 1.5. கி.மீ. தொலைவில் இருப்பதாகத் தெரிகிறது.

செம்பியன் மாதேவி:- இது எலவானசூருக்கு மேற்கே 4.கி.மீ. தொலைவில் உள்ளது.

அரும்புலிப்பாடி:- இது எலவானசூருக்கு வடகிழக்கே 5.கி.மீ. தொலைவில் உள்ளது.

குஞ்சரம்:- இது எலவானசூருக்கு வடமேற்கே 7.கி.மீ. தொலைவில் உள்ளது.

பரிந்தல்:- இது எலவானசூருக்குத் தெற்கே 6.கி.மீ. தொலைவில் இருக்கிறது.

மலையனூர்:- இது எலவானசூருக்குத் தென்கிழக்கே 5.கி.மீ. தொலைவில் இருக்கிறது.

புத்தூர்:- இவ்வூர் எலவானசூருக்கு மேற்கே 1.கி.மீ. தொலைவில் உள்ளது.

சீய மங்கலம்:- இது எலவானசூருக்குத் தெற்கே 8.கி.மீ. தொலைவில் உள்ளது.

விக்கரச்சி மங்கலம்:- இது எலவானசூருக்கு மேற்கே 3.5.கி.மீ. தொலைவில் உள்ளது.

நெடுமானூர்:- இது எலவானூசூருக்குத் தெற்கே 5.கி.மீ. தொலைவில் உள்ளது.

மாம்பட்டு:- இது எலவானூசூருக்கு மேற்கே 8. கி.மீ. தொலைவில் உள்ளது.

அதகூர்:- இது எலவானூசூருக்கு வடமேற்கே 8.கி.மீ. தொலைவில் உள்ளது.

சீதேவி:- இது எலவானூசூரிலிருந்து வடமேற்கே 32.கி.மீ. தொலைவில் உள்ளது.

எலவானூசூர்க் கல்வெட்டுக்களின் மூலம் சில குறுநில மன்னர்களைப் பற்றிய விவரங்களை அறியலாம். திருக்கோவலூரைத் தலை நகரமாகக் கொண்டு மலையமான் என்பவன் ஆண்டு வந்தான். அவன் குறுநில மன்னர்களில் ஒருவன்; பார்க்கவ கோத்திரத்தினன்; **பராந்தக யாதவ பீமன்** என்ற வேறு பெயரும் இவனுக்கு உண்டு. முதலாம் இராசராசனுடைய படைத்தலைவனாக விளங்கியவன்; முதலாம் இராசேந்திர சோழன் காலத்திலும் இருந்தவன். இவனைப் பற்றிய செய்திகளைத் திருக்கோவலூருக்கு அண்மையில் உள்ள கீழூர்ச் சிவன்கோயில் சாசனம் மூலமாக அறியலாம். இவன் சிகரசிகாமணி நாதருக்குக் கோதானமும், நிலதானமும் செய்துள்ளான்.

இராசேந்திர சோழ மலையகுலராயன் என்பவன் எலவானூசூர் பகுதிக்குப் பாடிகாவல் அதிகாரியாக இருந்தான். சிவன் கோயிலுக்கும், விஷ்ணுகோயிலுக்கும் குடிமக்கள் தந்த வரிப்பொருட்களை மானியமாக அளித்தான். இவனுக்குச் **சூரியன் இராமன்** என்ற வேறு பெயரும் உண்டு.

இராசராச மலையகுலராயன் சோழேந்திர சிங்க மலையகுலராயன், இராசராசக் காடவராயன் போன்றவர்களும் சிவன் கோயிலுக்கு நிவந்தங்கள் வழங்கியுள்ளார்கள் என்று கல்வெட்டுக்களின் மூலம் அறியலாம்.

யானை ஏற முடியாதபடி மிகவும் உயரமான பீடத்தின் மீது அமைக்கப்படும் கோயில் மாடக்கோயில் என்று வழங்கப்படும். இவ்வூரிலுள்ள சிவன்கோயிலும் மாடக்கோயிலே.

சுமார் 4.மீட்டர் உயரமுள்ள பீடத்தின் மீது கோயில் அமைந்துள்ளது. மலையைச் சுற்றிக் கருங்கல் சுவர் எழுப்பி அதையே பீடமாக மாற்றியிருக்கின்றனர் அக்காலத்தில், கல்வெட்டுக்கள் மலை என்றே குறிப்பிடுகின்றன.

''திருமலை மேலே இரவை சந்தி விளக்கு எரியக் கடவதாக''

''இரவை சந்தி திருமலைமேலே எரியக்கடவதாக'' என வரும் இரண்டாம் இராசாதிராசன் கல்வெட்டுக்களாலும் இச்சிவன் கோயில் மலைமேல் அமைக்கப்பட்ட மாடக்கோயில் என்று தெரிய வருகிறது.

பீடத்தில் சோழ மன்னர்களின் கல்வெட்டுக்கள் இடம் பெற்றுள்ளன. முகமண்டபம் அர்த்த மண்டபத்துக்கு முன்பு உள்ளது. இம்மண்டபம் கி.பி. 1165 ஆம் ஆண்டுக்கு முன்பே கட்டப்பட்டிருக்கலாம் என்று கல்வெட்டின் மூலம் அறியலாம்.

இங்குள்ள சிற்பங்களில் துவார பாலகர்களின் சிற்பங்கள் மிகவும் அழகுடையனவாக அமைந்துள்ளன. எடுப்பான தோற்றம், ஒரு கையில் கதை, மற்றொருகை வியப்புக் குறியைக் காட்டுகிறது. ஒருகால் நின்ற நிலையில் பீடத்திலும், மற்றொரு கால் மடங்கிய நிலையில் கதையின்மீது ஊன்றியவாறும் அமைந் துள்ளது. இத்தகைய சிறப்பினைப் பெற்றிருந்த எலவானூரில் உள்ள சிவன் கோயில் கவனிப்பாரற்று அழிந்து வருகின்றது. சாசனங்கள் கவனிப்பாரற்று பாழடைந்து வருகின்றன.

எலவானூரைப் பற்றியும், அவ்வூருக்கு அண்மையில் இருக்கும் ஊர்களைப்பற்றியும் அறிய எண்பது கல்வெட்டுக்கள் உபயோகமாயிருக்கின்றன.

நூலாசிரியர் வரலாறு :—

இந்நூலின் ஆசிரியர் புராணத் திருமலை நாயகர் என்று இந்நூலின் 28 ஆவது செய்யுளில் உள்ள ''செப்பருமிப் புரா ணத்தைத் திருமலைநா யகன்றமிழாற் செப்பினனல்''
என்ற தொடரால் நன்கு அறியாலாம்.

இவரது புதல்வர் **பரஞ்சோதி** என்பவர். இவரது இயற்பெயர் பற்றி டாக்டர் **ஐயரவர்கள்** மதுரைச் சொக்க நாதருலா நூலாசிரியர் வரலாற்றில் ''இயற்பெயர் திருமலைநாதர்'' என்பது. இவர் காஞ்சிபுரம் ஞானப்பிரகாச மடத்துச் சிஷ்ய பரம்பரையைச் சார்ந்தவர். திருமுறைகளிலும், பழைய தமிழ்நூல்களிலும், ஸ்தல புராணங்களிலும், பிரபந்தங்களிலும், சைவ சாஸ்திரங் களிலும் பயிற்சியுள்ளவர். இவருடைய பக்தியையும் செய்யுள் நயத்தையும் அறிந்த தில்லை மூவாயிரவரும் 'யதிகளும்' மற்றப் பெரியோர்களும் சைவ புராணத்தின், ஒரு பகுதியாகிய சிதம்பர புராணத்தைத் தமிழிற் செய்யுள் நடையாக மொழி பெயர்க்கும் படி சொன்னமையால் அங்ஙனமே செய்ய உடன்பட்டனர்.

மலைநாட்டிலிருந்து வடமொழிப் பிரதியொன்றை வருவித்து அதனைக் கொண்டு அவர்கள் கூறிய வண்ணம் மொழி பெயர்த்தனர் என்றும், அப்பிரதியில் அப்புராணத்தின் பிற்பகுதி இல்லையென்றும், பின்பு அகப்படாமையால் அப்பகுதி இவரால் செய்யப்பட வில்லையென்றும், அது கிடைக்கவில்லையே என்ற வருத்தம் இவருக்கு இருந்தது என்றும் தெரிகிறது''. அப்புராணத்தைக் கேட்டு அதன் சொற்சுவை பொருட்சுவைகளை நன்ருக அறிந்த பெரியோர்கள் இன்புற்று இவரைப் **புராணத் திருமலை நாத ரென்று** சிறப்பித்து வழங்குவாராயினர்'' என்று குறிப்பிட்டுள் ளார்.

தி. வை. சதாசிவபண்டாரத்தார் ''இலக்கியமும் கல் வெட்டுக்களும்'' என்ற நூலில் இவரைப்பற்றிக் ''கல்வெட்டுக்க ளால் அறியப்பெறும் மூன்று தமிழ் நூல்கள்'' என்ற தலைப்பில் ''இறைசை என்பது இந்நாளில் எலவானுசூர் என்னும் பெயருடன் தென்னார்க்காடு ஜில்லா திருக்கோவலூர்த் தாலுகாவில் உள்ளது. அது முற்காலத்தில் இறையானரையூர் என்னும் பெயருடைய தாயிருந்தது என்பது அவ்வூர்க் கல்வெட்டுக்களால் அறியப்படு கிறது. அவ்வூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் இயற்றி யருளிய திருவிளையாடல்களைக் கூறும் தலபுராணமே **இறைசைப் புராணமாகும்**. இந்நூலின் ஆசிரியர் **திருமலை நயினர் சந்திர சேகரர்** என்னும் புலவர் ஆவர். எனவே இவர் சந்திரசேகரர் என்ற இயற்பெயருடையவர் என்பதும் திருமலை நயினருடைய புதல்வர் என்பதும் அறியக் கிடத்தல் காண்க. இவ்வாசிரியர் மெய்கண்ட சந்தானத்தைச் சேர்ந்த திருவண்ணாமலைச் சத்திய ஞான தரிசினிகளின் மாணவர். இவர் இறைசைப் புராணம் பாடி அரங்கேற்றிய போது, கோயில் அதிகாரிகள் இவருக்குச் சில நிலங்களும் ஆனந்த தாண்டவன் திரு வீதியில் ஒரு மனையும், கி.பி. 1510 ஆம் ஆண்டில் அளித்துள்ளனர். இச்செய்திகளெல் லாம் எலவானுசூர்க் கோயில் முதற் பிரகாரம் மேலைச் சுவரில் வரையப்பட்டுள்ள ஒரு கல் வெட்டினுல் நன்கு புலனுகின்றன. (Ins. 485 of 1938) இந்நூலாசிரியர் பதினரும் நூற்ருண்டில் வாழ்ந்த புலவராவர்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் ''மறைந்துபோன தமிழ் நூல்கள்'' என்ற நூலில் ''தென் ஆர்க்காடு மாவட்டம் திருக் கோயிலூர் தாலூகாவில் இறைவானறையூர் இருக்கிறது. இவ்வூர் இப்போது எலவானுசூர் என்று வழங்கப்படுகிறது. இவ்வூர்ப் புராணத்தைப் பாடியவர் **திருமலை நயினர் சந்திரசேகரர்** என்பவர். இவர் திருவண்ணாமலை மெய்கண்ட சந்தானத்தைச்

சேர்ந்த சத்தியஞான தரிசினிகளின் மாணுக்கர். இந்தப் புராணத்தைப் பாடியதற்காக இவருக்கு, இவ்வூர் ஆனந்த தாண்டவன் வீதியில் வீடுகட்ட மனையும் நிலமும் தானம் செய்யப் பட்டதை இவ்வூரிலுள்ள சாசனம் கூறுகிறது. தானம் செய்யப் பட்ட காலம் சக ஆண்டு 1432 (கி.பி. 1510) பிரமோதூத ஸ்ரீ புரட்டாசி மீ 25உ என்று குறிப்பிட்டுள்ளார்.

திரு. **மு. இராகவையங்கார்** அவர்கள் ''சாஸனத் தமிழ்க் கவி சரிதம்'' என்ற நூலில் ''இறைசை என்பது தென்ஞர்க்காடு ஜில்லா, திருக்கோவலூர்த் தாலூகாவில், எலவாஞசூர் என்ற ஊராகும். இங்குள்ள கோயிற் சிவபிரானுக்குப் புராணமொன்று சக ஸ்ரீ 1432 (கி.பி. 1510)ல் திருமலை நயினர் சந்திரசேகரர் என்ற புலவராற் பாடப்பட்டதென்பது, அவ்வூர்க் கோயில் முதற் பிரகாரம் மேலைச்சுவரில் உள்ள சாஸனமொன்ருல் தெரியவரு கின்றது. இப்புலவர் மெய்கண்ட சந்தானத்தைச் சேர்ந்தவர்.

இனி அதுவே சந்தானத்தைச் சார்ந்த புராணத் திருமலை நாதர் என்பார் சக ஸ்ரீ 1430 (கி.பி. 1508)ல் சிதம்பர புராணம் என்ற நூல் இயற்றியுள்ளார் (பாயிரம்.15.) இவர் காலத்தில் தென் பாண்டி நாட்டைத் தென் காசியிலிருந்து ஆண்டு வந்தவன் வீரமாறன் (1473–1506) என்ற பாண்டியன். இவனது அவையில் இத்திருமலை நாதர் தாம்பாடிய மதுரைச் **சொக்க நாதருலாவை** அரங்கேற்றினர் என்று அவ்வுலாப்பாயிரம் கூறு கின்றது. இத்திருமலை நாதரின் மகஞர் பரஞ்சோதியார் என் பார். இவர் **சிதம்பரப் பாட்டியலை** இயற்றியவர். இதன் பாயிரத்துள், தம் தந்தையார் சிதம்பர புராணம் முதலியன இயற்றிப் **புராணத் திருமலை நாதர்** எனப் பெயர் பெற்றவர் என்று கூறப்பட்டுள்ளது.

மேற்கூறிய இறைசைப் புராணம் பாடியவரது பெயரும், காலமும் சந்தான பரம்பரையும், புராணங்கள் பாடியிருப்பதும் இறைசைச் சாசனத்தோடு பெரிதும் ஒன்றியிருப்பதால் அவ்விரு வரும் ஒருவரென்றே கொள்ளத் தகும். ஆயின் திருமலை நாதர், திருமலை நயினர் சந்திர சேகரர் என்றும் வழங்கப்பட்டனர் என்பது மேற்கண்ட குறிப்புக்களால் விளங்குகின்றன. இப்புராணமும் இப்போது நமக்குக் கிடைத்திலது'' என்று கூறி யுள்ளார்.

எனவே புராணத் திருமலை நாதர் என்ற பெயரும், திருமலை நயினர் சந்திரசேகரர் என்ற பெயரும் ஒருவருக்கே வழங்கியிருக் கலாம் என்று கொள்ளலாம்.

இவர் பிறந்த ஊர் தில்லை. சைவ வேளாள மரபினர். இவர் திருமுறைகளிலும், சைவ சித்தாந்த சாத்திரங்களிலும், தலபுராணங்களிலும், பிரபந்தங்களிலும் நல்ல பயிற்சியுடையவர். இவருடைய பக்தியையும், செய்யுள் செய்யும் ஆற்றலையும் கண்டு தில்லை மூவாயிரத்தவர்களும், யதிகளும், சைவச் சான்றோர்களும் வடமொழியிலுள்ள சிதம்பர புராணத்தைத் தமிழில் இயற்றித்தர வேண்டும் என்று கேட்க, அவர்கள் விருப்பப்படி இயற்றினர். சிதம்பர புராணத்தின் சொற்சுவை, பொருட்சுவையைக் கண்டு சான்றோர்கள் இன்புற்று இவரைப் **புராணத் திருமலை நாதர்** என்று சிறப்பித்து வழங்குவாராயினர். அப்புராணத்திலுள்ள 'முற்றுமுணர்' என்னும் செய்யுளால் இவர் உமாபதி சிவாசாரியரிடத்தில் மிக்க அன்பு கொண்டவர் என்பது தெரிகின்றது. அவர் காலத்திற்குப் பிற்பட்டவர் என்பதும் தெரிகிறது.

சிதம்பர புராணத்திலுள்ள ''சூழுமாகடல்'' என்னும் செய்யுள் இவர் சாலிவாகன சகாப்தம் 1430 (கி.பி. 1507) ஆம் வருடத்தில் சிதம்பர புராணத்தை இயற்றத் தொடங்கியதாகக் கூறுகின்றமையால் இவரது காலம் 16 ஆம் நூற்றாண்டு என்று தெரிகிறது. இவர் மதுரையை அரசாட்சி செய்துகொண்டிருந்த வீரமாறன் என்பவனால் ஆதரிக்கப்பட்டவர். அவனது வேண்டுகோளுக்கு இணங்கி மதுரைச் சொக்க நாதருலா என்ற நூலை இயற்றினர் என்பதும் தெரிகின்றது.

இவரது குமாரர் **பரஞ்சோதி** என்பவர். (திருவிளையாடற் புராணம் பாடிய பரஞ்சோதியார் வேறு) இவர் தம் தந்தையான புராணத் திருமலை நாதரிடம் தமிழ்க் கல்வி பயின்றவர். இலக்கண இலக்கியங்களில் தேர்ச்சி பெற்றவர். இவர் பொருத்த இலக்கணமும், பிரபந்த இலக்கணமும் அமைந்த **சிதம்பரப் பாட்டியல்** என்னும் நூல் ஒன்று இயற்றியுள்ளார்.

''புராணத் திருமலைநாதர் செய்த நூல்களைக் கூர்ந்து கவனிக்கும்போது, இவர் சைவ சமயத்திலும், சிவத்தலங்களிலும் மிக்க பற்றுடையவர் என்றும், பல தலங்களின் சரித்திரங்களை நன்கு தெரிந்துகொண்டு அவற்றைப்பற்றிய செய்திகளை அழகுற அமைத்துப் பாடுவதில் வல்லவர் என்பதும், சிவ ஞானத்தைப் பெற வேண்டும் என்ற நோக்குடையவராக இருந்தனரென்றும், சந்தக்கவி இயற்றுவதில் ஆற்றலுடையவரென்றும், சிவபெருமானுடைய குண விசேடங்களையும், திருவிளையாடல்களையும் பாராட்டித் துதிப்பதில் பெருவேட்கையுடையவரென்றும், தமிழ் மொழியிடத்துப் பேரன்புடையவரென்றும் தெரிகின்றது''

என்று ஐயவரர்கள் கூறியுள்ளார்கள். இவர் இயற்றிய நூல்கள்: இறைவாச நல்லூர்த்தல புராணம், சிதம்பர புராணம், சரப புராணம், ததீசி புராணம், வினுவிடைப் புராணம், மதுரைச் சொக்க நாதருலா, அருணகிரிப் புராணம் முதலியன.

சிதம்பர புராணத்தை இவரது மகனுர் சைவ—பரஞ்சோதி மாமுனிவர் அருளிச் செய்தது என்றும், அதற்குத் துறை மங்கலம் சிவப்பிரகாச ஐயரவர்களாற் செய்த பொழிப்புரையுடன் கூடியது என்றும் குறிப்பிட்டுப் பிரமாதி வருஷம் பதிப்பித்துள்ளார்கள்.

அந்நூலின் பாயிரத்தில் உள்ள ''முற்றுமுணர்'' என்ற செய்யுளுக்குச் சிவப்பிரகாச ஐயரவர்கள் அச்செய்யுளில் நூல் ஆக்கியோன் பெயர் பரஞ்சோதி முனிவர் என்ற குறிப்பு இல்லாத போதிலும் வலிய பரஞ்சோதி முனிவர் என்று உரை கண்டுள்ளார். இவ்வுரையைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டியதொன்றுகும்.

புராணத் திருமலை நாதருடைய மகனுன பரஞ்சோதி என்பவர் இயற்றிய **சிதம்பரப் பாட்டியல்** என்னும் நூலிலுள்ள சிறப்புப் பாயிரத்தில்

சிதம்பரப் பாட்டியலைச் செய்தான் தமிழாற்
சிதம்பரபு ராணமுதற் செய்து — விதம்பெறுசீர்
சேர்ந்த புராணத் திருமலைநா தன்றவத்தாற்
சார்ந்தபரஞ் சோதியென்பான் ருன்.''

என்ற செய்யுள் உள்ளது. ''சிதம்பர புராணத்தை இயற்றிய புராணத் திருமலை நாதருடைய மகன் பரஞ்சோதி என்பவன் சிதம்பரப் பாட்டியலைப் செய்தான்'' என்ற பொருள் வெள்ளிடை மலைபோல் விளங்குகிறது.

''மாமன்னு சிதம்பரபு ராணமுத னூலும்
மதுரையுலா வும்பகர்ந்தோன் மருவுகுல மைந்தன்
தேமன்னு புராணகலை பலதெரி புராணத்
திருமலைநா யகனருளின் றேசுபூண் டோனே.''

என்ற அடிகளாலும் சிதம்பர புராணத்தை இயற்றியவர் **புராணத் திருமலை நாதரே** என்று அறுதியிட்டுக் கூறலாம்.

சிதம்பர புராணம் :— இந்நூல் 814 செய்யுட்களையுடையது. இதற்கு உரை கண்டவர் துறைமங்கலம் சிவப்பிரகாச ஐயர். பாயிரம் பரஞ்சுடர், திருச்சிற்றம்பலத்திலிருக்கும் பேரொளி, சிதம்பரம், சிவகாமசுந்தரி, கற்பக விநாயகர், சுப்பிரமணியர் துதி,

நந்தி தேவர் துதி, நால்வர் துதி, தில்லை மூவாயிரவர் துதி, சிவனடியார்கள் துதி, திருநீற்றுச் சோழர் துதி, நூல் செய்தோன் பெயர், அவையடக்கம் முதலியவற்றைக் கொண்டுள்ளது. மேலும், சிதம்பர மான்மியம், துன்மதச் சருக்கம், துச்சகச் சருக்கம், நியமச் சருக்கம், சோம நாதச்சருக்கம், தீர்த்தச் சருக்கம், திருச்சிற்றம்பலச் சருக்கம், சமாதிச் சருக்கம், துற்றெரிசனச் சருக்கம் என்ற ஒன்பது தலைப்புக்களையும் உடையது.

ததீசி புராணம்:— இந்நூலாசிரியர் இயற்றியது. 48 பாடல்களைக் கொண்ட ஒரு சிறு நூல்.

சரப புராணம் :— இந்நூல் 431 செய்யுட்களையுடையது. பாயிரம், நரசிங்கவுற்பத்திச் சருக்கம், கடவுளர் முறையிடு சருக்கம், வீரபத்திரன் எழுச்சிச் சருக்கம், அறிவுறுத்தியசருக்கம், சலந்தரன் வதைச் சருக்கம், சக்கரம் பெற்ற சருக்கம், நரசிங்க வதைச் சருக்கம் என ஏழு சருக்கங்களையுடையது. இந்நூல் தஞ்சைச் சரசுவதி மகால் நூல்நிலையத்தினரால் 1971 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டுள்ளது. இவர் அருணகிரிநாதர் திருப்புகழில் மிகுந்த ஈடுபாடு உடையவர் என்பதைக் கதிர்காமத் திருப்புகழிலுள்ள ஞானசம்பந்தரைக் குறிக்கும் ''அழுதுலகை வாழ்வித்த'' என்ற சொற்றொடரை அப்படியே சரப புராணப்பதிகம் 10-வது செய்யுளில் கையாண்டுள்ளதின் மூலம் அறியலாம்.

வினைவிடைப்புராணம்:— இந்நூலின் ஆசிரியர் புராணத் திருமலை நாதர். இந்நூல் 44 செய்யுட்களையுடையது. இந்நூல் சிவ மகா புராணத்தில் ஒரு சருக்கம் போன்றதே.

இறைவாச நல்லூர்த்தல புராணம்:— இந்நூல் 374 செய்யுட்களையுடையது. விநாயகர் வணக்கம், கலைமகள் துதி, பரசிவ வணக்கம், சிகரசிகாமணிநாதர் துதி, பெரிய நாயகியம்மைதுதி, கணபதி துதி, வேல்முருகப் பெருமான்துதி, நால்வர், சண்டேசுரர், மற்றைய அடியார்கள்துதி, அவையடக்கம், நாட்டுச் சிறப்பு, நகரச் சருக்கம், ஆக்கியோன் பெயர், அருச்சனைச் சருக்கம், காருண்டன் உற்பவச்சருக்கம், தெய்வீகன் உற்பவச்சருக்கம், காருண்டன் வதைச்சருக்கம், நீரேற்ற சருக்கம் என்ற தலைப்புக்களையுடையது. இறுதியில் இந்நூலுக்கு உரையியற்றியவர் பாடிய இரண்டு செய்யுட்கள் உள்ளன.

சுவாமியின் பெயர் :— சிகர சிகாமணிநாதர், ஊர்பாகம் கொண்டருளிய நாயனுர்.

இறைவி பெயர்:— பெரிய நாயகி.

''கருணை நாயகி விரத நாயகி கடவுள் நாயகியே
ஒருவர் நாயகி யறிஞர் நாயகி உலக நாயகியே
தரும நாயகி மறைகள் நாயகி சமய நாயகியே
பெருமை நாயகி இறைசை நாயகி பெரிய நாயகியே''.

இப்பாடல் எளிய நடையில் அமைந்திருந்தபோதிலும் சொற்சுவை பொருட்சுவை மிக்கதாக அமைந்துள்ளது.

''பொறிவழி கூடிய புலன்வழி யோடிய
புலனுடை யாரறிவார்
நெறியொடு கூறிய நிலையிது தானென
நினைவரி தாமணியார்
அறிவுடை யோர்சிர மருவுசி காமணி
யமரர்சி காமணியோர்
செறியிறை யாபுரி மறைகள்சி காமணி
சிகரசி காமணியே.''

என்று சிகரசிகாமணி நாதரின் சிறப்பினைச் சிறப்பிக்கின்றார்.

இந்நூலாசிரியர் சைவசித்தாந்தக் கடலில் மூழ்கி ஆனந்தானுபவத்தைப் பெற்றவர் என்பதை இந்நூலிலுள்ள பல பாடல்கள் மூலம் அறியலாம். அவற்றுள் சில பாடல்கள் தரப் பட்டுள்ளன.

''அக்கிரிபோ லாணவமாம் பொய்க்கிரியைப்
பொடியாக்கி யலையான் மிக்க
இக்கடல்போல் வினைக்கடலை யீடழித்துச்
சூரனுர மென்ன வுன்னி
தக்கபெரு மாயையுரங் கிழித்துமக
வாற்கரசு தந்தாற் போல
மிக்கதிரு ஞானவர செமக்குதவும்
வேலோனை விளம்பி வாழ்வாம்.'' (செய். 11.)

' அத்துவித முத்தியினை யாருயிருக்
களித்தருள்வான் யாவ னென்னுஞ்
சத்தியமெய்ஞ் ஞானவழி யுணர்த்தவென
நின்சரணஞ் சார்ந்தா ரென்ன
வித்தகநான் மறையோனுங் கேட்டுமுனி
வரைப்பார்த்து விருப்பந் தாங்கி
உத்தமமோ னம்புரிந்து தெரிந்துவிளங்
கப்பரிவா லுரைக்க லுற்றான்.'' (செய். 36.)

''நித்தனிரா மயனொழியா நிருத்தனரு
'பன்அனந்தன் நினைக்க வொண்ணுச்
சுத்தனுயிர் தொறுநிறைந்து தோன்றுத
பரமசிவன் சுடர்மெய்ஞ் ஞான
முத்தனுல கம்படைத்துப் புரந்தழித்து
மொழிவருந்தன் பெருமை யோரா
மத்தனருள் பராசத்தி மணுளன்நம
தாவிக்கும் மணுள ஞவான்.'' (செய். 37.)

''ஆருயிர்கள் முத்தியினை யடைந்திடுமா
றருளிச்சை யாயி ஞனுஞ்
சாருமுயிர் கருமத்தி னளவறிந்து
நிற்பானுந் தக்க காலஞ்
சேரவினை யருத்துவிக்கும் செயலானும்
மலங்கடனைச் சிதைத்து நேசம்
கூரவரு முத்தியினைக் கொடுப்பானுஞ்
சிவனன்றிக் குறிக்க வுண்டோ.'' (செய். 42.)

''மாயையிரண் டகன்றுனு மிருவினையைக்
கடந்தானு மலத்துக் கென்றுஞ்
சேயனென நின்றுனுஞ் சத்திசிவ
மென்றுலகிற் சிறந்து ளானும்
ஏயபுல னறிவுதனக் கெய்தானும்
பரசிவனே விரதம் போலும்
காயமுடை யீரவன்றன் அருளன்றி
யுன்னியுளங் கம்பி யாதால்.'' (செய். 43.)

உருவமென வருவமென வுருவருவ
மில்லாத வொருவ னென்று
கருதரிய வெண்ணிறந்த பல்லுயிர்கள்
பொருட்டாகக் கருணை தானே
திருவுருவ மாயுகந்த திருவுருவம்
பலவவையுட் செவ்வை ஞானந்
தருவுருவச் சிவலிங்க வுருவமெனச்
சதுர்மறைகள் சாற்று மன்றே. (செய். 45.)

ஆசிரியர், இத்தலத்தின் பெருமையை ஏழு பாடல்களின் மூலம் விளக்குகின்றுர். அவற்றுள் சில பாடல்கள்:

''ஆரூரிற் பிறந்தோர்கள் அம்பலத்தைக்
கண்டோர்கள் அருள்கா சிக்கண்
சீரூர விறந்தோர்கள் கேதாரம்
நீராடிச் சிறந்துள் ளோர்கள்
பேரூரு மருணைகிரி நினைந்தோர்கள்
அரசவனம் பிரியா தன்பாய்
ஏரூர இருந்தோர்கள் கதிபெறுவர்
என்றுரைத்தான் இகல்வேற் கந்தன்.'' (செய். 143.)

''நிறைந்தபுகழ் அரசவனத் தரனடியார்க்
கொருபொழுது நிகரில் அன்னம்
சிறந்தளிக்கில் எண்ணுன்கு தருமமியற்
றிடுபலனைச் சேர்ந்து வாழ்வார்
துறந்தவர்க்கும் மறையவர்க்கும் இரவலர்க்குந்
துகிலடிசில் துறக்க நல்கிற்
பிறந்தபவ வினைநீங்கிச் சிவபுரியில்
கணுதிபராய்ப் பிறங்கு வாரே.'' (செய். 145.)

''அரசவனத் துறைபவர்கட் கமுதளிக்க
நினைந்துநடந் தடிபேர்ந் திட்டோர்
உரைசெயிலோ ரடிக்கியொரு பரிமேதப்
பலன்பெறுவ ரோரன் னத்திற்
கிரவிமதி யுள்ளளவு மிரசிதவெற்
பினிலுறைவர் இமையா முக்கண்
பரனுருவ மாகிடுவர் ஒருவருக்கு
அமுதளிக்கில் பகருங் காலே.'' (செய். 148.)

இந்நூலுள் பல சந்தப்பாடல்கள் அமைந்துள்ளன.

தெய்வீகன் காருண்டனுடன் போர் செய்யப் புறப்பட்டான். மந்திரிகளும், சேனுதிபதிகளும் சேனைகளை வரிசை வரிசையாக வகுத்து நடத்திச் செல்கின்ற தன்மையை ஆசிரியர் பல சந்தப் பாடல்களின் மூலம் விளக்குகின்ருர். அவற்றுள் சில இங்குக் காண்போம்:

''பொழிம தத்தன கிரியெ டுப்பன
புயலை யெற்றுவ புவியின்மேன்
மொழிம லைக்குல நிகர்ந டப்பன
முகப டத்தன புகைகளால்
விழிநெ ருப்பென நிழல்வெ றுப்பன
வெடிகு ரற்கொடு திசைகள்சேர்
வழிய டைப்பன வுரக னெய்த்திடு
வகைந டப்பன கரிகளே.'' (செய். 217.)

இ

''கதிப டைத்தன நொடிவ ரைக்கன
ககன முட்டவும் வருவபோல்
அதினு டக்கிய கடுமை பெற்றன
வமரெ திர்த்திடு மவர்கண்மேல்
விதிய ழிப்பன பலநி றத்தன
மிகும ணிக்குர லொலிகளான்
முதிரு மைப்புய லெனவு மொப்பன
முனைந டப்பன பரிகளே.'' (செய். 219.)

''தரைந டத்தலை யருவ ருப்பன
தபன னுய்த்தெழு மிரதமென்
றுரைசெ யப்பரி தனைய ழிப்பன
வுயர்மு கிற்குல மரியமால்
வரைந டுக்குற மிகவ திர்ப்பன
மனநி கர்ப்பன கடலின்மேல்
நிரைய லைத்திர ளெனந டப்பன
நிமிட மிட்டுடல் இவுளியே.'' (செய். 226.)

தெய்வீகராசன் மகனிடம் அரசாட்சியை ஒப்படைத்து விட்டுச் சிகரசிகாமணி நாதருடைய இரண்டு திருவடிகளையும், தியானித்துக்கொண்டு, சருகுகளையும், சலத்தையும் ஆகாரமாகக் கொண்டு தவஞ் செய்தான். சிவபெருமான் அவனுடைய எதிரில் தோன்றிக் காட்சியளித்தார். அரசன் சிவபெருமானைக் கண்டு ஆனந்த சாகரத்தில் மூழ்கி, அவரிடம் மனம் கலக்கத்துதி செய்தான் என்பதை ஆசிரியர் கலி விருத்தத்தில் ஆறு பாடல்களில் கூறுகின்றார். அவற்றுள் சில:

''அரிநான்முக னறியாவகை
அழன்மேனிய சரணம்
தெரியாவரு ளுருவாகிய
சிவசங்கர சரணம்
எரியாடிய பரமான்மழு
வியல்செங்கர சரணம்
கரியாருரி புனைநாயக
கருணாகர சரணம்!.'' (செய். 366.)

''மலைமாமகள் மலையாம்முலை
மருவும்புய சரணம்
சலமாமகள் புனைநாயக
தலைநாயக சரணம்
சிலையாலெயி லெய்தாயுயர்
தேவாதிப சரணம்
கலைமாமதி நதிசூடிய
கருணாகர சரணம்.'' (செய். 368.)

''பந்தந்தனை யறவீசிய
பரிபூரண சரணம்
சந்தந்திரு நீறுயணி
தருமாகம சரணம்
எந்தம்பவ வினைபோயற
விங்கெய்தினை சரணம்
கந்தன்றனை யன்பாலருள்
கருணாகர சரணம்.'' (செய். 369.)

ஆசிரியர், காருண்டன்வதைச் சருக்கத்தில் மடக்கணி அமைந்துள்ள பாடல்கள் பாடியுள்ளார். அவை:

''வெற்றியு டன்படு மாடவரே
வெய்யவன் மேனியை நாடவரே
பற்றர மாதர்கண் மாலைகளே
படைஞர்கண் மேலிடு மாலைகளே
உற்றெழு மாகன துந்துமியே
உதிரமுந் நீர்மோ துந்துமியே
செற்றுயிர் வெஞ்சம ஞர்களமே
செருமுயன் மன்னவ ஞர்களமே.'' (செய். 248.)

''வயவர்கள் சாய்வன வப்பனையே
மயலிசை கொட்டுந யப்பனையே
இயலிசை பாடுவ பாரிடமே
யிகலமர் மருவிய பாரிடமே
வியலிட மேலப் பாறுகளே
விரியுதி ரத்தப் பாறுகளே
அயன்மடி வாரிசை வானவரே
அரமட வாரிசை வானவரே.'' (செய். 249.)

''உடல்கள் சிதைந்தன வாரணமே
ஓசையொ ழிந்தன வாரணமே
இடமிகு மாலுதி ரத்தலேயே
எடுத்திலர் வாள்கள் கிடத்தலேயே
வடகிரி போலுறு மம்புயமே
வயவர்மு கந்திகழ் அம்புயமே
படையடல் கூர்வன வலகைகளே
பாரிட மாடிய வலகைகளே.'' (செய். 250.)

''வீரர் முகத்த வருங்கொடியே
மேன்மை குலேந்த வருங்கொடியே
வாருநி ணங்கடி னற்கழுதே
வந்துவெ றுத்ததி னற்கழுதே
சாரொலி போனவ ணிப்பறையே
சயமட மாதின ணிப்பறையே
ஊரிர தத்துடை யாழிகளே
யுதிரமு ணத்தொடை யாழிகளே.'' (செய். 251.)

ஆசிரியர், சிவபெருமான் உலகம் உய்யத் தனது நெற்றிக் கண் மூலம் தாதுவை விடுக்க, பூமிதேவி, கங்கா தேவி, வாயு பகவான், இமையவர்களுமாக அதனைத்தாங்கிச் சென்று தங்களால் முடியாமல் பார்க்க, அக்கினி தேவன் வந்து தாங்கி, அவனும் பொறுக்கமாட்டாமல் சிவனிடம் முறையிட அவர் சரவணப் பொய்கையில் விடுமாறு திருவுளம்பற்ற அவர்கள் அப்படியே சரவணப் பொய்கையில் கொண்டுபோய் விட்டனர். சப்த ரிஷிகளின் மனைவியர் எழுவரும் சரவணப் பொய்கையில் நீராடிக் கரையேறும்போது குளிருக்குப்பயந்து அக்கினியைக் கண்டு நெருங்கிவர, அருந்ததி மட்டும் இது தகாத செயல் என்று அவ் விடம் விட்டுப்போனாள். மற்ற ஆறு பெண்களும் வந்து சூழ்ந்து கொள்ள அப்போது பரமசிவன் கொடுத்த தாதுவை அக்கினி ஆறு பங்காக்கி ஆறு பெண்களிடமும் அளித்தனன். அவர்கள் கண்டு மருண்டு பார்த்த அளவில் அந்த ஆறுபங்கும் ஆறு புதல்வர் களாக ஆனார்கள். அந்தப் பெண்கள் அக்குழந்தைகளைத் தாமரை மலரில் கிடத்திச் சென்றனர். அவர்களின் நாயகர்கள் கோபித்துக் கொள்ளத் திரும்பி வந்து அந்தப் பொய்கைக்கரையில் தவம் செய்துகொண்டிருந்தனர். தாதுவைக் கொடுத்த ஈசுவரன் பார்வதியின் பாதத்திலிருந்த சிலம்பு உடைந்து, சிந்தின நவரத்தினங்களைப் பார்க்க ஒன்பது கன்னியர்களாக நின்றனர். சிவபெருமான் அவர்களை அருளுடன் பார்த்தார்.

அச்சமயம் சிவனது திருமுகத்தில் வியர்வை தோன்ற அதனை நகத்தினுல் வழித்தெறிய, அதில் நூருயிரம் வீரர்கள் உற்பத்தி யானுர்கள். நவரத்தினத்தில் தோன்றிய ஒன்பது கன்னியர்களும் ஒன்பது குமாரர்களைப் பெற்ருர்கள். சிவனும் அவர்களைக் கயிலாயகிரிக் கோயிலுக்குக் காவலாக வைத்து அந்த ஒன்பது பெண்களையும் பார்வதிக்குத் தாதியராக அளித்து, சிவன் உமை யுடன் சரவணப் பொய்கையை வந்து சேர்ந்தார். அங்கு இளஞ் சூரியர் போல் ஆறு பிள்ளைகள் இருக்கக் கண்டனர்.

உமையவள் அன்பு கூர்ந்து, பரமசிவனைப் பார்த்து இவர்கள் யாரென்று கேட்க, ஈசன் ''இவர்கள் உன் புதல்வர்கள்'' என்று சொல்ல அந்த அறுவரையும் தன் கைகளால் எடுத்து ஒன்ருகச் சேர்த்து அணைத்துக் கொண்டாள். அப்படி ஒன்ருக அணைத்த மாத்திரத்தில் ஆறு திருமுகங்களும், இரண்டு திருப்பாதங்களும், ஒளிவீசும் பன்னிரண்டு கண்களும், பன்னிரண்டு சிவந்த கரங்களும் திருவுருக்கொண்டு பூலோகம், தேவலோகம், நரக லோகம் முழுவதும் மகிழ, பிரமன், விஷ்ணு மகிழ, சீவராசிகள் அனைத்தும் மகிழ்ச்சியடையும்படியாக அவதரித்த குமரனைப் பார்வதி கண்டு மனமகிழ்ந்து பரமசிவனின் கையில்கொடுத்து மறுபடியும் வாங்கித் தனது மார்பில் வைத்து அணைத்துக் கொள்ள, தனங்கள் பால் சுரந்தன. அழகு மிகுந்த திருமேனியை யுடைய முருகனைத் தனது ஒப்பற்ற இடுப்பில் வைத்து மகிழ்ச்சியடைய, அதைக்கண்டு சிவனும் மகிழ்ந்து ஆறுமுகன் எனப் பெயரிட்டுப் பிரமனை அழைத்து இக்குமாரனுக்கு வேத சாத்திரங்களைக் கற்பிப்பாய் என, பிரமனும் முருகனுக்கு வேதத்தைச் சொல்லத் தொடங்கிய போது பிரணவத்தை உச்சரித்துக் கூறும்படி சொல்லினன்.

அதுகேட்ட முருகப் பெருமான், பிரமனிடம் 'ஓங்கார'த் திற்குப் பொருள் கேட்கவே பிரமன் திகைத்து இருந்தனன். முருகப் பெருமான் பிரமனது நான்கு தலைகளிலும் தன் சிவந்த கையினுல் குட்டிச் சிறையிலடைத்தனன்.

பிரமனைச் சிறையில் இட்டதை நாரதர் சிவபெருமானிடம் கூற, சிவபெருமான் நந்தியெம்பெருமானை அனுப்பி, பிரமனைச் சிறை விடுக்கும்படி செய் என, அவரும் முருகனிடம் வந்து அவரது கோபத்தைக்கண்டு பயந்து திரும்பி வந்துவிடவே, சிவபெருமான் அகத்தியர் முதலான முனிவர்களை அனுப்பி, அவர்கள் முருகனிடம் சென்று பிரமனைச் சிறையிலிருந்து விடும்படி கூற, முருகன் கோபித்து விடமுடியாதென்று சொல்ல அவர்களும் பயந்து திரும்பி வந்தனர்.

சிவபெருமான் அறுமுகனிடம் வந்து குமாரனே! இது இயல்பான காரியமோ? இது நிற்க கணக்கற்ற விரிவாகிய வேதங்களுக்கு உயிர்போன்ற பிரணவத்தின் பொருளை நீ நமக்குச் சொல்லக் கூடுமோ? என்று கேட்க, முருகன் நமக்கு வழிபாடு செய்யின் சொல்லக்கூடும் என்றுகூற , சிவபெருமான் அவ்வாறே முருகப்பெருமானைப் பொற்பீடத்தில் இருக்கச் செய்து தான் கீழே அமர்ந்து சொல்வாய் என்று கேட்க, முருகனும் பிரண வத்தின் பொருளைச் சொல்லத்தொடங்கினான்.

சிவபெருமானுக்கு உபதேசிக்கத் தொடங்கியபோது ஆறுமுகனின் வாக்கு தடைப்பட்டு மௌனமாக இருக்கவே சிவ பெருமான் முருகனைப்பார்த்து ''நீ நம்மை மதியாமல் நமக்கு உபதேசிக்கத் தொடங்கியபடியால் இந்தப் பாவவினை உனக்கு வந்தது'' என்று கூறியதாகக் கதையை அமைத்துள்ளார் இந் நூலில்.

இவ்வாறு அமைத்துள்ள கதாபாகம் ஸ்காந்த புராணத்தினின் றும் மாறுபட்டுள்ளதாக இருக்கின்றது. ஒருகால் இக்கதையின் அமைப்பு பிரம்மாண்ட புராணத்தில் உள்ளதா என்று தெரிய வில்லை. ஆனால் ஆசிரியர் அவையடக்கச் செய்யுளில் பிரமாண்ட புராணத்தில் விளங்கச் சொல்லியதை நான் தமிழ்ச் செய்யுளால் சொல்லத் தொடங்கினேன் என்று கூறியுள்ளதால் அப்புராணத் தில் இவ்வாறு கதையின் போக்கு இருக்கக் கூடும் என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது.

இவருக்கு முன்னர் சந்தன சாரியருள் கனிட்டரான கொற்ற வன்குடி ஸ்ரீ உமாபதி சிவாசாரியார் கோயிற் புராணம் என்ற ஒரு நூல் பாடியுள்ளார். அதனைச் சுட்டி இவர்

''முற்றுமுணர் மெய்கண்ட சந்ததிக்கோர்
தீபமென முதன்மை கொண்ட
கொற்றவன்றன் குடிமருவு குலவுமுமா
பதிசிவன்பொற் கோயி லுண்மை
சொற்றபுரா ணமுமிருக்கப் பின்னுமொரு
வகையானுஞ் சொல்வான் புக்கேன்
மற்றவன்றன் றிருவடியின் வழிவந்தோர்க்
கடியனெனும் வழக்கான் மன்னோ.''

என்று கூறியுள்ளார். (சிதம்பரபுராணம். பாயிரம் செய். 13.)

பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்த திரிகூட ராசப்ப கவிராயர் என்பவர் திருக்கோவலூர்ப் புராணம் என்றதொரு நூலை

இயற்றியுள்ளார். அவர் புராணத் திருமலை நாதரியற்றிய இறைவாச நல்லூர்த்தல புராணக் கதையைத் தழுவியே இயற்றி யுள்ளார் என்பதை, திருக்கோவலூர்ப் புராணம் பக்கம் எண்பது முதல் நூற்றெண்பது பக்கம் வரையில் உள்ள கதையை நோக்கின் நன்கு விளங்கும்.

''முன்னஞ் **சத்தமா கறைக்கண்டன் மான்மிய** மொழிந்தேம்
பின்னஞ் சொற்களைக் குறித்திடா திசைந்தனர் பெரியோர்
பொன்னங் கற்சிலை யாளனும் புனைந்தன னென்றே
இன்னஞ் சிற்பரன் கோவன்மான் மியமினி திசைப்பாம்.''

என்ற செய்யுளில் **சத்தமா கறைக்கண்டன் மான்மியம்** என்றது = சத்தகாள கண்டபுரம் என்னும் திரிசூலகிரிப் புராணம் ஆகும். திரிசூலகிரிப் புராணத்தைப் பாடியவர் திரிகூட ராசப்ப கவிராயர் என்று **''தமிழில் தலபுராண இலக்கியம் என்ற நூல்''** கூறுகின்றது. இக்கூற்று ஆராய்ச்சிக்குரியது. திரிசூலகிரிப் புராணத்தைப் பாடியவரே இந்நூலுக்கும் ஆசிரியர் என்று மேலே கூறியுள்ள செய்யுளால் உள்ளங்கனி நெல்லிக்கனி போல் விளங்கு கின்றதன்றே.

திருக்கோவலூர்ப் புராணத்திலுள்ள கதாபாகங்களை நோக்குமிடத்து இந்நூலாசிரியர் புராணத் திருமலைநாதர் இயற்றிய இறைவாச நல்லூர்த் தலபுராணத்தைத் தழுவியே பாடியுள்ளார் என்பதும் நன்கு விளங்கும்.

இறைவாச நல்லூர்த்தல புராணக் காப்புச் செய்யுளாக அமைந்துள்ள ''வேகமாநெறி சேரும்'' என்ற செய்யுள் நெல்லைநாத பண்டிதர் இயற்றிய சிவராத்திரிப் புராணச் சுருக்கம் என்ற நூலில் உள்ளது. ''வேகமாநெறி சேரும்'' என்ற இச் செய்யுள் சிவானந்த புராணத்திலும் முதற் செய்யுளாக உள்ளது. (சுவடி எண் 1111) தமிழ் இலக்கிய வரலாறு (16 ஆம் நூற்றாண்டு) என்னும் நூலில் இச்செய்யுள் பிரமோத்தர காண்டக் காப்புச் செய்யுள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஆராய்ச்சிக் குரியது ஆனால் இச்செய்யுள் பிரமோத்தர காண்டம் என்னும் நூலில் இல்லை. இந்நூலாசிரியரே இச்செய்யுளைக் காப்புச் செய்யுளாக அமைத்துக்கொண்டு பாடினாரா அல்லது நூலினைப் பிரதி செய்தவர் இச்செய்யுளைக் காப்புச் செய்யுளாக அமைத்து எழுதினாரா? என்று தெரியவில்லை.

திருக்கோவலூரிலுள்ள இறைவனின் பெயர்: வீரட்டேசுரர் வீரட்டசிகமணிநாதர். இறைவியின் பெயர்: பெரிய நாயகி. இறையானரையூரின் இறைவியின் பெயரும் பெரிய நாயகியே.

கோவலூர்ப் புராண ஆசிரியர் ''தெய்வீகராசன் அங்கவை, சங்கவை மணச்சருக்கம்'' என்ற தலைப்பில் 181 பாடல்கள் பாடியுள்ளார். ஆனால் புராணத் திருமலை நாதர் அங்கவை சங்கவை மணத்தைப் பற்றிக் கூறவில்லை. பாண்டிய மன்னன் மகள் **குலபதி**, சேர மன்னன் மகள் **பதுமாவதி**, வடமதுராபுரி ஆயர்குல மன்னன் வீரவர்மன் மகள் **கமலவல்லி**, அயோத்தி மாநகர் சுருதி அந்தண மன்னன் மகள் **அளகை** முதலியோர்களைத் திருமணம் செய்துகொண்டதாகக் கூறும் ஆசிரியர் அங்கவை, சங்கவை மணத்தைக் பற்றிக் கூறாத காரணம் யாதோ? என்று ஊகிக்க வேண்டியதாக உள்ளது.

''காரொலியும் பரியொலியுங்
 கரியொலியுந் திறல்வீரர்
சாரொலியுந் தேரொலியுஞ்
 சங்கொலியு மணமுரசப்
பேரொலியும் மதனகலைப்
 பெண்கொடியார் பண்பாடும்
சீரொலியும் நடத்தொலியும்
 திசையெங்கும் இசையெங்கும்.'' (செய். 342.)

''இசையெங்கும் இயலெங்கும்
 ஏற்றவருக் கினிதுதவும்
நசையெங்கும் விருந்தினர்பால்
 நயமெங்கும் மாடங்கண்
மிசையெங்கு மலங்காரம்
 மேலெங்கு மணியொலிகள்
திசையெங்கு மலர்ச்சோலை
 தெருவெங்கும் பூங்கொடிகள்.'' (செய். 343.)

இவ்விரண்டு பாடல்களின் மூலம் இறைவாச நல்லூரின் சிறப்பினை நன்கு எடுத்துக்காட்டுகிறார். இப்பாடல்களில் அந்தாதித் தொடையும் அமைந்துள்ளது. ஆசிரியர் அசரீரி என்ற வட சொல்லுக்கு ''ஆக்கையிலா மாற்றம்''என்ற தூய தமிழ்ச் சொல்லை ஓரிடத்திலும், ''சரீரமிலா மாற்றம்'' என்று மற்றொரு இடத்திலும் கூறியிருக்கின்றார். சிதம்பர புராணம் துற்றெரி சனச் சருக்கத்திலுள்ள 92 ஆம் பாடலில் ''சரீரமில் வாசகம்'' என்று கூறிப்போந்தார்.

இந்நூலில் தற்குறிப்பேற்றவணி அமைந்துள்ள பாடல்கள் இரண்டு. அவை:

''சதுர்முடியும் புனேமன்ன னுற்றதனே
வாக்கிஞற் சாற்றற் பாற்ருே
மதுரவரிச் சிலேமாரன் மோகமலர்க்
கணேயண்டம் வளேந்து மேலே
கதுவிடுதல் கண்டரசர்க் கிரங்கிநமை
யும்வளேத்தால் கடக்கப் போமோ
இதுபுதுமை யென்றஞ்சு வான்போல
மேற்கடல்வாய் இரவி சென்ருன்.'' (செய். 189.)

''கங்குலிடை யண்டமெலா மூடுமிருள்
கைவாங்கக் காவ லோய்நீ
எங்கள்குலக் கொடியாள்தன் குலபதியைப்
பிரிந்துநீ யிருந்த தென்ன
தங்களவின் வருத்தமுடன் மன்னர்பிரா
னுறும்வண்ணம் அலேதண் ணீர்மேல்
பொங்குதழல் எழுந்ததுபோல் எழுந்ததருங்
கலேயாரப் பொலிவெண் திங்கள்.'' (செய். 190.)

இந்நூலுக்குத் திருமுதுகுன்றம் **வீரசைவ சுப்பராய தேசிகர்** என்பவர் உரையியற்றியுள்ளார். வடசொல்லே அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார் என்பது உரையை நோக்குமிடத்து நன்கு விளங்கும்.

வடமொழியாற் சூதமுனி புகலிறைவா
னறையூரின் மகிமைத் தீம்பாற்
கடலதனேத் திருமலேநா யகன்றமிழால்
துதிசெய்தான் கடைந்தெ டுத்தே
விடலரிய வுரையென்னும் நெய்த்தீபங்
கவிஞர்சபை மேவ வைத்தான்
திடமுதுகுன் றினின்மருவு **சுப்பரா**
யக்கவிஞன் செகத்தின் மீதே.''

என்ற செய்யுள் வீரசைவ சுப்பராய தேசிகர் இயற்றியுள்ளார். அதில் ''வடமொழியினல் சூதமகா முனிவர் சொல்லிய இறையானறையூர் என்னும் க்ஷேத்திரத்தின் மகத்துவமாகிய திருப் பாற்கடலேத் திருமலேநாயகன் என்னும் புலவர் சிகாமணி காய்ச்சிப் பிரையிட்டுத் தமிழ்ப்பாடலாகிய தயிராகச் செய்தான். அந்தத் தயிரைக் கடைந்து வெண்ணெய் ஆக்கி உருக்கிவிட்டு நீங்காத அரிய உரையென்னும் நெய்த்தீபத்தைக் கவிவாணர்கள் நிறைந்த சபையில் பிரகாசிக்கும்படி, மேலான விருத்தாசலத்தில்

வாசமாயிருக்கும் வீரசைவ சுப்பராய தேசிகர் என்னும் வித்துவான் பூலோகத்தில் விளங்க வைத்தனன்'' என்று உரை கண்டுள்ளார்.

''இந்தப் புராணம் விழுப்புரம் இராமசாமிப் பிள்ளை அவர்களால் (16-10-1935) எழுதிய பிரதி ஒன்று, மேற்படியார் குமாரர் பழனியாண்டி பிள்ளையவர்களால் 3-12-1945 பெற்று வந்தது.

அது தெளிவுபெற இல்லாமையால் இறைவாச நல்லூர், கணக்கு, தங்கப்பெருமாள் பிள்ளை அவர்கள் வைத்திருந்த ஓலைச் சுவடியை மேற்படியார் குமாரர் சிவசண்முகம் பிள்ளை அவர்களிடம் போஸ்ட் மாஸ்டர், நாராயணசாமி பிள்ளை அவர்கள் மூலம் பெற்று வந்து பிரதி செய்யப்பெற்றது. பிரதி செய்தவர் திரு. வடிவேல் முதலியார், தமிழ்ப்பண்டிதர் திருக்கோவலூர்.'' என்று கையெழுத்துப்பிரதியின் இறுதியில் குறிக்கப்பட்டுள்ளது.

இந்நூல் அச்சாகும்போது ஒப்பு நோக்குதல் முதலிய பணிகளை உடனிருந்து செய்தவர் இந்நூல் நிலையத்தில் பணியாற்றி வரும் திரு. **சாயிராமன்** என்பவர்.

இம்முயற்சியில் ஈடுபடுத்தி நடாத்திவரும் பராசக்தியின் திருவடித்தாமரைகளைச் சிந்தித்து வணங்குகின்றேன்.

தனந்தரும் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே.

வித்துவான். சு. **பாலசாரநாதன்.**
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்.

ஆராய்ச்சிக் குறிப்பு:—

நடுநாட்டின் விசேடங்கள்:

பெரிய புராணம்

கங்கையு மதியும் பாம்பும் கடுக்கையு முடிமேல் வைத்த
அங்கண ரோலேகாட்டி யாண்டவர் தமக்குநாடு
மங்கையர் வதனசீத மதியிரு மருங்கு மோடிச்
செங்கயல் குழைக ளூடுந் திருமுனைப் பாடிநாடு.

பாரதப் பாயிரத்துள்

அவ்வைபாட லுக்குத் ததிநெய்பால் பெருகி
யருந்தமி ழறிவினுற் சிறந்து
பௌவநீ ராடைத் தரணிமான் மார்பிற்
பயிலுமுத் தரியமும் போன்று
மொய்வரால் கெண்டை வாளைசேல் மலங்கு
முதலிய சனமெதிர் கொள்ளத்
தெய்வமா நதிநீர் பரக்குநா டந்தத்
திருமுனைப் பாடிநன் னுடு.

பாவருந் தமிழாற் பேர்பெறு பனுவற்
பாவலர் பாதிநா ளிரவின்
மூவரு நெருக்கி மொழிவிளக் கேற்றி
முகுந்தனைத் தொழுதநன் னுடு
தேவரு மறையு மின்னமுங் காணுச்
செஞ்சடைக் கடவுளைப் பாடி
யாவரு மதித்தோர் மூவரி லிருவர்
பிறந்தநா டிந்தநன் னுடு.

நடுநாட்டின் பெயர்கள்:—

திருமுனைப்பாடி நாடு, பெண்ணை நாடு, தெய்வ நாடு.

இறைவாச நல்லூரின் வேறு பெயர்கள்:—

இறையானறையூர், அரசவனம், மூங்கில் வனம்,
இறையாபுரி, நீரேற்றபுரி.

இறைவனின் பெயர்கள் :—

சிகரசிகாமணி நாதர், சிகர மணிச்சுடர், ஊர்பாகங் கொண்டார், அரசவனத்திறை, மங்கையொரு பாகன், சோதிலிங்க நாதன், அரசவனத்தரன்.

தீர்த்தத்தின் பெயர்கள்:—

சிலாதல தீர்த்தம், தண்ட தீர்த்தம்.

தெய்வீகராசனைக் குறிக்கும் பெயர்கள் :—

அடல்கூர் ஆடல்வேந்தன், அடல்வேந்தன், அடலரசன், அரசர்கோன், அருள்வேந்து, உலகமன்னவன், கனகமுடிக் குரிசில், குலபதி மகிணன், கோவலதிபதி, கோவலூர் வேந்தர் கோமான், கோவேந்தன், சதுர்மாமுடியோன், சதுர்முடித்தார் வேந்தன், சதுர் முடித்தாரவன், சதுர்முடியும்புனை மன்னவன், செங்கோல்வேந்தன், தார்மவுலியுடனுதித்த வலவேந்தன், திறல் மன்னவன், தெய்வீக நராதிபன், தெய்வீகப் புரவலன், தெய்வீக மன்னவன், தெய்வமுடிநிருபன், தெய்வீகன் நான்மாமவுலி மன்னவன், பரனருளால் வந்துதித்த மன்னவன், புரவலர் பெருமான், புரவலன், புவியாள் வேந்தன், பெண்ணைத் திருநாட்டு மன்னவன், மணிமவுலி தெய்வீகன், மாமகத்திலுதித் தோன், மின் அணிபூண் மணிவேந்து, வன்றிறல் வேந்தன், வேந்தர்கோன்.

தெய்வீகராசனின் மனைவியர்

குலபதி, பதுமாவதி, கமலவல்லி, அளகை, (இறைவாச நல்லூர்த்தல புராணப்படி)
சண்பகமாலை, அங்கவை, சங்கவை. (திருக்கோவலூர்ப் புராணப் படி அதிக மனைவியர்.)

தெய்வீக மன்னனின் புதல்வர்கள்:—

சேரன் மகள் பதுமாவதியை மணந்து நூறு பிள்ளைகளைப் பெற்றான். வீரம் மிகுந்த மன்மதன் போன்ற அவர்களை யாவரும் மலையமான் என அழைத்தனர். வடமதுராபுரியிலே ஆயர்குலத்து அரசன் வீரவர்மன் மகள் கமலவல்லி என்னும் பெண்ணை மணந்து அறுபது பிள்ளைகளைப் பெற்றான். அவர்கள் **நத்த மன்னர்** என்னும் பெயர்பெற்றனர்.

அயோத்தியில் சுருதி அந்தண அரசனின் மகள் அளகை என்னும் பெண்ணை மணந்து அறுபத்தெட்டுப் பிள்ளைகளைப் பெற்றான். அவர்களைச் **சுருதி மன்னர்** என அழைக்கலாயினர்.

பாண்டியனின் பெண் குலபதி என்பாளுக்கு ஒரு மகன் பிறந்தான். குலபதி என்பவளுக்குக் காஞ்சனமாலை என்ற வேறொரு பெயரும் உண்டுபோலும். அவளுடைய மகனுக்குத் தெய்வீகன் அரசாட்சியைக் கொடுத்தான்.

அணிகள் :— உவமையணி, தன்மை நவிற்சியணி, தற்குறிப் பேற்றவணி, மடக்கணி.

சொற்பிரயோகங்களில் சில:—
உகமை, மகிணன், நைமியவாரணியம், நைமியவனம், புருடமிருகம், அச்சமுகி.

திருவாசகத்தில் உள்ள அடியை ஆசிரியர் கையாண்டுள்ள இடங்கள்: —

திருவாசகம்:— மலையரையன் பொற்பாவை (திருச்சாழல். 13.)

இறைவாச நல்லூர்த்தல புராணம்:— மலையரையன் பொற்பாவை (செய். 142.)

திருவாசகம்:— தன்பெருமை தானறியாத் தன்மையன். திருச்சாழல் (செய். 19.)

இறைவாச நல்லூர்த்தல புராணம்:- தன்பெருமை யோராமத்தன் (செய். 37.)

வடசொற்களில் சில:—

அண்டர் 105, அனங்கன் 95, ஆதவர் 104, ஆரணியம் 61, இபம் 75, இரவி 61, உதயம் 198, உதரம் 202, ககனம் 219, கங்காதரன் 126, கணுதிபர் 145, கரம் 198, காயம் 72, கிரி 11, சஞ்சிதம் 10, சதுர்முகம் 33, சதுர்வேதம் 33, சரியை கிரியா யோகம் 63, சூலபாணி 71, தபனன் 226, தம்பம் 39, தினகரர் 107, நாரி 89, நிராமயம் 37, நிருத்தன் 37, நிருபன் 171, பராசக்தி 37, பிரசம் 53, புவனம் 35, பூதலம் 46, பூதான பலன் 144, போகம் 1, போனகம் 304, மாதுலன் 155, முகூர்த்தம் 294, முண்டகாசனம் 105, விரதம் 9, வேதன் 2.

இறைவாச நல்லூர்த்தல புராணத்திற்கும் திருக்கோவலூர்ப் புராணத்திற்கும் உள்ள வேறுபாடு:

இறைசைப் புராணத்தில் மிருகண்டு முனிவர் மலர் எடுக்க ஒரு பிரமசாரியை அழைத்து அனுப்பியதாக உள்ளது.

திருக்கோவலூர்ப் புராணத்தில் மலர் எடுக்க மிருகண்டு முனிவர் இருவரை அனுப்பியதாக உள்ளது. முனிவர் இருவரும் காலந்தாழ்ந்து வந்தமையால் சபிக்கவே அவர்களிருவரும் காருண்ட வல்லூரரர்களாகத் தோன்றினுர்கள் என்று தெரிகிறது.

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தெய்வீகனுக்கு **'நரசிங்கன்'** என்ற பெயரை அளித்ததாகத் திருக்கோவலூர்ப் புராணம் கூறுகின்றது.

இறைவாச நல்லூர்ப் புராணத்தில் **'நரசிங்கனை'** ப்பற்றிக் கூறவில்லை.

கந்த புராணத்தில்: சூரபன்மன் கடலின் நடுவே மாமரவடிவாக நின்ருன். முருகனது வேற்படை அம்மாமரத்தைத் தாக்கி அழித்தது. சூரபன்மன் சிவபெருமானிடம் பெற்ற வரத்தின் வலிமையால் இறந்திலன்; அவன்பழைய வடிவங்கொண்டு எதிர்த்தான். வேற்படை அவன் மார்பைப் பிளந்து உடலை இரு துண்டமாக்கிக் கடலில் வீழ்த்தியது.

அவனுடைய பிளவுண்ட இரண்டு உடற் கூறுகளும் கோழியும், மயிலுமாக ஆயின. ஆறுமுகக் கடவுளை நோக்கிப் போர் புரியுஞ் செருக்குடனே, கோழியும் மயிலுமாகச் சூரபன்மன் வந்தான். ஆறுமுகக் கடவுள் அவன்மீது திருவருள் நோக்கம் செய்தார். அவரது பார்வையால் சூரன் பகைமை நீங்கி நல்லறிவு பெற்ருன். ஆறுமுகக் கடவுள் தம் திருவருளினுல் ஞானம் பெற்ற கோழியை நோக்கி, ''நீ நம் தேரில் கொடியாக அமர்ந்து நின்று கூவுவாயாக!'' என்ருர். சூரபன்மனுகிய மயிலின் மீதுஏறி ''நம்மைச் சுமப்பாயாக'' என்று வாகனமாக ஏற்றுக்கொண்டார்.'' என்று கூறப்பட்டுள்ளது.

இறைவாச நல்லூர்த்தல புராணக்கதை கந்த புராணக் கதைக்கு மாறுபட்டதாகவுள்ளது.

''சூரபன்மன் முருகப்பெருமானுடன் கணக்கிலா மாயை செய்து யுத்தஞ்செய்தான். அவன் மாயைகளை அறுத்து எறிய, பின் மயிலாகவும், கோழியாகவும் வந்தனன். முருகன் மயிலின்

மேல் ஏறிக்கொண்டு, கோழியைக் கொடியாக யுத்தமுனையிலே பிடித்துக்கொண்டார்.

மயிலும், கோழியுமானவனுன சூரன் பின் கடலில்போய் ஒளிக்க, அதுகண்டு குமாரக் கடவுள் வேலாயுதத்தை விட, கடல் வற்றவே, சூரன் நடுங்கிக் கிரவுஞ்சகிரியில் சென்று மறைய, முருகப் பெருமான் வேலை ஏவ, அவ்வேல் மலையைப்பொடியாக்கி அவன் மார்பைத் துளைத்து உயிரையும் உண்டது. அவன் மலைபோல் தரையில் விழுந்தான்.' என்று கதையின் போக்கு அமைந்துள்ளது. இது ஒரு சிறப்பு.

திருக்கோவலூர்ப் புராணத்தைப் பதிப்பித்த ஆசிரியர் தம் முகவுரையில் இறைவாச நல்லூர்ப் புராணத்திலிருந்து எட்டுப் பாடல்களை எடுத்தாண்டுள்ளார். அவற்றுள்:

பொன்மாரி பொழிநாடு பருத்திகலை
காய்த்தருளும் புங்கநாடு
சொன்மாண்புக் கடங்காத வெம்மிறைவன்
ருேட்கோப்புச் சுமந்தநாடு
தன்மாண்பு தெரியாவத் தனிமுதலூர்ப்
பாதிகொள்பேர் தரித்த நாடு
நன்மாஞென் றெழிற்சிங்கந் தனைமருட்டி
தியக்குவித்த நத்த நாடு.

என்ற இச்செய்யுள் இந்நூலில் இல்லை. இச்செய்யுள் எப்பிரதியில் உள்ளது என்று தெரியவில்லை.

இறைவாச நல்லூர்த்தல புராணம்

கதைச்சுருக்கம்

நாட்டுச்சிறப்பு

குருகுலமாகிய சந்திரவம்சத்து அரசர்களில் அபிமன்யுவின் மகஞன பரீட்சித்து வந்து பார்த்து மகிழ்ச்சியடைந்த நாடு; மிக்க கீர்த்தி பெற்ற தெய்வலோகத்திலும், மிகுந்த செல்வம் உடைய நாடு; பெண்ணே நதி பாய்ந்து வளம் பெற்ற நாடு; திருநாவுக்கரசரும், சுந்தரரும் தோன்றி மேன்மை பெற்ற நாடு இந்தப் பெண்ணை நாடு.

1. அருச்சனைச் சருக்கம்

கடலே ஆடையாக உடுத்திய பூமிதேவியின் தவத்தின் பலன் போல, நித்தியமாக விளங்கப்பெற்ற சிறப்பினேயுடைய நைமிசாரணிய மென்னும் அழகிய வனத்திலே யுத்தம் செய்யும் மன்மதனது பாணம் பட்டு வடுவூாகிற புண்ணில்லாத மேனியைப் படைத்துத் தவத்திலே புனிதராகி முனிவர்கள் நடுவில் கபில திருமேனியும், வேகத்தினேயுமுடைய வெற்றி பொருந்திய வாயு தேவன் எழுந்தருள, அவருக்கு உபசார மொழிகள்கூறி ஆசன மளித்து அமரச் செய்து எந்தையே! எல்லாவுயிர்கட்கும் இறைவஞன தெய்வம் யார் என்று இருடியர் கேட்க, அவர் பிரமனிடம் கேட்போம் வாருங்கள்'' என்று அழைத்துச் செல்ல முனிவர்கள் எல்லோரும் பிரமபுரியை அடைந்தார்கள்.

பிரமபுரியின் அழகைக் கண்ணுரக் கண்டு பிரமன் எழுந்தருளி யிருக்கும் மகாமண்டபத்தின் கோபுர வாயிலேயடைந்து தாங்கள் வந்த விஷயத்தை வாயிற்காவலரிடம் முனிவர்கள் சொல்ல, காவலாளர் பிரமனிடம் சென்று சொல்ல, அவர் உத்தரவு பெற்று அம்மண்டபத்துள் பிரவேசித்துப் பிரமனைக் கண்டு மகிழ்ச்சியிஞல் மனமுருகி இசையோடு கூடிய வேதத்தால் போற்றி வணங்கி 'உலகத்தைப் படைத்தவனே!' என்று பலவாறு துதித்தனர்.

வாயுபகவான் பிரமதேவனை வணங்கி இந்தத் தவச்ரேஷ்டர்கள் நைமிச வனத்தில் இருப்பவர்கள். விரதம் தவருத மேலோர்கள். இவர்கள் ஆன்மாக்களுக்கு மோட்சம் கொடுக்கக்கூடிய கடவுள் யாரென்று அறிய இங்கு வந்துள்ளார்கள் என்று கூறப் பிரமன் முனிவர்களைப் பார்த்துக் கூறுவாராயினுர். பராசக்தியின் நாயகனுன பரமசிவனே அனைவருக்கும் நாயகன். அவனே என் பிராணனுக்கும் நாயகன். எனக்குச் சிருஷ்டிக்கும் ஆற்றலும், மகாவிஷ்ணுவிற்குக் காப்பாற்றும் ஆற்றலும் ஈந்தவன். அவனருள் இல்லையெனில் எச்செயலும் நடைபெருது. முனிவர்களே! கேளுங்கள். ''முன்பு ஒருசமயம் வெண்காடாகிய கற்பக வனத்தில் எனக்கு மேலானவர் எவரும் இல்லை என்று மிகுந்த கர்வத்துடன் இருந்தேன். அப்படி இருந்த நேரத்தில் நான் மரம் போல் அறிவில்லாமல் படைக்குந் தொழிலையும் மறந்து மானிடரைப் போல வருந்தினேன். அப்பெருமானின் கருணையினுல் தெளிவுபெற்றுப் பஞ்சாக்ஷரத்தை மனதில் நினைத்து மனுேவியாகூலம் தீர்ந்தேன்.

தேகமெங்கும் விபூதி தரித்து வேறென்றையும் நினைக்காமல் சிவனுடைய திருவடியை மனத்தில் தியானம் செய்து கொண்டிருக்கும் சமயத்தில் உமையவளையும், இடபத்தையும் விட்டுச் சுவேதவனப் பெருமாள் என்னும் திருநாமம் தரித்துத் திருமேனி எங்கும் வெண்மை நிறம் பிரகாசிக்க, சிவபெருமான் எனக்குமுன் தோன்றி ''நானே சகலத்திற்கும் காரணம் என்று நினைக்காதே; நாமே உயிருக்குயிராய் இருந்து நடத்தி வருகிறேம் என்ற உண்மையை உணர்வாயாக'' என்று கூறினுர். ஆகவே அந்தச் சிவபரம்பொருளே பலவுயிர்களுக்கும் மோட்சம் கொடுக்கக் கூடியவர்.

ஆணவாதிகளைக் கெடுத்து மோட்ச இச்சையை உண்டாக்குகிறவன். அசுத்தமாயை, சுத்தமாயை என்னும் இருமாயையிலிருந்தும் நீங்கினவன்; நல்வினை, தீவினை என்னும் இருவினைகளையும் நீக்கினவன்; ஆணவ மலத்திற்குத் தூரமானவன்; சிவம் சத்தி எனச் சிறப்பாய் இருப்பவன்; ''அவனருள் அன்றி மனம் ஆனந்தத்தையடையாது'' என்று கூற முனிவர்கள் புளகாங்கிதமடைந்து வணங்கி அவன் அருளை அடைய வழியை அருளிச்செய்வீர் என்று கேட்க, பிரமன் கூறலானுர்.

பிரம விஷ்ணு ருத்திரன் மகேசுவரன் என்று உருவமாகியும், மனுேவாக்குக்கு எட்டாத நிஷ்களரூபமென அருவமாகியும், சதாசிவரூபமென அருவுருவமாகியும் நினைத்தற்கரிய அளவற்ற சீவராசிகளின் நிமித்தம் கிருபா கடாக்ஷம் கொண்டு எழுந்தருளி

யுள்ள வடிவங்கள் பலவாகும். அவற்றுள் ஞானத்தைத் தருவது சிவலிங்க சொரூபமே என நான்கு வேதங்களும் சொல்லுகின்றன. அத்தகைய சிவலிங்க சொரூபத்தை அருச்சனை செய்தால் அழிவில்லாத மோட்சத்தையடையலாம். உண்மையான ஞானம் கைவரக்கூடும் என்று பிரமன் கூற, அதுகேட்ட முனிவர்கள் அந்தச் சிவலிங்க ஸ்வரூபத்தை எந்தத் தலத்தில் பூசிப்பது என்று கேட்க, பூலோகத்திற்குச் சென்று அருச்சிக்கலாம் என்று சொல்லிப் பிரமன் அவர்களை அழைத்துக்கொண்டு பூலோகத்திற்கு வந்து, அரசவனமென்னும் தலத்தில் சிகரசிகாமணிநாதர் எழுந்தருளியுள்ள இடத்திற்கு வந்து, சிகரசிகாமணி நாதரைக் கண்டு பரவசமடைந்து ஆனந்தக் கண்ணீர் சொரிய வணங்கி, ''சிவனே! சங்கரா! அரசவனத்தில் எழுந்தருளியிருக்கும் சிகரசிகாமணி நாதனே!'' என்று பிரமனும், முனிவர்களும் பலவாறு போற்றி மகிழ்ந்தார்கள்.

பிரமன் அன்புள்ளங் கொண்டவனாய் விபூதி, உருத்திராக்கம் அணிந்து மனமாசையொழிக்கத் தக்க ஆகாச கங்கையை வரவழைத்தார். அந்தக் கங்கையின் தீர்த்தத்தினால் சிகரசிகாமணி நாதருக்கு அபிஷேகம் செய்து சிறந்த மலர்களினால் அருச்சனை செய்தார்.

முனிவர்கள் பிரமனைப் பார்த்துச் சிகரசிகாமணி நாதனை எங்களுக்காகப் பூசை செய்ததும், அவர்மேல் தங்களுக்குள்ள அன்பும், அதனால் ஏற்பட்ட ஆனந்தத்தையும் கண்டோம். அப்படி நாங்களும் ஆதியந்தமில்லாச் சிகரசிகாமணி நாதரைப் பூசிக்கும் விதிமுறையைக் கூறவேண்டும் என்று வினவ, பிரமன், அவர்களுக்கு வேதங்களையும், ஆகமங்களையும் உபதேசித்துச் சிவபூசை செய்யும் முறைகளையும் கூறிவிட்டுச் சென்றார்.

முனிவர்கள் ஆகாச கங்கையின் தீர்த்தத்தினால் சிகரசிகாமணி நாதருக்கு அபிஷேகம் செய்து, அன்றலர்ந்த மலர்களினால் சோதி ரூபமாக விளங்கும் சிகரசிகாமணி நாதரைப் பூசைசெய்து உளம் உருகித் தோத்திரம் செய்யலானார்கள்.

அவ்வமயம் பரசு என்னும் ஆயுதத்தைத் தரித்த கரத்தினையுடைய சிகரசிகாமணி நாதரை அருச்சனை செய்ய சனற்குமாரர் அங்கு வந்தார். அவரை முனிவர்கள் எதிர்கொண்டு அழைத்து அருக்கிய பாத்தியம் முதலியவற்றால் உபசரித்தார்கள். சனற்குமாரர் சிகரசிகாமணி நாதரை அருச்சனை செய்து அரசவனத்திலேயே தங்கலானார்.

நைமிசாரணிய முனிவர்கள் சனற்குமார முனிவரின் பாதத்தை வணங்கி, அவர் சொற்படி நடக்கும் மனமுடையவர் களாய் க்ஷணநேரமும் அவரைவிட்டு நீங்க மனமில்லாது சிகரசிகா மணிநாதரின் அருளைப் பெறவேண்டும் என்றிருந்தனர்.

முனிவர்களின் விருப்பத்தின்படி சனற்குமாரர் அவர்கள் நன்மையுற நினைந்து கருணையோடு ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் நீங்கித் தற்பர சிவ சொரூபத்தை அறியும்படி உபதேசித்தார்.

சனற்குமாரர் அருளிச்செய்த ஞானோபதேசத்தைக் கேட்ட முனிவர்கள் அக்கணமே உலகாசாரத்தையும், விரதாதிகளையும், தேகாபிமானத்தையும் மறந்தவர்களாய்ச் சிகரசிகாமணி நாதரின் அருளைப்பெற்றுச் சிவ சாயுச்சிய மடைந்தார்கள்.

திருமால், சூரியன், சந்திரன், அக்னி, வாயு, இயமன் தேவேந்திரன் முதலானோர் அரசவனத்திற்கு வந்து சிகாசிகாமணி நாதரை விதிப்படி யருச்சித்து வேண்டிய வரங்களைப் பெற்றனர். பின்பு, பிருகு முதலான முனிவர்களும் சிகரசிகாமணி நாதரை விதிப்படி அருச்சித்து நன்மைகளைப் பெற்றார்கள்.

2. காருண்டன் உற்பவச் சருக்கம்

சூரியன் முதலானவர்கள் வந்து பூசித்தார்கள் என்பதை யறிந்த மிருகண்டு முனிவரானவர் அரசவனம் வந்து சிகரசிகாமணி நாதரை வணங்கித் துதித்து மூன்றுகாலமும் அருச்சனையைச் செய்து கொண்டு இருந்தார்.

மிருகண்டு முனிவர் சிகரசிகாமணி நாதரைத் தரிசித்துக் கொண்டு ஒருபக்கத்தில் பர்ணசாலை அமைத்துக்கொண்டு இருக்கும் நாளில், அரக்கர் குலத்தில் தோன்றிய வஞ்சனை, கோவதை என்னும் கன்னியர் இருவர் முனிவர்முன் வந்து வணங்கி எங்களுக்குப் பலம் பொருந்திய புதல்வரைக் அருள வேண்டும் என்று கேட்க, முனிவர் இவர்கள் அரக்கியர்கள் என்று நினைத்து, அவர்களைப் பார்த்து வஞ்சனை என்பவளுக்குச் சகல பராக்கிரமமும் நிறைந்த ஒரு மகன் தோன்றுவான் என்றுகூறி விடைகொடுத்த னுப்பினார்.

முனிவர் தமது சீடனை அழைத்துச் சிகரசிகாமணி நாதரை வழிபட மலர்கள் எடுத்துக்கொண்டு வா என்று அனுப்ப, அவனும் நந்தவனம் சென்றான்.

நந்தவனம் சென்ற சமயத்தில் வஞ்சனை, கோவதை முதலான அரக்கியர்கள் அங்குவந்து கொல்லென்று சத்தமிட்டு ஆரவாரித்து வேர்களோடு செடிகளைப்பறித்து ஆகாயத்தில் வீசி எறிந்துவிட்டுச் சென்றார்கள். பிரம்மசாரி மனம் கலங்கி நல்ல மலர்கள் எடுக்க முடியாமல் போயிற்றே என்று வருந்தி, வேறொரு வனத்திற்குச் சென்று மலர்களை எடுத்துக்கொண்டு வருவதற்குள், காலந்தவறாமல் பூசையை முன்னமே முடித்துக் கொண்டு சிஷ்யன் இன்னும் வரவில்லையே என்று மனம் வருந்தி யிருக்கும்போது பிரம்மசாரி வந்து சேர்ந்தான்.

காலம் கடந்துவந்த சீடனைப் பார்த்துக் காரணம் கேட்க, அவன் நந்தவனத்தில் தான் கண்ட கொடிய செயலையும் பின் தேடிக் கொணர்ந்து வந்ததையும் கூறக்கேட்டு முனிவர் கோபங் கொண்டு ''நீ விரைவில் வராமல் அரக்கியர்களின் செயலைப் பார்த்துக் கொண்டிருந்தமையால், வஞ்சனை என்னும் அரக்கிக்கு மகனாகப் பிறக்கக் கடவாய்'' என்று சாபமிட்டார்.

மிருகண்டு முனிவர் சபித்ததைக் கேட்டபோது அந்தப் பிரம்மசாரி நடுங்கி, குருவே! இந்தச் சாபம் நீங்கும் காலத்தை அநுக்கிரகம் செய்ய வேண்டும் என்று கேட்க, முனிவர் இந்தச் சரீரத்தையொழித்து அரக்கி வயிற்றில் மூன்று தலைகளையும் ஆறு கைகளையும் உடைய பிள்ளையாகப் பிறந்து, பல கொடுமைகளைச் செய்து, பல நாட்கள் உலகினர் உளம் நடுங்கும்படி வாழ்வாயாக. அப்படியிருக்கும் நாளில் ஓர் அரசன் சிவபெருமானிடம் சூலாயுதம் பெற்று உன்னுடைய மூன்று சிரங்களையும் துணித்திடுவான். அப்போது நீ தேவபதவியை அடைவாய் என்று கூறினார்.

சாபம் பெற்ற பிரம்மசாரி வஞ்சனை என்னும் அரக்கியின் கர்ப்பத்தில் காருகபத்தியம், தக்ஷிணாக்கினி, ஆகவனீயம் என்னும் முத்தழல் வளர்ந்ததுபோலச் சிவந்த மயிர்களையுடைய மூன்று தலைகளும், ஆறு கைகளும், சிங்கப்பல்லும், கரிய மேகம் போன்ற சரீரமும் உடையவனாய்ப் பிறந்தான். கடல்நீரைக் குடித்த மேகம்போல அவன் தேகம் இருந்தமையால் காருண்டன் என்று பெயரிட்டனர்.

கொலைசெய்தல், திருடல், கள்குடித்தல், கற்பழித்தல் முதலிய செயல்களைச் செய்துகொண்டு அரக்கர் புடைசூழத் தலைமை தாங்கி யானைகள், தேர்கள், குதிரைகள் முதலியவற்றை அளவில்லாமல் பெற்றுப் பிறையூர் என்னும் குன்றுக்கு அருகில் நகரினை அமைத்துக்கொண்டு அரசவனத்துக்கு அருகிலேயே வாழ்ந்து வரலானான்.

முனிவர்களின் பர்ணசாலைகளை அடியோடு பிடுங்கி எறிந்தும், அவர்களது அக்னிகுண்டங்களையும், வேதிகைகளையும் அழித்தும், வாசனையுடைய மலர்களையுடைய நந்தவனங்களை அழித்தும், பசுக் கூட்டங்களை நடுங்கச்செய்தும், மானிடர்களைக் கொன்றும், பிறர் மனைவியரிடத்தில் இச்சை வைத்தும் பல அக்கிரமச் செயல்களையும் செய்து வந்தான்.

காருண்டனுடைய செயல்களைப் பொறுக்கமாட்டாமல் முனிவர்கள் எல்லாரும் அரசவனம் வந்து சிகரசிகாமணி நாதரைத் தொழுது வணங்கி நாங்கள் படுந்துயரத்தை நினைந்து நீர் தீர்க்கா விடில் நாங்கள் என்ன செய்வோம் என்று துதித்து 'விண்ணப்பம்' செய்தனர்.

சிகரசிகாமணி நாதர் அசரீரி மூலமாக ''நீங்கள் ஏமகூட மலையில் இருக்கும் முருகனிடம் சென்று முறையிடுங்கள். அவன் காருண்டனைக் கொன்று உங்களைக் காப்பாற்றுவான்'' என்று கூறினர்.

அசரீரியைக் கேட்ட முனிவர்கள் சந்தோஷமடைந்து சிகரசிகாமணி நாதரை வணங்கி மகிழ்ச்சியோடு ஏமகூட பர்வதம் செல்லுகையில் சனற்குமாரரின் ஆச்சிரமம் கண்டு அவரைத் துதித்து நின்றார்கள்.

முனிவர்கள் சனற்குமாரரைப் போற்றி ஆறுமுகப் பெருமானது உற்பத்தி வரலாற்றைக் கூற வேண்டுமென்று கேட்க, அவரும் சொல்லத் தொடங்கினர்.

சிவனை நிந்தித்த தக்கனது யாகத்தைச் சிவபிரான் வீரபத்திரரால் அழித்தபின் தக்கன் மகளான தாக்ஷாயணி உயிர் நீத்துப் பர்வத ராஜன் மகளாகத் தோன்றி, பரமசிவனையே கணவனாக அடைய, தவஞ்செய்து கொண்டிருந்தாள். அவ்வமயம் சிவபெருமான் யோகநிலையில் இருந்தார். சுக்கிர பகவான் தமக்கு ஒரு பெண் பிறக்க வேண்டும் என்று தியானிக்க ஒரு பெண் அவரது எதிரில் நின்றாள். அவள் 'மாயை' என்னும் பெயருடையவள். அவளுக்குச் சுக்கிரன் அட்டமாசித்திகளையும் உபதேசித்துச் சகல கலைகளையும் கற்பித்தார்.

எல்லாக் கலைகளையும் கற்ற மாயையைப் பார்த்து அசுர குருவாகிய சுக்கிராசாரியார் பெண்ணே! உன்னிடத்தில் வலிமை பொருந்திய பிள்ளைகள் தோன்ற வேண்டும். அவர்களால் பிரமன், விஷ்ணு, தேவேந்திரன் முதலியோருடைய பெருமைகள் அழிய வேண்டும். நீ காசிப முனிவரை அடைந்து புத்திரர்களைப்

பெறக் கடவாய், என்றுகூற, மாயையானவள் காசிபமுனிவரை அடைந்து சுகித்தினிது இருந்தாள்.

மாயைக்குச் சூரபத்மன், சிங்கமுகன், தாரகன் என்னும் புத்திரர்களும், அசமுகி என்ற ஒரு பெண்ணும் பிறந் தார்கள். சூரபத்மன் மயனை அழைத்து 'உன்மகளை எனக்குத் திருமணம் செய்து தரவேண்டும் என்று கேட்க, அவனும் சம்மதித்து மகள் பதுமகோமளையை விவாகம் செய்துகொடுத் தான். சூரபத்மன் மயனை நோக்கி ஓங்கிய மதில்களையுடைய கோட்டைகளையும் பட்டினத்தையும் நிர்மாணித்துத் தரவேண்டு மென்று,கேட்க, மயனும் அவ்வாறே நிர்மாணித்துக் கொடுக்க அதற்கு மகேந்திரபுரி என்று பெயரும் சூட்டி, அங்குப்பல அசுரர் களோடும் சேனைகளோடும் குடியேறி அரசாட்சி செய்து வரலானான்

பின்பு திக்குவிசயம் செய்யப் புறப்பட்டுச் சென்று பகைவரை வென்று, தேவர்களுக்குத் துன்பத்தைச் செய்யலானான். இந்திரன் சூரபத்மனின் தொந்தரவு தாங்காமல் நடுங்கி உருவம்மாறித் தவம் செய்து வந்தான். அவன் மனைவியாகிய இந்திராணி அப்போது பூலோகத்தில் தீர்த்த யாத்திரை செய்யப் புறப்பட் டாள்.

சூரபத்மன் தங்கையாகிய அசமுகி இந்திராணியைக் கண்டு இவள் நம் தமையனுக்குத் தகுதியானவள் என்று அவளது தலைமயிரைப் பிடித்து இழுத்தாள். அப்போது இந்திராணி தெற்குத் திசையில் இருக்கும் ஹரிஹரபுத்திரரை நோக்கி அலறினாள். உடனே ஹரிஹர புத்திரர், மகாகாளர் என்னும் சேனாபதியை அனுப்பி அசமுகியின் கை, முலை, மூக்கு இவற்றை வாளால் அறுத்து இந்திராணியை மீட்டுத் தேவலோகத்திற்கு அனுப்பி வைத்தார்.

அசமுகி சூரபத்மனிடம் சென்று நடந்தவற்றைக் கூறித் தன் சரீரத்தையும் காண்பிக்க, அவன் கோபித்து இந்திரவுலகத்தை யழித்து வரப் புறப்பட, அவன் மகனான பானுகோபன் வந்து வணங்கித் ''தாங்கள் யுத்தத்திற்குச் செல்ல வேண்டாமெனத் தடுத்து, தானே தேவலோகம் சென்று கொள்ளையிட்டுப் பொருட் களை எடுத்துவந்து சூரபதுமனை வணங்கினான். சூரபதுமன் தேவமாதர்களைச் சிறைக் கூடத்தில் வைத்தான்.

நெடுநாளாகத் தவம் செய்து கொண்டிருந்த இந்திரனுக்குச் சிவபெருமான் கருணைகூர்ந்து 'அசரீரி' மூலமாக மனத்தளர்ச்சி

அடைய வேண்டாம். ஆறுமுகப் பெருமானைத் தோற்றி அசுரர்களை அழித்து விடுவோம் என்று கூறினர். தேவேந்திரன், பிரமன், விஷ்ணு முதலான தேவர்கள் ஒன்று சேர்ந்து மகாமேருவிற்கு வந்து நன்கு ஆலோசித்து உமாதேவியாரைச் சிவபெருமான் மணந்து கொள்ளும்படி செய்ய எண்ணி, மன்மதனை அனுப்ப அவனும் வந்து மலர்ப்பாணத்தைச் செலுத்த, பரமசிவனது சித்தம் கலங்கிற்று. உடனே சிவபெருமான் சித்தம் கலங்கக் காரணம் என்ன என்று சிறிது யோசனைசெய்து பார்க்க, எதிரில் நடுங்கிக்கொண்டிருக்கும் மன்மதனைக் கோபத்தீயால் சாம்பலாக்கினர். இரதிதேவி கணவன் அழிந்ததைக் கண்டு புலம்பினள். பின்பு இரதிதேவி சிவபெருமானை வேண்ட உன் கணவன் உனக்கு மட்டும் உருவமாகவும், மற்றவர்களுக்கு அருபனுகவும் விளங்குவான் என்று வரமளித்தார். பின்னர் சப்தரிஷிகளை அழைத்துப் பர்வத ராஜனிடம் சென்று பார்வதியை மணம்பேசி வாருங்கள் என்று அனுப்ப, அவர்களும் மலையரசனிடம் வந்துபெண் கேட்க, அவனும் மனமகிழ்ச்சியுடன் சம்மதிக்க, சப்த ரிஷிகளும் சிவபெருமானிடம் வந்து தெரிவித்தார்கள்.

சிவபெருமான் சிவகணங்கள் புடைசூழ, தேவேந்திரன், விஷ்ணு, பிரமன் முதலிய பலரும் சூழ்ந்துவர உமையவளைத் திருமணம் செய்துகொள்ளப் புறப்பட்டு வந்தார். வேதவிதிப்படி பார்வதிக்கும் சிவபெருமானுக்கும் திருமணம் சிறப்புற நடைபெற்றது.

சிவபெருமான் உலகம் உய்யத் தமது, நெற்றிக்கண்ணிலிருந்து தீப்பொறி விடுக்க, அதனைப் பூமிதேவி, கங்காதேவி முதலானோர் தாங்கிச் செல்ல முடியாமல் இருக்கும்போது அக்கினிதேவன் தாங்க அவனலேயும் முடியாமல் போகவே சரவணப் பொய்கையில் கொண்டு போய் விட்டனன்.

சப்த ரிஷிகளின் மனைவியர் எழுவரும் சரவணப் பொய்கையில் நீராடிக் கரையேறும்போது அங்கு அக்கினிதேவனைக் கண்டு நெருங்கிவர, அருந்ததிமட்டும் இது தகாதசெயல் என்று விலகிச் செல்ல, மற்ற அறுவரும் வந்து சூழ்ந்துகொள்ள அக்கினிதேவன் ஆறு பங்காக்கினன்.

ஆறு பங்காக்கி ஆறு பெண்களிடமும் அளிக்க, அவர்கள் கண்டு மருண்டு பார்த்தார்கள். பார்த்த அளவில் அந்த ஆறும் ஆறு புதல்வர்களாகத் தோன்றினர்கள். அதுகண்டு அந்தப் பெண்கள் அக்குழந்தைகளைத் தாமரை மலரில் கிடத்திச்செல்ல, அவர்களுடைய கணவன்மார்கள் கோபித்துக்கொள்ள மீண்டும்

வந்து அப்பொய்கைக் கரையில் தவஞ் செய்யலாயினர். சிவபெருமான் பல்லாயிரக்கணக்கான வீரர்களைப்படைத்து, ஒன்பதுகுமாரர்களையும் தோன்றச் செய்தார். பின்பு சிவனும் பார்வதியும் சரவணப் பொய்கைக்கு வந்தனர்.

பார்வதி சிவபெருமானைப் பார்த்து இவர்கள் யார்? என்று கேட்க, பெண்ணே! இவர்கள் உன்புதல்வர்கள்தாம் என்று சொல்ல, அது கேட்டுப் பார்வதி ஆறுபாலகரையும் தன்கையை நீட்டி எடுத்து ஒன்றாகச் சேர்த்து அணைத்துக் கொண்டாள். அணைத்த மாத்திரத்தில் ஆறு திருமுகங்களும், இரண்டு பாதங்களும், ஒளிவீசும் பன்னிரண்டு கண்களும், பன்னிரண்டு திருக்கரங்களும் கொண்டு தோன்ற, பார்வதி கண்டு மனமகிழ்ந்து தனது கணவனின் கையில் கொடுத்து மறுபடியும் வாங்கி அணைத்துக் கொண்டாள்.

பார்வதியைப்போல் பரமசிவனும் மகிழ்ந்து ஆறுமுகன் என்று பெயரிட்டு, பிரமனை அழைத்து வேதசாத்திரங்களைக் கற்பிப்பாய் என்றுகூற, பிரமனும் சம்மதித்து ஒரு மலையில் குமார சுவாமியுடன் அமர்ந்து வேதத்தைச் சொல்லத் தொடங்கிய பிரமன் முதலில் பிரணவத்தை உச்சரிக்க, அதுகேட்ட முருகன் பிரணவத்திற்குப் பொருள் யாது என்று வினவ, பிரமன் திகைக்கவே அவரது தலையில் தன்கையினால் குட்டிச் சிறையிலடைத்தார்.

இதனையறிந்த நாரதர் சிவபெருமானிடம் சென்று கூற உடனே சிவபெருமான் நந்தியெம்பெருமானை அனுப்பி, பிரமனைச் சிறையிலிருந்து விடுவிக்கும்படி சொல்ல, நந்தியெம்பெருமான் முருகனது கோபத்தைக் கண்டு சொல்லாமல் திரும்பிவிடவே, சிவபெருமான் முருகனிடம் சென்று 'என்னகாரியம்' செய்தாய், பிரணவப்பொருளை உன்னால் சொல்லக் கூடுமோ என்று கேட்க, முருகன் நமக்கு வழிபாடு செய்யின் சொல்லக் கூடும் என்றார்.

சிவபெருமான் முருகனை ஆசாரிய பீடத்தில் அமரச்செய்து தாம் கீழேயிருந்து பிரணவத்திற்குப்பொருள் கேட்கத் தொடங்கிய போது வாக்கானது தடைப்படவே மௌனமாக இருந்தார். அது கண்டு சிவபெருமான் முருகனைப்பார்த்து ''நீ நம்மை மதியாமல் உபதேசிக்கத் தொடங்கியபடியால் இந்தப் பாவவினையுனக்கு வந்தது. இந்தப்பாவம் தீர நீ காவிரி தீரத்திலே உள்ள குரவ வனஞ்சென்று தவஞ்செய்தால் பாவம் தீரும்'' என்று கூறினார்.

சிவபெருமான் அன்போடு திருவாய்மலர்ந்தருளியதைக் கேட்ட முருகப்பெருமானை அப்போது ஒரு பூதம் எடுத்துக்

கொண்டு குரவவனத்தில் கொண்டு விட்டது. அங்குக் குமரக் கடவுள் நெடுநாள் தவத்தைச் செய்து கொண்டிருந்தார்.

முருகப் பெருமான் தவம் செய்வதை அறிந்து மகிழ்ந்து பார்வதியுடன் சிவபெருமான் வந்து காட்சிகொடுக்க, முருகப் பெருமானும் என் நாயகனே! தேவர்களுக்கெல்லாம் தலைவனே! என்று பலவாறு துதித்தார்.

சிவபெருமான் முருகப்பெருமானைத் தமது தோளிலும், மார்பிலும் இறுகத் தழுவிக் கொண்டு பிரமனைச்சிறையினின்று விடுவித்துச் சூரபத்மனையும், மற்ற அரக்கர்களையும் கொல்லத்தக்க வேலினையும் அஸ்திரங்களையும், வரங்களையும் கொடுத்தருளினார்.

இந்திராதி தேவர்களும் விஷ்ணு முதலியோரும் வந்து முருகப் பெருமானை வணங்கிச் சூரபத்மன் முதலானோர் செய்யும் கொடுமைகளைக் கூறினார்கள். அவர்கள் கூறியதைக் கேட்ட ஆறுமுகப் பெருமான் 'அஞ்சேல்' என்று அபயமளித்துப் பதினான்கு உலகிலுள்ளவர்களின் துன்பம் கெடும்படி பலம்பொருந்திய அசுரர் படையை அழிக்கவும் கருதி முருகப்பெருமான் எழுந்தருளினார்.

பதினெட்டு ருத்ர கணங்களும் சுற்றிவரச் சேனைகளுடன் அசுரர் நகரம் சென்று சேர்ந்தனர். எண்ணிக்கை அற்ற சேனைகள் வந்து முருகப்பெருமானுடன் யுத்தஞ் செய்து மடிந்த பின் சூரபத்மன் வந்து கணக்கிலாத மாயையை விளைவித்து யுத்தஞ் செய்தான். பின்பு அழகுபொருந்திய மயிலாகவும், கோழியாகவும் வந்தனன். முருகப்பெருமான் மயிலின்மேல் ஏறிக்கொண்டு, கோழியைக் கொடியாகவும் பிடித்துக்கொண்டார். பின்பு சூரபத்மன் சமுத்திரத்தில் ஒளிய அதுகண்டு குமாரக்கடவுள் வேலாயுதத்தை விடக் கடல் வற்றியது. சூரன் நடுங்கிக் கிரவுஞ்ச கிரியில் சென்று மறைய, ஆறுமுகப்பெருமான் வேலைவிட, அது மலையைப்பொடியாக்கி அவன் மார்பையும் துளைத்து உயிரையும் உண்டது. அவன் மலைபோல் கீழே விழுந்தான்.

பூலோகத்தாரும், தேவலோகத்தாரும் மகிழ, சூரன் முதலானோர் அழிந்த பிறகு அவனது மகேந்திரபுரியும் அக்கினிக்கு இரையாகியது. தேவர்கள் துதிக்க, முருகப்பெருமான் அமராவதியுள் பிரவேசித்தார்.

முருகனின் வருகையை யுணர்ந்து தேவர்கள் மகிழ்ந்து பார்வதியின் குமாரனே! தாங்கள் எங்களுக்குச் சேனாதிபதியாயினை என்று கூறி, இந்திரன் மகளான தெய்வ யானையை மணம் புரிவித்தனர். முருகப்பெருமான் தன் தந்தையையும் தாயாரையும்

சென்று வணங்கச் சிவபெருமானும், பார்வதியும் முருகனைத் தழுவி ஆசீர்வதித்தனர்.

முருகப்பெருமான் இப்போது ஏமகூட பர்வதத்தில் தேவர் களும், முனிவர்களும் வணங்க எழுந்தருளியிருக்கின்ருர். மூன்று தலையும், வாள் பிடித்த கையும் உடையவஞன காருண்டன் என்னும் அரக்கன் முருகப்பெருமாஞல் அழிவான் என்று சனற்குமார முனிவர் கூறினுர்.

3. தெய்வீகராசன் உற்பவச் சருக்கம்

முனிவர்கள் சனற்குமாரரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு வடக்குத் திசையிலுள்ள ஏமகூட பர்வதத்தை அடைந்து முருகப் பெருமானின் திருவடியை வணங்கி, அசுரர்குலத்தை அழித்துத் தேவர்களுக்கு வாழ்வளித்த ஞான சொரூபியே! நாங்கள் தென்திசையில் நடனசபை யுடையார் மகிழ்ந்திருக்கும் அரச வனத்தில்இருப்பவர்களாவோம்.

நாங்கள் அரசவனத்தில் சந்திரனைத் தரித்த சிவனை அழுக் கற்ற மனமுடன் பூசை புரிகின்றவர்களாவோம். காருண்டன் என்னும் அரக்கஞல் எங்கள் தவமெல்லாம் நலிவு பெற்று நாளுக்குநாள் நடுக்கமடைந்துள்ளோம் என்று முனிவர்கள் சொல்லக்கேட்டமுருகப்பெருமான் மகிழ்ந்து 'தெற்குத்திசைக்கு நாம் வந்து கொடிய அரக்கனை அழிப்போம்' என்று கூற அப்பொழுதே முனிவர்கள் அரசவனம் வந்து சேர்ந்தார்கள்.

குக முனிவரைப் பார்த்து ''யாகமொன்று செய்ய நல்ல தலம் யாது?'' என்று ஆறுமுகப்பெருமான் கேட்க, குகமுனிவர் கூறலாஞர். தேவரீர் திருக்கையில் உள்ள வேலை எடுத்துவிட் டால், அது போய் நிற்கும் இடம் எவ்விடமோ அவ்விடமே யாகம் செய்வதற்கு ஏற்ற இடம் என்று வணங்கிக் கூறினுர். கந்தப் பெருமானும் தன் கையிலுள்ள வேலை விடவே, அந்த வேல் திருக் கோவலூர் என்னும் திவ்விய க்ஷேத்திரம் வந்து நின்றது. வேல் வந்த வழியே முருகனும் புறப்பட்டுத் தென்பெண்ணை நதியின் தென்கரையில் உள்ள திருக்கோவலூர் என்னும் தலத்திற்கு வந்து சேர்ந்தார்.

அந்தகாசுரனைச் சங்கரித்து உலகத்தைக் காப்பாற்றிய சிவபெருமானது திருவடியில் முருகப்பெருமான் வணங்கிப் பின்பு, தம்முடன் வந்த குகமுனிவரைப் பார்த்துப் 'பெரிய யாகத்தை முனிவர்களுடன் செய்யும்' என்று கூறினுர்.

தேவர்கள், சித்தர்கள், வித்தியாதரர்கள் பிரமதேவன் முதலியவர்கள் எல்லோரும் பூசை செய்து பாவம் நீங்கப்பெற்ற அரசவனத்துக்கு ஆறுமுகப்பெருமான் வந்து சேர்ந்தார். சனற் குமாரர், மிருகண்டு முனிவர் முதலான முனிவர்கள் எல்லோரும் முருகப்பெருமானை வணங்கித் துதித்தார்கள். முருகப்பெருமான் சிகரசிகாமணி நாதரை விதி முறைப்படி அர்ச்சனை செய்து அரசவனத்தில் எழுந்தருளியிருந்தார்.

அரசவனத்தில் இருக்கும் முனிவர்கள் கந்தப் பெருமானை வணங்கிப் பின்பு காருண்டன் என்னும் அரக்கனால் நாங்கள் மனக் கிலேசமடைந்துள்ளோம். இந்த அரசவனத்திலிருந்து நீங்காமல் அடியேங்கள் பெறும் பலன் யாது? திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று கேட்க, முருகப்பெருமான் ''முனிவர்களே!'' திருவாரூரில் பிறந்தவர்களும், சிதம்பரத்தைக் கண்டு தரிசித்தவர் களும், காசியில் இறந்தவர்களும், கேதாரத்தில் நீராடியவர்களும், அருணசலத்தை நினைத்தவர்களும் அரசவனம் விட்டு நீங்காது அன்பாயிருந்தவர்களும் மோக்ஷத்தை யடைவார்கள்.

சிகரசிகாமணி நாதர் எழுந்தருளியுள்ள அரசவன க்ஷேத்தி ரத்தில் ஒரு நாள் வாசஞ்செய்யின் கோதான பலனும், இரண்டு நாள் வாசஞ் செய்யின் பூதானம் செய்த பலனும், மூன்று நாள் வாசஞ் செய்தவர்கள் கன்னிகாதான பலனும் பெறுவார்கள்.

அரசவனத்தில் இருக்கும் சிவனடியார்களுக்கு ஒருபொழுது அன்னம் அளித்தவர்கள் முப்பத்திரண்டு தருமமும் செய்த பலனைப் பெற்று வாழ்வார்கள். துறந்தவர்களுக்கும், அந்தணர்களுக்கும், யாசகர்களுக்கும் ஆடை, அன்னம் இவைகளை அன்பாகக் கொடுத் தவர்கள் பிறவிப்பிணியிலிருந்து நீங்கிச் சிவலோகத்தில் கணதி பராய் விளங்குவார்கள்.

அரசவன க்ஷேத்திரத்தில் அந்தணர்களுக்கு அக்கிரகாரம் கட்டிவைத்தவர்களும் சிவனடியார்களுக்கு மடாலயங்கள் கட்டி வைத்தவர்களும் சிவலோகத்தில் முதற்கணதிபராவார்கள். இங்குத் தவஞ்செய்வோர், விரதங்கள் இருப்போர், தருமம் புரிவோர் முதலியவர்கள் மனத்தில் தாங்கள் எண்ணிய பிரகாரம் பதவிகளை அடைந்து அநுபவித்துச் சிவலோகப் பதவி யையும்பெறுவார்கள்.

சோதிலிங்க நாதரை ஒருதரம் வலம் வந்தவர்கள் ஒப்பற்ற செல்வ மிகுந்த மேன்மக்களாவார்கள். இரண்டுதரம், மூன்று தரம் வலம் வந்தோர்கள் தேவேந்திரனைப்போல் சுகம் அனுப

வித்து வாழ்வார்கள். அந்தச் சோதிலிங்கத்தின் சந்நிதியில் தீபங்கள் ஏற்றி வைத்தவர்கள் ஞானத்தில் முதலிடம் பெற்று விளங்குவார்கள். வில்வபத்திரத்திஞல் அருச்சித்த பெரியோர்கள் ஜீவன் முத்தராகவிருந்து பின் விதேக முத்தராவார்கள்.

அரசவனத்தில் வாசஞ் செய்கின்றவர்களுக்கு அன்னம் கொடுக்க மனத்தில் நினைத்து நடந்து அடிவைத்தவர்கள் ஒரு அடிக்கு ஒரு அசுவமேத யாகஞ் செய்த பலன் பெறுவார்கள். ஒரு அன்னத்திற்குச் சந்திர சூரியர் உள்ளவரையில் கயிலாயத்தில் சாலோக பதவி பெறுவார்கள். ஒருவருக்கு அமுது அளிக்கின் சிவபிரான் உருவமாகச் சாயுச்சியமடைவர்.

சிகரசிகாமணி நாதரைத் தரிசனம் செய்ய வேணுமென்று வழிநடந்தோர்களுக்கு அன்னம் அளித்தால் வேதத்திலே சொல்லி யுள்ள எழுவகை யாகப்பலனைப் பெறுவார்கள். அத்தலத்தில் வசிக்கின்றவர்களுக்கு அரச இலை நிரம்ப அன்னம் அளிப்போர் அளவற்ற பாக்கியத்தை அடைந்து அனுபவித்து மறுபிறவியில் சாயுச்சியம் அடைவார்'' என்று அருளிச் செய்தார்.

குமாரக் கடவுளின் மொழியைக் கேட்டு முனிவர்கள் மகிழ்ச்சி யடைந்து முருகனின் திருவடிகளில் வணங்கிஞர்கள். முருகப் பெருமானும் முனிவர்களைப் பார்த்துக் ''காருண்டனை வதஞ் செய்வித்து உங்களைக் காப்பாற்றுகிறேன், நீங்கள் பயமின்றித் தவத்தைச்செய்துகொண்டிருங்கள்'' என்று கூறித் திருக்கோவலூர் வந்து குகமுனிவரைப்பார்த்து யாகம் செய்யச் சொன்ஞர்.

குகமுனிவர் வேத விதிப்படி யாகஞ் செய்தார். அந்த யாகத்தில் யுத்தஞ் செய்வதற்குரிய படைகளும், கையிலே வாளும், நவரத்ன கிரீடமும் பிரகாசிக்க, தேவேந்திரன் போல் பச்சைக் குதிரை மேலேறிக் கொண்டு ஒரு அரசகுமாரன் தோன்றிஞன்.

அந்த யாகத்திலே தோன்றிய அரசகுமாரன் குகமுனிவரை வணங்கி நிற்க, அவர் அவனுக்குத் தெய்வீகராசன் என்னும் பெயரைச் சூட்டி, 'லக்ஷ்மி கடாக்ஷமாகிய செல்வமும், கௌரியின் கடாக்ஷமாகிய வெற்றியும், சரஸ்வதியின் கடாக்ஷமாகிய கல்வியும் உண்டாவதாக' என்று ஆசீர்வதித்தார். மற்ற முனிவர்கள் 'இந்த அரசகுமாரன் யார்?' என்று வினவ, குகமுனிவர் கூற லாஞர்.

பர்வதராசன் ஒருநாள் கயிலாயம் சென்றான்; சென்றவன் சிவபெருமானுக்குத் தெரிவிக்காமலே உள்ளே சென்றான். அவ்வ மயம் பார்வதியும் சிவனும் தனித்திருந்தனர். அதுகண்டு நாணி எதிர்வந்து வணங்கிய பர்வதராசனைச் சிவபெருமான் 'நீ பூமியில் மானிடனாகப் பிறப்பாயாக' என்று கூறினார். அம்மொழி கேட்ட பர்வதராசன் நடுநடுங்கி மூர்ச்சையுற்றான். பார்வதி சிவபெருமானைப் பார்த்து 'உமது மாமனாரா ஜனனம் எடுப்பது, பிறவியில் வீழ்வது! என்று இரங்கிக் கேட்டாள்.

பார்வதியைப் பார்த்துச் சிவபெருமான் 'நீ வருந்தாதே என்று கூறி , பர்வதராசனைப் பார்த்து நீ இந்தச் சாபத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமேயன்றி வேறில்லை. தாயின் கருப்பத்தில் பிறவாமல் மாலையணிந்து கிரீடத்துடன் யாகத்தில் தோன்றி உலகை ஆண்டு ஐம்புலாதிகளையும் வென்று தவஞ்செய்து வருவா யாக என்று கூறினார். அந்தச் சாபத்தினாலே வந்த மலையரசன் இவனே'' என்று குகமுனிவர் கூறி அத்தலத்திலேயே தவஞ் செய்துகொண்டிருந்தார். முருகப்பெருமானின் அருளினால் அவரது கையிலுள்ள வேல் வந்து நின்ற காரணத்தினால் திருக்கை வேலூர் என்னும் அழகிய பெயர் பெற்ற திருக்கோவலூரில் தெய்வீக மன்னன் அரசாட்சி செய்து கொண்டிருந்தான்.

தெய்வீக ராசன் திருக்கோவலூரில் இருக்கும் நாளில் சேர சோழ பாண்டியர்கள் மூவரும் உறையூரில் கூடியிருந்தார்கள். அவ்வமயம் தெய்வீக ராசனைப் பற்றிக் கேள்விப்பட்டார்கள். உடனே தெய்வீகனிடம் தூதரை அனுப்பி யாகத்தில் தோன்றிய குதிரையைத் தரும்படி கேட்டனர். தெய்வீகன் உடனே மூன்று அரசர்களுக்கும் நான் இளைத்தவனோ? பச்சைக் குதிரையைக் கொடுப்பதற்கில்லை'' என்று சொல்லவே தூதர்கள் அரசர் களிடம் சென்று தெய்வீகன் கூறியதைச் சொன்னார்கள். அதைக் கேட்ட மூவேந்தர்களும் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் சிதம்பர க்ஷேத்திரத்திற்கு வந்து தெய்வீகனுக்கு ஆளை அனுப்பி னார்கள். தெய்வீகனும் விரைந்து வந்து மூன்று அரசர்களையும் கண்டான்.

மூவேந்தர்களும் தெய்வீகனை நோக்கி, பச்சைக் குதிரையைத் தரவேண்டும் என்று கேட்க, தெய்வீகன் 'என்னுடன் யுத்தஞ் செய்து வென்று குதிரையை அடையுங்கள்' என்று கூறினான்.

அதுகேட்டு மூவேந்தர்களும் நகைத்து ''யானை, தேர், குதிரை, காலாட்படைகள் இல்லை. பூவுலகில் உனக்கோ துணை புரிபவர்களும் இல்லை. நீ யுத்தஞ்செய்து ஆவது என்ன?',

ஆகையால் குதிரையைத் தருவாயாக என்றுகூற, தெய்வீகன் ''யுத்தஞ்செய்து வெற்றிபெற்று அடையலாமேயன்றி எளிதில் தருவதில்லை'' என்று கூறினான். மூவேந்தர்களும் 'நாங்கள் உன்னுடன் பதாதிகளுடன் போர் செய்ய விருப்பமில்லை. பல வகையான மல்யுத்தம் செய்வோம்' என்று கூறினர்.

முதலில் சேரன் மல்யுத்தஞ் செய்து தோற்றுப்போக, சோழன் மல்யுத்தஞ்செய்து தோற்றுப்போக, பாண்டியனும் மல் யுத்தஞ் செய்து தோல்வியையடைந்தான். மூவேந்தர்களும் தெய்வீகனைப் பாராட்டினர்.

பின்பு அவர்கள் தெய்வீகனுக்கு எந்தத் தேசத்தைக் கொடுக் கலாம் என்றெண்ணி, தெய்வீகனைப் பார்த்து 'உமது குதிரை ஒரு வட்டம் வந்த நாடு உமக்கே உரியது' என்று சொல்லத் தெய்வீகனும் குதிரை மேலேறி ஒரு க்ஷணநேரத்தில் வடதிசையில் கெடில ஆறு மட்டும் சென்று திரும்பி, கீழ்த்திசையில் கடல் மட்டும் சென்றுதிரும்பி, தெற்குத் திசையில் நிவாவாறு என்னும் வெள்ளாறுவரை சென்று திரும்பி, மேற்குத் திசையில் கொல்லி மலை மட்டும் போய்த் திரும்பி, இதற்குள் வட்டமாய் சுற்றிக் கொண்டு மூவேந்தர்கள் முன்பு வந்து சேர்ந்தான். அவ்வட்டத் துக்குள் அடங்கிய தேசத்தைத் தெய்வீகனுக்கு அளித்தனர்.

தெய்வீகன் கோவலூரில் இருந்துகொண்டு அரசாட்சி செய்து வருகின்ற நாளில் மந்திரிகள் அவனுக்குத் திருமணம் செய்து வைக்க எண்ணி, சுந்தர பாண்டியன் மகளான குலபதியைத் தேர்ந்தெடுத்துத் திருமணத்தை நல்ல நாளில் நல்ல லக்னத்தில் மணபேரிகை ஆரவாரிக்க, சங்கம் சப்திக்க, சகல வாத்தியங்களும் முழங்க நடத்தி வைத்தனர்.

தெய்வீகராசன் மதுரையில் சில நாட்கள் தங்கியிருந்தபோது 'வல்லோரி' என்னும் அரக்கன் அருணசலத்திற்கு அடுத்துள்ள ஒரு மலையில் இருந்துகொண்டு தாங்கொணாத தொல்லைகளைக் கொடுத்து வந்தான். மந்திரிகள் உடனே தூதுவர்களை மதுரைக்கு அனுப்பித் தெய்வீகனுக்குத் தெரிவித்தனர்.

உடனே தெய்வீகன் தன் மனைவியான குலபதியை மதுரை யிலேயே விட்டுவிட்டுப் பாண்டியனிடம் விடைபெற்றுக்கொண்டு குதிரையின் மீது ஏறிக்கொண்டு திருக்கோவலூர் வந்து, சதுரங்க சேனைகளுடன் புறப்பட்டு, அருணசலேசுவரரை வழிபட்டு அரக்கன் இருக்குமிடம் வந்தான். வல்லோரிக்கும் தெய்வீகனுக்கும் போர் நடந்தது. இறுதியில் வல்லோரி களைத்துப்போய் ஓட

ஆரம்பிக்கவே அரசன் அவன் உடலை இருதுண்டங்களாகப் பிளந்தான். அரக்கனுடைய உடல் பெரியதொரு மலைபோல் கிடந்தது. அது கண்டு அம்மலையைக் '**கவத்தி மலை**' என்று எல்லோரும் புகலலாயினர்.

தெய்வீகன் பகைவர்களை அழித்து நாட்டினில் அமைதியை ஏற்படுத்தினன். அமைச்சர்கள் தெய்வீகனிடம் வந்து சிவபெருமான் எழுந்தருளியுள்ள அரசவனத்திலே கொடிய விலங்குகள் தொந்தரவு செய்கின்றன என்று கூற, அரசன் மிருக வேட்டைக்குக் கிளம்பினன்.

4. காருண்டன் வதைச்சருக்கம்

கொடிய விலங்குகளை வேட்டையாடிக் கொண்டிருக்கும் சமயத்தில், சிகரசிகாமணி நாதர் அருளால் செம்பொன்னிறம் போன்ற வடிவுடையதும், மரகதமணி போன்ற குளம்பும், காதும், முறுக்கிய கொம்புகளையுமுடைய அழகிய இளமான் ஒன்று தெய்வீகன் முன் வந்து நின்றது. அந்த மானைப்பிடிக்கத் தொடர்ந்து சென்றான். அது சிகரசிகாமணி நாதர் சந்நிதிக்கு வடதிசையில் வந்து பெரிய பாறைமீது நின்று பின்பு கண்ணுக்குத் தெரியாமல் மூன்றும் நாள் மறைந்துவிட்டது. அரசன் மானைக் காணுமல் கலக்கமடைந்து தாகவிடாய் தாங்காமல் அந்தப் பாறையின்மீது அமர்ந்து கொண்டிருந்தான். அரசனைத் தேடிவந்த அமைச்சர்களும், சேனைகளும் நீர் வேட்கையுடையவர்களாய் அந்தப் பாறைக்கே வந்து சேர்ந்தனர்.

தண்ணீர் கிடைக்காமையினுல் அரசன் தளர்ச்சியடைந்ததைக் கண்டு சிகரசிகாமணி நாதர் ஒரு கையில் குடையும், ஒரு கையில் தண்டுமேந்தி, வயோதிக அந்தணர் வடிவம் கொண்டு தளர்ந்த நடையுடையவராய் அந்தப் பாறைக்கே வந்து அரசன் முன் நின்று ஆசி கூறினுர். அரசன் களைப்பு நீங்கப்பெற்றவனுய் அன்போடு அந்தணரைப் பார்த்துத் 'தாங்கள் இருக்குமிடம் யாது'? என்று கேட்க, அந்தணர் கோலத்தில் வந்த சிகரசிகாமணி நாதர் 'நம் ஊர் கேட்டுச் செய்வதென்ன நீ; இப்போது நீ களைப்புடன் இருக்கிறுய்; நீ விரும்புவதென்ன?' என்று கேட்க, அரசன் 'தண்ணீர் இருக்குமிடம் காட்டினுல் மிகுந்த தருமம் ஆகும்' என்றுன். அதுகேட்டு அந்தணவடிவில் வந்துள்ள சிகரசிகாமணி நாதர் கூறலானுர்.

'முனிவர்கள் செய்யும் தவத்திற்கு இடையூறு செய்பவன் 'வஞ்சனை' என்னும் அரக்கியின் மகன்; காருண்டன் என்ற பெயரையுடையவன்; இந்நகரத்திற்குத் தலைவன். அவனை இன்று போர்செய்து கொல்வதாகக் கூறின் உனது நீர்வேட்கையைப் போக்குவோம்' என்று கூறினர்.

அரசன் அந்தணரைப் பார்த்து அரக்கன் இருக்குமிடம் யாது என்று வினவ, அதற்கு அவர் 'பிறையூர்க்குன்று என்னும் மலைப் பக்கத்தில் இருக்கிறான். சுற்றிலும் காடு நெருங்கியுள்ளதால் வழி காணுதல் அரிதாகும். வழியில் கொன்றை மலர்கள் உதிர்ந்து கிடக்கும். அதுவன்றி இடபத்தின் அடியும் மேற்காக நோக்கி நடந்திருக்கும் என்று கூறி அன்றுமுதல் தாமும், ரிஷப முமாக எழுந்தருளியிருந்தார் சிகரசிகாமணி நாதர்.

அரசனும் காருண்டனை வதஞ் செய்கிறேன்; தண்ணீர் இருக்கு மிடத்தை எனக்குக் காட்ட வேண்டும் என்றுசொல்ல அந்தணராக வந்த சிகரசிகாமணி நாதர் தாம் கொண்டு வந்த கட்டமுதை அவிழ்த்து அரசனுக்கு வழங்கினர். அரசன் முதலானோர் உண்டு மகிழ்ந்தனர்.

சிகரசிகாமணி நாதராகிய அந்தணர் தம் கையிலுள்ள தண்டினுல் மிகுந்த பலம் கொண்டு பூமியைக் கீறவும் நீர் தோன்றிற்று. அரசன் முதலானோர் பருகி மகிழ்ச்சி அடைந்தனர். அந்தணர் கோலத்தில் வந்த சிகரசிகாமணி நாதர் மறைந்தார்.

அரசனும் சேனைகளுடன் பிறையூர்க் குன்றத்திற்குச் சென்று காருண்டனுடன் போர் செய்யத் தொடங்கினன். இருவருக்கும் போர் உக்கிரமாக நடந்தது. காருண்டன் பல மாயங்கள் செய்து போர் செய்தான். ஈசன் அருளினுல் கிடைக்கப் பெற்ற மழுவாயுதத்தால் தெய்வீகன் காருண்டனை வதஞ் செய்தான்.

5. நீரேற்ற சருக்கம்

காருண்டனைக் கொன்றதினுல் தெய்வீகனுக்குப் பிரமஹத்தி தோஷம் வந்து சேர்ந்தது. அவன் முனிவர்களை வணங்கிப் பிரமஹத்தி தோஷம் நீங்க அருள் செய்ய வேண்டும் என்று கேட்க, முனிவர்களும் அரசனுக்குச் சிவாநுக்கிரகம் ஏற்படும்படி ஆசீர்வதித்துப் பின்பு பிரமஹத்தி தோஷம் ஏற்பட்ட வரலாற்றைக் கூறலாயினர்.

மிருகண்டு முனிவர் சிவ பூசைக்காகச் சிறந்த மலர்களை எடுத்துக் கொண்டுவரத் தம் சீடர்களில் ஒருவனை அனுப்பினார். அந்தச் சீடன் மலர்களை எடுக்கச் சென்ற சமயத்தில் வஞ்சனை என்னும் அரக்கி நந்தவனத்திலுள்ள மலர்களைச் சிதைத்துக் கொண்டிருந்ததைக் கண்டு சிறிது நேரம் நின்று வேறொரு இடத்திற்குச் சென்று மலர்களை எடுத்து வந்தான். அதற்குள் மிருகண்டு முனிவர் நாழிகை ஆகிறதே என்று எண்ணிப் பூசையை முடித்துவிட்டுச் சீடனை எதிர்பார்த்திருந்தார்.

தாமதமாக வந்த சீடனைப் பார்த்து 'ஏன் தாமதம்' என்று கேட்க, சீடன் நந்தவனத்தில் நடந்த நிகழ்ச்சிகளைச் சொன்னான். முனிவர் கோபமடைந்து 'நீ வஞ்சனை என்னும் அரக்கியின் வயிற்றில் பிறந்து யாவரும் நடுங்கும்படி வாழ்வாயாக' என்று சாபமிட்டார். அந்தணனும் யோக சக்தியால் சரீரத்தை விட்டு வஞ்சனையின் வயிற்றில் வந்து தங்கிக் காருண்டனாகப் பிறந்தான். நீ அவனைக் கொன்றதினால் பிரமஹத்தி தோஷம் உன்னைப் பிடித்துக் கொண்டுள்ளது.

அந்தப் பிரமஹத்தி தோஷம் நீங்க நீ அரசவனத்தில் எண்ணூறு அந்தணர்களுக்கு இல்லம் அமைத்துக் கொடுத்து அவ்வில்லங்களுக்கு நடுவில் சிவாலயம் எடுப்பிப்பாயாக. குடியேற்றிய அந்தணர்களுக்கு விருத்திக்காகச் சர்வ மானியமும், கோயிலில் நித்திய நைமித்திக பூசை நடக்க நிவந்தமும் ஏற்படுத்தினால் உன்னைப் பிடித்துள்ள பிரமஹத்தி தோஷம் நீங்கும்' என்று கூறினார்கள்.

தெய்வீகன் காசி க்ஷேத்திரத்தை யடைந்து அந்தணர்களைக் கண்டு மகிழ்ந்து முனிவர்கள் கூறிய அந்தணர்கள் ஆயிரத்து இருநூறுபேர் என்பதை மறந்து எண்ணூறு பேர்களை அழைத்துக் கொண்டு வந்து தென்பெண்ணை நதிக் கரையில் உள்ள தெள்ளாறு, குழப்பலூர், சித்திங்கூர், கோவலூர் என்ற நான்கு ஊர்களிலும் நானூறு அந்தணர்களைக் குடியேற்றி அவர்களுக்கு விருத்திகள் எல்லாம் அளித்து மற்றைய நானூறு அந்தணர்களையும் அரச வனத்துக்கு அழைத்துச் சென்றான். முன் இளைப்பைத்தீர்த்த இடமாகிய பாறையருகில் வந்தபோது முனிவர்கள் கூறியது ஞாபகம் வர நம்முடன் வந்த நானூறு பேரன்றி இன்னும் நானூறு பேருக்கு என்ன செய்வது என்று ஆலோசித்த போது சிகரசிகாமணி நாதர் மறையவர் உருவில் தோன்றித் தெய்வீக ராசன் முன்பு வந்தார். அரசன் அந்த அந்தணரைப் பார்த்து, 'அந்தணரே! நீர் எங்கு வந்தீர்? என்று கேட்க, அந்தணர், அரசனே! நான் இந்த வனத்தில் இருப்பவன். நெடுநாளாக உன்னைக் காண

வேண்டுமென்று எண்ணிய ஆசையினால் இங்கு வந்தேன் என்று கூற, அரசன், அவரைப்பார்த்து இந்த அரசவனத்தில் எண்ணூறு அந்தணர்களைக் குடியேற்றுமாறு முனிவர்கள் கூறினார்கள். நான் அதை மறந்து நானூறு அந்தணர்களை அழைத்துக்கொண்டு வந்தேன்; மற்ற நானூறு பேர்களுக்கு யாது செய்வது என்று அந்த அந்தணரை நோக்கிக் கேட்டான். அதற்கு அவ்வந்தணர் அன்றையதினம் நீ மறந்தது சிவபெருமானின் திருவருளாகும். மற்றைய நானூறு அந்தணர்களுக்குக் கொடுக்கும் விருத்திகளை இன்றைய தினம் எனக்குக் கொடுத்தால் பதினான்கு உலகமும் நீ பெற்றுத் தானம் கொடுத்த பலனையும் பெறுவாய் என்று சொல்ல, தெய்வீகன் நகைத்து அந்தணரே! யானளிக்கும் நானூறு அந்தணர்களுடைய சர்வ மானியங்களை நீர் ஒருவர் மட்டும் பெற்றுச் செய்வது யாது? சொல்லும் என்று கேட்க, அதற்கு அந்தணர், 'நான் ஒருவன்; எனக்கு இருமனைவியர்; இரண்டு பிள்ளைகள்; அன்றியும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் அடிமை யானவர்கள்; நீ தரும் சர்வ மானிய வருமானம் என் மூத்த பிள்ளையின் ஒரு பகல் உணவுக்குப் போதாது என்று சொல்லிச் சிகரசிகாமணி நாதர் காட்சி யளித்தார்.

தெய்வீகன் சிகரசிகாமணி நாதரின் உண்மை வடிவத்தைக் கண்டு பயந்து நானூறு அந்தணர்களுக்கு ஒரு பங்கும், நீரும் ஒரு பங்கு வேண்டும் என்றபடியால் உமக்கு இந்தப் பதியின் வருமானத்தில் ஒரு பாதி பங்கும் கொடுத்தேன் என்று கூறிச் சுனை நீரை அள்ளிப் புனிதரான சிவபெருமான் கையில் தத்தம் செய்து கொடுத்தான்.

தானம் செய்த நீருள்ள பாறையை அன்று முதல் 'நீர்ப் பாறை' என்று சொல்லலானார்கள். நெருங்கிய மூங்கில் வனத்தில் சென்று சிகரசிகாமணி நாதர் சிவலிங்க வடிவாக எழுந்தருளினார். தெய்வீகன் இந்த வனத்தில் சிகரசிகாமணி நாதரைக் காண்பேன் என்று வாளாயுதத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

வனத்தில் இருக்கும் மூங்கில்களை க்ஷணநேரத்தில் வெட்டிக் கொண்டு வர, சிகரசிகாமணி நாதர் திருமேனியில் அந்த வாள் பட்டது. அதனால் இரத்தம் பெருக்கு எடுத்தோடியது. அரசன் மனம் கலங்கிக் கையிற்பிடித்துள்ள வாளினால் தன் கழுத்தை அறுத்துக்கொண்டான்.

சிகரசிகாமணி நாதர் தெய்வீகனுக்குக் காட்சி கொடுத்து வாளைத் தம் கையினால் விலக்கி அருள் செய்து, தெய்வீகனே!

வேதமுணர்ந்த முனிவர்கள் அர்ச்சிக்கும் மலரினும் மென்மை யுடையதாயிருந்தது உன் கைவாள். கவலைப்படாதே! இதனுல் உனக்காக நாம் வரவழைத்த தீர்த்தத்தில் சென்று நீராடினேர், உலகமாளும் அரசராகப் பிறந்து மறுபிறப்பில் தேவலோகத்தை அரசாட்சி செய்வார்கள்' என்று தீர்த்தத்தின் சிறப்பினை எடுத்துக் கூறி, மேலும் அரசவனம் என்னும் பெயருடைய இத்தலத்தில் வேதமுணர்ந்த அந்தணர்களுடன் பாதிபாகம் நாம் பெற்றமை யால் **'இறையானரையூர்'** என்றும், நீ தத்தம் செய்த நீரை ஏற்றதால் **'நீரேற்றபுரி'** என்றும், மூங்கில்கள் நிறைந்த வனமாயி ருப்பதால் **'மூங்கில் வனம்'** என்றும் பெயர் விளங்கும். இத்தலத்தில் வாசஞ் செய்பவர்கள் மோக்ஷத்தை யடைவார்கள். இயன்ற அளவு தருமம் புரிந்தவர்கள் ஒன்றுக்கு ஒருகோடி அதிக பலன் பெற்று வாழ்வார்கள்.

அரசனே! நீ இவ்வனத்தில் சிவாலயம் அமைத்துச் சிவாலயத்தைச் சுற்றி நகரம் அமைத்துத் தவஞ் செய்து கொண்டிருப்பாயாக என்று அருளினுர்.

தெய்வீகன் சிவபெருமான் கட்டளைப்படி நகரமும் ஆலயமும் அமைத்து அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் முதலானவர் களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுத்து ஒரு குறைவும் உண்டாகாமல் அரசாட்சி செய்து வந்தான். அவனை விட்டுப் பிரமஹத்தி நீங்கியது.

சேரன் மகள் பதுமாவதியை, மணந்தான். அவள் புதல்வர் நூற்றுவர் **மலையமன்னர்** எனப்பட்டனர். பின்பு வட மதுரையிலே ஆயர்குலத்து அரசனுன வீரவர்மனுடைய மகள் **'கமலவல்லி'** என்பவளை மணந்து அறுபது பிள்ளைகளைப் பெற்றுன். அவர்கள் **'நந்த மன்னர்'** என்னும் பெயர் பெற்றனர். அயோத்தி அந்தண அரசன் மகள் **'அளகையை'** மணந்து அறுபத்தெட்டுப் பிள்ளைகளைப் பெற்றுன். அவர்கள்**'சுருதி மன்னர்'**என்று அழைக்கப் படலாயினர். பாண்டிய அரசனின் பெண்ணுன குலபதிக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அக்குழந்தை பெரியவனுன பின் அரச பாரத்தை அவனிடம் ஒப்படைத்துவிட்டு வனத்திற்குத் தவஞ் செய்யச் சென்றுன். பின்பு சிகரசிகாமணி நாதர் காட்சி கொடுக்கச் சிவபதத்தை அடைந்தான்.

ஏழு கடலும், ஏழு தீவும், அஷ்டகுலபர்வதமும், மகா மேருவும், அதைச் சூழ்ந்த சக்கிரவாளகிரியும் கூடிய உலகமும் பஞ்சாக்ஷர உபதேசம் பெற்ற பெரியோர்களும் வாழ்க. விபூதியும் மநுநீதியும் வாழ்க. நாலு வேதமும், மன்னனும் வாழ்க.

சைவ சமயமும் ஆன்ம கோடிகள் விரும்பும் இன்ப சுகங்களும் சிறந்து வாழ்வதாக.

இந்நூலினைப் படிக்கின்றவரும், படிக்கக் கேட்கின்றவர்களும் சிகரசிகாமணி நாதருடைய அருளுக்குப் பாத்திரமாவார்கள்.

புனித மாம்இறை சைப்புராண
நூலினைக் கற்போர்
இனிது புத்தகத் தெழுதினர்
இசைப்பவர் கேட்போர்
வனிதை பாகருக் கன்பராய்
வாழ்வரெஞ் ஞான்றும்
நனித ரும்பர மானந்தம்
நல்கும்எஞ் ஞான்றும்.

தென்னாடுடைய சிவனே போற்றி.

இறைவாச நல்லூர்த்தல புராணம்

அபிதான விளக்கம்

1. அசமுகி:—

காசிபருக்கும் மாயை என்பவளுக்கும் பிறந்தவள். சூரபத்மன், சிங்கமுகன், தாரகன் இவர்களுடைய தங்கை; திருமணம் செய்துகொள்ளாதவள்; கற்பில்லாதவள்; தருமசிந்தனை இல்லாதவள்: தேவர்களின் மனைவியர்களைத் தன் தமையன்மார் களுக்கு உரிமையாக்குபவள்; முனிவர் செய்யும் யாகங்களைக் கெடுப்பவள்; பாவமே உருவானவள்; தன் சுற்றத்தார்களை இகழ் பவர்களைக் கொன்று உண்பவள்; அழகிற்சிறந்த ஆடவர்களைத் தேடி வலிந்து கூடுபவள்.

2. அசுரேந்திரன்:—

இவன் சூரபத்மனின் தாயாகிய மாயையைப் பெண்ணாக அடைந்தவன்; நுண்ணிய கேள்வியையுடையவன்; எண்ணில்லாத அசுரர்களைப் பாதுகாத்தவன்; இவன் இந்திரனிடம் பலநாள் போர்செய்து தோல்வி அடைந்தவன்; சூரபத்மனின் வீரச்செயல்களைக்கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தவன்.

3. அருச்சுனன்:—

பஞ்ச பாண்டவர்களில் ஒருவன்; துரோணாசாரியரிடம் தனுர்வித்தைகளைக் கற்றவன்; சித்ரவாகனன் பெண்ணாகிய சித்ராங்கதையை மணந்து பப்ருவாகனனைப் பிள்ளையாக அடைந் தவன்; இவன் வெண் ணிற மாயிருத்தலால் **அருச்சுனன்** எனவும், பங்குனி உத்தரத்தில் பிறந்ததால் **பற்குனன்** எனவும், பிரதை எனும் குந்திபுத்ரனாகையால் **பார்த்தன்** எனவும், இந்திரனால் கொடுக்கப்பட்ட கிரீடம் உடையவனாதலால் **கிரீடி** எனவும், வெள்ளைக் குதிரைகளையுடையவனாதலால் **சுவேதவாகனன்** எனவும் பகைவர்கள் நடுங்கப் போர் செய்பவனாதலால் **பீபற்சு** எனவும், போரில் வெற்றியை அடைபவனாதலால் **விஜயன்** எனவும், அஞ்ஞானத்தை நீக்கவல்லவனாகையால் **கிருட்டிணன்** எனவும், இடம் வலம் என்கிற இரண்டு கைகளாலும் அம்பு எய்யவல்லவனா கையால் **சவ்வியசாசி** எனவும், பகைவர்களைவென்று தனம் பெற்ற மையினால் **தனஞ்சயன்** எனவும் பெயர் பெற்றவன். சுபத்திரையை மணந்து அபிமன்யுவைப் பெற்றான். இவனுக்குக் காண்டவ தகனத்தின் போது அக்கினி காண்டீவம் முதலியன கொடுத்தான்.

4. **அஞ்செழுத்து**:—

இது சைவர்கள் முத்தியடைய செபிக்கும் மந்திரம். இது ஸ்தூல பஞ்சாக்ஷரம், சூக்ஷ்ம பஞ்சாக்ஷரம், காரண பஞ்சாக்ஷரம், மகாகாரண பஞ்சாக்ஷரம், மகாமநு பஞ்சாக்ஷரம் எனப் பல வகைப்படும்.

ஸ்தூல பஞ்சாக்ஷரம்:- நமசிவாய

சூக்ஷ்ம பஞ்சாக்ஷரம்:- சிவாய நம

காரண பஞ்சாக்ஷரம்:- சிவாய சிவ

மகாகாரண பஞ்சாக்ஷரம்:- சிவ

மகாமநு பஞ்சாக்ஷரம்:- சி

இது நான்கு வேதங்களுள்ளும் உண்மைப்பொருளாய் இருப்பது; கொலைத்தொழிலையுடைய தீயோரையும் பாதுகாப்பது; இதனை மனத்தை ஒருவழிப்படுத்தி ஏகாக்ர சித்தத்தோடு உருவேற்ற வேண்டும். இம்மந்திரத்தைக் குருவினிடம் உபதேசம் பெற்று ஜபித்தால் நற்பலன் பெருகும்.

5. **ஆக்கையிலா மாற்றம்**:— அசரீரி.

6. **இமவான்**:—

இவன் மலைகளுக்கெல்லாம் அரசன்; இவனது மனைவி மேனகை. கங்கை, பார்வதி இவர்களை மகளாகப் பெற்றுச் சிவபெருமானுக்குக் கொடுத்தான்; இவனது மகன் மைநாகன்.

7. **உமை**:—

தேவியின் பெயர்களில் 'உமா' என்பதுதான் தொன்மை யானது. தேவி சிறுவயதிலேயே தவஞ் செய்யச் சென்றபோது அவளது தாயாரான மேனகை 'உ' அடிபெண்ணே 'மா' வேண்டாம் என்று தடுத்தாள். அதுமுதற்கொண்டு பார்வதிக்கு 'உமா' என்ற பெயர் ஏற்பட்டது. உமா-உமை 'ஆ'கார ஈறு 'ஐ'காரமாகத் திரியும் என்ற நன்னூல் சூத்திர விதிப்படி 'உமை' என்றாயிற்று.

8. **எழுமுனிவர்**:—

அத்ரி, வசிட்டர், கச்யபர், கௌதமர், பரத்துவாசர், விசுவாமித்திரர், ஜமதக்னி.

அத்ரி:- பிரமன் கண்ணில் தோன்றியவர்; இவர் ஆச்சிரமத்தில் இராமபிரான் தங்கியிருந்து காடுசென்றார். இருக்குவேதத்தின் ஐந்தாவது காண்டத்தின் கர்த்தா; இவர் மனைவி அநசூயை; இவரது மகனார் தத்தாத்திரேயர்.

வசிட்டர்:- பிரமனின் மானஸ புத்திரர்களில் ஒருவர்; இவரது மனைவி அருந்ததி; வைவச்சுத மன்வந்திரத்தில் சப்த ரிஷிகளில் ஒருவராக இருந்தவர்; சூரிய வம்ச அரசர்களுக்குக் குரு.

கச்யபர்:- மரீசி முனிவரின் குமாரர். இவர் தக்ஷபிரஜாபதியின் பெண்கள் பதின்மூவரைத் திருமணம் செய்துகொண்டார்.

கௌதமர்:- தீர்க்கதம முனிவருடைய குமாரர். **மனைவி**: அகலிகை. கர்ணனுக்கும் அருச்சுனனுக்கும் நேர்ந்த யுத்தத்தைத் தடுத்தவர்; இவர் கங்கையில் நீராடின காரணத்தால் கங்கை கௌதமி என்ற பெயரை அடைந்தனள்.

பரத்துவாசர்:- இவரது தந்தை உதத்தியர். தாய், மமதை. இவருடைய இருப்பிடம் சிருங்கிபேரம்; இவருடைய ஆச்சிரமத்தில் இராமன் வனவாசம் வந்தபோது சிலநாட்கள் தங்கியிருந்தான்.

விசுவாமித்திரர்:- காதி என்பவருடைய புத்திரர். அரிச்சந்திரனைப் பொய் பேசும்படி செய்கிறேன் என்று தேவேந்திர சபையில் சபதம் செய்து அரிச்சந்திரனுக்குப் பல துன்பங்களைக் கொடுத்தவர்: இராமனுக்குப் பலை, அதிபலை என்ற மந்திரங்களை உபதேசித்தவர்; இருக்குவேதத்தில் மூன்றுவது காண்டத்தில் அடங்கியிருக்கின்ற கீதங்களுக்குக் கர்த்தா. எல்லோருக்கும் மித்திரரானபடியால் இப்பெயர் பெற்றார்.

ஜமதக்னி:- இருசீகருக்குக் காதியின் குமாரியாகிய சத்யவதியிடம் பிறந்தவர்; இரேணுகையை மணந்தவர்; இவரது குமாரர் பரசுராமர்;' கார்த்தவீரியனுடைய குமாரர்களுள் சிலர் இவரைக் கொன்றனர்.

9. **ஔவையார்**:—

தமிழகத்தில் ஔவையார் என்ற பெண்பாற் புலவர் இருவர் இருந்தனர் என்று தெரிகிறது.

சங்ககாலப் பெண்பாற் புலவர் ஔவையார்:- இவர் அறிவும் ஆற்றலும், புலமையும், புகழும் மிகுந்து விளங்கியவர். இவர் பரணர் காலத்தில் வாழ்ந்தவர், இவர்தம் வாழ்க்கையில் அதியமான் நெடுமானஞ்சி என்னும் வள்ளலிடம் பேரன்புகொண்டு அவனைப் பாராட்டியுள்ளார். இவரிடம் அதியமான் செலுத்திய அன்பு ஒப்பற்றதாகும். அரிதில் பெற்ற நெல்லிக்கனியைத் தான் உண்ணுமல் ஔவையாருக்குக் கொடுத்து உண்ணச் செய்ததிலிருந்து அறிந்துகொள்ளலாம். உயர்வு நவிற்சியாகவும், வஞ்சப் புகழ்ச்சியாகவும் இவர்பாடியுள்ள பாட்டுக்கள் பொருட்சுவை மிகுந்தவை.

பிற்கால ஔவையார்:- ஔவையாரைப்பற்றிப் பலகதைகள் வழங்குகின்றன. திருவள்ளுவர் சரித்திரத்தை ஆதாரமாகக் கொண்டு ஔவையார் ஆதி, பகவன் என்பவர்களுக்குப் பிறந்தவர்களுள் மூத்தவர். இவர் பாடினதாகத் தனிப்பாடல் திரட்டில் உள்ள பாடல்களைத்தவிர ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய நீதிநூல்கள் உள்ளன. இவர் பெயரால் வழங்கும் கல்வியொழுக்கம், நன்னூற்கோவை, பந்தனந்தாதி, அருந்தமிழ்மாலை, தரிசனப்பத்து முதலிய வேறுநூல்களும் உள்ளன.

10. **காருண்டன்:—**

மிருகண்டு முனிவரின் சீடர்களில் ஒருவன். அருச்சனைக்கு மலர்கொண்டுவர நந்தவனத்திற்குச் சென்றான். அங்கு அரக்கியர்கள் நந்தவனத்தை அழிப்பதைக் கண்டு வேறிடம் சென்று மலர் எடுத்துக் கொண்டு வந்தான். மிருகண்டு முனிவர் நேரங் கடந்து வந்ததால் சினமடைந்து ''நீ விரைவில் வராமல் அங்கு நடந்தவைகளைப் பார்த்துக்கொண்டிருந்தமையால் வஞ்சனை என்னும் அரக்கிக்குப் பிள்ளையாய்ப் பிறக்கக் கடவாய்'' என்று சபித்தார். அந்தப் பிரம்மசாரி வஞ்சனை என்னும் அரக்கியின் மகனாய்ப் பிறந்தான். சமுத்திர ஜலத்தைக் குடித்த மேகம் போல அவன் தேகம் இருந்தபடியால் காருண்டன் என்ற பெயர் பெற்றான்.

11. **கிரவுஞ்சமலை:—**

கிரவுஞ்சத் தீவிலுள்ள ஒருமலை. இது முருகப்பெருமான் வேலால் பிளக்கப்பட்டது.

கிரவுஞ்சன் என்னும் அசுரன் அகத்தியர் பொதியமலைக்கு வரும்வழியில் சிகரங்களைக்கொண்ட ஒருமலையாக ஆகித் தன்னுள் செல்லும் ஒருவழியைக்காட்டினான். அகத்தியர் அதுகண்டு வியப்புற்று ''இதோ இம்மலையில் வழியின் நடுவில் ஒருவழி இருக்கிறது. இதன்வழியே செல்வேன் என்றுபோக, அவன் மாயையினால் அவருக்குப் பலதொல்லைகளைக் கொடுக்கவே அகத்தியர் ஞானத்தால் இது அரக்கர்களின் கொடிய செயலே என்று அறிந்து சினம் கொண்டு கைகளைத்தட்டிச்சிரித்து, ''அறிவற்ற அரக்கனே! நீ உன் பழைய வடிவை விட்டுவிட்டு மலைவடிவாக இங்கே நில்'' என்று சாபமிட்டார். அன்றுமுதல் கிரவுஞ்சன் என்னும் அரக்கன் மலை வடிவாய் நின்றான்.

12. **குலபதி:—** சுந்தரபாண்டியன் மகள். தெய்வீகராசன் மனைவி.

13. **சங்கரர்:—**
பரமசிவனுக்கு ஒருபெயர். சம்-மங்களம். கரோதி-செய்கிறவன். சம் கரோதி இதி-சங்கரர். இவரை வழிபடு கின்றவர்களுக்குச் சீக்கிரத்தில் அருள்பாலிப்பவர். இவர் 'ஆசுதோஷி!'. சீக்கிரத்தில் சந்தோஷமடைபவன் என்றுபொருள்.

14. **சண்டேசுரர்:—** சோழநாட்டில் திருச்சேய்ஞ்ஞலூரில் அந்தணர் குலத்தில் எச்ச தத்தனுக்கு மகனாகத் தோன்றி இளமையி லேயே சிவபக்தியில் ஈடுபட்டுப் பசுக்களிடம் அன்புகொண்டு அவைகளைத்தாமே மேய்த்துக்கொண்டு வரும்பொழுது ஆத்தி மரத்தின்கீழ் மணலால் சிவலிங்கம் அமைத்துப் பசும்பாலைத் தினந்தோறும் அபிடேகம் செய்ய, அவர்செயலைக் கண்டவர்கள் அவர் பெற்றோரிடம் போய்க்கூற, அவர் தகப்பனார் வந்து விசார சருமனின் செயலைக்கண்டு சினம்கொண்டு காலால் பாற்குடங்களை இடற, அதுகண்டு விசாரசருமர் சினங்கொண்டு தந்தை என்றும் பாராமல் பூசைக்கு இடையூறு ஏற்பட்டதே என்று நினைத்து அங்கிருந்த கோலை எடுக்க, அது மழுப்படையாக மாற, அதனால் தந்தையின் காலை வெட்ட எச்சதத்தன் கீழே விழுந்து இறக்க, விசாரசருமர் சிவபூசையை விடாமல் செய்ய, சிவபெருமான் உமாதேவியாருடன் காட்சிகொடுக்க, அவர் கைகூப்பி வணங்கினார். சிவபெருமான் விசாரசருமரைக் திருக்கரங்களால் எடுத்து நம் பொருட்டாக நீ உன் தந்தையின் கால்களை வெட்டினாய். அதனால் நாம் இனி உனக்குத் தந்தையானோம்'' என்று கூறி விசாரசருமரைத் திருத்தொண்டர்களுக்கெல்லாம் தலைவராக்கி, நாம் உண்ட பரிகலம், உடுக்கும் உடை, சூடும்மாலை அணிகலம் முதலிய அனைத்தும் உமக்கே உரிமை ஆகுக, அதன் பொருட்டு உனக்குச் சண்டேசுவரர் பதத்தைத் தந்தோம்'' என்று அருளித்தம் சடையிலுள்ள மாலையை அவருக்குச் சூட்டினார்.

ஒவ்வொரு சிவன்கோயிலிலும் அபிஷேக ஜலம் விழும் இடத் திற்கு (கோமுகி) எதிரில் சண்டிகேசுவரரைப் பிரதிஷ்டை செய்ய வேண்டும். சிவ நிர்மால்யமே இவருக்கு நிவேதநம். எப்பொழுதும் சிவத்தியாநம் செய்து கொண்டிருப்பவர்; பக்தர்களது பக்திக்கேற்றவாறு பலனைக் கொடுப்பவரும் இவரே; இவரது தியாநத்தைக் கலைக்காமல் மெதுவாகக் கையைத்தட்டிச் சேவையின் பலத்தைத்தாரும் எனக் கேட்கவேண்டும்.

15. **சனற்குமாரர்:—** பிரமனின் புத்திரர். விஷ்ணுவின் அம் சம்; இவர் சதசிருங்கமலையில் யோகத்தில் இருக்கையில் சிவபெருமான் ரிஷபாரூடராய்க் காட்சி கொடுக்க இவர் அசிரத்தை யாக இருந்ததால் நந்திதேவர் ஒட்டகமாகச் சபித்தார். சிவ

பூசை செய்து சாப நிவர்த்தி பெற்ருர். இவர் செய்த நூலுக்குச்சனற்குமார சங்கிதை என்று பெயர்.

16. **சுந்தரர்**:—

திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் ஆதிசைவ மறையவர் குலத்தில் தோன்றியவர். தந்தையார் பெயர்: சடையனுர். தாயார் பெயர் இசைஞானியார். பிள்ளைத்திருநாமம்: நம்பி ஆரூரர். சிவபெருமான் வலிய வந்து தடுத்து ஆட்கொண்டார். சுந்தரர் ''சுவாமி! தேவரீரது கருணைக்கு என்செயவல்லேன்'' என்று துதிக்க, இறைவன் 'நீ முன் நம்மைப் பித்தனென்று வைதாய் , நமக்கு விரும்பிச் செய்யும் அருச்சனை பாட்டேயாகும். ''ஆதலால் பித்தன்என்றே நம்மைப்பாடு'! என்றுகூற ''பித்தா பிறைசூடி'' என்னும் பதிகம்பாடித் துதித்தார். அவிநாசியில் முதலைவாய்ப் பட்ட பிள்ளையை ''எற்ருன் மறக்கேன்'' என்ற பதிகத்தைப்பாடி இறந்த பிள்ளையைப் பிழைப்பித்தார்.

இவரது பாடல்கள் ஏழாந்திருமுறை.

பாடல்களின் எண்ணிக்கை 1026.

17. **சூரபத்மன்**:—மாயை காசியபரை அடைந்து சூரபத்மனைப் பெற்ருள். மாயையிடம் உபதேசம் பெற்றுச் செயற்கரிய வேள்வியினைச்செய்தும் சிவபெருமான் தரிசனம் தராததால் தன் சரீரத்தையே தியாகம் செய்து ஈசன் அருளைப்பெற்றுத் தேவர்களைத் தன் வலிமையினுல் துன்புறுத்த, அவர்கள் அவனைவெல்ல முடியாமல் முருகப்பெருமானிடம் முறையிட, அவர் அவனுடன் போரிட, சூரபத்மன் மாமரவுருவமாக வந்து போரிட்டான். முருகப்பெருமான் வேலால் இரண்டாகப் பிளக்க மயிலும் சேவலும் ஆயினன். முருகப்பெருமான் மயிலைவாகனமாகவும், சேவலைக் கொடியாகவும் கொண்டார். இந்தச் சூரபத்மன் முற்பிறப்பில் சிவகணத்தில் ஒருவன். முருகப்பெருமானுல் சாபமேற்று மீண்டும் அவரது வேலால் உயிர்நீங்கி அநுக்கிரகம் அடையப்பெற்றவன்.

18. **தக்கன்**:—

பிரமனது மானச புத்திரர்களில் ஒருவன். இவன் பரமசிவனைக் குறித்துத் தவஞ்செய்து பார்வதியை மகளாகப் பெற்று அவளுக்குத் தாக்ஷாயணி என்னும் பெயரிட்டுப் பரமசிவனுக்கே திருமணம் செய்து கொடுத்தான். ஒருசமயம் தன் பெண்ணைப் பார்க்க வேண்டுமென்று கயிலைக்குச்செல்ல, அங்குள்ள பூதகணங்கள் தடுக்கக் கோபமடைந்து சிவனை அன்றுமுதல் நிந்திக்க ஆரம்பித்தான். அவன் ஒரு யாகம் செய்ய ஏற்பாடுசெய்து சிவனையும் தன் மகள் தாக்ஷாயணியையும் அழைக்காமல் இருக்கவும், தாக்ஷா

யணி தன் தகப்பனர் செய்யும் யாகத்திற்குச் செல்ல வேண்டும் என்று பரமசிவனிடம் கேட்க, அவர் அழைப்பு வரவில்லை.போக வேண்டாம் என்று தடுக்க, அவள் சிவனை வற்புறுத்தி அனுமதி பெற்றுக்கொண்டுவர, தக்கன் அவளை மதிக்காமலும், வா என்று சொல்லாமலும் இருக்கவே, தாக்ஷாயணி அவமானந்தாங்காமல் அத்தீயிலேயே உயிரைவிட, பரமசிவன் சினமடைந்து வீரபத்திரரை அனுப்பித் தக்கனை அழித்தார்.

19. **திருஞான சம்பந்தர்**:— சோழநாட்டில் சீகாழிப்பதியில் கவுணியர் கோத்திரத்தில் தோன்றியவர்; தந்தை: சிவபாத விருதயர்; தாயார்: பகவதி. மூன்றும் பிராயத்திலேயே சிவனருள் பெற்றவர். முதல் மூன்று திருமுறை இவரது பாடல்கள். எல்லாவுலகத்திற்கும் அம்மையப்பராகிய இறைவியும்இறைவனும் ஆண்டருளிய காரணத்தினுல் ஆளுடைய பிள்ளையார் என்றும், ஒருவருக்கும் கிட்டாத ஞானத்தோடு சம்பந்தம் பெற்றமையினுல் திருஞான சம்பந்தர் என்றும் அழைக்கப்பெற்ருர். பாண்டியனுடைய வெப்பு நோயோடு கூனையும் போக்கியருளினுர். சமணர்களோடு வாதிட்டுவென்ருர். மயிலையில் எலும்பைப் பூம்பாவையாக்கி அருளினுர்.

20. **திருநாவுக்கரசர்**:— திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் வேளாளர் மரபிலே குறுக்கையர் குடியில் தோன்றியவர். தந்தை: புகழனுர். தாயார்: மாதினியார். தமக்கையார்: திலகவதியார். தந்தையார் இட்டபெயர்: மருள்நீக்கியார். சைவத்தைவிட்டுச் சமணத்தில் சேர்ந்ததும் தருமசேனர் என்ற பெயரைப்பெற்ருர்.

அவருக்குச் சூலைநோய் உண்டாயிற்று. அந்நோயைத் தாங்க முடியாமல் தமக்கையாரிடம் வந்து முறையிட, திலகவதியார் அவருக்குத் திருவைந்தெழுத்து ஓதி விபூதியைக் கொடுக்கச் சூலைநோய் தீர்ந்தது. உடனே பாடும் அருளினையும் பெற்ருர். சிவபெருமான் ''நாவுக்கரசு'' என்னும் நாமத்தைச் சூட்டினுர். திருஞானசம்பந்தரால் இடப்பட்டபெயர்: **அப்பர்**.

21. **திருமலை நாயகன்**:— இந்நூலின் ஆசிரியர். இவருடைய புதல்வர் பரஞ்சோதி என்பவர்; சிதம்பரப்பாட்டியல் என்ற இலக்கணநூல் இயற்றியுள்ளார். புராணத் திருமலை நாதர் என்றும் வழங்கப்பெறுகிருர். இவர் திருமுறைகளிலும், பழைய தமிழ் நூல்களிலும், தல புராணங்களிலும், சைவ சாத்திரங்களிலும் பயிற்சியுடையவர். சொக்கநாதர் உலா என்ற ஒரு உலாநூலும் இவர் இயற்றியுள்ளார். இவர் அருணகிரிப்புராணம் என்ற நூலையும் இயற்றியுள்ளார்.

22. துரியோதனன்:—
இவன் திருதராட்டிரனுக்குக் காந்தாரியிடம் பிறந்த குமாரர்களில் மூத்தவன். அத்தினபுரத்திற்கு அரசனாக இருந்தவன். இவனது முன்பிறப்பு அரக்கன் என்று கூறுவர். பாரதப்போரில் வீமன் இவனைக் கொன்றான்.

23. தெய்வீகராசன்:—
நடுநாட்டை ஆண்ட அரசர்களுள் ஒருவன் இவன். இவன் திருமணத்தின்போது ஔவையார் பாலாறு, செய்யாறு, பெண்ணையாறு இம்மூன்றினையும் முறையே பால், நெய், வெண்ணெயாக வரும்படி ஏவினார். சிவபெருமான் தனித்திருக்கையில் பர்வதராஜன் காணச் சென்று சாபம் அடைந்து குகமுனிவர் யாகத்தில் தோன்றித் தெய்வீகராசன் என்று பெயர் பெற்றான். இவன் காருண்டன், வல்லூரன் என்னும் இரண்டு அசுரர்களைக் கொன்று பாண்டியன் மகளாகிய காஞ்சனமாலையை மணந்து கொண்டான்.

24. நைமிசாரணியம்:—
இமயமலைக்கருகிலுள்ள ஒரு வனம். முனிவர்கள் பிரமனிடம் தவம் இயற்றுவதற்குத் தகுந்த இடம் ஒன்றைக்காட்ட வேண்டும் என்று கேட்க, பிரமன் தருப்பையொன்றை எடுத்து நேமி போல் செய்து உருட்டி, ''நீங்கள் அதன்பின்னே செல்லுங்கள்; அது எங்கே நிற்கின்றதோ அந்த இடமே தவம் செய்வதற்குத் தகுந்த இடம்'' என்று கூறினார். அந்தநேமி நின்ற இடத்திற்கு நைமிசாரணியம் என்ற பெயர் ஏற்பட்டது.

25. பதினெண்கணங்கள்:—
அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பிசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசியர், போகபூமியர்.

26. பதுமகோமளை:— மயனுடைய மகள். சூரபத்மனின் மனைவி; பானுகோபனின் தாய்.

27. பரீட்சித்து:— அபிமன்யுவிற்கு உத்தரையிடம் பிறந்தவர். அசுவத்தாமர் பாண்டவர்களுடைய வமிசத்தை அழிக்கக் கணை செலுத்தினார். அது உத்தரையின் வயிற்றிலிருக்கும் கருவை அழிக்கச் சென்றது. கண்ணன் அதனை அதட்டி விலக்கினார். திருமாலுடைய திருவடி ஸ்பரிசம் பட்டபடியால் பரீட்சித்து என்ற பெயரைப் பெற்றார். இவர் பிறந்தவுடன் நான்கு பக்கங்

களையும் பார்த்தமையால் பரீட்சித்து என்ற பெயர் வந்தது என்பர். தருமபுத்திரர் இவருக்குப்பட்டம் சூட்டிவிட்டுச் சுவர்க்கம் சென்றார். தருமநெறி தவறாமல் அரசாண்டவர். இவர் ஒருநாள் வேட்டைக்குச் சென்ற சமயத்தில் ஒரு மிருகத்தைப் பின் தொடர்ந்து செல்லுகையில் அது மறையவே, அங்குத்தவம் செய்து கொண்டிருந்த சமீக முனிவரைக் கண்டுகேட்க, அவர் ஒன்றும் சொல்லாமல் இருக்கவே அவ்விடம் இறந்து கிடந்த பாம்பையெடுத்து அவரது கழுத்தில் போட்டுவிட்டுச் செல்ல, அம்முனிவரின் குமாரர் வந்து பார்த்து ''இவ்வாறு செய்தவன். இன்று ஏழாம்நாள் தக்ஷனால் கடிக்கப்பட்டு இறக்கக் கடவன்'' என்று சாபமிட்டார். இதனையறிந்த பரீட்சித்து ஏழு நாட்களுக்குள் பாகவதம் முழுவதையும் சுகர் சொல்லக் கேட்டு, ஏழாம்நாள் தக்ஷனால் கடிக்கப்பட்டு இறந்தார். இவரது மகன் ஜனமேசயன்.

28. **பிரமபுரி:—**
வேத ஒலிகளால் நிறைந்ததும், ஓமப்புகைகள் நிறைந்ததும் நாரதர் முதலான மகரிஷிகள் இருக்கின்றதுமான ஒரு பட்டணம்.

29. **பூதத்தாழ்வார்:—** திருமாலின் கதையின் அம்சம். மகாபலிபுரத்தில் குருக்கத்தி மலரில் தோன்றியவர், இவரது பாடல்கள் இரண்டாந்திருவந்தாதி; முதலாழ்வார்களுள் ஒருவர்.

30. **பேயாழ்வார்:—** திருமயிலையில் உள்ள மாதவப்பெருமாள் கோயிலுக்கு அண்மையில் உள்ள ஒரு கிணற்றில் மலர்ந்திருந்த செவ்வல்லி மலரில் தோன்றியவர். மூன்றாவது திருவந்தாதி பாடியவர்; முதலாழ்வார்களில் ஒருவர்.

31. **பொய்கையாழ்வார்:—** இவர் திருமாலினது பாஞ்சசன்யத்தின் அம்சமாகக் காஞ்சியில் ஒரு தாமரைக்குளத்தில் தோன்றியவர். திருமாலினிடம் மிகுந்த அன்புடையவர்; இவர் பாடிய பாடல்கள் நூறு; அதற்கு முதல் திருவந்தாதி என்று பெயர். முதலாழ்வார்களில் ஒருவர்.

32. **மகேந்திரபுரி:—**
சூரபத்மனின் தலைநகரம். விசுவகருமாவினால் நிருமிக்கப்பட்டது. சூரபத்மனுக்குப்பின் கடல் கொள்ளப்பட்டது.

33. **மயன்:—**
திதிபுத்திரன். காண்டவவனத்திலிருந்த அசுரத்தச்சன். அருச்சுனன் அருளால் உயிர் பிழைத்தவன். இவனுடைய மகள்

பதுமகோமளை; தருமபுத்திரருக்குச் சபை நிருமித்துக் கொடுத்தவன்.

34. **மாயை**:—

விசித்திரமான செயல்களைச் செய்கின்றவள்: பொருந்தாததைப் பொருந்த வைப்பவள்; இல்லாததை இருக்கிறதாகச் செய்பவள் பரம் பொருளின் சக்திமாயை; உலகத்தைத் தோற்றுவிப்பதும், ஒடுக்குவதும், மறைப்பதும் அதற்கு நிமித்த காரணமாகவும், உபாதான காரணமாகவும் (முதற்காரணம்) உள்ள பரம்பொருளை மறைத்து உலகாகக் காட்டி மறைப்பதும் அவளது விளையாடல்.

35. **மிருகண்டு**:—

மார்க்கண்டேய முனிவரின் தந்தை. இவர் குச்சகருடைய மகனுவர்; இவர் தவஞ்செய்து கொண்டிருக்கையில் விலங்குகள் தம்முடைய உடல் தினவைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு இவருடைய உடலைத் தறியென்று நினைத்துத் தேய்த்துக் கொண்டமையால் இவருக்கு இப்பெயர் வந்ததுபோலும்.

36. **முத்தழல்**:— காருகபத்தியம், தக்ஷிணுக்கினி, ஆகவனீயம்.

37. **யுதிரட்டிரர்**:— குந்திதேவியிடம் யமனுடைய மந்திர சக்தியால் பிறந்தவர். சௌநகர் உபதேசித்த மந்திரத்தால் சூரியனிடமிருந்து அக்ஷய பாத்திரம் பெற்றவர். இவர் சுவர்க்கம் செல்லுகையில் யமன் நாயுருக்கொண்டு பின் தொடர்ந்து வருவதைக்கண்டு இந்த நாய்க்கும் நற்பதவி அளித்தால்தான் நான் விமானம் ஏறுவேன் என்று இந்திரனிடம் கூற யமன் தன்னுருக் கொண்டு வாழ்த்தினுன்.

38. **வடவாமுகாக்கினி**:— கடலின் வடப்பக்கத்தில் இருக்கும் ஊழித்தீ.

சூரிய மண்டலத்தைத் தேவர்கள் சாணையில் பிடிக்கையில் தெறித்த தீப்பொறிகளை விசுவகர்மன் சேர்த்துக் கடனீரை யடக்கக் கடலில் விட்டனன். (விரத சூடாமணி). பெண் குதிரை முகத்தின் வடிவோடு கடற்குள் இருந்துகொண்டு யுகாந்தத்தில் மேலே கிளம்பி உலகத்தை எரித்து விடுவதாகக் கருதப்படும் தீ.

39. **வாயுக்கடவுள்**:—

காசிபர் குமாரர்களுள் ஒருவன். பலநாட்கள் தவஞ்செய்து வாயுபதம் பெற்றவன்; வடமேற்றிசைக்கு இறைவன்; இவனது

மனைவி அஞ்சனை. இவனது வாகனம் மான்; சிவாக்கினையால் சிவமூர்த்தியின் நெற்றி விழியில் தோன்றிய ஆறு தீப்பொறிகளைத் தாங்கிச்சென்று கங்கையில் வைத்தவன்.

40. **வானெழுந்த சரீரமிலா மாற்றம்**:— அசரீரி.

41. **விருத்தாசலம்**:—

கடலூருக்குத் தென்மேற்கே 35 கல் தொலைவில் இருக்கிறது. சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் பரவையாரின் பொருட்டுப் பொன் தரும்படி சிவபெருமானிடம் வேண்டின தலம்.

விருத்தகாசி என்று கூறப்படும் விசேஷத்தன்மையுடைய தலம். இங்கு இறக்கும் பிராணிகளுக்கெல்லாம் உமா தேவியார் தம் ஆடையால் வீச, சிவபெருமான் பஞ்சாக்கரவுபதேசம் செய்து பிராணிகளைத் தமது உருவாக்கும் தலம்; காசியினும் சிறந்தது.

எலவானுசூர் எனவழங்கும் இறைவாச நல்லூர்ப்
பற்றிய விளக்கக் குறிப்பு :

இச்சிவதலம் தென்னார்க்காடு மாவட்டம் உளுந்தூர்ப் பேட்டை வட்டத்தில் அமைந்துள்ளது. திருக்கோவலூரிலிருந்து ஆசனூர் செல்லும் பெருவழியில் 30 கி.மீ. தொலைவில் இஃது உள்ளது. உளுந்தூர்ப் பேட்டையிலிருந்து கள்ளக் குறிச்சி செல்லும் பெருவழியில் மேற்குத் திசை நோக்கி 11. கி.மீட்டர் தொலைவு சென்றும் இத்தலத்தை அடையலாம்.

முதலாம் இராசராசன் காலமாகிய (கி.பி. 985—1014) கி.பி. பத்தாம் நூற்றுண்டிற்கு முன்பே தமிழகத்தின் தொன்மைத் தலங்களுள் ஒன்றுகத் திகழ்ந்தது இத்தலம்.

இறையானரையூர் 'இறைசை' என மருவியது. இவ்வூர்த் தலபுராணம் இறைசைப் புராணம் என்பதையே பெயராகக் கொண்டுள்ளது. (பிற்காலத்தில் இறைவாச நல்லூர் என்பது இத்தலத்திற்கு மறு பெயராக வழங்கலாயிற்று.) நாளடைவில் இறைவாச நல்லூர் என்பது மக்கள் நாவில் சிறிது சிறிதாக மருவி இலவானுசூர் என்றுகியது. இலவானுசூர் இது போழ்து எலவானுசூர் எனப் பொது மக்களால் குறிக்கப் பெறுகின்றது.

தெய்வீக மன்னன் என்பான் இப்பெருமானுக்கு முதன் முறையாகக் கோவில் எடுப்பித்தான் எனத் தெரிகிறது. பிற் காலத்தில் சோழ மன்னர்களுட் பலரும், பாண்டிய மன்னர் களுட் சிலரும், விசய நகர மன்னர்களுட் சிலரும், பிற சிற்றர சர்கள் சிலரும் இக்கோவில் வளர்ச்சிக்குக் காரணர்களாயினர்.

கோவில் அமைப்பு

இக்கோவில் மாடக்கோவில் ஆகும். மாடக் கோவிலின் அமைப்புக்குரிய இலக்கணம், யானை ஏற முடியாத மேடைப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு கட்டப் பெறுவதாகும். மேலும் சிற்ப வேலைப்பாடுகள் செறிந்த மாடிகள் கொண்டதாக வும் மாடக்கோவில் அமைதல் வேண்டும். இவ்வகையில் சிவாகம இலக்கண முறைப்படி இத்திருக்கோவில் அமைந்துள்ளது.

இத்தலத்தின் மூலவர் சந்நிதி மேற்கு நோக்கியது. அம்பாள் சந்நிதி கிழக்கு நோக்கியது. அம்பாள் கோவில் தனியே இடம் பெற்றுள்ளது.

ஆறு அடுக்குகள் கொண்ட கோபுரம் கோவிலின் முகப்பில் அணி செய்கின்றது. கோபுரத்துக்கும் கோவிற் கட்டடத்திற்கும் இடையே நூற்றுக்கால் மண்டபம் நிறுவப் பெற்றுள்ளது. இது போழ்து அம்மண்டபம் திருமணக் கூடமாகப் பயன் படுத்தப் பெறுகிறது.

கோவிற் கட்டடத்தின் கீழ்ப்பாதி கருங்கல்லும், மேற்பாதி செங்கல்லும் கொண்டு அமைக்கப் பட்டுள்ளது.

அம்பாள் சந்நிதிக்கும் நூற்றுக்கால் மண்டபத்திற்கும் நடுவண் தலத்திருத் தருவாகிய மகிழமரம் செழுமையாகத் திகழ்கின்றது.

கோவிலுக்கும் கோபுரத்திற்கும் இடையே இன்றுள்ள கொடிமரம் 1893ல் குஞ்சரம் சபாபதி உடையார் காலத்தில் நிறுவப்பட்டதாகச் செவிவழிச் செய்தியால் தெரியலாகின்றது.

இக்கோவிலின் நான்கு எல்லைகளிலும் துர்க்கை கோவில்கள் தோற்றமளிக்கின்றன.

இக்கோவிலின் பெருவிழா பங்குனித் திங்களில் பல்லாயிரவர் கண்டு மகிழும் வண்ணம் மிகு சிறப்புடன் நடைபெறுவது மரபு. ஆனல் இந்நாளில் அவ்விழா அத்துணைச் சிறப்பாக நடை பெற வில்லை. கோவிலும் செம்மையான முறையில் போற்றப் பெறவு மில்லை.

இக்கோவிலின் மாடியில் அலங்கார மண்டபம் எழில்பெற அமைந்துள்ளது. இம்மண்டபத்தின் மேல் விட்டப் பகுதியில் வண்ண ஓவியங்கள் வரையப் பெற்றுள்ளன. அவ்வண்ணங்கள் இன்றும் நிறம் மங்காமல் சிற்சில இடங்களில் காட்சி அளிக்கின் றன.

சிவபெருமான் ஆலவாயிலில் நிகழ்த்திய திருவிளையாடல்கள் அறுபத்து நான்கும் வரலாற்றுக் குறிப்பு விளங்குமாறு தெளிவுறத் தீட்டப் பெற்றுள்ளன. இம்மண்டபக் கற்றூண்களில் இத்தல வரலாற்றைத் தெரிவிக்கும் சிற்பங்கள் பல மிளிர்கின்றன.

கருவறைக்கெதிரில் அடுத்தடுத்து மூன்று நந்திகளின் சிலைகள் அமைந்துள்ளன. இவை இத்தல வரலாற்றின்படி இறைவனுக்கு எதிர்முக நிலையில் இருப்புக் கொண்டுள்ளன.

குமாரமங்கலம், பரமேசுரமங்கலம், புத்தமங்கலம், வீரமங்கலம் என்னும் தலங்கள் நான்கிற்கிடையே இறைவாச நல்லூர் எனப்படும் இறையானரையூர் சிவதலம் அமைந்துள்ளது.

சைவ சமய குரவர் நால்வர்க்கும் அன்பர்கள் வணங்குவதற்கு இணக்கமாகப் பீடம் இயற்றப் பெற்றுள்ளது. மாடியில் இரண்டாம் திருச்சுற்றில் தண்டபாணி சுவாமி (முருகப் பெருமான்) உருவச்சிலை நிறுவப் பெற்றுள்ளது.

இக்கோவிலுக்கு ஐந்து திருச்சுற்றுகள் (பிரகாரங்கள்) அமைந்துள்ளன. பஞ்சப் பிரகாரக் கோவில் என்பர். கோவிலின் பரப்பு, சென்னையில் உள்ள மயிலாப்பூர் கபாலீசுரர் கோவிலின் பரப்பைப் போல் இரண்டு பங்கு இருக்கலாம் எனத்தெரிகிறது. இக்கோவிலின் அமைப்பு குன்றின்மேல் தொடர்கின்றது. மூலவராகக் கருதப்படும் இலிங்கம் குன்றின்மீது அமைந்துள்ள கோவிற் பகுதியில் நிறுவப்பெற்றுள்ளது.

பெருமான் திருநாமம்

முதலாம் இராசராசன் கல்வெட்டு ஒன்றில் **அமர புயங்கர தேவர்** என்று இறைவன் திருநாமம் குறிக்கப்பெற்றுள்ளது. இத்திருப்பெயரே இறைவனுக்கு மிகப் பழைமையான பெயராகக் கருத வேண்டியுள்ளது. முதலாம் இராசராசனுக்குப் பிற்பட்ட சோழர் தம் கல்வெட்டுக்களில் இறைவன் திருப்பெயர் 'ஊர்பாகங் கொண்டருளிய மகாதேவர்' எனக் காணப்படுகிறது. 'ஊர்பாகங் கொண்டருளிய நாயனுர்'—எனவும் சில கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

மூல இலிங்கத்தையன்றி வேறு சில இலிங்கங்கள் பிறபெயர்களால் மூன்றும் திருச்சுற்றில் காட்சி தருகின்றன. மூல இலிங்கத்தின் அடிப்பகுதி (பீடம்) வட்டமாக இன்றிச் சதுரமாக உள்ளது. மேல்ப்குதி (இலிங்கம்) சுயம்பு என்பர். கீழ்ப்பகுதி பின்னர் சேர்க்கப்பட்டதாகக் கூறுவர்.

மூன்றும் திருச்சுற்றில் நால்வர் சந்நிதி, மகாகணபதி, வல்லப கணபதி, ஆத்மலிங்கம் ஆகிய மூன்றும் அடுத்தடுத்துள்ளன. அதையடுத்துச் சோமாஸ்கந்தர் சந்நிதி உள்ளது. அதை அடுத்து முருகன் சந்நிதி.

வல்லப கணபதி சிற்பத்தை யொட்டி அகத்திய லிங்கம், இரணலிங்கேசுரர், காசிவிசுவநாதர், விசாலாட்சி, நடராசர் சந்நிதிகள் நிலவுகின்றன..

அம்பிகை

அம்பிகையின் திருநாமம் ஸ்ரீ பிருஹந் நாயகி என்பர். அம்பிகையின் கோவில் மட்டும் அண்மையில் சீர் திருத்திக் கட்டப்

பெற்று மிகத் தூய்மையாக உள்ளது. மூலவருக்குத் தென் மேற்கு மூலேயில் தனிக் கோயிலாகக் கிழக்கு முகமாக அம்பாள் கோவில் அமைந்துள்ளது.

கல்வெட்டுக்கள்

இக்கோவிலில் ஏராளமான கல்வெட்டுக்கள் காணப்படு கின்றன. அண்மையில் (1976) புதுவை நகரைச் சேர்ந்த புலவர் **சு. குப்புசாமி** என்பவரால் அக்கல்வெட்டுக்கள் அனைத்தும் படி எடுக்கப்பெற்றுப் புத்தகமாக வெளிவந்துள்ளது. அதில் முதலாம் இராசராசன் முதலாகக் கொப்பண்ண உடையார் இறுதியாக இருபத்தெட்டு அரசர்களின் கல்வெட்டுக்கள் விபரங் களுடன் கூறப்பெற்றுள்ளன. அவர் நூலில் 80 கல்வெட்டுக்களும் அவற்றின் ஆண்டுகளும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. 'வரலாற்று வடிவங்கள்' என்னும் பெயருடைய அந்நூல் இத் தலத்தின் வரலாற்றை மேலும் அறிய பயன்படும்.

இத்திருத்தல ஊர் பற்றிய குறிப்புக்கள்

இறைவாச நல்லூர் (எலவானுசூர்) நகரம் அன்று பேரூர் எனத் தகும் அளவில் இருந்து இன்று சிற்றூராகியது. இவ்வூரில் அரசினர் உயர்நிலைப்பள்ளி ஒன்றுண்டு. குடிமக்களுள் முகமதி யர்களே இதுபோழ்து மிகுதியாக உள்ளனர்.

இவ்வூர், குறிஞ்சி, முல்லை, மருதம் என்னும் முப்பானிலங் களையும் சூழலாகப் பெற்றுள்ளது.

இவ்வூர்ச் சிவன் கோவிலுக்குக் கீழ்பால் ஒரு மலையின்மீது ஈஸ்வர சஞ்சீவிராயர் (ஆஞ்சநேயர்) உருவம் 15 அடி உயர அளவில் செதுக்கப்பட்டுள்ளது. அம்மலையின் அருகில் ஒருவேலி நில அளவில் குளம் ஒன்று வெட்டப்பட்டுள்ளது. நம்பி மகாராசன் என்பவனால் இக்குளம் வெட்டப்பட்டது என்பர்.

இத்தலத்தின் தற்போதைய நிலைமையை நேரில் சென்று கண்டறிந்து வருமாறு என்னை அனுப்பி ஊக்குவித்த, டாக்டர். ஐயரவர்கள் பேரர் க. சுப்பிரமணிய ஐயருக்கு நன்றி செலுத்த யான் கடமைப்பட்டவனாவேன். ஐயரவர்களின் நூல்கள் மறு பதிப்பு வரும் போதெல்லாம் அவர் எனக்குச் செய்த உதவி என்றும் மறக்கற்பாலதன்று.

இத்தலத்தை நேரில் கண்டு அறியும் போது அவ்வூரில் எனக்கு உதவி செய்தவர், இக்கோயிலின் அர்ச்சகராகிய

இ. வி. மணிக் குருக்கள் என்பவராவர். பல செய்திகள் இவரா லேயே அறிந்தேன். இவ்வூர் உயர்நிலைப் பள்ளியின் தமிழாசிரியர் ஏ. சீனிவாசன் எம். ஏ. அவர்களும் இத்தல வரலாற்றை அறிய உதவியாக இருந்தார். இவ்விருவருக்கும் என் உளமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன்.

சென்னை, இங்ஙனம்

18-3-1984 **எஸ். சீனிவாசன்.**

முன்னாள் தமிழாசிரியர்
முத்தியாலுப்பேட்டை
உயர்நிலைப்பள்ளி

குறிப்பு:—

இத்தலம் பற்றிய விவரங்களை நேரிற் சென்று அறிந்து வந்து எழுதியுள்ள குறிப்புக்கள் திருத்தல யாத்திரை செய்பவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் பயன் படுமென்பதில் ஐயமில்லை. எழுதியுதவிய புலவர் சீனிவாசன் அவர்கட்கு நன்றி.

நூல்நிலையத்தார்.

பிழையும் திருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	21	நன்னுல்	நன்னூல்
3	34	நாதளேத்	நாதனேத்
8	13	போலிந்து	பொலிந்து
19	17	வொண்ணு	வொண்ணுச்
20	18	லறிவிழ்ந்து	லறிவிழந்து
36	28	பெற்ற	பெற்று
45	22	டுயர்ச்சியை	டுயர்சசியை
62	13	அறுத்தெரிய	அறுத்தெறிய
78	11	கீரீடமுடன்	கிரீடமுடன்
95	18	சிலேமாறன்	சிலேமாரன்
177	35	தோன்றி	தோன்றிக்

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

புராணத் திருமலைநாதர்

இயற்றிய

எலவானாசூர் எனவழங்கும் இறைவாசநல்லூர்த்தல புராணம்

காப்பு

விநாயகர் வணக்கம்

கலிவிருத்தம்

1. வேக மாநெறி சேரும் வினைகளுந்
தாக போகம் விடாத தளர்ச்சியுஞ்
சோக வாரியி னுல்வரு துன்பமும்
போக யானை முகத்தனைப் போற்றுவாம்.

இதன் பொருள். அதிதீவிரமாகத் துன்பமார்க்கங்களினாலே வரும் கொடுமைகளும், ஆசைமிகுந்த போகத்திலே நீங்காத வருத்தமும், அதனாலே விருத்தியாகிய துயரத்தைத் தராநின்ற சம்சாரமாகிய சமுத்திரத்தினாலே வரும் துக்கங்களும் நீக்கத் தக்கதாகக் கஜ முகத்தினையுடைய மகாகணபதியைத் தோத்திரஞ் செய்வாம் என்றவாறு.

கலைமகள் துதி

2. வேதன் நாவிலும் வெண்தா மரைச்செழும்
போத லர்ந்த பொகுட்டினு மேவிய
காதல் கூருங் கலைமகள் மென்மலர்ப்
பாதம் நாளும் பணிந்து வழுத்துவாம்.

(இ - ள்.) பிரமதேவனுடைய நாவினிடத்திலும், வெண்மை யான தாமரை மலர்ந்த இதழ் மத்தியிலிருக்கும் கருணிகையினி டத்திலும் பொருந்த விருப்பமாக அமர்ந்திருக்கும் சரசுவதியின் மிருதுவாகிய தாமரைப் புஷ்பம் போன்ற இரண்டு பாதங்களையும் நமஸ்கரித்துத் தோத்திரஞ் செய்வாம்.

(கருணிகை-பூவினிற்கொட்டை)

கடவுள் வணக்கம் — பரசிவ வணக்கம்

கலிநிலைத்துறை

3. நீர்கொண்ட வாசச் சடையானை
நிறைந்த கொன்றைத்
தார்கொண்ட எண்தோள் உடையானைத்
தழைத்த செல்வத்(து)
ஏர்கொண்ட செஞ்சொல் இறையாபுரி
ஏய்ந்து வாழும்
சீர்கொண்ட மங்கை யொருபாகனைச்
சிந்தை செய்வாம்.

(இ - ள்.) ஜலரூபமான கங்காதேவி வாசஞ் செய்யாநின்ற சடையை உடையவனை, தேன்நிறைந்த கொன்றைமாலை தரித்துக் கொண்டிருக்கும் எட்டுப்புயத்தை யுடையவனை, மிகுந்த செல்வத் தால் உயர்ந்தவரெனப் பலதேசங்களும் சொல்லும் இறைவாச நல்லூரில் பொருந்தி வாழாநின்ற சிறப்பினையுடைய பெரியநாயகி யம்மனுக்கு இடப்பாகங் கொடுத்த சிகரசிகாமணிநாதரைத் தியானஞ் செய்வாம்.

வேறு

4. உருவாகிப் பின்னர் அருவுரு
வாகி யுன்னு
அருவாகி அந்த அருவத்துக்
கதீத மாகிப்
பெருவாழ்வு மாகி இறையாபுரிப்
பேணி நின்ற
மருவார் குழலாள் ஒருபாகனை
வழுத்தல் செய்வாம்.

(இ - ள்.) உருவாக—பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மயேசுவரன் என நான்கு ரூபமாகி, அப்பால் அருவுருவாகி—சதாசிவ ரூபமாகி, உன்னுஅருவாகி—மனோவாக்குக் காயத்துக் கெட்டாத நாதம், விந்து, சத்தி, சிவம், என்னும் நிஷ்கள ரூபமாகி, அந்த நிஷ்களத்துக்கு அதீதமான பெருவாழ்வுமாகி, என்றும் அஷ்ட மூர்த்தமாக, இறைவாச நல்லூரில் இச்சித்து எழுந்தருளிய இயற்கை வாசனையான அளகத்தையுடைய பெரிய நாயகியை வாமபாகத்திலுடைய சிகரசிகாமணி நாதரைத் தோத்திரஞ் செய்வாம்.

5. பூதங்க டந்த நிலையாகிப்
புராண நன்னுல்
வேதங்க டந்த விளக்காகி
விளக்க மிக்க
நாதங்க டந்த வொளிமீது
நடங்கள் செய்யும்
பாதங்க டந்த பெருவாழ்வைப்
பணிதல் செய்வாம்.

(இ - ள்.) பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் முதலிய பஞ்சபூதங்கட்கு மேலாய், நித்தியமாகிய புராணம் பதினெட்டிலும் முடிவிலாததாய், சோதிப்பிரகாசமாகி, விளக்கமிகுந்த விந்து நாதத்தையுங் கடந்து ஒளியென்னுஞ் சத்திக்கு மேலாய் ஆனந்த நடனஞ் செய்யும் திருவடிகளை அடியேனுக்குக் கொடுத்த பெரிதாகிய ஞானச்செல்வமான பரப்பிரம சொரூபமான சோதிலிங்க நாதனைத் தெண்டன்பண்ணுவாம்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

6. இருவினை யற்றவர் மலவிரு ளற்றவர்
எழுபிற விக்கியல்பாய்
வருவினை யற்றவர் பரமப தத்தருள்
மகிழ்விலி ருப்பவராம்
முருகுவி ரித்தெழு மிதழிமு டித்தவர்
முழுதும ளித்தருள்வார்
அருளுரு வத்திறை யரசவ னத்தரன்
அடிகள்நி னைப்பவரே.

(இ - ள்.) வாசனை மிகுத்து வீசப்பட்ட கொன்றை மலரைத் தரித்தவர்; சகலரையும் காத்தருள்பவர்; கிருபாரூபமான கர்த்தவ்யமாய் அரசவனமென்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியுள்ள ஊர்ப்பாகங் கொண்ட பரமேஸ்வரரது இரண்டு பாதங்களையும் நினைப்பவர்கள் நல்வினை, தீவினை இரண்டும் அற்ற ஆணவ இருட்டு நீங்கினவராய், எழுவகைத் தோற்றத்திற் பிறப் பதற்கிசைவாய் வராநின்ற ஆங்காரமுமற்றவராய்ப்பரமபதமாகிய திருவருள் கடாக்ஷத்தில் மகிழ்ந்திருப்பவராவார்கள்.

வேறு

7. நீறுகுஞ் சஞ்சித மேன்மேலும் பொங்கிய
நீள்பாவம் பொன்றிடுமே
மாறுவன் புந்திய ஞானனந் தந்தரும்
வாழ்வேறுஞ் சஞ்சலமேல்
ஆறுருஞ் செஞ்சடையார்நீடுந் திண்புவி
யாகாயந் தந்துடனே
வேறுகும் புங்கவ ரூர்பாகங் கொண்டவர்
மேல்நேசங் கொண்டிடிலே.

(இ - ள்.) கங்கையைத் தரித்த சிவந்த சடையையுடையவர். நெடிதாகிய பெலம் பெற்ற மண்ணும், விண்ணும் படைத்துத் தானும் வேறாக விருக்குங் கடவுளர். ஊர்ப்பாகங் கொண்ட சிகர சிகாமணிநாதர். அவர்மீது அன்புகொள்வாராகில், அப்போதே நீறுகிப்போகுஞ் சஞ்சிதவினைகளும், மேலும் மேலும் வளரப்பட்ட நெடிய பாவங்களும் இறந்து போம்; மாறுபாடில்லாத அன்பு தானே நடத்தாநின்ற ஞானமாகிய ஆனந்தத்தைத் தரும்; செல்வமும் வளரும் சகலமாகிய துக்கமும் நீங்கும்.

சிகரசிகாமணிநாதர் துதி

வேறு

8. பொறிவழி கூடிய புலன்வழி யோடிய
புலனுடை யாரறிவார்
நெறியொடு கூறிய நிலையிது தானென
நினைவரி தாமணியார்
அறிவுடை யோர்சிர மருவுசி காமணி
யமரர்சி காமணியோர்
செறியிறை யாபுரி மறைகள்சி காமணி
சிகரசி காமணியே.

(இ - ள்.) மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறியோடு கூடிய சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம் என்னும் ஐந்தனது வழியே நடக்கும் திறத்தையுடையார் அந்தக் கருத்தினுல் நிச்சயித்துச்சொல்லாநின்ற பிரமமிது தானென்று நினைக்க அரிதான அழகிய அறிவுடையோர் உள்ளத்திலிருக்கும் சிகர சிகாமணி மூர்த்தியாம். தேவர்களுக்கு முதன்மணியாய் அழகு நிறைந்த இறையாபுரியிலெழுந்தருளிய வேதமுடியிற் சிந்தாமணி யான சிகரசிகாமணியே.

பெரியநாயகியம்மை துதி

வேறு

9. கருணை நாயகி விரத நாயகி
கடவுள் நாயகியே
ஒருவர் நாயகி யறிஞர் நாயகி
உலக நாயகியே
தரும நாயகி மறைகள் நாயகி
சமய நாயகியே
பெருமை நாயகி இறைசை நாயகி
பெரிய நாயகியே.

(இ - ள்.) கிருபாகடாக்ஷத்திற்கு முதன்மையானவள்; விரதங்கட்குந் தலைமையானவள், தேவதைகளுக்கு மேலானவள்; ஒருவராகிய ஒப்பற்ற சிகரசிகாமணிநாதருக்கு நாயகியானவள்; அறிஞர் உயர்ந்தோர்களுக்குச் சிரேஷ்டமானவள்; உலகமெலாம் பெற்றநாயகி; தருமதேவதையுமானவள்; வேதத்திற்கு முதன்மை யானவள்; சமயங்களுக்கெல்லாம் அதிதேவதையானவள்; தனக்குத் தானே சமமானவள்; பெருமை யுள்ளவள்; அவள் இறையாபுரி யில் எழுந்தருளியிருக்கும் பெரியநாயகியாம்.

கணபதி துதி

வேறு

10\. கருணைமதம் பொழிந்தேழு பவக்கடலைக்
காலிணையாற் கலக்கியென்றும்
பெருகியசஞ் சிதமென்னும் பெருமலைதன்
னைச்சின்ன பின்ன மாக்கிப்
பருவரலா காமியமாம் பணைத்தருவைப்
படராமே பறித்துத் தோன்ற
உருகிய சிந்தைக்கூடத் துறையைந்து
கரக்களிற்றை யுன்னல் செய்வாம்.

(இ - ள்.) கடாக்ஷமாகிய மதம் பொழிந்து, எழுவகைத் தோற்றமாகிய பிறவிக்கடலை ஆன்மாக்களுக்குத் தனது இரண்டு பாதத்தாலும் கலக்கி, எப்போதும் பெருகாநின்ற ஆணவமென்னும் பெருத்தமலையைத் தூளிப் படலமாக்கி, துயரமாகிய கருமத்துக் கேதுவாகிய ஆகாமியமென்னும் பரந்த விருக்ஷத்தை வளராமல் வேர்ப்பறித்து, அன்பினுலே உருகாநின்ற அடியவர்கள் இதயமாகிய கூடத்தில் எழுந்தருளியிருக்கும் ஐந்துகரத்தையுடைய யானைமுகக் கணபதியைத்தியானஞ் செய்வாம்.

வேல் முருகப் பெருமான் துதி

11\. அக்கிரிபோ லாணவமாம் பொய்க்கிரியைப்
பொடியாக்கி யலையான் மிக்க
இக்கடல்போல் வினைக்கடலை யீடழித்துச்
சூரனுர மென்ன வுன்னி
தக்கபெரு மாயையுரங் கிழித்துமக
வாற்கரசு தந்தாற் போல
மிக்கதிரு ஞானவர செமக்குதவும்
வேலோனை விளம்பி வாழ்வாம்.

(இ - ள்.) அந்தக் கிரவுஞ்ச பர்வதத்தைப் பிளந்து தூளாக்கினது போல ஆணவமென்கிற பொல்லாத பொய்ம்மலையையும் தூளாக்கி, அலைகள் மிகுந்த இந்த உவர்க்கடலைக் கலக்கிச் சுவறப் பண்ணினது போல வினையென்னுஞ் சமுத்திரத்தை யீடேருமல் வற்றச் செய்து, சூரபன்மாவினுடைய மார்பைப் பிளந்ததுபோல நீங்காத பெரிய மாயையின் வலிமையைப் பிளந்து, தேவேந்திரனைத் தேவலோகம் அரசாளவைத்தது போல மிகுந்த பிரகாசமுடைய ஞானராச்சியம்ஆள அடியேனுக்குக் கிருபா கடாக்ஷம் செய்யும் வேலாயுதந் தரித்த குமாரசுவாமியைத் தோத்திரஞ் செய்து, நித்திய செல்வத்தையடைவோம்.

நால்வர், சண்டேசுரர் மற்றைய அடியார்கள்

12. போதமுறு மெய்ஞ் ஞான புனிதனைக்கைக்
காட்டியழும் புகலி வேந்தும்
மோதுகட லைக்கற்று ணுற்கடந்த
பெருந்தகையு முதலை கொண்ட
வேதியர்தஞ் சிறாரழைத்த மெய்த்தவனும்
புத்தர்மொழி வென்ற கோவுந்
தாதைசர ணெறிந்துயர்ந்த தலைவருமிக்
கவரெமக்குத் தலைவ ராவார்.

(இ-ள்.) உமையவள் திருமுலைப் பாலுண்டு தெளிந்து பிரகாசம் பொருந்திய நித்தியமாகிய சுத்தஞான சொரூபனை தோணியப்பரைத் தனது திருக்கையினுற் காட்டிப்பதிகம் பாடியழுது துதித்த திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும், அலைமோதாநின்ற சமுத்திரத்தைக் கற்றூணைத் தெப்பமாகக் கொண்டு நமச்சிவாயப் பதிகம் பாடிக்கரையேறிய திருநாவுக்கரசு சுவாமிகளும், முதலையானது எடுத்துக்கொண்டுபோன பிராமணனுடைய பிள்ளையைப் பதிகம் பாடியழைத்துக் கொடுத்த மெய்த்தவனை சுந்தரமூர்த்தி சுவாமிகளும், புத்த சமயவாதிகளுடனே வாது பேசி வென்ற மாணிக்கவாசகசுவாமிகளும், தகப்பனுடைய இரண்டு பாதங்களையும் வெட்டி, உயர்ந்த பதவியடைந்த சிரேஷ்டரான சண்டேசுவர சுவாமிகளும், இன்னும் சிவ சாயுச்சியத்தை யடைந்த மகாத்துமாக்களும், எனக்குத் தலைமையானவராகையால் அவர்கள் திருவடிகளையும் பணிவாம்.

அவையடக்கம்

13. பாவாணர் பணிந்தேத்தும் பாதமலர்ச்
சூதமுனி பகருந் தெய்வ
மூவாறு புராணத்துட் பிரமாண்ட
மதிற்புகலு முத்தி வித்தாந்
தேவாதி தேவனிறை யாபுரியின்
புராணத்தைச் செந்நூலோர்ந்த
நாவாணர் நகைப்பரென நாணுமற்
றமிழ்த்தொடையா னவில லுற்றேன்.

(இ-ள்.) வித்துவ சனங்களெல்லாம் நமஸ்கரித்துத் துதிக்கும் பாதகமலத்தையுடைய சூத மகாமுனி சொல்லாநின்ற தெய்வமகிமையான பதினெண்புராணத்துள் முதற்புராணமாகிய

பிரமாண்ட புராணத்திலே விளங்கச் சொல்லியது. மோக்ஷத்திற்கு வித்தாயிருக்கும் தேவாதிகளுக்குத் தேவனுனவன் எழுந்தருளி யிருக்கும் இறையாபுரி புராணத்தைச் செவ்வையான சாஸ்திரங்கள் உணர்ந்த கவிவாணர்கள் நகைப்பார்களென்றும் நாணுமல் நான் தமிழ்ச் செய்யுளால் சொல்லத் தொடங்கினேன்.

நாட்டுச் சிறப்பு

14. குருகுலமன் னவர்தம்மிற் குலநிருப
னருச்சுனன்றன் குமரன் றந்த
பருவரலில் லாதநெறி பரீட்சித்து
கண்டுகந்த பழன நாடு
பொருவரிய புகழ்ப்போக பூமியினும்
போதவளம் போலிந்து நாளும்
பெருகுமிசை நந்திமால் வரைச்சாரற்
பெண்ணைநதி பெருகும் நாடு.

(இ - ள்.) குருகுலமாகிய சந்திர வமிசத்து அரசர்களில் சிறந்த அருச்சுனன் புத்திரனுன அபிமன்யுவின் குற்றமற்ற மார்க்கத்தையுடைய குமரனுகிய பரீட்சித்து மகாராஜன் வந்து கண்டு சந்தோஷப்பட்ட வயல்வளங்களையுடைய நாடு; ஒப்பற்ற கீர்த்தி பெற்ற தெய்வலோகத்தினும் மிகுந்த செல்வம் விளங்கி எப்போதும் ஓசைமிகும் நந்திமலைச் சாரலிலிருந்து பெருகிவரும் பெண்ணை நதி சூழ்ந்த பெரிய நாடு.

15. தருமநெறி யுதிட்டிரன்றன் றம்பிதிறல்
வீமனுக்குந் தவமே பூண்ட
புருடமிரு கந்தனக்கும் பொதுவுரைத்து
நெறிபூண்ட புனித நாடு
கருமுகில்கள் பொழிமுத்தம் கமலங்கள்
தருந்தரளம் கன்ன லீன்ற
பெருகொளிநித் திலங்குழுமி யெப்போதும்
நிலவெறிக்கும் பெண்ணை நாடு.

(இ - ள்.) தருமநீதி தவருத தருமராஜன், தன் தம்பியாகிய வெற்றிபெற்ற வீமனுக்கும், தவமே வடிவமாய்ப் பூண்ட புருஷா மிருகத்திற்கும் வழக்குநேர்ந்தபோது, தன்தம்பியென்றும்பாராமல்

பாதி உடலைப் புருஷாமிருகத்திற்குத் தரும்படி பொது நியாயம் வழங்கினதும் இந்த நெறி தவறாத புனிதநாடு.

சூல்கொண்ட மேகங்கள் பொழியாநின்ற முத்துக்களும்,
தாமரைப் புஷ்பங்கள் சொரிந்த முத்துக்களும்,
கரும்புகளீனுநின்ற முத்துக்களும் கும்பல் கும்பலாக
எந்நேரமும்
நிலவுபோல் ஒளிவீசும் பெண்ணைநாடு.

16. பந்தவினைச் சூலைநோய் பணிக்கநா
வுக்கரசர் பரவி யந்நோய்
சிந்தவுமை யிடத்தரனைச் செந்தமிழ்மா
லைகள்புனைந்த தெய்வ நாடு
முந்தையடி யானிவனென் றுவணமுங்
காட்டியவை முன்னே யேறிச்
சுந்தரனைப் பரஞ்சோதி தொடர்ந்தடிமை
கொண்டருளுந் தூய நாடு.

(இ - ள்.) தொடர்ந்த வினையென்னுந் துன்பந்தரா நின்ற சூலைநோயைப் பரமசிவனே யனுப்ப, திருநாவுக்கரசர் அந்நோய் நீங்க உமையை இடப்பாகத்திலமைத்த திருவதிகை வீரட்டேசுவரர் திருவடியில் தமிழ்ப் பாமாலை சாத்தி நீக்கிக்கொண்ட தெய்வத்தன்மை உடையநாடு; இவன் என் பழைய அடிமை என்று ஓலையைக்காட்டிச் சபையிலேறிச் சுந்தரமூர்த்தியைப் பரஞ்சோதியான சிவபெருமான் தொடர்ந்து தனக்கு அடிமையாக்கிக் கொண்டு திருவருள் பாலிக்கும் பரிசுத்தமாகிய பெண்ணைநாடு.

17. இரவிதரு திருமதலைக் கிராமனருள்
வாய்மைநெறி யீந்த நாடு
பரவுமொரு பாதிரிபங் கயங்கழுநீர்ப்
பலமலரும் பயந்த நாடு
மரபுரிமை வேளாளர் மகிழ்ந்துகுல
விளக்கெடுத்த வண்மை நாடு
பிரசமலர்ச் சோலைமது நதிக்கடலி
னிடைப்பெருகும் பெண்ணை நாடு.

(இ - ள்.) சூரியன் புத்திரனை சுக்கிரீவனும், ஸ்ரீராமபிரானும் நட்புடையவர்களாகச் சத்தியஞ் செய்து கொண்டது இந்தநாடு; ஒப்பற்ற பாதிரிப் புஷ்பமும், தாமரைப் புஷ்பமும்,

செங்கழுநீர்ப் புஷ்பமும் மற்றுமுள்ள புஷ்பங்களும் உற்பத்தியாகி மலர்ந்திருக்கும் நாடு; நல்ல மரபுரிமையான வேளாளர் மகிழ்ச்சி யாய்த் தங்கள் குலத்துக்கு அடுத்த விளக்கிடு கல்யாணம் செய்யப் பட்ட வள்ளல் தன்மையுடைய நாடு; வண்டுகள் ஆரவாரித்து மொய்க்கும் பூங்காவனங்களில் மலர்ந்த புஷ்பங்களிலிருந்து ஒழுகும் தேன் பிரவாகமாகிப் பெண்ணை நதியிற் பெருகிச் கடலில் சென்று நிறையும் சிறப்பையுடைய நாடு.

18. பொய்கைபேய் பூதமெனும் புலவரொரு
மூவர்களும் புரிந்த சங்கம்
கைகொள்நா ரணன்தனக்குக் கங்குலில் வெண்
பாத்தீபங் காட்டு நாடு
மைகொண்மா மனத்துரியோ தனன்புரிந்த
வஞ்சகத்தால் வந்து ஞானச்
செய்கையால் தருமன்முத லேவர்களுந்
திருந்துதவஞ் செய்த நாடு.

(இ - ள்.) பொய்கையார், பேயார், பூதத்தார் என்னும் மூன்று ஆழ்வார்களும் வலம்புரிச் சங்கைக் கையிலேந்திய நாராயண மூர்த்திக்கு இரவிலே தமிழ்மாலை என்னுந் திரிகளால் வெண்பாத் தீபம் ஏற்றிவைக்கும்படியான நாடு; குற்றமான மனமுடைய துரியோதனன் செய்த வஞ்சனையால், ஞானமுடைய தருமன், பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகிய ஐவர்களும் துரோபதையுடன் வந்து திருத்தமான தவஞ்செய்த மகத்தான நாடு.

19. ஔவைதிரு வாக்கதனுற் பனைவளர்ந்து
முக்கனியு மளித்த தன்றி
எவ்வமவை யறச்செந்நெல் லேதமற
அரிசிவிளை வீய்ந்த நாடு
கௌவைவினை யகற்றிவியன் கதியுதவு
பெண்ணைநதி கலந்து நெய்பாற்
பௌவமுறப் பெருகுமிசை திசைபுனைந்த
திருமுனைப் பாடி நாடு.

(இ - ள்.) ஔவைப்பிராட்டியார் திருவாக்கினுல் பாடிய தமிழ்ச் செய்யுளுக்காக வெட்டிப் பிளந்த பனந்துண்டம் வளர்ந்து சேர, சோழ, பாண்டியர் என்னும் மூன்று அரசர்கட்கும் மூன்று

பழங்கள் அளித்த திருநாடு; அன்றியும், அப்பிராட்டியாரின் வாக்குக்காகக் குற்றமற்ற வயலினிடத்தில் உமியில்லாமல் அரிசியாய் விளைவுண்டான திருநாடு; துன்பந்தரும் வினைகளை நீக்கி மேலான கதியுதவும் பெண்ணையாற்றில் நெய், பால், கடல்போல் பெருகி எட்டுத்திசையும் புகழ்பெற்ற திருமுனைப்பாடி நாடு.

20. சேரன்பாண் டியன்சோழன் கன்னியரைத்
தெய்வீகன் திருக்கல் யாணம்
மாரன்போற் புரிந்துசத்த புரிவேந்தர்
மகளைமணந் தருளும் நாடு
வீரஞ்சார் இருநூற்று இருபத்தெண்
மைந்தருக்கு மேவு நாடு
சேரவரு பிறவியகற் றிடுமுதுகுன்
றினையுடைய தெய்வ நாடு.

(இ - ள்.) சேர, சோழ, பாண்டியர் என்னும் மூன்று அரசர் பெண்களைத் திருக்கோவலூர் தெய்வீக ராஜன் திருக்கல்யாணம் செய்துகொண்டு, பின்னும் காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை, மாயா, மதுரை, அயோத்தி ஆகிய ஏழு தேசத்து அரசகுமாரிகளையும், திருமணம் பூண்டு வாசஞ் செய்த நாடு. அன்றி வெற்றி பொருந்திய இருநூற்றிருபத்தெட்டுக் குமாரர்களுக்கும் பொருந்தியநாடு; தொடர்ந்து வரும் பிறவியை நீக்கும் விருத்தாசலத்தையுடைய தெய்வநாடு.

நகரச் சிறப்பு

21. அந்நாட்டுக் கணிமௌலி புனைந்ததெனப்
புவிமடந்தைக் கழகீ தென்ன
பொன்னாட்டி லெழிலளகா புரியிலுர
காபுரியிற் புதுமை யோங்கி
முன்னாட்டி யுரைசெய்ய விதுவன்றி
வேறன்று முந்நீர் வைப்பில்
எந்நாட்டின் வளமெல்லாம் காட்டுமிறை
யானறையூர் என்னு மூதூர்.

(இ - ள்.) சிறப்பினையுடைய அந்தத் திருமுனைப்பாடி நாட்டுக்கு அழகிய கிரீடம் தரித்தது போலவும், பூமிதேவியின் அழகு இது என்று சொல்லத் தக்கதாகவும், தேவலோகத்திலும், அழகு

பொருந்திய அளகாபுரியிலும், நாகலோகத்திலும் சிறந்த அழகுடையதாய், பிற நாட்டிற்கு உவமைகூறிச் சுட்டப்படுவதான இந்த இறையானறையூருக்குச் சமமானது சமுத்திரஞ் சூழ்ந்த இந்த உலகத்தில் வேறொன்றுமில்லையென்று கூறும்படியான வளப்பம் பொருந்தியதாகும் இந்தத்தலம்.

22. செய்யெலாந் தரளவொளி தெருவெலாந்
தோரணங்கள் செல்வங் கொண்டு
மையெலாந் தவழ்மாடம் மனையெலாம்
மங்கலங்கள் வள்ளி யோர்கள்
கையெலாந் தானமழை கருத்தெலாம்
பெருங்கருணை களங்க மற்ற
மெய்யெலாந் திருநீற்று விளக்கமுட
னூடோறும் விளங்கு மவ்வூர்.

(இ - ள்.) வயல்களிலெல்லாம் முத்தின் பிரகாசம், வீதிகளெங்கும் தோரணங்கள், செல்வம் நிறைந்த மாடிவீடுகளெல்லாம் மேக மண்டலத்தைத் தழுவிநிற்கும்; வீடுகளிலெல்லாம் கலியாண வாத்தியங்கள் முழங்கும்; வள்ளல்கள் பொருளை மழை போல் வழங்குவர்; மக்கள் கருணைநிறைந்த உள்ளமுடையவர்கள்; குற்றமற்ற அவர்கள் தேகங்களில் விபூதிப் பிரகாசம் விளங்கிக் காட்சியளிப்பது அந்நகரமாகும்.

23. வேதியரா குதிவேட்டங் கறச்சாலை
யெழும்புகையும் வேதங் தந்த
ஆதிதனை யருச்சிப்போ ரிடுந்தூபத்
திருப்புகையும் அரிவை மார்கள்
ஓதியரு மணமேற விட்டவங்கி
நறும்புகையு முயர்ச்சி யோங்கு
மூதெயில்சூழ் வெண்மஞ்சோ டளவளாய்த்
தலைமயங்கு மூதூ ரவ்வூர்.

(இ - ள்.) அந்தணர்கள் செய்யும் யாகசாலைப் புகையும், தரும சத்திரத்திலெழும் புகையும், சிவபெருமானையருச்சனை புரிவோர் இடும் சாம்பிராணியின் இருண்ட புகையும், பெண்கள் கூந்தலுக்கு வாசனையூட்ட இடும் அகிற்புகையும் உயர்ந்தோங்கி, பழைய மதிலின் மீது தங்கியுள்ள வெண்மேகத்துடன் கலந்து மேகமோ புகையோ வென்று ஐயுறும் சிறப்புடையது அந்தப் புராதன நகரம்.

24. நாடகமா தர்களரங்கின் நடம்புரியுஞ்
சிலம்பொலியை நாத கீதம்
பாடகர்யா ழிசையொலியைப் பழமறைநூ
லுரையொலியைப் பண்பு தாங்கு
மாடமனை மங்கலஞ்செய் வளையொலியை
விருந்தினரை மகிழ்வா லூட்டத்
தேடரவப் பேரரவம் கிளர்ந்துமறைத்
தோங்கிநலஞ் சிறந்த தவ்வூர்.

(இ - ள்.) நாடகமாடும் பெண்கள் சபைகளில் நடனஞ் செய்யும்போது, சதங்கையினின்று உண்டாகும் சத்தத்தையும், இசை தவறாமல் பாடுகின்ற வீணாகானத்தின் சத்தத்தையும், வேத பாராயணம் செய்யும் சத்தத்தையும், மனைகளில் மங்கல வாத்தி யத்தின் சங்கொலியையும், மகிழ்வோடு உண்பிக்க விருந்தினரைத் தேடும் பேரோசை மறைத்துப் பேரொலியாக மகிழ்வைத் தருவது அந்த நல்ல நகர்.

25. குடிப்பிறந்தோர் நல்லொழுக்கங் குன்றாத
பெருந்தகையோர் கோதொன்றின்றி
யடிப்படும்வாழ் வுடையோர்கள் நல்குரவொன்
றறியார்க ளறங்கள் செய்வோர்
படிக்குளரு நூலாய்ந்த வறிவுடையோர்
மாதவத்தோர் பணியை வேணி
முடித்தவிறை திருத்தொண்டின் வழிநின்றோர்
அகலாத மூதூ ரவ்வூர்.

(இ - ள்.) அந்நகரில் உள்ளோர் நற்குடியிற் பிறந்தவர்கள்; நல்லொழுக்கமுடையவர்கள்; பெருந்தகைமையுடையவர்கள்; குற்றமற்ற பரம்பரையாய்ச் செல்வம் பெருகினவர்கள்; தரித்திர மென்பதை அறியாதவர்கள்; தருமம்புரிவோர்; பூமியிலுள்ள சாஸ்திரங்களை யறிந்த அறிவுடையவர்கள். மகத்தான தவசை யுடையோர்கள்; பாம்பை முடியிற்றரித்த சிகர சிகாமணி நாதர் திருத்தொண்டின் முறைமை தவறாதவர்கள் விட்டுநீங்காத பழை மையானது அந்நகராகும்.

26. மாதவமில் லாரெனினு மித்தலத்தில்
வைகுவரேல் மயக்கம் நீங்கி
ஏதமிலா முத்தியினை யெய்துவரென்
றருண்முருகன் இயம்பப் பெற்றுக்
கோதகன்ற புகழிறையா புரிபுரா ணந்தன்னைக்
குறித்துக் கேட்போர்
பூதலமு மரசாண்டு சிவபுரிக்கும் வேந்தராய்ப்
பொலிவா ரன்றே.

(இ - ள்.) சிறந்த தவமில்லாதவர்களும் இந்நகரில் வாசஞ் செய்வார்களாகில் மயக்கந் தீர்ந்து குற்றமற்ற மோட்சத்தை அடைவார்களென்று முருகப் பெருமான் அனுக்கிரகஞ் செய்யப் பட்டதாகையால், குற்றமற்ற இறைவாச நல்லூர்த் தலபுராணத் தைப் படிக்கக் கேட்போர் பூலோகமெல்லாம் அரசாண்டு சிவலோகத்திலும் அரசராய் விளங்குவார்கள்.

27. குகமுனிவன் யாகத்தி லேயுதித்த
தெய்வீகக் குரிசில் வந்து
சகமுழுதுந் துன்பியற்றுங் காரண்டன்
வல் லூரி தனைத்த டிந்த
புகலரிய பிரமகத்தி தனைநீக்கி
யருளிலிங்கம் பொருந்து மவ்வூர்
இகலரிய ஊர்ப்பாகங் கொண் டவரென்
றேத்திடவு மிலங்கு மவ்வூர்.

(இ - ள்.) திருக்கோவலூரில் குகமுனிவர் செய்த யாகத்திற் பிறந்த தெய்வீகராஜன் வந்து, பூலோக மெல்லாம் துன்பியற்றிய காரண்டன், வல்லூரி என்னும் அரக்கரைக் கொன்ற பிரம்ம ஹத்தியை நீக்கியருளிய சிகரசிகாமணி நாதர் எழுந்தருளியிருப்பது. பகையில்லாத ஊர்ப்பாகங் கொண்ட வூரென்று துதிக்கவும் விளங்குவது அந்நகர்.

ஆக்கியோன் பெயர்

28. அப்பதியி லரனடியா ரனைவோரும்
விருத்தயாப் பதனு லென்று
மொப்பரிய புகழிறையா புரிபுரா
ணந்தமிழா லுரைப்பா யென்ன
பொய்ப்பகைவன் அருணகிரிப் புராணத்தைத்
தமிழ்நூலாற் புகன்ற நாவோன்
செப்பருமிப் புராணத்தைத் திருமலைநா
யகன்றமிழாற் செப்பி னுனல்.

(இ - ள்.) அந்த நகரிலுள்ள சிவனடியார் அனைவரும் விருத்தச் செய்யுளினுலே எப்போதும் ஒப்பற்ற புகழுடைய இறையாபுரிப் புராணத்தைத் தமிழினுலே சொல்லவேண்டுமென, பொய்க்குப் பகைவனுனவனும், அருணகிரிப் புராணத்தைத் தமிழாற் பாடிய நாவினை உடையோனுமாகிய திருமலைநாயகனென்னும் இயற்கைப் பெயருடையவன் சொல்லுதற் கரிய இப்புராணத்தைப் பாடிமுடித்தனன்.

அருச்சனைச் சருக்கம்

29. நீராழி தனையுடுத்த நிலமகள்தன்
தவப்பயன்போல் நித்தம் பெற்ற
சீராரும் நைமிசவா ரணியமெனுந்
திருவனத்திற் செருச்செய் மாரன்
போராடு வாளிபடும் புண்ணிலா
மெய்த்தவத்துப் புனிதர் நாப்பண்
காரான திருமேனிக் கதிபடைத்த
வடல்வாயுக் கடவுள் வந்தான்

(இ - ள்.) கடலை ஆடையாக உடுத்திய பூமிதேவியின் தவத்தின் பலன் போல நித்தியமாக விளங்கப் பெற்ற சிறப்புடைய நைமிசாரணியமென்னும் அழகியவனத்திலே, யுத்தஞ் செய்யும் மன்மதனது பாணம் பட்டு வடுவாகிற புண்ணில்லாத மேனியைப் படைத்துத் தவத்திலே புனிதராகிய இருடியர்கள் நடுவில், கபிலத் திருமேனியும், வேகத்தினையுமுடைய வெற்றி பொருந்திய வாயுதேவன் வந்தார்.

30. வந்தவளிக் கடவுட்கு உபசாரங்
கொடுத்திருத்தி மதித்த வத்தோர்
எந்தையே யெவ்வுயிர்க்கு மிறைவனூர்
தெரிந்தெங்கட் கியம்பா யென்ன
அந்தமிலோன் யானுரைக்கி லையமா
மையமற வலரோன் வாக்கான்
முந்தமா மறைவழியே கேட்கநீர்
வாருமென மொழிந்தா னன்றே.

(இ - ள்.) அங்கு எழுந்தருளிய வாயுதேவருக்கு உபசார மொழிகள் கூறி ஆசனமளித்து இருக்கச்செய்து, எந்தையே! எல்லா உயிர்கட்கும் இறைவனுன தெய்வம் யார்? அந்தத் தேவனை அறிந்து சொல்ல வேண்டுமென்று இருடியர் கேட்க, அதற்கு வாயு தேவன் நான் கூறினுல் உங்கட்குச் சந்தேகம் தோன்றலாம். அந்தச் சந்தேகம் நீங்க, பிரமதேவன் வாக்கினுலே, முதன்மையுடைய வேதவாக்கியத்தின் வழியே சொல்லும்படி கேட்கலாம்,வாருங்கள் என்று கூறினுன்.

31. அவ்வுரைகேட் டருமுனிவர் அகங்களித்துப்
பெருஞான மடைந்தாற் போலச்
செவ்வைபுரி மனத்தினராய் வடமேரு
வுச்சியின்மேற் சிறப்பா லோங்கி
எவ்வமற முப்பத்தீ ராயிரமாம்
யோசனையி னெல்லை கொண்ட
கவ்வைதவிர் பிரமபுரி யெனும்புரியைச்
சென்றணைந்தார் காதல் கூர.

(இ - ள்.) அந்தமொழியைக் கேட்ட முனிவர்கள் எல்லோரும் மிகுந்த சந்தோஷமுடையவர்களாய், மிகுந்த ஞானம் பெற்றவர்கள் போல், திருந்திய மனமுடையவர்களாய் எழுந்து வடக்கிலுள்ள மேருமலையின் உச்சியில் முப்பத்தீராயிரம் யோசனை அகலங்கொண்டு உயர்ந்துள்ள சிகரத்திலுள்ள துன்பம் தவிர் பிரமபுரியை மகிழ்ச்சியுடன் சென்றடைந்தனர்.

32. நன்னகரி தன்பெருமை யகங்களிக்கக்
கண்களிக்க நலத்தா னோக்கி
முன்னமறை யுடனுலகந் தருமுளரித்
தவிசிருக்கும் முதல்வன் வாழும்
பொன்னணிமா ளிகைவாயிற் புறத்தணைந்து
தம்வரவு புகலக் கேட்ட
அன்னகடைத் தலையாள ரவற்கறிவித்
தழைக்கவவ ரணையச் செல்வார்.

(இ - ள்.) பிரமபுரியின் பெரிதான அலங்காரங்களை மனமும் கண்ணும் களிக்க நலமுடன் பார்த்து, முதன்மையான வேதத்தையும், உலகத்தையும் சிருஷ்டித்த, தாமரை மலரிலிருக்கும் பிரமதேவன் எழுந்தருளியிருக்கும் அழகு பெற்ற மகாமண்டபத்தின் கோபுரவாயிலில் சென்று தாங்கள் வந்த விபரத்தை அறிவிக்க அந்த வாயிற் காவலாளர் பிரமதேவரிடமறிவித்து, அவர் உத்தரவு பெற்று அழைக்க வாயுபகவானும் தேவர்களும் அம்மகாமண்டபத்துள் பிரவேசித்தனர்.

33. மாமணியா லிட்டிழைத்த மதிற்கனக
மண்டபத்தின் மாசொன் றில்லாத்
தாமரைப்பே ராசனத்தில் எண்ணறுசூ
ரியருதயந் தயங்கு மெய்யும்
காமரணி யெண்புயமுஞ் சதுர்முகமுஞ்
சதுர்வேதங் கலந்த நாவும்
நாமகளுஞ் சிறந்திலங்க இனித்திருந்த
நாயகனை நடந்து கண்டார்.

(இ - ள்.) மாணிக்கத்தால் இழைக்கப்பட்ட மதில் சூழ்ந்த பொன்மயமான மண்டபத்தில் குற்றமற்ற ஆயிரம் இதழ்களை யுடைய தாமரையாகிய பெரிய ஆசனத்தில் அளவற்ற சூரியர்கள் உதயமானது போலப் பிரகாசிக்கும் மேனியும், அழகாய் அலங்கரிக்கப் பெற்ற எட்டுப்புஜங்களும், நாலுமுகமும், நாலு வேதம் நிறைந்த திருநாவும் அதில் சரஸ்வதி சிறப்பாய்ப் பிரகாசிக்கச் சந்தோஷமாக எழுந்தருளியிருக்கும் பிரமதேவனை வாயுவும், முனிவர்களும் சென்று கண்டனர்.

34. கண்டோகை யானந்தக் களிப்பினரா
யிவன்றன்னிற் கடவுள் வேறும்
உண்டோவென் றதிசயித்துத் தமையறியா
மகிழ்ச்சியினு லுருகி வேதம்
பண்டோயப் பாடியா டிப்பலகாற்
பணிந்துலகம் பயந்த நாத
வண்டோசை யிடுங்கமல வானவனே
யெனப்புகழ்ந்தார் மாசொன் றில்லார்.

(இ - ள்.) கண்ட வாயு தேவரும் முனிவர்களும் சந்தோஷ மிக்கவர்களாய், ஆனந்தக் களிப்பால் தரிசித்து இவரிலும் வேறுகடவுளர் உண்டோவென்று அதிசயித்துத் தம்மை யறியாது மகிழ்ச்சியினுல் மனம் உருகி இசையோடு கூடிய வேதத்தைப் பாடியாடிப் பலமுறை தெண்டனிட்டு உலகத்தையெல்லாம் சிருஷ்டித்த கர்த்தனே! வண்டுகள் ரீங்காரம் செய்யும் தாமரை மலரி லெழுந்தருளியிருக்கும் தேவனே என்று குற்றமற்ற அவர்கள் துதிசெய்தனர்.

35. அங்கவரை நோக்கியயன் மகிழ்ந்துமுக
மலர்ந்தபொழு தயலேநின்ற
பொங்குகதிர் சதாகதியும் புண்டரிகப்
பொகுட்டரசன் பொற்ரு ளேத்தி
யெங்கள்குலப் பெருந்தவமே யீரேழு
புவனமெலா மீன்ரு யிந்தப்
பொங்குதவ ரவர்நைமி யவனத்தோர்
விரதங்கள் புரியு மேலோர்.

(இ - ள்.) அப்படித் துதித்தவர்களைப் பிரமதேவன் நோக்கி மகிழ்ச்சியோடு முகமலர்ந்தபோது சமீபத்திலிருந்த வாயு பகவான் தாமரை மலரிலெழுந்தருளியிருக்கும் பிரமனது பொன் போன்ற பாதங்களைத் துதித்து, எங்கள் குலத்திற்குப் பெரிதான தவசிரோ மணியே! பதினுன்கு உலகத்தையும் சிருஷ்டித்த கர்த்தனே! இந்தத் தவசிரேஷ்டர்கள் நைமிசவனத்திலிருப்பவர்கள்; விரதந் தவருத மேலோர்களாவார்கள்.

36. அத்துவித முத்தியினை யாருயிருக்
களித்தருள்வான் யாவ னென்னுஞ்
சத்தியமெய்ஞ் ஞானவழி யுணர்த்தவென
நின்சரணஞ் சார்ந்தா ரென்ன
வித்தகநான் மறையோனுங் கேட்டுமுனி
வரைப்பார்த்து விருப்பந் தாங்கி
உத்தமமோ னம்புரிந்து தெரிந்துவிளங்
கப்பரிவா லுரைக்க லுற்றான்.

(இ - ள்.) இரண்டற்ற மோக்ஷத்தையறிய ஆத்மாக்களுக்கு அனுக்ரகஞ் செய்யும் கடவுள் யாரென்று சத்தியமான மெய்ஞ் ஞான வழியே அறியத்தக்கதாக உமது திருவடியை அடைந் தார்கள் என்று வாயுபகவான் கூற, பிரமன் கேட்டு விருப்பத்தோடு சிறிது நேரம் மௌன யோகத்திலிருந்து, உண்மையை யுணர்ந்து கொண்டு முனிவர்களை நோக்கி அன்புடன் கூறுவாராயினர்.

37. நித்தனிரா மயனொழியா நிருத்தனரு
பன்அனந்தன் நினைக்க வொண்ணா
சுத்தனுயிர் தொறுநிறைந்து தோன்றாத
பரமசிவன் சுடர்மெய்ஞ் ஞான
முத்தனுல கம்படைத்துப் புரந்தழித்து
மொழிவருந்தன் பெருமை யோரா
மத்தனருள் பராசத்தி மணாளன்நம
தாவிக்கும் மணாள னாவான்.

(இ - ள்.) நித்தியத்துவமாய், அனாதியாய், விட்டுநீங்காத நிர்த்தனஞ் செய்யப்பட்டவன். அரூபானந்தன், அனந்தமானவன் நினைப்பதற்கு அரிதானவன். மாயைநீங்கிய சுத்தனான ஆன்மாக் கள் தோறும் நிறைந்தும் தெரியப்படாத பரமசிவன் சோதிப் பிரகாசமானவன்; மெய்ஞ்ஞான மோக்ஷத்தைத் தரப்பட்டவன். உலகத்தைத் தோற்றுவித்து, காப்பாற்றி, அழித்துச் சொல்லுதற் கரியவன். தன் பெருமையைத் தானறியாதவன். மகாமகத்து வத்தையுடையவன். அனுக்ரகசத்தியான பராசக்தியின் நாயகன். அவனே அனைவருக்குந் தேவனாவான். அவனே என் பிராணனுக்கு நாயகனாவான்.

38. என்னறிவாற் படைத்திடவு மிகல்நேமி
பணிலங்கை யேந்து மேகந்
தன்னறிவாற் புரந்திடவு மரிதவன்ற
னருளன்றி தவத்தோர் கேண்மின்
முன்னொருநாட் சுவேதவன கற்பகத்தி
னமக்குமுதன் மேலோ னாக
உன்னிடுமா றொருவர்வே றில்லையென
யானகந்தை யுடைய னானேன்.

(இ - ள்.) என்னுடைய விவேகத்தினால் சிருஷ்டிக்கவும், பலம் பொருந்திய சக்கரத்தையும், சங்கினையுமேந்திய கையினையுடைய மேகவண்ணனான மகாவிஷ்ணுவுந் தன் அறிவினாலே இரட்சிக்கவும் ஆகாது. அந்தப் பரமசிவன் அனுக்கிரகமில்லாமல் நடப்பதில்லை. முனிவர்களே! கேளுங்கள் முன்னொருநாள் வெண்காடாகிய கற்பகவனத்திலே எனக்கு மேலான கர்த்தர் ஒருவர் உண்டு என்று நினையாமல் நானே மேலானவனென்று மிகுந்த கர்வத்தையுடையவனாக இருந்தேன்.

39. அப்போது தம்பம்போ லறிவிழ்ந்து
தருந்தொழிலு மறியே னாகி
பொய்ப்போத மானிடர்போல் வருந்தினேன்
அவன்கருணை புரித லாலே
எப்போது முயிர்க்குயிராம் ஈசனுள
னென்றெண்ணி யெழில்நால் வேதத்
தொப்போத வரியதிரு வஞ்செழுத்தை
நெஞ்சமுழுத்தி யுலைவு நீங்கி,

(இ - ள்.) அப்படி யகங்காரங் கொண்ட மாத்திரத்தில் அந்நேரமே விருக்ஷம்போல் அறிவில்லாமல் சிருஷ்டித்தொழிலையும் அறியாமல், பொய்யுடைய மானிடரைப்போல வருந்தினேன். அப்பெருமான் கருணை செய்ததால் என்றைக்கும் உயிருக்கு உயிராகிய பரமசிவன் ஒருவன் உண்டு என்றெண்ணி, நாலு வேதத்தினாலும் உவமித்துச் சொல்லுதற்கு அரிய அழகிய பஞ்சாக்ஷரத்தை மனதிலே நினைத்து மனோவியாகூலந் தீர்ந்தேன்.

40. மேனியெலாம் நீறணிந்து வேறறியா
தவனடியே விரும்பிச் சிந்தித்
தூனமற விருந்தளவில் உமையன்றி
விடையன்றி ஒருவ னாகித்
தூநலமார் சுவேதவன னெனநாமந்
தரித்தருளித் தொன்மை யோங்கும்
ஞானவரம் பனையதிரு மேனிதவ
ளந்தயங்க நயந்து நின்று.

(இ - ள்.) தேகமெங்கும் விபூதி தரித்து, வேறொன்றுஞ் சிந்திக்காமல் சிவனுடைய திருவடியை மனத்தினாலே தியானஞ் செய்து குற்றமற்றிருக்குஞ் சமயத்தில் உமையவளையும், ரிஷபவாகனத்தையும் விட்டு, தானொருவனுமாக, சுத்தமான நன்மை பொருந்திய சுவேதவனப் பெருமானென்னுந்திருநாமந் தரித்துப்பழமை யாயுயர்ந்த ஞானமுடிவாகியதிருமேனி யெங்கும் வெள்ளைநிறம் பிரகாசிக்க எனக்கெதிராக எழுந்தருளினார்.

41. உன்னைமதித் திடாதேகே ளுயிர்க்குயிராய்
நாம்நடத்த லுணர்ந்து வாழென்
றென்னையுடை யானருளி யெழுந்தருள
யானயர்ச்சி யெய்தா துய்ந்தேன்
அன்னசிவ பரன்றானே பலவுயிர்க்கு
முத்தியளித் தருள்வா னன்றி
பின்னொருவ னுளனென்று பேசுவார்
மாநரகம் பெறுவர் கண்டீர்.

(இ - ள்.) அவ்வாறு எழுந்தருளிய சிவபெருமான் அநுக்கிரகஞ் செய்தது, எதுவென்றால், 'நானே சகலத்துக்குமென்று உன்னை நீ நினைக்காதே. நாமே உயிர்க்குயிராயிருந்து சகல சிருஷ்டியையும் நடத்தி வருவோம். உண்மையுணர்ந்து வாழ்வாயாக' என்று என்னை ரக்ஷிக்கும் சிவபெருமான் அநுக்கிரகம் செய்து எழுந்தருளினார். அப்போது என் வருத்தம் நீங்கி நன்மையடைந்து பிழைத்தேன். ஆகையால் அந்தச் சிவ பரம்பொருளே பலவுயிர்க்கும் மோக்ஷம் கொடுக்கின்ற கர்த்தனென்றறியுங்கள். அதுவன்றி வேறொரு தெய்வமுண்டென்று சொல்லிய பேர்கள் மகத்தான நரகத்தை அடைவார்கள்.

42. ஆருயிர்கண் முத்தியினை யடைந்திடுமா
றருளிச்சை யாயி னானுஞ்
சாருமுயிர் கருமத்தி னளவறிந்து
நிற்பானுந் தக்க காலஞ்
சேரவினை யருத்துவிக்குஞ் செயலானும்
மலங்கடனைச் சிதைத்து நேசங்
கூரவரு முத்தியினைக் கொடுப்பானுஞ்
சிவனன்றிக் குறிக்க வுண்டோ.

(இ - ள்.) அரிதாகிய சீவாத்மாக்கள் மோக்ஷத்தையடையும்படியான கடாக்ஷமுள்ளவனும், ஆத்மாக்கள் செய்யும் கருமங்களின் பிரமாணமறிந்து நிற்கிறவனும், அதற்கேற்ற காலத்தில் அந்தக் கருமவினையை ஆத்மாக்கள் பொசிக்கச் செய்பவனும் ஆணவமாதி கர்மங்களைக் கெடுத்து மோக்ஷ இச்சைஉண்டாகச் செய்பவனும் அந்தச் சிவனன்றி வேறு உண்டோ.

43. மாயையிரண் டகன்றானு மிருவினையைக்
கடந்தானு மலத்துக் கென்றுஞ்
சேயனென நின்றானுஞ் சத்திசிவ
மென்றுலகிற் சிறந்து ளானும்
ஏயபுல னறிவுதனக் கெய்தானும்
பரசிவனே விரதம் போலுங்
காயமுடை யீரவன்றன் அருளன்றி
யுன்னியுளங் கம்பி யாதால்.

(இ - ள்.) அசுத்த மாயை, சுத்தமாயை என்னும் இரு மாயைகள் நீங்கினவனும், நல்வினை, தீவினையென்னும் இரு வினைகளும் நீங்கினவனும், ஆணவ மலத்துக்குத் தூரமாக நின்றானும், சிவம் சத்தி என உலகிற்குச் சிறப்பாயிருப்பவனும், ஐம்புலாதிகளால் அறியும் அறிவு தனக்கில்லாதவனும் அந்தப் பரமசிவனே. தவமே வடிவு கொண்டது போன்ற முனிவர்களே! அவன் அருளன்றி மனது ஆனந்தத்தையடையாது, என்று கூறினான்.

44\. என்றுவிழி மழைபொழிய மெய்ப்புளக
மெழக்கமல னியம்பக் கேட்ட
துன்றுமுனி வரர்வணங்கி யானந்த
வுருவாகி சுருதி தன்னாற்
சென்றுகிடைக் கரியசிவ பரன்றன்னை
வினைநீக்கிச் சென்று சேரும்
நன்றுபுரி நெறியருள்வாய் எனப்பணிய
கமலத்தோன் நயந்து சொல்வான்

(இ - ள்.) சிவனது மகத்துவம் இது வென்று கண்களில் ஆனந்த பாஷ்பம் பொழிய, சரீரம் புளகாங்கிதங் கொள்ள பிரம தேவன் சொல்லக்கேட்டு, நெருங்கியுள்ள முனிவர்கள் வணங்கி, ஆனந்த ரூபமானவரும், வேதத்தால் அறியப் படாதவருமாகிய பரமசிவனை, நாங்கள் வினையினின்று நீங்கி அவனருளைச் சென்று அடைவதற்கு நன்மையான வழியை அருளிச் செய்வாயென வணங்கப் பிரமதேவன் நயமாகச் சொல்வானாயினான்.

45\. உருவமென வருவமென வுருவருவ
மில்லாத வொருவ னென்று
கருதரிய வெண்ணிறந்த பல்லுயிர்கள்
பொருட்டாகக் கருணை தானே
திருவுருவ மாயுகந்த திருவுருவம்
பலவவையுட் செவ்வை ஞானந்
தருவுருவச் சிவலிங்க வுருவமெனச்
சதுர்மறைகள் சாற்று மன்றே.

(இ - ள்.) பிரமன், விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன் என்று உருவமாகியும், மனோவாக்குக் கெட்டாத நிஷ்களரூபமென அருவ மாகியும், சதாசிவ ரூபமென அருவுருவமாகியும், நினைத்தற்கரி தாகிய அளவற்ற சீவராசிகளின் நிமித்தம் கிருபாகடாக்ஷங் கொண்டு எழுந்தருளியுள்ள வடிவங்கள் அநேகமாகும். அவற்றுள்ளே ஞானத்தைத் தருவது சிவலிங்க சொரூபமேயென நான்கு வேதங்களுஞ் சொல்லுகின்றன.

46. அத்தகைய சிவலிங்க வுருவத்தை
யருச்சித்தால் அழிவொன் றில்லா
முத்திதரு மெய்ஞ்ஞானம் கிடைக்குமென
வயன்மொழிய முனிவர் தாமும்
எத்தலத்தில் அருச்சிப்ப தெனக்கேட்ப
பூதலமே லெய்தி யெய்தா
மெய்த்துணையை யருச்சிப்ப தெனவிளம்பி
யவர்களுடன் விரைந்தெ ழுந்தான்.

(இ - ள்.)அப்படி மகத்துவத்தையுடைய சிவலிங்க ரூபத்தை அருச்சனை செய்தால் அழிவில்லாத மோக்ஷத்தைக் கொடுக்கும். உண்மையான ஞானம் சித்திக்கும் என்று பிரமதேவன் சொல்ல, அது கேட்ட முனிவர்கள், அந்தச் சிவலிங்கச் சொரூபத்தை எந்தத் தலத்தில் பூசிப்பது என்று கேட்க, பூலோகத்திற்குச் சென்று அப்பெருமானை அருச்சிக்கலாம் வாருமெனக் கூறி, அவர்களையும் அழைத்துக் கொண்டு பிரமதேவன் பூலோகம் நோக்கிப் புறப்பட்டனன்.

வேறு

47. மறைகள்பு கழ்ந்திட முனிவர்ம கிழ்ந்திட
மகிதல முய்ந்திடவந்
திறையள வின்புவி யதனைஅடைந்தன
ரிறைவனை வந்தனைசெய்
துறையுமி டந்தனை யுயவிந டந்திட
வுறவெதிர் கண்டனரா
லறைசிக ரந்தனி லருளுரு வந்தனை
யரசவ னந்தனிலே.

(இ - ள்.) வேதங்கள் துதிக்க முனிவர்கள் சந்தோஷமடைய பூலோகம் பிழைக்க க்ஷணநேரத்தில் பூலோகத்திற்கு வந்து சிவபூஜை செய்து வாசம் பண்ணும்படியான இடம் எது என்று உசாவி, விசாரித்து நடக்கையில், அரசவனமென்னுந் தலத்தில் சிகரசிகாமணி நாதர் எழுந்தருளியுள்ள சிவலிங்க சொரூபத்தை எதிரே கண்டார்கள்.

48. அவசம டைந்தனர் விழிமழை கொண்டன
ரடிகள்ப ணிந்தனரெம்
சிவபுர சங்கர அரசவ னம்பயில்
சிகரமு கந்திடவே
றுவமைக ளொன்றற வுயர்சிவ லிங்கம
துருவம்வி ளங்கினையென்
றிவளவெ னும்பரி சறமிகு மன்புட
னினிமைய டைந்தனரால்.

(இ - ள்.) சிகர சிகாமணி நாதரைக் கண்ட பிரமதேவரும், முனிவர்களும் பரவசமடைந்தவர்களாய், கண்களினின்று ஆனந்த பாஷ்பம் மழைபோல் பொழிய திருவடிகளில் தெண்டனிட்டு, சிவனே! புரசங்கரா! அரசவனத்தில் எழுந்தருளியிருக்கும் சிகரசிகாமணி நாதனே! நாங்கள் சிவானந்தத் தேனை மொண்டு கொள்ள வேறு உவமானமில்லாத உயர்ச்சியான சிவலிங்க உருவாக விளங்கிய நாதனே! இவ்வளவென்று மதிக்கப்படாத அன்புடனே சந்தோஷமடைந்தார்கள்.

49. நேசமி குந்தனன் மேலுயர் கண்டிகை
நீறுபு னைந்தடவோர்
மாசைய ரிந்திடு வானவிர் கங்கையை
வாவென வந்துதவும்
வீசிய தண்புனல் நாமலர் கொண்டிட
மேல்நிறை யன்புடனே
பூசைபு ரிந்தன னேழுல குந்தரு
போதலர் பங்கயனே.

(இ - ள்.) பிரமதேவன் அன்பு மிகுந்தவனாய், விபூதி உருத்திராக்ஷமணிந்துள்ள முனிவர்களது மாசை யொழிக்கத்தக்க ஆகாச கங்கையை வாவென்றழைக்க அது வந்து உதவியது. அந்த அலைவீசும் குளிர்ந்த தீர்த்தத்தினால் சிகரசிகாமணி நாதருக்கு அபிஷேகம் புரிந்து திவ்விய புஷ்பங்களினால் அருச்சனை செய்து பூசை செய்தனன், ஏழுலகத்தையும் சிருஷ்டித்த தாமரை மலரிலுள்ள பிரமன்.

50. மாதவர் கண்களி கூரம கிழ்ந்திதழ்
மாமலர் வந்தருநூல்
வேதமு ணர்ந்தவ னேசமு மங்கவன்
மேலிடு வந்தனைமே
லாதர வும்பய ஞல்வகை கண்டினி
யாதியோ டந்தமிலா
நாதனை யன்பொடு பூசைபு ரிந்திட
நான்முக தந்திடெனு.

(இ - ள்.) பூசை புரிந்த பிரமனைக் கண்டு கண்களிகூர முனிவர்கள் சொல்லுவார்கள். நாபிக் கமலத்தில் உதித்து, அரிய சாஸ்திரங்களும், நான்கு வேதமுமறிந்து, சிகரசிகாமணி நாதனை அடைந்து, அடியேங்களுக்காகப் பூசனை புரிந்ததும், அவர்மேல் பொருந்திய அன்பும், அதனுலே வரப்பட்ட ஆனந்தமும் கண்டோம். அப்படி நாங்களும் ஆதியந்தம் இல்லாத சிகரசிகாமணி நாதரை அன்பினுலே பூசிக்கும் விதிமுறையை அடியேங்களுக்குச் சதுர்முகனேஅருள் செய்ய வேண்டுமென்றனர்.

51. வேதமு முந்திய வாகம மும்புகன்
மேன்மையை யங்கவர்தாம்
போதம கிழ்ந்திடு மாறுரை தந்துயர்
பூசைபு ரிந்திடுவென்
ருேதிய கங்களி கூரவ கன்றனன்
ஓசையொ டைம்புலனும்
ஆதியு கங்களு மாழியு மண்டமு
மாரண முந்தருவோன்.

(இ - ள்.) வேதங்களையும், ஆகமங்களையும் அந்த முனிவர்கள் சந்தோஷிக்கும்படி உபதேசித்து, உயர்ந்த சிவபூஜை செய்யுங்கள் என்று கட்டளையிட்டுவிட்டுச் சென்ருர்; சப்த மோடு ஐம்புலன்களையும், நாலுயுகங்களையும் சப்த சமுத்திரங் களையும், அண்டங்களையும், வேதங்களையும் சிருஷ்டித்த பிரம தேவன்.

52. ஞானம டைந்திடு மாதர வுந்திய
நாடும ருந்தவரும்
வானவர் பங்கயன் வாவென வந்திடு
வானவ கங்கைதருந்
தூநறு மஞ்சன நாண்மல ருங்கொடு
சோதியை வந்தனைசெய்
தூனுயி ரென்புரு காவிறை யன்பரு
ளோதியி ருந்தனரே.

(இ - ள்.) சிவஞானத்தைப் பெறும் அன்புருகாநின்ற நினைக்க வரிய முனிவர்களும், மேலான மலர்ச்சியுடைய தாமரைப் பூவி லெழுந்தருளிய பிரமதேவன் வருகவென்ற மாத்திரத்திலேயே வரப்பட்ட ஆகாசகங்கையிலுள்ள சுத்தமான வாசனையுடைய தீர்த்தங்களால் அபிஷேகம் செய்து, அன்றலர்ந்த திவ்விய புஷ்பங்களால் சோதி சொரூபமான சிகரசிகாமணி நாதரைப் பூஜை செய்து, தேகமும், ஆத்மாவும், என்புகளும் உருக சிவனையன் பினாலே தோத்திரஞ் செய்தனர்.

53. பிரசம லர்ச்சதுர் முகனருள் பெற்றருள்
பெருகிய மெய்த்தவர்வாழ்
அரசவ னத்தொளிர் சிகரம ணிச்சுடர்
அருவுரு வத்திறையோர்
பரசும ளப்பரு பரசுத னைத்திகழ்
பரசுத ரித்தகரத்
துரனைய ருச்சனை புரியவெ ழுந்தன
னுரியச னக்குமரன்.

(இ - ள்.) தேனொழுகுங் கமலாசனனாகிய பிரமதேவன் அநுக்கிரகத்தினாலே சிவாநுக்கிரகம் மிகுதியும் பெற்ற மெய்ம் மையான தவத்தையுடைய நைமிசாரணிய முனிவர்கள் இருக் கப்பட்ட அரசவனத்தில் பிரகாசம் பொருந்திய சிகரசிகாமணி என்னும் அருட்பிரகாசமான அருவுருவத்திறையென்னும் சதாசிவ மூர்த்தியை ஒருவராலும் சொல்லப்படாத மகத்துவத்தைப் பெற்ற பரசென்னும் மழுவாயுதத்தைத் தரித்த கரத்தினையுடைய பலத்தைப் பெற்ற சிகரசிகாமணி நாதனை அருச்சனை செய்ய வேணுமென்று சனற்குமாரர் வந்தார்.

54. உரியச னற்கும ரனையெதிர் வுற்றிவ
ணுறைதரு மெய்த்தவரும்
தெரியும ருக்கியம் முதலவ ளித்தவர்
செறிதர வத்தவனு
மெரியுரு வத்தொளிர் சிகரம ணிச்சுடர்
இறையைய ருச்சனைசெய்
தரியக ளிப்புற வுடனுறை வுற்றன
ரரசவ னத்திலரோ.

(இ - ள்.) அப்படி வரப்பட்ட சனற்குமாரனை இந்த முனி வர்களெல்லாம் எதிர்கொண்டு அழைத்து அருக்கிய முதலான உபசாரங்கள் எல்லாம்செய்ய, வந்த சனற்குமாரனும் அக்கினி போலும் பிரகாசமான சிகரசிகாமணி நாதனை அருச்சனை செய்து மிகுந்த களிப்புடனே அரசவனத்தில் வாசமாயிருந்தார்.

55. நறைகமழ் பொற்கம லனதருள் பெற்றுறை
நவைதவிர் மெய்த்துறவோர்
அறைதரு மத்தல மருவுச னற்கும
ரன்னடி யன்புடனே
முறையின்வ ணக்கமொ டவனது சொற்படி
முயலும னத்தினராய்
இறையுமவர்ப்பிரி வின்னல முற்றருள்
இறைநிறை வைப்பெறுவார்.

(இ - ள்.) வாசனை வீசும் பொற்கமலத்தில் வாசஞ் செய்யும் பிரமதேவன் அநுக்கிரகம் பெற்ற குற்றமற்ற துறவிகளான நைமிய சாரணிய முனிவர்கள் அந்த அரசவனத்தில் வந்திருந்த சனற் குமர மகரிஷியின் பாதத்தில் அன்புடன் விதிப்படி தெண்டனிட்டு, அவரது சொற்படி நடக்கும் மனமுடையவர்களாய், க்ஷணநேரமும் அவரை விட்டுப் பிரியாது நன்மை பெற்று, அநுக்கிரக மூர்த்தி யாகிய சிகரசிகாமணி மூர்த்தியின் பேரானந்தத்தைப் பெறவேண்டு மென்றிருந்தனர்.

56. முனிவர்த மிச்சையு மவர்வினை யொத்தது
முனிவில்ச னற்குமரன்
இனிதுநி னைத்தவர் சிரமிசை நற்பத
வினைமலர் வைத்தருளால்
நனிதொடர் வுற்றிடு திரிமல மற்றிட
நவமொடு யிர்க்குயிராய்
தனியொளிர் தற்பர னிறையறி வைப்புணர்
தலைமை யுணர்த்தினனால்

(இ - ள்.) முனிவர்கள் கொண்ட இச்சைப்படி அவர்கள் வினையும் நீங்குங்காலம் வந்ததால், கோபமற்ற சனற்குமரர், அவர்கள் நன்மையுற நினைந்து தனது திருவடியைச் சிரமேல் வைத்து க்கிருபா நோக்கத்தோடு ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களும் நீங்கி, புதிதாகிய உயிர்க்குயிராய் ஒப்பற்ற பிரகாசமான தற்பர சொரூபத்தினிறைந்த பொருளை அறியு மறிவை அடையும்படியான தலைமையாகிய ஞானநுக்கிரகத்தை உபதேசித்தருளினார்.

57. உலகம யர்த்தனர் விரதம யர்த்தனர்
உடலம யர்த்தனரால்
தலைமைய யர்த்தனர் பொறிகள்செ லுத்திய
சலனம யர்த்தனரால்
நிலையினி றுத்திய வறிவும யர்த்தனர்
நிமலன்வ சத்தர்களாய்
சிலபக லுய்த்தய லுடன்வரு மெய்த்தவர்
சிவகதி பெற்றனரால்

(இ - ள்.) சனற்குமரர் அருளிச்செய்த சிவகதி பெறும் ஞான உபதேசத்தைக் கேட்ட நைமிசாரணிய ரிஷிகள் அந்த க்ஷணமே உலகாசாரத்தையும், விரதாதிகளையும், தேகாபிமானத் தையும், தங்கள் தலைமையையும், கருமங்களையும் மறந்தவர்களாய், சிகரசிகாமணி நாதரின் அருள் வசமாய்ச் சில நாள் சிவகதி நிஷ்டராய் இருந்து தேறிச் சிவசாயுச்சயமுற்றனர்.

58. இனையவ ரித்தகை யுயர்கதி பெற்றபின்
னெழில்புனை சக்கரமால்
வினையற நித்திய அரசவ னத்துறை
விமலனை நற்பரிவால்
நினைபவர் சிந்தனை யினியவ ரருச்சனை
நியமமோ டுய்த்தருளான்
முனைவரி லுத்தம மருவிய நிச்சய
முதன்மை யடைந்தனனால்

(இ - ள்.) நைமிசாரணிய ரிஷிகள் மோக்ஷமடைந்தபின் அழகிய சக்ராயுதமேந்திய திருமால், வினைநீங்க நித்தியத்துவமான அரசவனத்தில் எழுந்தருளியிருக்கும் சிகரசிகாமணி நாதனை, அன்பினாலே நினைப்பவர் இருதயத்திலே இருக்கும் சிவனை விதிப்படி அருச்சித்து அவர் அநுக்கிரகத்தினாலே தேவர்களுக்கு முதல்வனாய் சிருஷ்டி, ஸ்திதி இரண்டுக்குங் கர்த்தாவான முதன்மையடைந்தார்.

59. இரவிம திக்கதி ரனல்பவ னத்துட
னியமனி டிக்கொடியோன்
அரசவ னத்துறை யடிகளை யருச்சனை
யடைவின டாத்தினர்தம்
வரமருள் பெற்றனர் பிருகுமு தற்பலர்
மனமொழி மெய்ச்செயலாற்
பரவிந லத்தினை மருவினர் சுற்றிய
பலவினை யற்றனரால்.

(இ - ள்.) விஷ்ணு வரம் பெற்றபின் சூரியன், சந்திரன், சுவாலை வீசும் அக்கினி, வாயு, இயமன், இடிக்கொடியுடைய தேவேந்திரன் முதலாகப் பலர் அரசவனத்தில் எழுந்தருளியிருக்கும் சிகரசிகாமணி நாதனை விதிப்படி அருச்சனை செய்து, அவனருளால் வேண்டிய வரங்களைப் பெற்றனர். பின் பிருகு முதலான ரிஷிகள் வந்து மனோவாக்குக் காயத்தினால் ஒருமித்துச் சிகரசிகாமணி நாதனை விதிப்படி அருச்சித்து, வேண்டிய நன்மைகள் பெற்றுத் தங்களைத் தொடர்ந்த செனன துக்கத்தை அகற்றிக் கொண்டனர்.

60. பிரமன்மு தற்பல கடவுளர் தத்தம
பெருகுநெ றிப்பரிவால்
அரசவ னத்துறை யடிகளை யர்ச்சனை
யவர்கள்ந டத்தியபேர்
உரைசெய்து முத்தலை யறுகரம் வெற்றிக
ளுடையவ ரக்கர்பிரான்
வரமுட னித்தல மிசைதனி லுற்பவ
வழியை யுணர்த்திடுவாம்.

(இ - ள்.) பிரமன் முதலான தேவர்களும், முனிவர்களும், தங்கள் தங்கள் நன்மையால், மிகுந்த அன்பினால் அரசவனத்தில் எழுந்தருளிய சிகரசிகாமணி நாதனை அர்ச்சனாதிகளுஞ் செய்து, சிவமோக்ஷம் முதலானதைப் பெற்ற விருத்தாந்தங்களைச் சொல்லி இனிமேல் மூன்று தலைகளும், ஆறு கைகளும், வெற்றிப் பாடுடைய ராக்ஷதர்களுக்கு ராஜனான காரண்டன் என்பவன் இந்த அரச வனத்தில் வரம் பெற்றதும், பிறந்த வரலாறும் இனிச் சொல்லத் தொடங்குவோமென்று சனற்குமார பகவான் முனிவர்கட்குச் சொல்லத் தொடங்கினார்.

காருண்டன் உற்பவச் சருக்கம்
வேறு

61. தேசுடைய நைமியவா ரணியத்திற்
றிருமுனிவர் தெய்வ வேதத்
தோசையெழு நான்முகத்தோன் சொல்வழிவந்
துயர்நிலையை யுற்றா ரன்றிப்
பேசுமிர விக்கடவுண் முதலோரும்
வினையொழித்த பெருமை கேட்டு
மாசகன்ற மிருகண்டு மாமுனியு
மந்தவனம் வந்து சார்ந்தான்.

(இ - ள்.) பிரகாசமுடைய நைமிசாரணியத்துச் சிறப்பான முனிவர்களெல்லாரும் தெய்வீகம் விளங்கிய வேதங் கோஷிக்கா நின்ற நான்கு முகத்தினையுடைய பிரமதேவன் சொல்லியபடியே அரசவனம் வந்து மேலான மோக்ஷமுற்றனர். அன்றியும், சூரியன், முதலான தேவதைகளும் வந்து பூசித்துத் தீவினைகளை நீக்கிக் கொண்டார்கள் என்னும் பெருமையைக் கேட்டுக் குற்ற மற்ற மிருகண்டு மகரிஷியானவர் அரசவனம் வந்து சேர்ந்தார்.

62. வந்துருகு நெஞ்சமுடன் சிகரசிகா
மணிதன்னை வணங்கி யேத்திச்
சந்தமறை யாகமத்தின் வழிதவரு
தருச்சனைகள் சந்தி தோறும்
முந்தியநே சங்கொண்டு முடித்துமலர்ப்
பதமிதய முளரி வைத்துச்
சிந்தைதள ராதரிய தவங்கடனை
நேசமுடன் செய்து வந்தான்.

(இ - ள்.) மிருகண்டு மகரிஷியானவர் நெஞ்சிலே சிகர சிகாமணி நாதனை வணங்கித் துதித்து, அழகிய வேதாகமப்படி தவறிலாத அருச்சனையை மூன்று காலமும் செய்து முந்திய முதன்மையான அன்பினுலே நிறைவேற்றி அரசவனப் பெருமானது சீர்பாதத்தைத் தன்னுடைய இதயமென்னும் தாமரை மலரிலே வைத்துச் சித்தத் தளர்ச்சியில்லாமல் அரிய தவத்தினை நியமமாக நடத்திக் கொண்டு சுகத்திலிருந்தார்.

63. முன்னிருந்த முனிவர்களுந் தவப்பெருமை
யறிஞர்கள் மொழியைக் கேட்டுப்
பின்னணைந்த மாதவருஞ் சரியைகிரி
யாயோகம் பெருகு ஞான
மன்னியமா தவங்கள்புரிந் திருந்தார்க
ளந்நாளில் மலினம் நீங்கு
நன்னினைவான் மிருகண்டு நன்முனிவ
னந்தவனம் நண்ணி ஞனல்

(இ - ள்.) முன்னே வாசமாயிருந்த முனிவர்களெல்லாரும் வந்தவராகிய மிருகண்டு முனிவரின் தவப்பெருமையைக் கூற, அது கேட்டு மகாதவத்தையுடைய அறிஞர்களும் பின், அங்கு வந்து சரியை, கிரியை, யோக, ஞானமென்னும் அரிய தவங்கள் செய்து கொண்டிருந்தார்கள். அந்த நாளையிலேதான் குற்றம் நீங்கின நல்ல இருதயத்தையுடைய மிருகண்டு முனிவரும் அந்த நல்லவனத்திற்கு வந்து சேர்ந்தார்.

64. நண்ணியரன் திருவடியை நினைந்தொருபா
லிருந்தளவின் நவையை யார்க்கும்
பண்ணுமிராக் கதர்குலத்துப் பாவையர்கள்
கன்னியராம் பருவ மானோர்
திண்ணியவஞ் சனைகொடிய கோவதையென்
றிருவர்தவச் செல்வன் முன்வந்
துண்ணினைவால் வணங்கியெமக் கரியதிறற்
புதல்வர்தமை யுதவி டென்றார்.

(இ - ள்.) மிருகண்டு முனிவர் சிகரசிகாமணி நாதர் திருவடியை விரும்பிச் சிந்தித்துக் கொண்டு ஒரு பக்கத்தில் பர்ண சாலையிலிருக்கும் சமயத்தில், ஒருநாள், குற்றத்தை அனைவருக்கும் செய்யும் ராக்ஷதர் குலத்தில் தோன்றியவர்கள், பருவமடைந்த கன்னியர்கள், வஞ்சனை, கோவதை என்னும் பெயருடையவர்கள் இருவர், தவச்சிரேஷ்டரான மிருகண்டு முனிவர் முன்வந்து, உள்ளத்தில் நினைத்து, அவரை வணங்கி, சுவாமிகளே! எங்களுக்கு அரிய பலம் பொருந்திய புதல்வரைக் கொடுக்க வேண்டும் என்றார்கள்.

65. என்றபோ தருண்முனிவன் விழித்தவர்கள்
இராக்கதிகள் என்ன வுன்னி
நின்றவிவ ரைப்பார்த்து நேர்நின்ற
வஞ்சனைக்கு நிலங்க டன்னில்
வென்றிபுனை யொருபுதல்வன் பின்னுண்டா
மென்றவர்க்கு விடையும் நல்கி
தன்றகைமைச் சாலையடைந் தான்சின்னா
ளிவ்வண்ணந் தணந்த பின்னர்.

(இ - ள்.) அவர்கள் கூறிய மொழியைக் கேட்ட மிருகண்டு முனிவர் கண்விழித்துப் பார்த்து இவர்கள் இராக்கதிகள் என்று நினைத்து, அவர்களைப் பார்த்து, தன் எதிராக இருக்கும் வஞ்சனை என்னும் பெண்ணிற்குப் பூலோகத்திலே வெற்றி பெறும்படியான ஒரு புத்திரன் பின்னால் உண்டாகுமென்று கூறி அவர்கட்கு விடை கொடுத்தனுப்பி விட்டு, பெருமையுடைய தன் பர்ணசாலையிலிருந் தார். இவ்வாறு சில தினங்கள் கடந்தபிறகு,

66. அருமுனிவர் மாணுக்க ரநேகருள
ரவர்தமக்கு ளருநூன் மான்ருேல்
மருவுதிரு மார்பத்தோர் பிரமசா
ரியையழைத்து மங்கை பாகர்க்
கொருமையருச் சனைபுரிதற் குதவுமலர்
கொடுவாவென் றுரைத்து விட்டான்
திருவளரு நந்தனத்திற் றிருந்துநெறி
யாங்கவனுஞ் சென்று சேர்ந்தான்.

(இ - ள்.) அரிய மிருகண்டு முனிவர் சீடர்கள் அநேகர் உண்டு. அவர்களுக்குள்ளே முப்புரிநூலும், மான்ருேலுந்தரித்த மார்பினையுடைய ஒரு பிரமசாரியை அழைத்து, பார்வதி பரமசிவனை மனேவாக்குக் காயங்கள் ஒருமைப்படும்படி அருச்சனை செய்வதற்குப் புஷ்பமெடுத்துக் கொண்டு வாவென்றனுப்பினுர்; அவனுமப்படியே சிறந்த நந்தவனம் போய்ச் சேர்ந்தான்.

67. அவ்வளவில் வஞ்சனையுங் கோவதையு
முதலான வரக்கி மார்கள்
வெவ்வியகொல் லரவமெழ நந்தனத்திற்
புகுந்தீண்டி வேர்க ளோடு
கவ்வையுற நந்தனத்தைப் பறித்துநெடுங்
ககனத்திற் கதுவ வீசி
எவ்வமுற வொடித்தடித்துச் சேரவழித்
தேதத்தம் இருக்கை சேர்ந்தார்.

(இ - ள்.) பிரம்மசாரி நந்தவனம் சென்ற சமயத்தில் வஞ்சனை, கோவதை முதலான பல ராக்ஷசிகள் அந்த நந்தவனத் திற்கு வந்து, கொடூரமான கொல்லென்ற சப்தமிட்டு ஆரவாரித்து வேர்களோடு செடிகளைப் பறித்து ஆகாயத்தில் வீசியும், குற்றமுற ஒடித்தும் இப்படிப் பலவிதமாக அழித்துவிட்டுப் பின்னர்த் தங்கள் தங்கள் இருப்பிடஞ் சென்றனர் .

68. சென்றணைந்த பிரமசா ரியுங்கண்டு
கலங்கியுளந் திகைத்து வாடி
நன்றுதெரி மலர்கிடையா துலைந்துதிரிந்
தொருசார்பில் நல்ல வாச
மொன்றுமல ரெடுத்துக்கொண் டுயர்பூசை
முன்னமுடித் துளையும் நெஞ்சங்
கன்றியிருந் திடுமிருகண் டெனுமுனிவன்
கண்முன்னர் கடிது வந்தான்.

(இ - ள்.) அப்படி அழித்தது கண்டு பிரம்மசாரி மனம் கலங்கித் திகைத்துத் தளர்ச்சியடைந்து, நல்ல புஷ்பங்கள் எடுக்க முடியாமல் வருந்தித் திரிந்து, வேறொரு வனத்தில் நல்ல வாசனையுடைய புஷ்பங்களை எடுத்துக் கொண்டு, காலந்தவறுமல் முன்னமே பூசையை முடித்துக்கொண்டு இன்னம் வரவில்லையே என்று மனம் வருந்தியிருக்கும் மிருகண்டு மகரிஷி முன்னர் அதிவேகமாக வந்து சேர்ந்தான்.

69. வந்தவனைப் பார்த்துநீ தாழ்ப்பானே
னெனநந்த வனத்திற்கண்ட
வெந்துயரந் தருமியல்பை யவன்விளம்ப
முனிசீறி விரைவின் வாரா
தந்தவிராக் கதிகள்தம தாடல்தனை
விரும்புநீ யவர்கள் தம்முட்
சந்தமுலை வஞ்சனைக்குத் தனையனு
வாயென்று சபித்தா னன்றே.

(இ - ள்.) காலந்தாழ்த்துவந்த சீடனைப் பார்த்து, பூசைக் காலம் தப்பி வந்த காரணம் யாதென்று கேட்க, அவன் நந்தவனத்தில் தான்கண்ட கொடியதுபரம் தரும் செயலையும், பின் தேடியலைந்து கொணர்ந்ததையும் கூறினன். அதுகேட்டு மிருகண்டு முனிவர் கோபங்கொண்டு, நீ விரைவில் வாராமல் அந்த அரக்கிகளின் விளையாட்டை விருப்பமாகப் பார்த்துக் கொண்டிருந்த படியினுல் அவர்களுள் அழகிய தனபாரத்தை உடைய வஞ்சனை என்பவளுக்குப் பிள்ளையாய்ப் பிறக்கக் கடவாய் என்று சாபமிட்டார்.

70. அச்சாபங் கேட்டபோ தாவிதளர்ந்
தாங்கவனு மையா பொய்யா
விச்சாபந் தருவினைகள் தொலையுநா
ளெந்நாள்நீ இயம்பா யென்ன
மெய்ச்சாவு தவிர்ந்தவள்பால் முத்தலையோ
டாறுகரம் விளங்கத் தோன்றி
நச்சான கொடுமைபுரிந் துலகெல்லாம்
பலநாளும் நடுங்க வாழ்வாய்.

(இ - ள்.) மிருகண்டு முனிவர் சாபத்தைக் கேட்டபோதே ஜீவன் தளர்ச்சியடைந்து, அந்தப் பிரம்மசாரி, ஐயா, இந்தப் பொய்யாகாத சாபம் நீங்குங் காலத்தை அநுக்கிரகம் செய்ய வேணுமென்று கேட்க, முனிவர் இந்தத் தேகத்தை யொழித்து, வஞ்சனையென்னும் அரக்கி வயிற்றில், மூன்று தலைகளையும், ஆறுகைகளையுமுடைய பிள்ளையாகப் பிறந்து, விஷம் போலும் கொடுமைகளைச் செய்து, பலநாள் உலகினர் உளம் நடுங்கும்படி வாழ்ந்திருப்பாய்.

71. அந்நாளி லொருவேந்த னடற்சூல
பாணிதன தருளி னாலே
முன்னுடற் சமருண்பான் மூண்டுகணிச்
சிப்படையோன் முதல்வன் பால்பெற்
றுன்னுண்மை தனையடக்கி முச்சிரமுந்
தடிந்திடுவ னுலைவு நீங்கிப்
பொன்னுடர் பதம்பெறுவா யெனப்புகன்றுன்
அருமறைதேர் புனிதன் வாயால்.

(இ - ள்.) அப்படி வாழ்கிற நாளிலே ஒரு அரசன் சூலம் பிடித்த சிவபெருமான் அருளால் உன்னிடம் யுத்தத்திற்குவந்து, ஜயித்துப் பின்னும், சிவபெருமானிடம் சூலாயுதம் பெற்ற வந்து, வல்லமையை அடக்கி, மூன்று சிரங்களையும் துணித்திடுவன். அப்போதுவருத்தம் நீங்கித் தேவபதவியை அடைவாயென்று கூறினுர்.

72. அக்காயந் தனைநீங்கி யந்தணனு
மறிவுதொலைந் தந்தோ வந்தோ
எக்காலுங் கொடுமைபுரி யிராக்கதர்தங்
குலந்தன்னி லெஞ்சா வஞ்ச
மைக்காரை நிகரோதி கருங்கயற்கண்
வஞ்சனைதன் வயிற்றிற் சென்று
புக்கான நலம்பொன்றி யீரைந்து
மாமதியும் போன பின்னர்.

(இ - ள்.) சாபம் பெற்ற பிரம்மசாரி தன் பிராமண சரீரத்தை யோகசாதனையினால் விட்டு நீங்கி, பிராமணன் என்கிற அறிவும் தொலைந்து, ஐயையோ எந்தக்காலமும் கொடிய பாவங்கள் செய்யும் அரக்கர் குலத்திலே வஞ்சனை நிரம்பிய கருமேகம் போன்ற கூந்தலும், கரிய கெண்டைமீன் போன்ற விழியையு முடைய வஞ்சனையென்னும் ராக்ஷசி வயிற்றிலே போய்ச் சேர்ந்து நன்மையெல்லா மொழிந்து பத்து மாதமுங் கடந்த பின்னர்.

73. முத்தழல்க ளெழுந்தனைய செம்பங்கிச்
சிரங்களொரு மூன்றுந் தோன்றுங்
கைத்தலங்க ளோராறும் பிறையனைய
யெயிற்றினமுங் கருகு மேக
மொத்ததிறற் காத்திரமும் பார்த்தவர்கள்
கேட்டவர்கள் உள்வோ ருள்ளம்
பித்தனைய தருமமுடன் பெருந்தவங்கள்
நிலைகுலையப் பிறந்தா னன்றே.

(இ - ள்.) வஞ்சனையென்னும் அரக்கியின் கருப்பத்திலிருந்து காருகபத்தியம், தக்ஷிணாக்கினி, ஆகவனீயம் என்னும் முத்தழல் வளர்ந்ததுபோல, சிவந்தமயிர்களையுடைய மூன்று சிரங்களும், விளங்கும் ஆறு கைகளும், பிறையையொத்த சிங்கப்பல்லும், கரியமேகம் போன்ற தேகமும், பார்த்தவர்கள் கேட்டவர்கள் நினைத்தவர்கள் உள்ளமும் பித்துக் கொண்டவர்கள் போலாகவும், பெரிதாகிய தவங்கள் நிலைகுலையவும் பூமியில் ஜெனனமானான்.

74. வடவையென்ன மேன்மேலும் வளர்வதுபோற்
புவிவருந்த வந்த வால
விடமிகவும் வளர்வதுபோல் விடையாள
னடியின்மேல் விருப்ப மில்லோர்
உடையபெரு வினைத்தொகுதி வளர்வதுபோல்
வளர்ந்துவரி யுண்டு தோன்றும்
தடமுகிலி நிறந்தன்னுற் காருண்ட
னெனும்பெயருந் தரித்த பின்னர்.

(இ - ள்.) கொடுமையோடு பிறந்த அவன், வடவாமுகாக்கினி வளர்வது போலவும், பூலோகம் வருந்த வந்த கறுத்த விஷம் வளர்வது போலவும், ரிஷபவாகனனுகிய சிவபெருமான் சீர்பாதத்தில் நேசமில்லாதவர்கள் வினைவளர்வது போலவும், வளர்ந்து வந்தான். சமுத்திரஜலத்தைக் குடித்த மேகம் போல, அவன் தேகம் இருந்த படியால் அவனுக்குக் காருண்டன் எனப் பெயரிட்டனர்.

75. கொலைகளவு கட்காமங் குறிக்கரிய
விரதமாக் கொண்டோன் சீற்ற
மலையனைய வாளரக்கர் எண்ணிறந்த
சேனையெல்லாம் வந்து சூழத்
தலைமைபுனைந் திடவிபங்கள் தேர்பரிமா
வளவின்றித் தழைக்க நாளும்
கலகம்விளைத் துயர்பிறையூர் குன்றயலோர்
நகரியினிற் களிப்பால் வைகி.

(இ-ள்.) கொலைசெய்தல், திருடல், கள் குடித்தல் விபசாரம் செய்தல் ஆகியவற்றை விரதம்போல், நிதமுஞ் செய்துகொண்டு, கோபமுடைய மலைபோலுடலையுடைய வாள்பிடித்த அரக்கர்கள் கணக்கில்லாதவர்கள் தன்னைச் சுற்றிக் கொள்ளத் தலைமைபெற்று, யானைகள், தேர்கள், குதிரைகள் முதலியன அளவில்லாமல் வந்து சேரவும், நாளுக்குநாள் கலகங்களைச் செய்து கொண்டு, உயர்ந்த பிறையூர் என்னும் குன்றுக்கருகில் ஒரு பட்டணமுண்டாக்கி, அந்த அரச வனத்துக்கு அருகிலே சந்தோஷமாக இருந்தான்.

76. பன்னுமறை தவத்தோர்கள் பன்னசா
லைகடன்னைப் பறித்தெ டுத்தும்
வன்னிவளர் குண்டம்வே திகைகடனைச்
சிதைத்துநறு மலர்க ணல்கும்
நன்னலமார் நந்தனங்க ளழித்துமெழிற்
பசுநிரைகள் நடுக்கங் கண்டும்
இன்னல்பெற மானிடரைக் கொலைசூழ்ந்தும்
பிறர்மனைபால் இன்பம் வைத்தும்.

(இ - ள்.) வேதங்களைக் கூறும் தவசிகளின் பர்ணசாலைகளை அடியோடே பிடுங்கி எறிந்தும், அவர்களது அக்கினிகுண்டங்களையும், வேதிகைகளையும் அழித்தும், வாசனையுடைய புஷ்பங்கள் மலரும் நந்தவனங்களை அழித்தும், அழகிய பசுக்கூட்டங்களை நடுங்கத் துரத்தியும், வருத்தமுற மனிதர்களைக் கொலைசெய்தும், அன்னிய ஸ்திரிகள்பால் இச்சைகொண்டு அக்கிரமச் செயல்களையும் செய்துவந்தான்.

77. மறைவழக்க மறத்தரும வழிகுன்ற
மனுநூலின் வரம்பு சாயப்
பொறைநிறையென் பதுபுவிமேற் பொய்மை
பெற
மென்மையே பொலிந்து வீங்கு
முறைமையற மாமுகிலும் பெய்யாமன்
மறுத்தேக முந்நீர் வையத்
துறைபவர்கள் துயரெய்த விளைவளமுங்
குன்றிடுமா றேங்கி வாழ்ந்தான்.

(இ - ள்.) வேத நீதிமார்க்கம்நீங்க, தருமத்தின் வழிகுறைய, மனுநீதி சாஸ்திரங்களைக் கடந்து போக, பொறுமை, சத்தியம் என்பவை இரண்டும் பூமியில் பொய்யாக மென்மையாய்ப் பிரகாசிக்கும் சன்மார்க்கத்தின் முறை எள்ளளவும் இல்லாமற்போக, சிறந்தமேகம் மழை பொழியாமல் போக, பூமியில் இருக்கப்பட்டவர்கள் துயரமடைய, விளையப்பட்ட பலவகைத் தானியங்களும், பதார்த்தவகைகளும், விளைவுகளும் குறையும்படி அநீதிசெய்து மேலாக வாழ்ந்திருந்தான்.

78. ஆற்றுமன் முனிவரெல்லா மரசவனத்
தணுகித்தம் மடியார்க் கன்றித்
தோற்றாத பரஞ்சோதி சிகரசிகா
மணிதன்னைத் தொழுது வீழ்ந்து
நீற்றாய்வெஞ் சினச்செங்கண் ணேற்றாயெம்
துயரத்தை நினைந்து நீயே
மாற்றாத போதுய்ய வகையுண்டோ
வென்றிரங்கி வழுத்திச் சொன்னார்.

(இ - ள்.) காருண்டனுடைய செயல்கள் பொறுக்கமாட்டாமல் முனிவர்கள் எல்லாரும் அரசவனம் வந்து, அடியார்களுக்கு அல்லாமல் மற்றவர்கட்குத் தோற்றாத பரஞ்சோதியாகிய சிகர சிகாமணி நாதரைத் தொழுது வணங்கித் திருமேனிமீது விபூதி பிரகாசமுடையவரே! கொடிய கோபத்தையும், சிவந்தகண் களையுமுடைய ரிஷபவாகனரே! நாங்கள் படுந்துயரத்தை நினைந்து நீ தீர்க்காவிடில் பிழைக்க வழியுண்டோ என்று இரங்கித் துதித்து விண்ணப்பம்செய்துகொண்டனர்.

79. முன்னவர்கள் சொன்னபொழு தெம்மிறைவ
னருளாலே முனிவர் கேண்மின்
கொன்னுனைவே லாற்சூரைக் கடிந்தேம
கூடத்திற் குகனி ருந்தான்
அன்னவன்முன் அறைந்திடுமின் னவன்செயலால்
அரக்கனுயிர் அழிய நீருந்
துன்னியவித் துயரம்விடு மெனவாக்கை
யிலாமாற்றந் தோன்றிற் றன்றே.

(இ - ள்.) முனிவர்கள் துதித்துக் கூறியபொழுது, சிகர சிகாமணி நாதருடைய அநுக்கிரகத்தினாலே, ‘முனிவர்களே! கேளுங்கள். கொலை செய்தற்குரிய கூரான வேலாயுதத்தினால், சூரபத்மனைச் சங்கரித்து ஏமகூட பர்வதத்தில் சுப்பிரமணியர் இருக் கிறார். அவரிடம் போய்ச் சொல்லுங்கள் அவர்செயலால் அந்தக் காருண்டன் உயிர்நீங்கும். உங்கள் துயரமும் போம், என்று அசரீரி வாக்கு அந்தரமார்க்கத்திற் பிறந்தது.

80. அப்பொழுதில் வானெழுந்த சரீரமிலா
மாற்றத்தை யறவோர் கேட்டு
மெய்ப்பொருளை விடையானை வேதநா
தனைவணங்கி விடையும் பெற்றுச்
செப்பரிய மகிழ்ச்சியுட னுங்கவர்க
ளெல்லோரும் தீரா வஞ்சப்
பொய்ப்பகைவன் சனற்குமர னச்சிரமத்
தடுத்தவனைப் போற்றிக் கண்டார்.

(இ - ள்.) அசரீரி வாக்கியத்தை முனிவர்கள் கேட்டுச், சந்தோஷப்பட்டு, உண்மைப்பொருளான சிகரசிகாமணி நாதரை, ரிஷப வாகனமுடையவரை, வேதநாதரான சிவனை வணங்கி, விடை பெற்றுக்கொண்டு, சொல்லுதற்கரிய மகிழ்ச்சி யோடு முனிவர்கள் எல்லோரும் ஏமகூட பர்வதம் செல்லப் புறப்பட்டு, வழியில் நீங்காத வஞ்சனையாகிய பொய்க்குப் பகை வனுகிய சனற்குமாரபகவானின் ஆச்சிரமம் கண்டு, அவரைத் துதித்து நின்றார்கள்.

81. இருளகன்ற முனிவர்வரச் சனற்குமர
பகவானு மெதிர்கொண் டேத்தித்
தருமுபசா ரங்கொடுத்து மகிழ்ச்சியுட
னிருந்தளவில் தவத்தோர் தாமும்
அருள்விளங்கு ஞானமுனி யடிபோற்றி
யயில்வேலா லகிலங் காத்த
முருகனுத யத்தியல்பை மொழியென்ன
முனிவரனு மொழிய லுற்றான்.

(இ - ள்.) ஆணவமென்னும் இருள் நீங்கிய முனிவர்களின் வருகையைக் கண்டு, சனற்குமாரனும் எதிர்கொண்டு துதித்து உபசாரஞ் செய்து மகிழ்ச்சியுடனிருந்தார். அப்படியிருக்குஞ் சமயத்தில் முனிவர்களும், சனற்குமார பகவானது திருவடிகளைப் போற்றி, கூரிய வேலாயுதத்தால் பூலோக உபாதைதீர்த்து ரக்ஷித்த ஆறுமுகப் பெருமானது உற்பத்தி வரலாற்றை அடியேங்களுக்கு அநுக்கிரகஞ் செய்ய வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய அதுகேட்டுச் சனற்குமாரர் சொல்லத் தொடங்கினார்.

82. தக்கன்மகந் தொலேத்தழித்த பின்னுமையாள்
மலேயரையன் தனேய ளாகி
மிக்கதவம் புரிந்திருந்தாள் நதிமதியந்
தவழ்சென்னி வேணி யானுந்
தொக்கதவ யோகடைந்தார் அசுரர்குரு
வொருமடந்தை தோன்ற வென்ன
அக்கணத்து ளொருமடவா ளெதிர்நின்றாள்
மாயையாம் அவள்தன் பேரும்.

(இ - ள்.) சிவனே நிந்தனே செய்த தக்கனது யாகத்தைச் சிவபெருமான் வீரபத்திரராலே அழிப்பித்த பின், ஈஸ்வரி தக்கன் மகளெனும் பெயரைமாற்ற பர்வதராஜன் குமாரத்தியாக அவதரித்து மேலான தவஞ்செய்து கொண்டிருந்தாள். அப்போது கங்கையையும், சந்திரனேயும் தரித்த சடாபாரத்தையுடைய சிவபெருமான் யோகத்திலிருந்தார். அப்போது சுக்கிரபகவான் ஒரு பெண் பிறக்க வேண்டுமென்று தியானிக்க, அப்படியே ஒரு பெண் ராக்ஷச ராஜாவின் குமாரத்தியாகப் பிறந்தாள். மாயை என்னும் அவளுக்குச் சுக்கிரபகவான் அஷ்டமாசித்திகளேயும் உபதேசித்துச், சகலவித்தைகளேயும் கற்பித்தார்.

83. அங்கவளேப் பார்த்துன்பால் அரும்புதல்வ
ராலயன்மால் அண்டர் கோமான்
தங்கள்மிகை யொழித்திடுதல் வேண்டும்நீ
காசிபனேச் சார்தி யென்ன
வெங்கதிர்வேல் விழியாளும் காசிபன்பால்
அடுத்தவன்மேல் வியன்பூ வாளி
பொங்கியுறத் தவமழித்து மதனூல்
விதங்காட்டிப் புணர்ந்தா ளன்றே.

(இ - ள்.) சகலமுங் கற்ற மாயையைப் பார்த்துக் குருவாகிய சுக்கிராச்சாரியார், பெண்ணே! உன்னிடத்தில் அரிய புத்திரர்கள் பிறக்க வேணும், அந்தப் பிள்ளேகளால் பிரம்மா, விஷ்ணு, தேவேந்திரன் முதலியோருடைய பெருமை அழிய வேண்டும். நீ காசிபப் பிரம்மாவைச் சேர்ந்து புத்திரர்களேப் பெறக்கடவா யென்ன, அதுகேட்டு வேல்போன்ற விழியுடைய மாயையானவள் காசிபனிடஞ் சென்று அவர் பேரில் மன்மத பாணம் பொழிய தபசை அழித்துத் தன்வசமாக்கி மதனுகமப்படி கலந்திருந்தாள்.

84. புணர்ந்தபோ தங்கவள்பால் திறற்சூர
பத்மாவும் பொருவில் வீர
மணந்தவா ளசுரர்களு மெண்ணிறந்த
வெள்ளமுடன் வந்து தோன்றிக்
குணங்களவு கொலையாதி கொடுமைபுரிந்
துலகையெலாம் குலைப்பா னங்கோர்
கணந்தன்னின் மயனையழைத் தவன்மகளைத்
தான்மணக்கக் கருதிக் கேட்டான்.

(இ - ள்.) மாயையும், காசிபரும் கலந்து அவளிடம் சூரபத்மன், சிங்கமுகன், தாரகன், அசமுகி என்னும் புத்திரர் களும், அவர்களோடு பல மிருகங்கள், பட்சிகள், அநேகவெள்ளம் சேனைகளும் பிறந்தார்கள். அவர்கள் குணமே கொலைகளவாதிய பஞ்சமாபாதகங்களைச் செய்தலுமாம். சூரபத்மன் மயனை அழைத்து, 'உன் மகளை எனக்கு விவாகம் செய்து தரவேண்டும்' என்று கேட்டான்.

85. ஆங்கவனு மெழிற்பத்ம கோமளையாந்
தன்மகளை யருளப் பெற்றுங்
கோங்கரண முடையதொரு அரணுண்டாக்
கென்றுரைப்ப வுமைபா கற்குப்
பாங்குபுரி யவிகொடா மகேந்திரன்றன்
தலைதடிந்து படைபூ தங்கள்
வாங்கியருங் கடல்நாப்பண் ணெறிந்ததிட
ராமென்ப மனத்துட் கொண்டு.

(இ - ள்.) மயனும் சம்மதித்து அழகிய பதுமகோமளை என்னுந் தன்னுடைய மகளை விவாகஞ் செய்து கொடுக்கப் பெற்றுக் கொண்டு, மீண்டும் மயனை நோக்கி ஓங்கிய மதில்களையுடைய கோட்டைகளும் பட்டணமும் உண்டாக்கித்தர வேண்டுமென்று கேட்க, மயனும் முன்னாள் பரமசிவனுக்கு அவிர்ப்பாகங் கொடாமல் யாகஞ் செய்த மகேந்திரனது தலையை வெட்டிப் பூதங்கள் கொண்டு வந்து போடப்பட்ட அரிதாகிய சமுத்திரத்தின் நடுவிலே இருக்கிற திடரே அதற்கு ஏற்றதென மனத்துள் எண்ணினன்.

86\. ஆறிரண்டா யிரமான யோசனையா
லந்நகரம் ஆக்கிப் பின்னர்
மாறிகந்த மகேந்திரமாம் புரியென்று
பெயர்நிறுவ மயற்கு நன்மை
கூறியட லசுரேசன் அசுரருடன்
குடிபுகுந்து குலவி வாழ்வான்
வேறெதிர்ந்தார் தமைக்களைந்து விண்ண
வர்க்குக்
கடுந்துயர வேலை யீந்து.

(இ - ள்.) அத்திடரில் மயன் பன்னிரண்டாயிரம் யோசனை அகலநீளமுள்ள பட்டணம் உண்டாக்கி, பின்பு பகைவரில்லாத அந்நகரத்திற்கு மகேந்திரபுரி எனப் பெயர் இட்டுக் கொடுக்கப் பெற்றுக்கொண்டு, அந்த மயனுக்கு நன்மொழிகள் கூறிப் பின்னர் அநேக அசுரர்களும், சேனைகளுமாகச் சூரபத்மன் அதில் சென்று குடியிருந்து பிரகாசமாக வாழ்ந்து கொண்டிருப்பவன் திக்கு விஜயஞ் செய்யப் புறப்பட்டு எதிர்த்தபகைவரை ஜெயித்து, விண்ணவர்க்குக் கடுந்துயரத்தைக் கொடுக்கக் கூடிய வேலை அளித்தான்

87\. இந்திரனை மாலயனை எல்லையற
விடுக்கண்கள் எய்தச் செய்து
நந்துபெருஞ் செல்வனு யிருக்குநா
ளிந்திரனும் நடுக்கங் கொண்டு
நொந்துமையாள் மணவாளர்ப் பணிந்தரிய
தவங்கள்பல நோலா நின்றான்
அந்தமிலா வவன்றேவி யந்நாளி
லவனிநீ ராடச் சார்ந்தாள்.

(இ - ள்.) சூரபத்மன், தேவேந்திரன், பிரம்மா, விஷ்ணு முதலியோருக்குத் துன்பஞ் செய்துகொண்டு, செல்வத்துடன் இருக்கும் நாளில், இந்திரன் நடுங்கி உருவம் மாறிப் பல தவங்கள் செய்துவந்தான். அவன் மனைவியாகிய இந்திராணி அப்போது பூலோகத்திலே தீர்த்தயாத்திரையாகவே வெளியில் புறப்பட்டு வந்தாள்.

88. அக்காலே யடற்சூர பன்மாவின்
பின்பிறந்தா ளசுர மாதர்
தொக்காக அசமுகியென் பாளிவளைக்
கண்டெமது துணைவர்க் காமென்
றிக்காரு மொழிச்சியைக்கை பிச்சத்தே
பிடித்தீர்க்க இரங்கித் தெற்குத்
திக்காத லாலலறி யரியரபுத்
திரற்கபயஞ் செப்பி னாளால்.

(இ - ள்.) இந்திராணியை அச்சமயத்தில், சூரபத்மன் தங்கையாகிய அசமுகி என்பவள் தோழிகளுடனே பூலோகத்தில் திரியும்போது கண்டு, இவள் நம் தமையனுக்கு ஆவாளென்று கரும்பு போன்ற மொழியுடைய அவளைத் தலைமயிரைப் பிடித்து இழுத்தாள். அப்போது அவள் தெற்குத் திசையிலே இருக்கப்பட்ட ஹரிஹரபுத்திரரை நோக்கியலறி அபயமிட்டாள்.

89. காரியாஞ் சாத்தன்ற னருள்வழியே
வீரமா காளன் வந்து
நாரிநீ யஞ்சலென விந்திரன்றன்
தேவியுறு நடுக்கம் மாற்றி
யேரிலா அசமுகி கரமுலைமூக்
கரிவாளா லீர்ந்து கூர்ந்த
வேரிசேர் கற்பகநாட் டுயர்ச்சியை
விடுத்தவரும் மீண்டு போனார்.

(இ - ள்.) இந்திராணி அலறிய சத்தங் கேட்டு ஹரிஹரபுத்திரர் அனுப்பிவைத்த, மகாகாளர் என்னும் 'சேனாதிபதி வந்து, இந்திராணியின் பயத்தை நீக்கி, அழகில்லாத ஆட்டுக் கொம்பை உடைய அசமுகியின் கை, முலை, மூக்கு இவற்றை வாளால் அறுத்து, மிகுந்த வாசனையுடைய கற்பகநாடாகிய தேவலோகத்திற்கு இந்திராணியை அனுப்பிவிட்டுத் திரும்பிப்போனார்.

90. அச்சமுகி தன்முன்னே னிடத்தணுகி
யிவையெல்லா மறைந்து காட்ட
வச்சிரனு ருலகழிப்பான் சூரனெழுந்
திடவவன்றன் மைந்தர் தம்முன்
நிச்சயமாந் திறற்பானு கோபன்தா
தையைவிலக்கி நிருத ரெல்லாம்
மெச்சவடற் சேனைவரச் சென்றமரர்
நாடவர்க்கு விருந்தா வீந்து.

(இ - ள்.) அறுபட்ட அசமுகி தமையனிடஞ் சென்று நடந்தவற்றைக் கூறித் தன் தேகத்தையுங் காண்பிக்க, சூரன் கோபித்து, இந்திரன் உலகத்தை அழிக்கப் புறப்பட்டான். அப்போது, அவன் பிள்ளையாகிய பானுகோபன் வந்து, வணங்கி, அவனை யுத்தத்திற்குப் போக வேண்டாமெனத் தடுத்து, அசுரர்கள் களிப் பெய்த பலம் பொருந்திய சேனைகள் சூழ்ந்து வர, தானே தேவலோகஞ் சென்று கொள்ளையிட்டு அசுரர்களுக்கு விருந்து சாப்பிடக் கொடுத்தான்.

91. வாசவன்றன் திருத்தேவி வானுலக
மடந்தையர்கள் வரம்பி லாதோர்
வீசுமணி யாரங்கள் வேண்டுவன
பலகொணர்ந்து விரைவின் வந்து
பாசமுடன் அசுரமா வைப்பணிய
பகர்தற் கொண்ணுத்
தேசுடைய அரமகளிர் தமைச்சிறையில்
வைப்பித்தான் சின்னு ளந்நாள்.

(இ - ள்.) பானுகோபன் கொள்ளையிட்டதுமன்றி, இந்திராணி, அரம்பை முதலிய தேவமாதர்கள் எண்ணிலாதவர்கள் பிரகாசம் பொருந்திய நவரத்னுபரணங்கள், முதலான திரவியங்களுடன் திரும்பிவந்து சூரபன்மாவைப் பணிய, அவனும் இந்திராணி முதலான சொல்லப்படாத அழகுடைய தேவமாதர் களைச் சிறைக்கூடத்தில் வைத்தான். அப்படியிருக்கிற நாளில்,

92. அனந்தநாள் தவம்புரியு மிந்திரனுக்
காதிதிரு வருளால் தோன்றி
மனந்தளரீர் நம்மாலோ ராறுமுகத்
தொருதனையன் வந்து தோன்றிச்
சினந்தவிரா வசுரர்தமை மாய்த்திடுமென்
றுரைத்தகலத் தேவர் கோமான்
கனந்தருமா லயன்முதலோர் கடவுளர்கள்
வடகிரிபாற் கரந்து கூடி.

(இ - ள்.) நெடுநாள் தவம்புரிந்து கொண்டிருந்த இந்திரன் முன் சிவபெருமான் மிக்க கருணையுடன் எழுந்தருளி, ''மனத்தளர்ச்சி வேண்டாம். நம்மிடத்தில் ஆறுமுகமுடைய ஒரு புத்திரன் தோன்றுவான். அவனாலே கோபம் நீங்காத அசுரர்களைச் சங்கரிப்போம்'' என்று திருவாய் மலர்ந்தருளிப் பரமசிவன் எழுந்தருளினார். தேவேந்திரன், கனம்பொருந்திய விஷ்ணு, பிரம்மா, முதலான தேவர்கள் ஒன்று சேர்ந்து மகமேருகிரிக்கு வந்தார்கள்.

93. அம்பிகைதன் னைஇறைவன் கூடும்வகை
யோகத்தை யகற்ற வெண்ணி
வம்பலரு மலர்வாளி மாமதனை
யேவவவன் மறுப்ப மீண்டு
மும்பரனை வரும்வேண்ட வவனுஞ்சென்
றியோகியர்போல் உறைந்தி ருந்த
சம்புவெதிர் செலமாட்டான் பின்னணுகிப்
பூங்கரும்புத் தனுவை வாங்கி.

(இ - ள்.) தேவர்கள் ஆலோசித்து, உமையவளைப் பரமசிவன் சேரும்படி அவரது யோகத்தை நீக்க வேண்டுமென்றெண்ணி, வாசனை வீசும் புஷ்பபாணமுடைய மன்மதனை அனுப்ப, அவன் தன்னாலாகாதென்று மறுக்க, மறுபடியும் தேவர்கள் வேண்டி உபசாரஞ் சொல்ல, சம்மதித்துச் சென்று யோகியர் போல், வாச மாயிருக்கும் சிவனெதிரே போகமாட்டாமல் பின்னால் சென்று வில்லை வளைத்து,

94. செங்குவளை மலர்த்தொடுத்தா னவ்வாளி
திருமேனி தீண்டிற் ருக
அங்கணனுந் திரும்பிநுதற் கண்சிறிது
விழித்துப்பார்த் தளவி லந்த
அங்கமுறு மதன்சாம்ப ராய்வீழக்
கண்டுரதி பொருளா யந்தோ
வெங்கணவா வென்னுயிரே யென்செய்தா
யென்றிரங்கி யிறைமுன் சென்ருள்.

(இ - ள்.) வளைத்த வில்லில் செங்குவளைப்பூவைத் தொடுத்துச் சிவன் திருமேனியில் விட, அது திருமேனியை அணுகிய அளவில், சிவன் திரும்பி நெற்றிக் கண்ணைச் சிறிதாகத் திறந்துபார்த்த மாத்திரத்தில் அழகிய மன்மதனும், சாம்பலாய்ப் பூமியில் வீழ்ந் தான். அதுகண்டு அவன் மனைவியாகிய ரதி ஐயோவென்று துயரம் தாளாமல் என் நாயகனே! என் பிராணனே! என்ன காரியம் செய்தாய்? என்றுவருந்திச் சிவன்முன் வந்து விழுந்தாள்.

95. அழுதயர்வா ளுக்கிறைவன் அவட்குருவாய்
அல்லாதார்க் கனங்க ளுகிப்
பழுதகல விளங்குவனின் கணவனென
வரமவள்பாற் பணித்த பின்னர்
எழுமுனிவர் தமைநோக்கி யிமவான்பால்
மகட்பேசி யெய்து மென்ன
தொழுதவருஞ் சென்றிமவாற் கறிவிக்க
வவர்பொருந்திச் சொல்ல மீண்டு.

(இ - ள்.) தன்பால் வந்து அழுத ரதிதேவிக்குச் சிவபெருமான் உன் புருஷன் உனக்கு உருவாகவும், மற்றவர்கட்கு அருவமாகவும் குற்றமற விளங்குவான் என்று வரம் ஈந்தனர். பின்னர் சப்தரிஷிகளை அழைத்து, பர்வதராஜனிடத்துக்குப் போய், கன்னியைக் கேட்டுவாருங்கள் என்று திருவுளம் பற்ற, அவர்களும் வணங்கி விடைபெற்றுப் பர்வதராஜனிடம் சென்று, 'சிவனுக்கு உம்முடைய மகளைக் கொடுக்க வேண்டும்' என்று கேட்க, அவனும் சம்மதித்தான். அதுகேட்டுச் சப்தரிஷிகளும் திரும்பிச் சிவபிரானிடம் வந்தனர்.

96. மலையரையன் மகள்கொடுப்பான் விரும்பியது
திருமுன்னர் மறைநூல் தேர்ந்த
கலைமுனிவ ருரைசெய்யக் கேட்டருளி
இறைபதினெண் கணங்கள் தேவர்
தலைமைபுனை யிந்திரன்மால் அயன்சூழத்
தவளவிடை தன்னி லேறி
நிலையுடைய பெருஞ்செல்வன் உமையவளை
மணம்புரிய நினைந்து சென்றான்.

(இ - ள்.) மலையரசனாகிய பர்வதராஜன் பெண்கொடுக்க விரும்பியதான சந்தோஷ சமாசாரத்தைச் சிவபிரான் திருச்சந்நிதியில் வந்து, சப்தரிஷிகள் சொல்லக் கேட்டு, சிவபெருமான் பதினெட்டுச் சிவகணங்களும், தேவேந்திரன், மகாவிஷ்ணு, பிரம்மதேவன் முதலிய பலருஞ் சூழ்ந்துவர, வெள்ளை ரிஷபவாகனத்திலேறி, நிலைத்தபெருஞ் செல்வரான சிவபெருமான் உமையவளைத் திருமணம் செய்து கொள்ளப் புறப்பட்டு வந்தார்.

97. இமவான்வந் தெதிர்கொள்ள வேகிமணச்
சாலைபுகுந் திமையோ ரேத்த
உமையவளை மணம்புரிந்தங் கோரிரவு
வைகிப்பின் னுமையா ளோடும்
எமையாளும் பரம்பரனுங் கயிலைமலைப்
பாலணுகி இமையோர்க் கெல்லாம்
அமையாத மகிழ்ச்சியுற விடைநல்கி
யினிதிருந்தா ரநேகங் காலம்.

(இ - ள்.) பரமசிவன் சகலதேவர்களுடனே எழுந்தருளியது கண்ட பர்வதராஜன் எதிர்கொண்டழைக்கப் போய்க் கல்யாண மண்டபத்தில் எழுந்தருளி, தேவர்கள் துதிக்க வேதவிதிப்படி பார்வதி தேவியை விவாகஞ் செய்து, அந்த இமயகிரியில் ஓர் இரவு இருந்து மறுநாள் பார்வதியுடன், எங்களை இரக்ஷிக்கும் பரம்பரன் கயிலைமலை வந்து சேர்ந்து, தேவர்களெல்லாரும் அடங்காத மகிழ்ச்சியடைய, அநுக்கிரகஞ் செய்து, அனுபவித்துத் தானும் சந்தோஷமாகவிருந்தார் அநேககாலம்.

98. கடவுளரு முன்போலக் கூடியிருந்
தடல்வாயுக் கடவுள் தன்னை
நடமுடையான் பாலேவ வவன்சென்று
பள்ளியறை நண்ணக் கண்டு
மடலவிழும் அணையிருந்து மெழுந்துமையாள்
மலர்த்தாளில் வயங்குஞ் சோதி
விடலரிய சிலம்பிலொரு சிலம்புடைந்து
மணிசிதற விரைந்து சென்றாள்.

(இ - ள்.) தேவர்கள் முன்போல் ஒன்றுகூடி, கைலாச முகவாசலில் இருந்துகொண்டு வெற்றிபெற்ற வாயுபகவானை நடன கர்த்தாவான சிவனிடத்து அனுப்ப அவனும், உமையவள் பள்ளியறையினிடத்துக்குப் போக, அதுகண்டு உமையவள் இதழ்கள் விரிந்த புஷ்பமெத்தையினின்றெழுந்து, மலர் போலும் பாதத்தில் தரித்த பிரகாசமான ஒளிவீசும் காற்சிலம்பில் ஒருசிலம்பு உடைந்து அதிலுள்ள நவரத்தினங்கள் சிதறும்படி அதி தீவிரமாகச் சென்றாள்

99. சங்கரனு முலகுய்யத் தாதுவினை
யீந்தருள தலமான் கங்கை
பொங்கியகால் இவரிமையோர் சொற்படியே
தாங்கினார் பொறாமல் நோக்க
செங்கண்ணனற் கடவுள்பரிக் காற்றானுய்த்
தேவனைச் சேர்ந்து செப்ப
அங்கவருஞ் சரவணவா விக்கண்விடு
வாயென்ன அங்கண் சேர்த்தார்.

(இ - ள்.) சிவபெருமான் உலகம் உய்யத் தனது நெற்றிக்கண் மூலம் தாதுவை விடுக்க, அப்போது பூமிதேவி, கங்காதேவி வாயு பகவான், இமையவர்களுமாக அதனைத் தாங்கிச் சென்று, தங்களால் முடியாமல் பார்க்க, சிவந்த கண்ணையுடைய அக்கினி தேவன் வந்து தாங்கி, அவனும் பொறுக்கமாட்டாமல் சிவனிடம் முறையிட அவர் சரவணப் பொய்கையில் விடுமாறு திருவுளம் பற்ற, அவர்களுமப்படியே சரவணப் பொய்கையில் கொண்டு போய் விட்டனர்.

100. எழுமுனிவர் மனைவியருஞ் சரவணவா
விக்கண்ணீ ராடி யேறும்
பொழுதுகுளிர்க் குடைந்தனலைக் கண்டடைய
வருந்ததியாம் பூவை யீது
வழுவெனவப்பாற் சென்று ளோராறு
மாதர்களும் வந்து சூழ்ந்தார்
பழுதகல பரனுதவு தாதுவினை
யோராறு பாக மாக்கி.

(இ - ள்.) சப்தரிஷிகளின் மனைவியர் எழுவரும் சரவணப் பொய்கையில் நீராடிக் கரையேறும் போது குளிருக்குப் பயந்து அக்கினியைக் கண்டு, நெருங்கிவந்தார்கள். அப்போது அருந்ததி மட்டும் இது தகாத காரியமென்று அப்புறமே போனாள். மற்ற ஆறு பெண்களும் வந்து சூழ்ந்து கொண்டனர். அப்போது, குற்றந்தீரப் பரமசிவன் கொடுத்த தாதுவை அக்கினி ஆறு பங்காக்கினான்.

101. மாமுனிவர் கன்னியர்முன் னனற்கடவுள்
செலுத்தவவர் மருண்டு பார்க்கக்
காமரணி செஞ்சோதித் திருப்புதல்வர்
ஓரறுவர் க்ணத்திற் றோன்ற
மாமடவார் கண்டுமரை மலர்நிழன்மேல்
வளர்த்தித்தம் மணாளர் தம்பால்
போமளவி லவர்முனியத் திரும்பியருந்
தவம்பூண்டார் பொய்கைச் சார்பில்.

(இ - ள்.) அக்கினி பகவான் ஆறுபங்காக்கி ஆறுபெண்களிடமும் அளித்தனன். அவர்கள் கண்டு மருண்டு பார்த்தார்கள். அப்படிப் பார்த்த அளவில் அந்த ஆறுகூறும் மிகுந்த அழகு பொருந்திய, சிவந்தபிரகாசமும், லக்ஷ்மீகரமுமுடைய ஆறுபுதல்வர்கள் அந்த க்ஷணமேயுதித்தனர். அதுகண்டு அந்தப் பெண்கள் அக்குழந்தைகளைத் தாமரை மலரில் நிழலிருக்க வளர்த்திச் சென்றனர். அவர்களின் நாயகர்கள் கோபித்துக் கொண்டதால்மீண்டுந் திரும்பி வந்து, அந்தப் பொய்கைக் கரையில் தவஞ் செய்துகொண்டிருந்தனர்.

102. அன்றதன்பின் தாதளித்த பின்னிறைவன்
மலைமங்கை யலர்த்தாள் பூண்ட
நன்றுபுனை சிலம்பிகந்த நவமணியைப்
பார்த்திடலு நவையொன் றில்லாப்
பொன்றயங்கு வடிவுடையோ ரொன்பது கன்
னியராகிப் பொலிந்து தோன்றி
நின்றவரைப் பார்த்துடைய நிமலனதி
மோகம்போல் நேசம் கூர.

(இ - ள்.) அப்படிப் பொய்கையிலிருக்க, அதற்குமுன் தாதுவைக் கொடுத்த ஈசுவரன், மலைமகளாகிய பார்வதியின் மலர் போன்ற பாதத்திலிருந்த சிலம்பு உடைந்து, சிந்தின நவரத்தினங்களைப் பார்க்க, அவை பொன் போன்ற பிரகாச முடைய ஒன்பது கன்னியர்களாக நின்றனர். அப்பெண்களைச் சிவபெருமான் பார்த்து, ஆசைப் பட்டவர் போல அன்பு கொண்டார்.

103. திருமுகத்தில் வியர்வெழலு மையர்நகங்
கொடுவாங்கித் தெறித்த போது
பொருவயவ ரொருநூறு யிரவருத
யஞ்செய்தார் போது மாதின்
உருவுடைய கன்னியரொன் பதின்மருமொன்
பதுகுமர ருதவி னுர்கள்
அருளுடையான் கண்டிகையுந் திருநீறு
மணிந்தவர்மே லருள தாகி.

(இ - ள்.) அச்சமயம் சிவனது திருமுகத்தில் வியர்வை தோன்ற அதனைச் சிவன் நகத்தினுலே வழித்தெறிந்தார். அதிலே பலம் பொருந்திய நூறுயிரம் வீரர்கள் உற்பத்தியானுர்கள். முன்னே நவரத்தினத்தில் தோன்றிய லக்ஷ்மி போன்ற ஒன்பது கன்னியர் களும் ஒன்பது குமாரர்களைப் பெற்றுர்கள். அதுகண்டு சிவனும் உருத்திராக்ஷமும், விபூதியுந் தரிக்கச் செய்து அநுக்கிரகமுஞ் செய்தார்.

104. ஆலயத்திற் காப்புதவி யாயிழையா
ரொன்பதின்ம ரவரை வாச
மாலேபுரி குழலுமைக்கு நல்கியருள்
நாயகனும் மனேயாள் தானும்
வேலேயெனப் பொலிந்தபெருஞ் சரவணப்பொய்
கையையடைந்தார் விளக்க மோங்கிக்
காலேயெழும் ஆதவர்போ லோராறு
புதல்வர்தமைக் கரைமேற் கண்டார்.

(இ - ள்.) அநுக்கிரகஞ் செய்த அவர்களே, கயிலாயகிரிக் கோயிலுக்குக் காவலாக வைத்து, அந்த ஒன்பது பெண்களேயும் வாசனேவீசும் மாலேதரித்த அளகத்தையுடைய உமையவட்குத் தாதியராக அளித்து, சிவனும், உமையும் கடல்போன்ற அழகிய பெருஞ் சரவணப்பொய்கையை வந்தடைந்தார்கள். அங்கு இளஞ்சூரியர் போல் ஆறுபிள்ளேகளிருக்கக் கண்டனர்.

105. கண்டபோ ததிசயித்து மலேயரையன்
பொற்பாவை காத லெய்தி
அண்டர்நா யகவிவர்கள் யாரென்முள்
நின்புதல்வர் அணங்கே யென்ன
முண்டகா சனத்துறையு மோராறு
புதல்வர்தமை முடியா நேசங்
கொண்டுகர னீட்டியடை வினில்வளர்த்தி
யரவணேத்துக் கொண்ட போது.

(இ - ள் .) கண்ட மாத்திரத்திலே அதிசயித்து, பர்வத ராஜன் மகளாகிய பொற்பதுமை போன்ற உமையவள் அன்பு கூர்ந்து, தேவதேவனே! இவர்கள் யாரென்று நாயகனேக் கேட்க, சிவபிரான் பெண்ணே! இவர்கள் உன் புதல்வர்கள் தானென்ன, அதுகேட்ட உமையவள், தாமரைப் புஷ்பத்திலுள்ள பாலகர் அறுவரையும் தன் கையை நீட்டியெடுத்து வரிசையாக வளர்த்தி ஒன்ருகச் சேர்த்து அணேத்துக் கொண்டாள்.

106. ஓராறு திருமுகமு மோரிரண்டு
திருத்தாளு மொளிநி லாவும்
ஈராறு விழிமலரு மீராறு
செங்கரமு மியைந்தெ ழுந்தான்
பாரார விசும்பார பணியுலக
முழுதார படைத்த ளிக்கும்
பேரார பல்லுயிரு மிளைப்பாற
வொருகுமரன் பிராட்டி கண்டாள்.

(இ - ள்.) அப்படி ஒன்ருக அணைத்த மாத்திரத்தில், ஆறு திருமுகங்களும், இரண்டு திருப்பாதங்களும், ஒளிவீசும் பன்னிரண்டு கண்களும், பன்னிரண்டு சிவந்த கரங்களும் திருவுருக் கொண்டு, பூலோகம், தேவலோகம், நாகலோகம் முழுவதும் மகிழ, சிருஷ்டி, ஸ்திதி தொழில்களுடைய பிரம்மா, விஷ்ணு முதலியோர் மகிழ, சீவராசிகள் அனைத்தும் இளைப்பாற அவதரித்த குமரனைப் பார்வதி கண்டாள்.

107. மனமகிழ்ந்தா ளீசன்றன் கைகொடுத்தாள்
வாங்கினுள் மார்பஞ் சேர்த்தாள்
தனகடமும் பால்சுரந்த தடையின்றி
நுகர்ந்தறிவு தழைக்க வந்தாள்
தினகரரிற் பதின்மடங்கு தேசுமிகுந்
திருமேனிச் சிறுவன் றன்னைத்
தனதுதிக ழொக்கலையிற் ருங்கினு
ளேந்தினுள் தருக்கி நின்ருள்.

(இ - ள்.) கண்ட உமையவள் மனமகிழ்ந்து, தனது நாயகன் கையில் கொடுத்தாள். மறுபடியும் வாங்கித் தனது மார்பில் வைத்து அணைத்துக் கொண்டாள். தனங்கள் பால் சுரந்தன. அதைத் தடையின்றி உண்டு அறிவு மிகும்படி அளித்தாள். சூரியகாந்தியினும் பத்துப்பங்கு அழகு மிகுந்த திருமேனியுடைய முருகனைத் தன் ஒப்பற்ற இடுப்பில் வைத்தாள். பின் தனது கையில் ஏந்தினுள். மிகுந்த களிப்புடையவளானுள்.

108\. ஈசனுமம் பிகையைப்போன் மகிழ்ந்தாறு
முகனென்னு மின்ப நாமந்
தேசுபெறச் சாத்தியபின் திருக்கயிலை
மலைதன்பாற் சென்று சேர்ந்து
மாசகன்ற நான்முகனை யழைத்திவனை
மறைநூல்கள் வருவி யென்ன
காசொளிரு மொருகுன்றி னிடைக்குமர
னயனுமே கலந்தி ருந்து.

(இ - ள்.) பார்வதியைப் போல் சிவனும் மகிழ்ந்து, ஆறு முகனெனப் பெயரிட்டுப் பின் திருக்கயிலை மலைக்குச் சென்றிருந்து, குற்றமற்ற பிரமனை அழைத்து இந்தக் குமாரனுக்கு வேதசாஸ்திரம் கற்பிப்பாயென, பிரமனும் சம்மதித்து ஒளி பொருந்திய ஒரு மலையில் குமாரஸ்வாமியுடனே பிரமனும் நெருங்கியிருந்து சொல்வார்.

109\. வரமறைகட் குயிரனைய பிரணவத்தை
யுச்சரிக்க மலைமா மங்கை
தரளமுலைப் பாலுடனே மெய்ஞ்ஞானம்
குழைத்தருந்துந் தனைய னிந்தப்
பிரணவத்துக் கேதுபொரு ளென்னவயன்
திகைத்திருப்பப் பிறங்கு நான்கு
சிரமிசையிற் செங்கையினுற் புடைத்தவனை
நொடிவரையிற் சிறைசெய் வித்தார்.

(இ - ள்.) வேதத்தைச் சொல்லத் தொடங்கிய பிரமதேவன் பிரணவத்தை உச்சரித்துக் கூறுமாறு கட்டளையிட்டனன். அது கேட்ட முருகப்பெருமான், உமாதேவியின் முலைப்பாலோடு மெய்ஞ் ஞானத்தையும் சேர்த்து அருந்தியுள்ளமையால், அந்த ஓங்காரத் திற்குப் பொருள் யாது என்று வினவினர். பிரமன் திகைத்து இருந்தனன். குமரப்பெருமான் அவனது நான்கு சிரங்களிலும் தன் சிவந்த கையினுற்குட்டி க்ஷணப்பொழுதில் சிறையிலிட்டனர்.

110. திசைமுகனை நிகளமிட் டருஞ்சிறையில்
வைப்பித்த செய்கை தன்னை
இசைதெரிநா ரதன்சென்று பரம்பரனைப்
பணிந்தேத்தி யியம்பக் கேட்டு
நசைவளருங் கோயில்நா யகஞ்செய்யு
நந்திதனை நாத னேவ
வசையிலறு முகன்முன்னஞ் சென்றுகதங்
கண்டுடனே வந்தா னஞ்சி.

(இ - ள்.) பிரமனைக் காலில் விலங்கிட்டுச் சிறையிலிட்ட விருத்தாந்தத்தை, இசை நிரம்பிய நாரதமகாமுனி சென்று சிவபெருமானிடம் கூற, சிவபெருமான் ஆலயத்திற்கு நாயகனை நந்தியம்பெருமானை அனுப்பி, முருகனிடம் கூறி, சிறைவிடுக்கும்படி செய்வியென. அவரும் குற்றமற்ற அப்பெருமானிடஞ் சென்று அவரது கோபத்தைக் கண்டு பயந்து திரும்பி வந்துவிட்டார்.

111. அஞ்சியருள் நந்திவரல் கண்டுடனங்
ககத்தியனே யாதி யான
செஞ்சொன்முனி வரையேவ வவருஞ்சென்
றுறுமுகன் திருத்தா ளேத்திக்
கஞ்சமல ரயன்றன்னை சிறைவிடுதற்
கிசைந்தவெலாங் கருதிப் பேச
வெஞ்சமுட னவர்தமையும் வெகுண்டுரைத்தான்
அவர்தானும் வெருண்டு மீண்டார்.

(இ - ள்.) நந்தி பயந்து திரும்பி வந்தது கண்ட சிவபெருமான், தெளிந்த அறிவுடைய அகஸ்தியர் முதலான முனிவர்களை அனுப்பினர். அவர்களுஞ் சென்று முருகப்பெருமான் அடிவணங்கி, பிரமனைச் சிறைவிடுதற்கு வேண்டிய மொழிகளையெல்லாம் கூறினர் அதனைக் கேட்டு, முருகப்பெருமான் கோபித்து விடமுடியாதென்றார். அதுகேட்டு முனிவர்கள் பயந்து திரும்பி வந்தனர்.

112. அங்கதுகண் டவர்களுட னிறையவனு
மறுமுகன்பால் அடைந்து பின்னர்
இங்கிதுநீ யென்செய்தா யியல்போவிங்
கிதுநிற்க வெண்ணி லாத
பொங்குமறைக் குயிரான ஓங்காரப்
பொருள்நமக்குப் புகல்நீ யென்ன
சங்கரனைப் பார்த்திளையோன் வழிபாடு
செயினுரைக்கத் தகும தென்றான்.

(இ - ள்.) அதுகேட்டுப் பரமசிவன் அவர்களுடனே, அறுமுகப் பெருமானிடஞ் சென்று, என்ன காரியஞ் செய்தாய், குமாரனே! இது இயல்பான காரியமோ? இது இருக்கட்டும். கணக்கற்ற விரிவாகிய வேதங்களுக்கு உயிர் போன்ற பிரணவத்தின் பொருளை நீ நமக்குச் சொல்லக்கூடுமோ? என்று கேட்க, சிவனைப்பார்த்திளை யோனான முருகன் நமக்கு வழிபாடு செய்யின் சொல்லக் கூடு மென்றார்.

113. பொன்னணிபொற் பீடத்தி லேற்றியரன்
கீழ்நின்று புகல்வா யென்ன
மன்னுதிரு முகமாறே டீராறு
செங்கரமும் வடிவுங் கொண்டு
முன்னமலை மங்கையருள் முலைப்பாலான்
முழுதுணர்ந்த முருகன் றானும்
உன்னரிய பரம்பரனுக் குரையிறந்த
ஓங்காரத் துண்மை தன்னை.

(இ - ள்.) சிவபெருமான் அவ்வாறே முருகப்பெருமானை அழகிய பொற்பீடத்தில் இருக்கச் செய்து, கீழேயிருந்து சொல்வா யென்ன, அழகு பொருந்திய ஆறுதிருமுகங்களும், சிவந்த பன்னிரு திருக்கரங்களுமாக வடிவு கொண்டு, முன்னர் மலைமகளான உமையவளால் கொடுக்கப்பட்ட திருமுலைப்பாலோடு சகலமும் அறிந்தமுருகன், நினைத்தற்கரிய சிவபெருமானுக்குப் பிரணவத்தின் சொல்லுக்கடங்காத உண்மையைச் சொல்லலுற்றான்.

114. உரைசெய்வான் துணிந்தபோ துரையெழா
மோனமா யிருக்குஞ் சேயை
திரைசெய்நீர்ச் சடையானும் நீநம்மை
மதியாது சேர்ந்த பாவக்
கரைசெய்ய விந்தவினை கழியநீ
காவேரிக் கரையில் நண்ணி
விரைசெய்மா மலர்க்குரவ வனத்திலருந்
தவம்புரிந்தால் விடுமி தென்றார்.

(இ - ள்.) சிவபெருமானுக்கு உபதேசிக்கத் தொடங்கியபோது, ஆறுமுகப் பெருமானின் வாக்குத் தடைப்பட்டு மௌனமாக இருந்தார். அதுகண்டு அலைவீசுங் கங்கையைச் சடையில் தரித்த சிவபெருமானும், முருகனைப் பார்த்து, ''நீ நம்மை மதியாமல் நமக்கு உபதேசிக்கத் தொடங்கிய படியால் இந்தப் பாவவினை உனக்கு வந்தது. இந்தவினை தீர நீ காவேரி தீரத்திலேயுள்ள வாசனைவீசும் மலர்களையுடைய குரவ வனஞ்சென்று அரிய தவத்தைச் செய்தால் தீரும்'' என்று அருளிச் செய்தார்.

வேறு

115. இறையன்பொடு நின்றுபு கன்றகலா
வெழிலாறு முகத்தினை யோனினிதா
உறைகுன்றமொ டங்கொரு பூதமெடுத்
துய்கப்பர னுருப யப்பதமே
நிறைசிந்தையி னன்பொடு காவிரிநீர்
நிலவுங்குர வங்கணெ ருங்குவன
முறையுந்திட வந்துபெ ருந்தவமும்
முடியாதன காலம் முயன்றனனால்.

(இ - ள்.) சிவபெருமான் அன்போடு திருவாய்மலர்ந்தருளினர். அதுகாலை அழகிய ஆறுமுகப் பெருமானை இனிதாக அவர் தங்கி இருந்த குன்றுடன் ஒரு பூதம் எடுத்துக்கொண்டு சிவனது பாதத்தை அன்பாய்த் தியானித்து, காவேரிக் கரையில் குரவ விருக்ஷங்கள் நிறைந்த குரவவனமென்னுந் தலத்திலே விட்டது. அந்தத் தலத்திலே குமாரக்கடவுள் பெரிய தவத்தைஅநேகநாள் செய்து கொண்டிருந்தனர்.

116. அந்நாள்தனி லீசனு மங்கணுகா
வடலாறுமு கத்தன ருந்தவமு
மிந்நாள்வரை செய்தன னென்றுமகிழ்ந்
திமவான்மக ளோடிட பந்தனிலே
முன்னுன்மறை பாடவ ருட்குமரன்
முன்வந்துவெ ளிப்பட வங்கவனு
மென்னுயக னேயிமை யோர்தலைவா
வென்றன்பொடு சொல்லியி றைஞ்சினனால்

(இ - ள்.) அப்படிக் குமரப் பெருமான் அரியதவஞ்செய்யும் நாளில், நீண்டகாலம் தவம் செய்வதை அறிந்து மகிழ்ந்து, பார்வதியுடன், இடபத்தில் ஏறிக்கொண்டு வேதங்கள் கோஷிக்கவும் தேவர்கள் துதிக்கவும் முருகப்பெருமான் முன் தோன்றினார். அதுகண்டு முருகப் பெருமானும், என் நாயகனே; தேவர்கட்குத் தலைவனே! என்று அன்புடனே துதித்து வணங்கினார்.

117. துதிசெய்திடு மைந்தனை யன்பொடுதந்
தோண்மார்பில ணைத்திறு கத்தழுவா
விதிதன்னைய ருஞ்சிறை விட்டுடனே
விண்ணோர்புவி யோர்கள்வி ளக்கமுறக்
கதிதங்கிய சூரபன் மாவினையுங்
காதிக்கொலை கண்டிடெ னக்கொலையைப்
பொதியுங்கடு வெனமுத லேதிகளும்,
பொன்றாவர மும்பொலி வாலருளி.

(இ - ள்.) அப்படித் துதித்த முருகப் பெருமானைப் பரம சிவன் தனது தோளிலும், மார்பிலும் இறுகத் தழுவிக்கொண்டு, பிரமனைச் சிறையினின்று விடுவித்து, தேவர்களும், பூலோகத்தார் களும், விளங்கத் தக்கதாகப் பலம்பெற்ற சூரபத்மாவையும், மற்றுமுள்ள அரக்கர்களையும் கொல்லத்தக்க வேலாயுதமுதல் அநேக அஸ்திரங்களும், இறவாத வரங்களும் அளித்தனர்.

118. முன்னென்பது கன்னியர் தந்தருளும்
முடியாவிக லொன்பது வீரரையும்
தன்னன்புறு வேர்விலு தித்தருளும்
சயவா ளறவயவர வீரரையும்
பின்னெண்ணில கணங்களை யுங்கருணைப்
பெருவாழ்வினை யும்பெறு மாறுதவி
தென்னென்றளி பாடிய கொன்றைமுடிச்
செஞ்சோதி மறைந்துநி றைந்தனனால்.

(இ - ள்.) நவமணிகளான ஒன்பது பெண்களிடமும் தோன்றிய முடிவில்லாத வீரத்தையுடைய ஒன்பது வீரர்களையும், தனது வியர்வையிலுதித்த செயம் பெறப்பட்ட வாளாயுதம் பிடித்த ஒரு நூறாயிரம் பேர் சேனைகளையும், பின் உருத்திர கணங்கள் எண்ணிலாதவர்களையும் முருகப்பெருமானுக்குப் பெருவாழ்வு போலக் கொடுத்து, இனியராகம் பாடும் வண்டுகள் சுற்றிய கொன்றைமாலை தரித்த சடைமுடியுடைய சோதி சொரூபமாகிய சிவபிரான் திருவுருமறைந்து, சதாசிவ முகூர்த்தமாக அவ்விடத்தில் எழுந்தருளினார்.

119. அண்டாதிபர் மாலய னிந்திரன்வந்
தடலாறுமு கத்தரு ளாகரனைப்
கண்டார்தொழு தார்கள்சு ராதிபர்தங்
கடுமைக்கல கங்கள்க லுழ்ந்துகலுழ்ந்
துண்டானவை நின்றுரை செய்திறைவா
உமையாள்புதல் வாவெமை யாளுடையாய்
வண்டாடிய நீபம லர்த் தொடையாய்
வாழ்வேயென நின்றுவ ழுத்தினரால்.

(இ - ள்.) இந்திராதி தேவர்களும், விஷ்ணு, பிரம்மா முதலியோரும் வந்து ஆறுமுகப் பெருமானைக் கண்டு வணங்கினார்கள். சூரபத்மன் முதலாயினோர் செய்யுங் கொடுமைகளை அழுதழுது கூறினர். தலைவனே! பார்வதி பாலனே! எங்களை ஆளாக உடையவனே! வண்டுகள் ரீங்காரஞ் செய்யுங் கடப்பமாலை அணிந்தவனே! எங்கள் வாழ்வே என்று நின்று துதிசெய்தனர்.

120. அஞ்சித்துதி செய்திடு மண்டர்தமக்
கருளஞ்ச லளித்தரு மாமறைதேர்
கஞ்சத்தவ னைச்சிறை விட்டவனே
கலைமாமறை யாகம மாருயிரா
தஞ்சத்தனி யக்கர மெய்ப்பயனுந்
தாழாதறி வித்தெழு மூவுலகும்
நெஞ்சத்துய ரங்கெடு மாறடல்கூர்
நிருதர்படை யையொறு ப்பானெழுவான்.

(இ - ள்.) அவ்வாறு பயந்து துதிசெயுந் தேவாதிகளைக் கடாக்ஷமாகப் பார்த்து, பயப்படாதீர்களென அஞ்சலளித்து, வேதமுணர்ந்தபிரமனைச் சிறைவிடுத்து, அப்பிரமனுக்குக் கலைஞானமாகிய வேதத்திற்கு உயிராயிருப்பது இதுவென்றும், அப்பிரணவத்திற்கு மெய்ம்மையான உண்மைப்பொருளைக் குறைவில்லாமலுபதேசித்து, பதிஞன்கு உலகிலுள்ளவர்களின் துன்பம் கெடும்படியும் பலம் பொருந்திய அசுரர் படையை அழிக்கவும் கருதி முருகப் பெருமான் எழுந்தருளுவாராயினர்.

121. பதினெண்தள மும்புடை சுற்றிவரப்
படைவாளசு ரேசர்ப திக்கணுகா
மதிகொண்டச டைப்பெரு மானருண்மா
மைந்தன் சமர்மேல் வந்தானெனவே
அதிகம்புனை யசுரர்க ளானவர்கொண்
டாடல்கொண்டரி வெம்படை
யோடெதிர்மேன்
முதிருஞ்சம ரன்றுவி ளைத்ததயன்
மொழிவானென லும்முடி யாமுடியா

(இ - ள்.) பதினெட்டு ருத்திர கணங்களுஞ் சுற்றிவரச் சகல சேனைகளுடனே அசுரர் நகரஞ் சென்று சேர்ந்தனர். சந்திரனை முடியில் தரித்த சிவபெருமான் புதல்வரான முருகக்கடவுள் யுத்தத்திற்கு வந்தாரென்று கண்டு அதிக பலம் பொருந்திய அசுரர்கள் சேனைகளுடன் முதலிலே வந்து செய்த யுத்தத்தின் விபரீதத்தைப் பிரமதேவனாலும் சொல்லி முடியாது.

122. வந்தெண்ணறு சேனைமு டிந்தனபின்
வருசூரபன் மாவெதிர் மோதியதிர்த்
தந்தங்களி லாநெடு மாயைபுரிந்
தனனங்கவை கந்தன றுத்தனுற்
சந்தம்புனை மாமயி லாயடல்கூர்
தாளாயுத மாய்வரு மவ்வுருவும்
முந்தந்திரு வூர்திநெ டுங்கொடியா
முன்கொண்டனன் அண்டமர் மேன்முருகன்

(இ - ள்.) எண்ணிக்கையற்ற சேனைகள் வந்து, முருகப் பெருமானுடன் யுத்தஞ்செய்து, மடிந்தபின், சூரபன்மன் வந்து கணக்கிலா மாயைவிளைத்து யுத்தஞ்செய்தான், அதையெல்லாம் முருகப்பெருமான் அறுத்தெரிய, பின் அழகு பொருந்திய மயிலாகவும், கனம்பொருந்திய கோழியாகவும் வந்தனன். முருகப் பெருமான் மயிலின்மேல் ஏறிக்கொண்டு, நீண்டகோழியைக் கொடியாகவும் யுத்தமுனையிலே பிடித்துக் கொண்டார்.

123. பரவைக்குளொ ளித்தனன் வேல்விடவப்
பவ்வக்கடல் வற்றிந டுங்கிமிகுங்
கரவுற்றவன் வெங்கிர வுஞ்சமெனுங்
கனமால்வரை யின்புற மேமறைய
வரமிக்கவ யிரப்படை வேல்விடலான்
மலையும்பொடி பட்டவன் மார்புருவ
தரையிற்கிரி போல்விழ வேயுயிரைச்
சத்திப்படை யுண்டுத ருக்கியதால்.

(இ - ள்.) மயிலுங் கோழியுமானவன் பின் சமுத்திரத்திற் போயொளிக்க, அதுகண்டு குமாரக் கடவுள் வேலாயுதத்தை விட்டனர். ஆரவாரமுடைய அக்கடல் வற்றியது. வஞ்சக எண்ணமுடைய சூரன் நடுங்கிக் கிரவுஞ்சகிரியில் சென்று மறைந்தனன். மீண்டும் ஆறுமுகப்பெருமான் வேலைவிட்டனர். அது மலையைப் பொடியாக்கி, அவன் மார்பையுந் துளைத்து, உயிரையும் உண்டது. அவன் மலைபோல் தரையில் விழுந்தனன்.

124. பாரண்டம கிழ்ந்திட வாளசுரன்
பட்டானவன் வெம்பதி செங்கனலிற்
சேரும்முண வாக வளித்துறையுந்
தேவர்சிறை யும்விடு வித்துடனே
சூருங்கிரி யுங்கட லுந்தொளைசெய்
சுடர்வேலுடை யாயுடை யாயெனவே
யாருந்துதி செய்திட மாமுருகன்
அமராபதி தன்னைஅ டைந்தனனால்.

(இ - ள்.) பூலோகத்தாரும், தேவலோகத்தாரும் மகிழ, வாளேந்திய சூரன் முதலானோர் பட்ட மாத்திரத்தில் அவன் மகேந்திரப் பட்டணத்தை அக்கினிக்கு உணவாக அளித்து, தேவர்களையும், சிறையினின்று விடுவித்தனர். அதுகண்டு சகலரும், சூரனையும், கிரவுஞ்சகிரியையும் தொளைத்த வேலாயுதத்தை யுடையவனே! எங்களை ஆளாகவுடையவனே! என்று துதிக்க ஆறுமுகப் பெருமான் அமராவதியுட் பிரவேசித்தனர்.

125. வானாடர்ம கிழ்ந்திட மாமுருகா
மலையாள்கும ராநிலை யாயினியென்
சேனாபதி யாயினை யென்றுடனே
தேவர்க்கர சன்மக ளார்தமையும்
ஆனமண மெய்தவ ளித்தனர்பின்
அருளாறுமு கத்தயில் வேன்முருகன்
தானாதர விற்றரு தந்தையையும்
தாயார்தமை யுஞ்சர ணம்பணியா.

(இ - ள்.) முருகப்பெருமான் வருகையுணர்ந்து தேவர்கள் மகிழ்ந்தனர். சிறந்த முருகப் பெருமானே! பார்வதியின் குமாரனே! நிலைபெற்ற எங்கள் சேனாபதியாயினை, என்று உடனே தேவேந்திரன் மகளான தெய்வயானையை மணம் புரிவித்தனர். பின் கிருபையுடைய ஆறுமுகங்கொண்டு வேலாயுத மேந்திய முருகக்கடவுள் தன் தந்தையையும் தாயாரையும் சென்று திருவடிகளில் வணங்கினார்.

126. கங்காதர னுங்கரு ணாகரியுங்
காதற்புதல் வன்றனை யன்புடனே
அங்கார்வமு றத்தழு விப்பலகா
லருளாசியி னல்கவ மைந்தனுல்
மங்காத தவத்திரு மாமுனியீர்
மயிலோனயி லோன்வய மும்புகழை
இங்கார்புகழ் வார்புகழ் தற்களவா
யெண்ணப்பட வும்மெளி தாய்விடுமோ.

(இ - ள்.) சிவபிரானும் பார்வதியும் வந்து வணங்கி முருகனை அன்புடன் இறுகத் தழுவி ஆசீர்வாதமும் செய்தனர். அவரும் அவர்களிடம் எழுந்தருளியிருந்தார். சனற்குமார முனிவர் இருடிகளைப் பார்த்து அழிவில்லாத முனிவர்களே! குமாரக் கடவுளின் பராக்கிரமத்தையும் கீர்த்தியையும் இந்த உலகில் யாவராலும் அளவிட்டுச் சொல்ல முடியாது. அப்படியெண்ணிச் சொல்வதும் எளிதல்ல என்று கூறினர்.

127. இப்போதடல் வேலுடை யான்வடபா
லேமகூ டக்கிரி மேலிமையோர்
பொய்ப்போதமி லாமுனி வோர்பரவப்
பொலிவாக விருந்தனர் முத்தலைவாள்
கைப்போர்கொள ரக்கனு மன்னவனற்
கருணைச்செய லான்முடி வானெனவே
ஒப்போதவ ருந்தவ மாமுனிவர்க்
குரைசெய்தனன் எந்தைச னற்குமரன்.

(இ - ள்.) வெற்றிபெற்ற வேலுடைய முருகப்பெருமான் இப்போது ஏமகூட பர்வதத்தில் தேவர்களும், பொய்மையில்லாத முனிவர்களும் வணங்கும்படி எழுந்தருளியிருக்கிறார். மூன்று தலையும், வாள்பிடித்த கையும், யுத்தமே கைக்கொண்டுள்ள, காருண்டன் என்னும் அரக்கனும் அந்தக் குமாரசுவாமியின் நல்லகடாக்ஷத்தினுலே முடிவான் என்று ஒப்பற்ற அரிய தவ முனிவர்களுக்குச் சொன்னார் சனற்குமர முனிவர்.

128. கலையாமுனி வர்க்கிட ராகவருங்
காரண்ட னெனப்பெயர் சூடிமறந்
தொலையர்தவ ரக்கனு தித்ததுவும்
தொழிலுஞ்சில சொல்லின மைம்புலனு
லுலையாதகு கத்திரு மாமுனிவ
ஞேமந்தனி லுற்பவ மெய்தியுடன்
அலையாவண மிப்புவி யாளவரு
மரசன்செயல் வல்லத றைந்திடுவாம்.

(இ - ள்.) கலை தேர்ந்த முனிவர்களுக்கு இடர் செய்யப் பிறந்த காருண்டன் என்னும் பெயர்பெற்றுக் கொலை செய்யும் இந்த அரக்கன் பிறப்பும், அவன் தொழிலுஞ் சிறிது சொன்னோம். இனி, ஐம்புலாதிகளின் அலைச்சலில்லாத அழகிய குகமுனியால் செய்யப் பட்ட ஓமாக்கினியில் உற்பவித்து, உலகத்திற்கு அவதியில்லாமல் அரசாள வரும் அரசனின் வரலாறு தெரிந்தவரைச் சொல்லத் தொடங்குவாம்.

தெய்வீகராசன் உற்பவச் சருக்கம்

கலிநிலைத்துறை

129. சத்தி யத்திரு ஞானநூற்
சனற்கும ரன்றன்
உத்த மத்திரு வாய்மொழி
யுவகையாற் கேட்ட
மெய்த்த வத்தவர்க் கங்கவன்
விடைகொடுத் தருள
உத்த ரத்தினி லேமகூ
டந்தனை யுற்றார்.

(இ - ள்.) நித்தியமாகிய சிறப்பினையுடைய ஞானசாஸ்திரம் அறிந்த சனற்குமாரர் திருவாய்மலர்ந்தருளிய மொழிகளைக் கேட்டுச் சந்தோஷமடைந்த மெய்ம்மையாகிய தவத்தையுடைய முனிவர்கள் அவரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு, வடக்குத் திசையிலுள்ள ஏமகூட பர்வதத்தைச் சென்றடைந்தார்கள்.

130. சென்று சேயவன் திருவடித்
தாமரை இறைஞ்சித்
துன்று தானவர் குலமறச்
சுரர்க்குவாழ் வுதவும்
வென்றி வேலுடை வித்தக
தெக்கணந் தன்னின்
மன்று ளார்மகிழ் அரசமா
வனத்துளே மடியேம்.

(இ - ள்.) முனிவர்கள் சென்று முருகப் பெருமானின் திருவடித் தாமரைகளில் வணங்கி, அசுரர் குலத்தையழித்துத் தேவ லோகத்தாருக்கு வாழ்வுதரும் வெற்றிபெற்ற வேலாயுதத்தை யுடைய ஞான சொரூபியே! நாங்கள் தென்திசையிலே, நடன சபையையுடையார் மகிழ்ந்திருக்கும் அரசவனத்திலே இருப்பவர் களாவோம்.

131. பிரம ஞதியாங் கடவுளர்
பிறைமுடித் தவனைக்
கரவி லாமனங் கொண்டுபூ
சனைபுரி கணக்கால்
அரச மாவனத் தாதியை
யருச்சனை புரிந்து
விரத முஞ்சிறி தியற்றியங்
கிருந்தனம் விளங்க.

(இ - ள்.) பிரமன் முதலிய தேவர்கள், சந்திரனைத் தரித்த சிவனை அழுக்கற்ற மனமுடன் பூசைபுரிந்தனர். அது கண்டு நாங்களும் அந்த அரசவனத்திலே ஆதியான பரமசிவனை அருச் சித்துச் சாந்திராயணம் முதலான விரதங்களையும் செய்து கொண்டு அங்கிருந்தோம்.

132. கைக ளாறுடை முச்சிர
காருண்ட னென்னும்
மைகொள் வஞ்சநெஞ் சரக்கனுல்
மாதவ மெல்லாம்
நைக ரம்பெற நாடொறு
நடுங்கிமா மடவார்
வைகொள் கண்ணினுல் வருந்துவோ
ரெனமனம் மருண்டோம்.

(இ - ள்.) ஆறு கைகளும், மூன்று சிரங்களுமுடைய காருண்டன் என்னும் கறுத்த வஞ்சனையுள்ள நெஞ்சுடைய அரக்கனுலே எங்கள் தவமெல்லாம் நலிவு பெற்று, நாளுக்குநாள் நடுக்கமடைந்து சிறந்த பெண்களின் கூர்மையான கண்பார்வையால் வருத்தப்பட்டவர்கள்போல மனமருட்சி யடைந்தோம்.

133. என்று மாதவ ருரைத்திட
இகலயில் வேலோன்
தென்றி சைக்குநாம் வந்துவெந்
திறல்புனை யரக்கன்
பொன்று மாறுசெய் விப்பம்நீர்
போமினென் றுரைத்த
வன்றும் மாதவ ரரசமா
வனந்தனை யடைந்தார்.

(இ - ள்.) முனிவர்கள் அவ்வாறு சொல்லக் கேட்ட பகை வென்ற வேற்படையுடைய முருகப்பெருமான் திருவுளமுவந்து, ''தெற்குத் திசைக்கு நாம்வந்து, கொடிய பலமுடைய அரக்கனை அழிப்போம்.'' நீங்கள் செல்லுங்கள்'' என்று கூற, அப்போதே, முனிவர்கள் அரசவனம் வந்து சேர்ந்தார்கள்.

134. பண்ண ருந்தவ ரவர்களங்
ககன்றுபின் பயன்சேர்
எண்ண ருந்தவக் குகமுனி
யெனுமுனி தனைப்பார்த்
தண்ணல் வேலவன் யாகமொன்
றன்பினுற் புரிய
நண்ண ருந்தல மேதென
நன்முனி யுரைக்கும்.

(இ - ள்.) தவம் செய்யும் முனிவர்கள் அவ்விடம் விட்டுச்சென்ற பின், பலனைத் தரும் எண்ணுதற்கரிய தவம்புரியும் குகமுனிவரை, பெருமை பெற்ற வேலாயுதத்தையுடைய ஆறுமுகப்பெருமான் பார்த்து, அன்புடன் யாகமொன்று செய்ய நன்மையான தலம் எது? என்று கேட்க, குகமுனிவர் கூறுவாராயினர்.

135. மல்ல லார்திருக் கையில்வேல்
வாங்கிமுன் விட்டாற்
செல்லு மாவயின் றரித்ததத்
திருத்தலம் வேதஞ்
சொல்லு மாநெறி தவத்தினேன்
தொன்மகம் புரிய
எல்லை யாமென விணையடி
யிறைஞ்சிமுன் பறைந்தான்.

(இ - ள்.) பலம் பொருந்திய தேவரீர் திருக்கையில் உள்ள வேலை எடுத்து விட்டால் அதுபோய் நிற்பது எவ்விடமோ அவ்விடமே, வேதங்கள் கூறும் மகத்தாகிய நல்ல மார்க்கமாகிய தவம்புரியும் குகமுனிவர் வணங்கி, பழைமையான யாகம் புரிவதற்கேற்ற க்ஷேத்திர மென்று திருவடி வணங்கிக்கூறினர்.

136. சொன்ன போதருட் கந்தனுஞ்
சுடரிலே நெடுவேல்
தன்னே வாங்கிவிட் டனனருட்
சத்தியும் பிறைதாழ்
மின்னு வார்சடை யாளனந்
தகன்றனே வீழ்த்த
மன்னு சீர்புனே கோவலூர்
வந்துதங் கியதால்.

(இ - ள்.) குகமுனிவர் சொன்னது கேட்ட கிருபைக் கடலான கந்தப் பெருமான் தன் திருக்கையினுல் வேலே வாங்கிவிட்டனர். அந்த அருட்சத்தியாகிய வேலாயுதம், மூன்ரும்பிறை தரித்த பிரகாசமான சடையையுடையவரும், அந்தகாசுர சம்மார மூர்த்தியுமாகிய வீரட்டஹாசப் பெருமான் எழுந்தருளியுள்ள சிறப்பினேயுடைய திருக்கோவலூர் என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் வந்து நின்றது.

137. அன்ன வேல்வரு மவ்வழி
யறுமுகக் கடவுள்
முன்னம் வானவிர் கங்கைநீர்
முக்கணு னருளாற்
பின்ன மின்றிவந் தெய்திய
பெண்ணேமா நதியின்
மன்னு தென்கரைக் கோவன்மா
நகரினில் வந்தான்.

(இ - ள்.) அந்த வேலாயுதம் வந்த வழியே ஆறுமுகப் பெருமானும் புறப்பட்டு, முன்னுளில் ஆகாயத்தில் பிரகாசிக்கும் கங்காதீர்த்தமானது மூன்று கண்களேயுடைய சிவபெருமான் அருளால், குறைவில்லாமல் பூமியில் வந்து பெருகிய நதியாகிய தென்பெண்ணே நதியின் தென்கரையில் உள்ள திருக்கோவலூர் என்னுந்தலம் வந்து சேர்ந்தனர்.

138. அந்த கன்றனை யடர்த்தவீ
ரட்டனு ருலகந்
தந்த தந்தையார் தங்கழல்
அன்புடன் தாழ்ந்து
வந்த மெய்க்குக முனிதனை
மாமகந் தவரோ
டிந்த நன்னிலத் தியற்றிடென்
றியம்பிய பின்னர்.

(இ - ள்.) அந்தகாசுரனைச் சம்மரித்து, உலகத்தைக் காப்பாற்றிய தன் தந்தையாகிய சிவபெருமானது திருவடியில் முருகப்பெருமான் வந்து வணங்கி, பின்பு கூட வந்த குகமுனியைப் பார்த்து, 'பெரிய யாகத்தை முனிவர்களுடன் செய்யும்' என்று திருவாய் மலர்ந்தருளிப் பின்னரும்.

139. தேவர் மாதவர் சித்தர்கள்
விஞ்சையர் சூழப்
பூவு ளான்முதற் கடவுளர்ப்
பூசனை புரிந்து
பாவ நீக்கிய அரசவம்
பதிதனில் வந்தான்
ஆவி யாயுல களித்திடு
மறுமுகத் திறைவன்.

(இ - ள்.) தேவர்கள், தவசிகள், சித்தர்கள், வித்தியாதரர்கள், பிரமதேவன் முதலியவர்கள் சகலரும் பூசைபண்ணிப் பாவம் நீங்கப்பெற்ற அரசவனத்துக்கு, சர்வஜீவ தயாபரரான ஆறுமுகப்பெருமான் வந்து சேர்ந்தார்.

140. சந்த மாமறை சனற்குமா
ரன்சது முகன்போல்
வந்த மாதவ மிருகண்டு
மாமுனி முதலோர்
கந்தன் வந்தன னென்றெதிர்
கொண்டுகண் களிப்ப
பந்த மாமறை பாடினுர்
ஆடினுர் பணிந்தார்.

(இ - ள்.) வேதபாராயணரான சனற்குமார பகவானும், பிரமதேவனுக்குச் சமானமான, மகாதவசையுடைய மிருகண்டு முனிவர் முதலான முனிவர்களெல்லாரும் கந்தப் பெருமான் வந்தாரென்று எதிர்கொண்டு கண்களிக்கத் தொடர்ந்து மேலான வேதங்களைப் பாடித் துதித்து அடிபணிந்தார்கள்.

141. இவர்கள் தம்தமக் கின்சொலும்
பார்வையு மீந்து
சிவப ரஞ்சுடர் சிகரசி
காமணி தன்னை
நவைக ளொன்றற வருச்சனை
விதியினுல் நடாத்தி
உவமை யொன்றிலா அரசமா
வனந்தனி லுறைந்தார்.

(இ - ள்.) எதிர்கொண்டு வரவேற்ற அனைவருக்கும் இனிமையான மொழியுடன் அருள் நோக்கும் அளித்துச் சிவபரஞ் சுடராகிய சிகரசிகாமணி நாதனைக் குற்றமற அருச்சனையை விதி முறையாகச் செய்து ஒப்புவமையற்ற அரசவனத்தில் எழுந்தருளியிருந்தார்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

142. அருந்தவங்க ளனந்தநா ளரசவனத்
திருந்தியற்றி யறவோ ரெல்லாம்
கருந்தடங்கண் மலையரையன் பொற்பாவை
பெற்றுகந்த கந்தன் தன்னைப்
பொருந்தியடலரக்கனால் துயரடைந்து
மித்தலத்தில் புகலோ டிந்நாள்
இருந்திடும்யாங் களும்பெறும்பே றேதெமக்குன்
திருவாக்கா லியம்பா யென்ன.

(இ - ள்.) நெடுநாளாக அரசவனத்திலிருந்து தவம் செய்து வரும் முனிவர்களெல்லாரும், கரிய விசாலமான கண்களையுடைய பார்வதி பெற்று மகிழ்ந்த கந்தசாமியை வணங்கி, காருண்டன் என்னும் அரக்கனால் கிலேசமடைந்து இந்த அரசவனத்திலிருந்து நீங்காமல் அபிவிருத்தியாயிருந்தும் அடியேங்கள் பெறும் பலன் யாது திருவாய் மலர்ந்தருள வேண்டுமெனக் கேட்டனர்.

143. ஆரூரிற் பிறந்தோர்கள் அம்பலத்தைக்
கண்டோர்கள் அருள்கா சிக்கண்
சீரூர விறந்தோர்கள் கேதாரம்
நீராடிச் சிறந்துள் ளோர்கள்
பேரூரு மருணகிரி நினைந்தோர்கள்
அரசவனம் பிரியா தன்பாய்
ஏரூர விருந்தோர்கள் கதிபெறுவ
ரென்றுரைத்தான் இகல்வேற் கந்தன்.

(இ - ள்.) முனிவர்களே! திருவாரூரில் பிறந்தவர்களும், சிதம்பரத்தைக் கண்டு தெரிசித்தவர்களும், அருளையுடைய காசியில் சிறப்பாக இறந்தவர்களும், கேதாரத்தில் ஸ்நானம் செய்தவர்களும், பிரக்யாதியான அருணசலத்தை நினைத்தவர்களும், அரசவனம் விட்டு நீங்காது அன்பாயிருந்தவர்களும் மோக்ஷத்தை யடைவார்கள் என்று, வலிமையையுடைய வேலைப் பிடித்த கந்தப் பெருமான் கூறியருளினர்.

144. சுருதிபுகழ் சிகரசிகா மணிமருவும்
அரசவனந் துன்னி யோர்நாண்
மருவினோர் கோதான பலன்பெறுவர்
இரண்டுநாண் மன்னி னோர்கள்
பெருகியபூ தானபலன் பெற்றிடுவார்
மூன்றுநாட் பெட்பால் வைகிற்
கருதியகன் னிகைதான பலன்பெறுவார்
சிவபதமும் கைக்கொள் வாரே.

(இ - ள்.) வேதந்துதிக்கும் சிகரசிகாமணி நாதர் எழுந்தருளிய அரசவன க்ஷேத்திரத்தில் ஒருநாள் வாசஞ்செய்யின் கோதான பலனும், இரண்டுநாள் வாசஞ்செய்யின், பெரிய பூதானம் செய்த பலனும், மூன்றுநாள் வாசஞ் செய்தவர்கள் கன்னிகாதான பலனும் பெறுவார்கள்.

145. நிறைந்தபுகழ் அரசவனத் தரனடியார்க்
கொருபொழுது நிகரி லன்னம்
சிறந்தளிக்கி லெண்ணான்கு தருமமியற்
றிடுபலனைச் சேர்ந்து வாழ்வார்
துறந்தவர்க்கும் மறையவர்க்கும் இரவலர்க்குந்
துகிலடிசில் துறக்க நல்கிற்
பிறந்தபவ வினைநீங்கிச் சிவபுரியில்
கணாதிபராய்ப் பிறங்கு வாரே.

(இ - ள்.) நிறைவாகிய புகழினையுடைய அரசவனத்திலிருக்குஞ் சிவனடியார்கட்கு ஒருபொழுது ஒப்பற்ற அன்னம் சிறப்பாக அளித்தவர்கள், முப்பத்திரண்டு தர்மமும் செய்த பலனைப் பெற்று வாழ்வார்கள். அன்றித் துறந்வர்களுக்கும், பிராமணர்களுக்கும், யாசகர்களுக்கும் வஸ்திரம், அன்னம் இவைகளை அன்பாகக் கொடுத்தவர்கள் பிறந்த ஜனன வினைதீர்ந்து சிவலோகத்தில் கணாதிபராய்ப் பிரகாசித்திருப்பர்.

146. அந்தணருக் கறங்கள்புரி வித்தோர்கள்
சிவனடியார்க் கன்பி னூலே
முந்துமட வாலயங்கள் செய்விப்போர்
சிவபுரிக்கு முதன்மை யாவார்
சந்தமுறு மரசவனத் திருந்துதவம்
விரதங்கள் தரும நோற்போர்
புந்தியினெண் ணியவண்ணம் பொசித்திடுவார்
சிவபதமும் பொருந்து வாரே.

(இ - ள்.) அந்த அரசவன க்ஷேத்திரத்தில் பிராமணர்களுக்கு அக்கிரகாரம் கட்டிவைத்தவர்களும், சிவனடியார்களுக்குப் பக்தியினூல் முதன்மையான மடலாயங்கள் கட்டி வைத்தவர்களும் சிவலோகத்தில் முதல்கணுதிபராவர். அழகு பொருந்திய அரசவனத்தில் இருந்து தபசு செய்வோர், விரதங்கள் இருப்போர், தருமம் புரிவோர் ஆகியவர்கள் மனதில் தாங்கள் எண்ணிய பிரகாரம் பதவிகளை அநுபவித்துச் சிவலோகபதவியையும் அடைவார்கள்.

147. நித்தியமாஞ் சோதிலிங்கந் தனையொருக்கால்
வலம்வந்தோர் நிகரில் செல்வ
வித்தகராம் இருக்கான்முக் காற்புரிந்தோர்
இந்திரன்போன் மேவி வாழ்வார்
சித்தமகிழ்ந் தாலயத்திற் றீபங்கள்
வைத்திடுவோர் தெய்வ ஞான
முத்தரென வுதித்திடுவார் வில்வத்தா
லருச்சித்தோர் முத்த ராவார்.

(இ - ள்.) அழியாத மகத்தான சோதிலிங்க நாதரை ஒரு தரம் வலம் வந்தவர்கள் ஒப்பற்ற செல்வமிகுந்த மேன்மக்களாவார்கள். இரண்டுதரம், மூன்றுதரம் வலம் வந்தோர் தேவேந்திரனைப் போல் சுகம் அனுபவித்து வாழ்வார்கள். மனம் மகிழ்ந்து, அந்தச் சோதிலிங்கத்தின் சந்நிதியில் தீபங்கள் வைத்த பேர்கள் திவ்விய ஞானத்தில் முதன்மையாயிருப்பார்கள். வில்வ பத்திரத்தால் அருச்சித்த பேர்கள் ஜீவன் முத்தராயிருந்து பின், விதேக முத்தாராவார்கள்.

148. அரசவனத் துறைபவர்கட் கமுதளிக்க
நினைந்துநடந் தடிபேர்ந் திட்டோர்
உரைசெயிலோ ரடிக்கியொரு பரிமேதப்
பலன்பெறுவ ரோரன் னத்திற்
கிரவிமதி யுள்ளளவு மிரசிதவெற்
பினிலுறைவர் இமையா முக்கண்
பரனுருவ மாகிடுவர் ஒருவருக்கு
அமுதளிக்கில் பகருங் காலே

(இ - ள்.) அரசவனத்தில் வாசம் செய்வோருக்கு அன்னங் கொடுக்க, மனதிலே நினைந்து நடந்து அடி வைத்த பேர்களுக்கு ஒரு அடிக்கு ஒரு அசுவமேத யாகபலன் பெறுவார்கள். ஒரு அன்னத்திற்குச் சந்திரசூரியர் உள்ள வரையில் கயிலாயத்தில் சாலோகபதவி பெறுவார்கள். சொல்லுமிடத்து ஒருவருக்கு அமுது அளிக்கின் இமையாத மூன்று கண்களையுடைய சிவபிரானுருவமாகச் சாயுச்சியமடைவர்.

149. அரசவனஞ் சேவிக்க வழிநடந்தோர்
தமக்கன்ன மளிப்போர் வேதத்
துரைசெயுமேழ் வகையாகப் பலன்பெறுவ
ரத்தலத்தி லுறைவோர்க் கன்னம்
விரைகமழோ ரரசிலையி னிரம்பவளித்
திடுவோர்கள் மிகுந்த செல்வந்
தரையிலநு பவித்துமறு மையிற்சாயுச்
சியபதவி சார்கு வாரே.

(இ -ள்.) அரசவனத்திற் சென்று, தரிசனம் செய்ய வேணு மென்று வழி நடந்தோர்களுக்கு, அன்னங்கொடுக்கில் வேதத்திலே சொல்லாநின்ற எழுவகை யாகப்பலனைப் பெறுவார்கள். அத்தலத்தில் வாசமாயிருப்போருக்கு அரசஇலை நிரம்ப அன்னம் அளிப்போர் அளவற்ற பாக்கியத்தைப் பூலோகத்தில் அனுபவித்து மறுஜன்மத்தில் சாயுச்சியம் அடைவார்கள் என்று குமாரப் பெருமான் அருளிச் செய்தார்.

150. இத்தகைய வாசகத்தைக் கேட்டுமுனி
வர்களெலாம் இன்ப மெய்தி
சத்திநெடும் படையான்றன் ருள்தொழுதார்
தொழுதவத் தவத்தோர்க் கெல்லாம்
முத்தலைமா காரண்டன் முடிவனினி
தருந்தவநீர் முயன்று வாழ்மின்
எத்தலொழிந் தெனப்பகர்ந்து கோவலூ
ரெய்திவழி யாகங் கண்டு.

(இ - ள்.) குமாரக்கடவுளின் மொழியைக் கேட்டு, முனிவர்களெல்லாரும் மகிழ்ச்சியடைந்து, வேலேந்திய அப் பெருமான் திருவடிகளைத் தொழுதனர். வணங்கிய முனிவர்களை, முருகப்பெருமான் பார்த்து, மூன்று சிரசுடைய காருண்டன் முடிந்து போவான். இனி நீங்கள் அரிய தவத்தைச் செய்து, வருத்தந்தீர்ந்ததென்று வாழ்ந்து கொண்டிருங்கள் என்று திருவாய் மலர்ந்தருளி, அரசவனம் விட்டுத் திருக்கோவலூர் சென்று யாகஞ்செய்யத் தொடங்கினுர்.

151. குகமுனியை யங்கிருந்த முனிவர்களை
வேதநெறி குலவ விந்த
மகமுடித்திங் குறையுமென இருத்தியும்மா
மதிநதியும் வனைந்த வேணி
பகவனையும் பரையினையும் நினைந்தினிய
கயிலைவரை பாலிற் சென்றுன்
உகமையிலாக் குகமுனியுந் திருக்கோவ
லூர்நகரி லுறைந்தி ருந்தான்.

(இ - ள்.) குகமுனியையும், அவ்விடத்திலிருந்த முனிவர்களையும் வேதவிதிப்படி இந்த யாகத்தை நிறைவேற்றி இங்குத் தானே இருங்கோள் என்று கூறியபின், சிறந்த சந்திரனையும், கங்கை யையும் தரித்த சடையையுடைய பரமசிவனையும், பார்வதியையும் நினைந்து இனிதான கைலாசகிரிக்குப் போய்ச் சேர்ந்தார். உவமை யில்லாக் குகமுனிவர் திருக்கோவலூரிலேயே தங்கியிருந்தனர்.

152. குமரவே ளகன்றதற்பின் குகமுனியும்
முனிவருடன் குழுமிச் சூழ்ந்த
இமையவர்கள் மகிழ்வெய்த யாகமியற்
றிடுவேலை யாகந் தன்னிற்
சமரவயப் படைவாளும் புனையுமணி
மணிமுடியுந் தயங்கித் தோன்ற
அமராதி பதியென்னப் பசும்புரவி
மேற்கொண்டோர் அரசன் வந்தான்.

(இ - ள்) குமாரப்பெருமான் கயிலை சென்றபின், குக முனியும் மற்றும் அநேகமுனிவர்கள் சூழ, தேவர்கள் சந்தோஷிக்க யாகஞ் செய்தார். அந்த யாகத்தில் யுத்தஞ் செய்தற் குரிய படைகளும் வாளும் பிடித்த கைகளும், இரத்தினுபரணங் களும், நவரத்தின கிரீடமும் பிரகாசிக்க தேவேந்திரன் போல் பச்சைக் குதிரைமேலேறிக் கொண்டு ஒரு அரசகுமாரன் அவதரித்தனன்.

153. மாமகத்தி லுதித்தருளு மன்னவனுங்
குகமுனியை வணங்க வந்த
கோமகற்குத் தெய்வீகப் புரவலனென்
றுயர்நாமங் குறித்துச் சாத்தித்
தாமரையாள் வயமடந்தை நாமகளென்
றிவர்வாழ்வுந் தக்க செல்வ
தோமகலக் கொடுத்தழியா வரம்பலவு
மளித்துகந்தான் சுருதி நாதன்.

(இ - ள்) அந்த யாகத்திலே அவதரித்த அரசகுமாரனும் குகமுனிவர் பாதத்தில் விழுந்து வணங்க, அவர் அவனுக்குத் 'தெய்வீகராசன்' என்னும் உயர்ந்த பெயரைச் சூட்டி, 'லக்ஷ்மி கடாக்ஷமாகிய செல்வமும், கௌரியின் கடாக்ஷமாகிய வெற்றி யும், சரஸ்வதியின் கடாக்ஷமாகிய கல்வியும் குற்றமற உண்டாவ தாக' என்று ஆசிர்வதித்துப் பலவரங்களுமளித்து மகிழ்ந்தனர்.

154. ஆன்றவறி வுடையமுனி வராயிருந்தார்
மவுலியுடன் யாகந் தன்னுட்
டோன்றியகா வலன்யாவ னெனக்கேட்ப
குகமுனியுஞ் சொல்ல லுற்றான்
மூன்றுலகுஞ் சதுர்மறையு முடிவுபட
வண்டங்கண் முழுது மன்பால்
ஈன்றவுமை யாள்தன்னை யீன்றெடுத்த
பெருமைபுனை யிமவா னோர்நாள்.

(இ - ள்) அங்குக் கூடியிருந்த முனிவர்களெல்லாரும் குக முனிவரை நோக்கி, கீரீடமுடன் யாகத்திற் பிறந்த அரசகுமாரன் யார்? என்று கேட்டனர். அதற்குக் குகமுனிவர் கூறுவார். மூன்று உலகையும், நான்கு வேதங்களின் முடிவையும், அண்டங்கள் எல்லாவற்றையும் அன்பினாலே பெற்ற உமையவளைப் பெற்ற பெருமை பொருந்திய பர்வத ராசன் ஒருநாள் கயிலாயஞ் சென்றான்.

155. வெள்ளிவரைக் கினிதெய்தி விடைக்கொடியாற்
கறிவித்து மேவா னாகி
யுள்ளணைந்தா னுமையவளுஞ் சிலதியரு
மொழிந்துவே றொருவ ரின்றி
வள்ளலிருந் தமைகண்டு நாணியெதிர்
வணங்கியமா துலனைப் பார்த்துத்
தள்ளரியை யானாலு மறிவியா
திவ்விடத்திற் சார்ந்த தாலே.

(இ - ள்.) வெள்ளியங்கிரி சென்ற பர்வதராசன் தன் வருகையைச் சிவபெருமானுக்கு அறிவிக்காமலே உட்சென்றனன். அது சமயம், தோழியர்களின்றி உமையவளும் சிவபெருமானும் தனித்திருந்தனர். அதுகண்டு, நாணி எதிர்வந்து வணங்கிய மாமனாரைச் சிவபெருமான் கண்டு, 'தள்ளுதற்கரிய நும்வருகை சமயம் அறியாது அறிவிக்காமல் வந்ததனால்,

156. பூதலமேன் மானிடனுய்ப் பிறந்திடெனத்
திருவாக்காற் புகன்ற போது
ஆதுலர்போன் மலேயரையன் மொழிகுழறி
மிகநடுங்கி யாவி சோர்ந்தான்
காதலனே நோக்கியுல கம்பயந்த
கன்னிகையுங் கருணே யாய்நின்
மாதுலனன் ருேபவத்தில் வீழ்வனே
வென்றிரங்கி வணங்கிச் சொன்னுள்.

(இ - ள்.) 'பூமியிற் சென்று மானிடனுகப் பிறப்பாயாக' எனக் கூறினர். அம்மொழி கேட்ட பர்வதராசன் யாது மில்லாதவர் போல் வாய்குழறி, மிக நடுங்கி மூர்ச்சையானுன். அப்போது உலகமீன்ற கன்னியாகிய பார்வதி தனது நாயகனேப் பார்த்து, 'உமது மாமனுரா செனனமெடுப்பது பிறவியில் வீழ்வது' என்று வணங்கிக் கூறினுள்.

157. வணங்கியகா மக்கொடியைப் பார்த்தருளி
மாதேநீ மறுக விப்போ
திணங்கியசா பந்தொலேக்க வேண்டுமன்னே
யுதரத்தி னிடைபு காமன்
மணங்கமழுந் தார்மௌலி யுடன்யாகத்
திடைப்பிறந்து வையங் காத்துப்
பிணங்குபுலன் வென்றுதவ முயன்றுவரு
குவையென்ருன் பெம்மா னெம்மான்.

(இ - ள்.) வணங்கிய பார்வதியைப் பார்த்து, சிவபெருமான் மாதே! 'நீ வருந்தாதே என்று கூறி, இந்தச் சாபத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் அன்றி வேறில்லே. தாயின் கருப் பத்தில் பிறவாமல் வாசனே வீசும் மாலேயணிந்து கிரீடத்துடனே யாகத்திற் பிறந்து, 'உலகை ஆண்டு, ஐம்புலாதிகளேச் செயித்துத் தவஞ் செய்து வருவாயென்று சிவபெருமான் கூறினுர்.

158. அந்தவருஞ் சாபத்தால் வந்தமலை
யரையனிவ னகு மென்று
சந்தமுனி வர்க்குரைத்துக் குகமுனியத்
தலத்துதவத் திருந்தா னந்தக்
கந்தனருட் கரத்தயில்வேல் ஆறுதலா
லுயர்ந்ததிருக் கைவே லூரென்
றிந்தவெழிற் பெயர்புனைந்த கோவலூ
ரதனில்வந் திருந்தா னன்றே.

(இ - ள்.) அந்தச் சாபத்தினாலே வந்த மலையரசன் இவன் ஆகும் என்று அழகான முனிவர்களுக்குச் சொல்லி, குகமுனியும் அந்தத் தலத்திலேயே தவஞ்செய்து கொண்டிருந்தார். கந்தப் பெருமான் அநுக்கிரகத்தினால் அவரது கையிலுள்ள வேல் வந்து நின்ற காரணத்தால் உயர்ச்சியான திருக்கைவேலூர் என்னும் அழகிய பெயர் புனைந்த திருக்கோவலூரில் தெய்வீக மன்னன் வந்து வாழ்ந்து கொண்டிருந்தான்.

159. அத்தகையந் நாள்வளவ னஞ்சேரன்
வழுதியெனு மரசர் மூவர்
இத்தலங்கள் புரிந்தருளி யுறையூரிற்
கூடியிருந் தியாகந் தன்னிற்
பத்திமணி முடிதயங்கப் பசும்புரவி
மேற்கொண்டு படைவா ளேந்தி
உத்தமவேந் தொருவனுதித் தானென்று
வந்தவர்க ளுரைப்பக் கேட்டார்.

(இ - ள்.) தெய்வீக மன்னன் திருக்கோவலூரில் இருக்கும் நாளில் பூமியாளும் சேர, சோழ, பாண்டியன் என்னும் அரசர் மூவரும் உறையூரில் கூடியிருந்தார்கள். அப்பொழுது யாகத்தில் வரிசையாக நவரத்தினம் பதித்த கிரீடம் பிரகாசிக்க, பச்சைக் குதிரை மேலேறிக் கொண்டு, படைவாளும் பிடித்துக் கொண்டு, உத்தமனான அரசனொருவன் பிறந்துள்ளானென்று வந்தவர்கள் சொல்லக் கேள்விப்பட்டார்கள்.

160 விரைசெய்மலர்த் தார்மவுலி யுடனுதித்த
வலவேந்தன் வீர மேவும்
உரமறிவார் தூதர்சிலர் தமையழைத்துத்
தன்னுடனுற் பவித்த தாய
மரகதவெம் புரவிதனை வரவிடச்சொல்
லெனவிட்டார் மதிநூற் றூதர்
பரனருளால் வந்துதித்த மன்னவனைச்
சென்றணைந்து பரிமாக் கேட்டார்.

(இ - ள்.) வாசனை வீசும் புஷ்பமாலை தரித்த கிரீடத்துடனே உதித்த பலம் பொருந்திய தெய்வீகராசனின் பராக்கிரமத்தை அறிய எண்ணியவர்களாய்ச் சில தூதரை அழைத்து, தெய்வீக ராசனிடத்திற்குப் போய் அவனுடன் யாகத்தில் பிறந்த பச்சைக் குதிரையை அனுப்பச் சொல்லென்று அனுப்பினார்கள். புத்தியில் வல்லவர்களான தூதர்கள் சிவானுக்கிரகத்தினுல் பிறந்த தெய்வீகராசனிடஞ் சென்று பச்சைக் குதிரையைத் தருமாறு கேட்டனர்.

161. மூவரசர்க் கெளியனோ யான்பரிமாக்
கொடேனென்று மொழியக் கேட்டுக்
காவலருக் குயர்தூதர் அறிவித்து
வொருமூன்று காவ லோரும்
தேவர்பிரான் தில்லைமா நகரணுகி
யாள்விடலால் தெய்வ வாண்மைக்
கோவனகர் தெய்வீகன் விரைந்தரசர்
திருமுன்னர்க் குறுகிக் கண்டான்.

(இ - ள்.) அதுகேட்ட தெய்வீகன் மூன்று அரசர்களுக்கு நான் இளைத்தவனோ? பச்சைக் குதிரையைக் கொடுப்பதில்லை என்று சொல்லக் கேட்டுத் தூதர்களும் மூன்று அரசர்களிடத்திலும் சென்று அறிவித்தனர். அதனைக் கேட்ட மூன்று அரசர்களும் தேவர்பிரானுன சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் சிதம்பரம் என்னும் க்ஷேத்திரம் வந்து இருந்து கொண்டு ஆள் அனுப்பினர். அது கேட்ட தெய்வீகராசனும் விரைந்து வந்து மூன்று அரசர் களையும் கண்டனன்.

162. வடகிரிபா லடையாளந் தீட்டுதிறன்
மூவேந்தர் வந்த தெய்வ
அடலரசன் றனைநோக்கி யிப்பரிநீ
தாவென்றவன் னறைந்த போது
மிடலுடையீ ரென்னுடனே யமராடல்
புரிந்தென்னை வென்றீ ராகில்
விடலரிய பசும்பரிநீர் கொண்மினென்றான்
கோவலூர் வேந்தர் கோமான்.

(இ - ள்.) மேரு மலையில் மீன், புலி, பனைக்கொடிகளை அடையாளமாகப் பொறித்து வைத்துள்ள மூன்று அரசர்களும் தெய்வீகராசனை நோக்கி, உன் பச்சைக் குதிரையைத் தர வேண்டுமென்று கேட்டனர். அது கேட்ட தெய்வீகராசன் ''என்னுடன் யுத்தஞ் செய்து வென்று குதிரையை அடையுங்கள்'' என்று பதில் கூறினான்.

163. காவலருங் கேட்டுநகைத் தடற்கரிதேர்
பரிவயவர் கணங்க ளில்லை
பூவலயத் துனக்கெவரும் துணைசெய்வார்
இல்லைநீ போரின் மூண்டால்
ஆவதுவென் பசும்பரியைத் தந்துநீ
போகென்றார் அவன்றான் பின்னும்
தாவிலருஞ் சமர்வென்றால் தருவேனல்
லதுதருதற் றகுமோ வென்றான்.

(இ - ள்.) அது கேட்டு மூன்று அரசர்களும் நகைத்து யானை, தேர், குதிரை, காலாள்களில்லை. பூவுலகில் உனக்குத் துணைபுரிபவர் எவரும் இல்லை. நீ சண்டை செய்து ஆவது என்ன? ஆகையால் குதிரையைத் தந்து, போவென்று மூன்று அரசர்களும் கூற, அது கேட்டுத் தெய்வீகராசன், ''யுத்தஞ் செய்து வெற்றி பெற்று அடையலாமேயன்றி எளிதில் தருவதில்லை'' என்று பதில் கூறினான்.

164. ஆனாலு மிவன்றானே வீரனென
மதித்தருள்கூர்ந் தாறி ரண்டு
தேனாருந் தொங்கன்முடி தெய்வீக
பதாதிகொடு செருச்செய் கில்லோம்
நானாவி தம்புணர்ந்த மற்போரைப்
புரிவமென நவையொன் றில்லாப்
பூநாடு புரந்தளிக்கும் புரவலரும்
புகன்றந்தப் போரின் மூண்டார்.

(இ - ள்.) இவன் மிகுந்த சௌரியவான் என்று மனதில் எண்ணியவர்களாய்த் தயைகூர்ந்து, பன்னிரு மாலைகளையணிந்த முடியுடைய தெய்வீகராசனை நோக்கி, பூமியை ஆளும் மூவேந்தரும், 'நாங்கள் உன் பேரில் பதாதிகளுடன் போர் செய்ய வில்லை. பல வகையான மல்யுத்தம் செய்வோம்' என்று கூறி மூவேந்தரும் மல்யுத்தத்திற்கு முன் வந்தனர்.

165. சேரர்பிரான் முன்மலைந்து திருகினான்
அதன்பின்னர்ச் செழுநீர்ப் பொன்னி
பாரநதித் திருநாடன் எதிர்ந்திளைத்தான்
இளைத்தானைப் பார்த்து வெட்கி
ஆரமணி புனைவழுதி யமர்புரிந்து
புறகிட்டான் அடன்மற் போர்க்கு
வீரனிவ னேபோர்க்கும் வீரனென
நின்றோர்கள் விளம்பி னார்கள்.

(இ - ள்.) முதலில் சேர மகாராசன் யுத்தஞ் செய்து இளைத்து விலகினான். அதன் பின்னர் காவிரி நாட்டையுடைய சோழன் எதிர்த்து மல்யுத்தஞ் செய்து இளைத்தான். இளைத்த சோழனைப் பார்த்து, வெட்கமடைந்து முத்துமாலை யணிந்த பாண்டியன் யுத்தஞ் செய்து புறம் போனான். அதைக்கண்டு அங்கு இருந்தோரெல்லாரும் பலம் பொருந்திய மல்யுத்தத்திற்கு வீரன் இவனேயாகையால் படை கொண்டு செய்யும் யுத்தத்திற்கும் பராக்கிரமசாலியாவான் எனக் கூறினார்கள்.

166. மல்லாடற் கிளைத்ததிறன் மன்னவர்மூ
வரும்தத்தம் மவுலி சூட்ட
நல்லாரெண் கோவலூர் நற்பதியுந்
தன்னுடனே நயந்து தோன்றுங்
கல்லாரு மவுலியுடன் நாலுமணி
முடிபுனைந்து காவ லீரென்
புல்லாண்மை வியந்துரைத்தல் பொறுத்திடு
மின்
எனமுகமன் புகன்று னன்றே.

(இ - ள்.) மல்யுத்தத்திற்கு வந்த மூன்று அரசர்களும் தங்கள் தங்கள் கிரீடத்தைத் தெய்வீக ராசனுக்குச் சூட்டினார்கள். பெற்றுக்கொண்டு, நல்லோர்கள் நினைக்கும் திருக்கோவலூர் தெய்வீக ராசனும் தன்னுடன் நயமாய்ப் பிறந்த நவரத்தின கிரீடத்துடனே நான்கு கிரீடங்களையும் தரித்துக்கொண்டு, மூன்று அரசர்களையும் பார்த்து, என் அற்பவல்லமையை வியந்து நான் கூறியதை நீங்கள் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று உபசார வார்த்தைகள் கூறினான்.

167. இத்திறலோன் தனக்குநாம் எந்நாடு
கொடுப்பமென வெண்ணி வேந்தர்
பத்திமணி மவுலியுட னுற்பவித்த
பார்த்திபனைப் பார்த்துக் கேளும்
தத்துபரி யொருவட்டம் வந்தநா
டுனக்கென்று சாற்றக் கேட்ட
உத்தமமா மவ்வார்த்தை பிற்படமுற்
புரவிதனை யுகைத்தெ ழுந்து.

(இ - ள்.) அவ்வார்த்தை கேட்ட மூவரும், வெற்றியுடைய இவ்வரசனுக்கு நாம் எந்தத் தேசத்தைக் கொடுக்கலாமென எண்ணிக் கிரீடத்துடன் யாகத்தில் உற்பவித்த தெய்வீக ராசனைப் பார்த்துக் 'கேளும்,' உம்முடைய தாவி நடக்கும் பச்சைக் குதிரை ஒருவட்டம் வந்த நாடு உமக்கென்றனர். அவ்வார்த்தை பின்னிடும்படி, முன்னாகத் தன் பச்சைக் குதிரை மீதெழுந்து வட்டமாகச்செலுத்துவானாயினான்.

168. வடதிசைக்குக் கெடியாறு குணதிசைக்குக்
கரியகடல் வளம ருத
குடதிசைக்குக் கொல்லிமலை தென்திசைக்கு
நிவாவாறு குலவு மெல்லை
அடைவுபடக் கணப்போதி லொருவட்டஞ்
சூழ்ந்தபரி தன்மேல் வந்து
புடவிதனை யாளரச ரொருமூவர்
தம்முன்பு போந்தான் வேந்தன்.

(இ - ள்.) வடதிசையில் கெடியாறு மட்டும் சென்று திரும்பி, கீழ்த்திசையில் கறுத்த கடல் மட்டும் சென்று திரும்பி, தெற்குத் திசையில் நிவாவாறு என்னும் வெள்ளாறுவரை சென்று திரும்பி, மேற்குத் திசையில் வளப்பம் மாருத கொல்லிமலை மட்டும் போய்த்திரும்பி, இதற்குள் வட்டமாய் ஒரு கண நேரத் திலே சுற்றிக் கொண்டு மூவேந்தர்கள் முன்பாக வந்து சேர்ந்தான்.

169. வெந்திறல்வெம் பரிவந்த திருநாட்டி
னெல்லையெலாம் வியப்பா லீய்ந்து
கொந்தலர்ந்த பொழிற்கோவன் மாநகரி
லெல்லோருங் கூடிச் சேர்ந்து
மைந்துபுனை தெய்வீக மன்னவனோ
டளவளாய் வைகிப் பின்னர்த்
தந்தமது பதியடைந்தார் அனலிரவி
மதிமரபின் தார்மூ வேந்தர்.

(இ - ள்.) பலமும் வேகமும் உடைய பச்சைக்குதிரை சுற்றிவந்த தேசத்தை மகிழ்ச்சியுடன் தெய்வீகனுக்கு அளித்துச் சோலை சூழ்ந்த திருக்கோவலூரில் மூன்று அரசர்களுஞ் சில தினங்கள் தங்கியிருந்து அளவளாவிய பின் அக்கினி, சூரியன், சந்திரன் மரபில் வந்த சேர, சோழ, பாண்டிய அரசர்கள் தங்கள் தங்கள் நகரம் போய்ச் சேர்ந்தார்கள்.

170. மூவேந்த ரகன்றதற்பின் மவுலியுட
னுற்பவித்து முதன்மை பூண்ட
கோவேந்தன் கோவலூர்ப் பொன்னகரிற்
சிறந்தேறக் குலவு நன்னூற்
பாவேந்தர் தமிழ்ப்புனைந்து சதுரங்கப்
பரிகலமுந் தழைக்க வைந்து
காவேந்த னெனப்பொலியத் தன்னாடு
மென்னாடுங் காக்கு நாளில்.

(இ - ள்.) மூன்று அரசர்களும் சென்ற பின்பு கிரீடத்துடன் பிறந்து முதன்மையான வெற்றி பெற்ற தெய்வீகராசன் கோவலூரில் பொன்னகரம் போலச் சிறப்பாகக் குடியேறச் செய்து தானும், கலைஞானமுற்ற கவிவாணர் பாடிய தமிழ்மாலை, சாற்றிக்கொண்டு சதுரங்கசேனையுந் தழைக்க, பஞ்சதருவின் கீழுள்ள தேவேந்திரன் தன்னாட்டையும், மற்ற நாடுகளையும் காவல்செய்து கொண்டு வருகின்ற நாளில்,

171. மந்திரிகள் மன்னனுக்கு மணமியற்ற
வேண்டுமென மனத்தி லெண்ணி
அந்தநிரு பன்றனக்கு மறிவித்து
மதிமரபி லரச னுகுஞ்
சுந்தரமா றன்பயந்த தோகைகுல
பதியைமுனைத் தொடர்பாற் கேட்கப்
புந்தியினால் விளங்குமுதி யோர்சிலரை
யழைத்தன்பாற் போக விட்டார்.

(இ - ள்.) மந்திரிகள், தெய்வீகராசனுக்கு விவாகஞ்செய் விக்க எண்ணியவர்களாய், அதனை அரசனுக்கும் அறிவித்துச் சந்திர வமிசத்துப் பிறந்த சுந்தரபாண்டியன் பெற்ற குலபதி என்னுங் கன்னிகையைக் கேட்க, அறிவுடைய பெரியோர் சிலரை அழைத்து அன்புடன் பாண்டிய நாட்டுக்கு அனுப்பினார்கள்.

172. போனவறி வுடைமுதியோர் தமிழ்மதுரா
புரிதன்னிற் புகுந்து வெவ்வேல்
மீனவனைக் கண்டவன்றன் மகளைத்தெய்
வீகற்கு விரும்பிக் கேட்டார்
ஆனதிறற் பஞ்சவனு மகள்கொடுப்பான்
பொருந்தினுன் அவரும் மீண்டு
மானவய வமைச்சருடன் மணநிலைமை
பொருந்தியமை வந்து சொன்னுர்.

(இ - ள்.) சென்ற அறிவுடைய பெரியோர்கள் மதுரா புரியை அடைந்து கொடிய வேல் பிடித்த பாண்டியனைக் கண்டு அவன் மகளைத் தெய்வீகராசனுக்குக் கொடுக்க வேண்டுமென மகிழ்வுடன் கேட்டனர். திறமையுடைய பாண்டியனும் தன் குமாரத்தியைக் கொடுப்பதாகச் சம்மதித்தனன். அது கேட்டுத் திரும்பி வந்து மந்திரிகளைக் கண்டு பாண்டியராசன் பெண் கொடுப்பதாகக் கூறியதையும் நாள் குறிப்பிட்டதையும் விவரமாகக் கூறினர்.

173. அறிவுடைய அமைச்சர்களு முணர்ந்துமண
நாள்விதித்தற் ககம கிழ்ந்து
நெறிபுரியுஞ் சதுர்முடிக்கு முரியோனுக்
கூறிவிக்க நிகரின் மன்னன்
வெறிகமழு நீராடி மணக்கோலங்
கொண்டயலே வேத நாவோர்
செறிதரவா சிகள்கூறச் சதுரங்கப்
பரிகலமுஞ் சேரச் சென்று.

(இ - ள்.) அதுகேட்ட அறிவுடைய மந்திரிகள் விவாகநாள் நிச்சயித்து வந்ததற்கு மகிழ்ந்து நீதியுடைய நான்கு முடிதரித்த தெய்வீகராசனுக்கு அறிவித்தனர். அது கேட்டு ஒப்பற்ற தெய்வீகராசனும் வாசனைமிக்க சலத்தில் நீராடி, கலியாணக் கோலங்கொண்டு பக்கத்தில் வேதமுணர்ந்த அந்தணரும் அறிஞர்களும் ஆசிர்வதிக்கச் சதுரங்கசேனைகள் சூழ்ந்து வர, மதுராபுரியை அடைந்தனர்.

174. தென்மதுரை தனிலெய்தி சுந்தரமா
றன்பயந்த செல்வி யன்ன
நன்மதுர மொழிச்செவ்வாய்க் குலபதியை
நன்மூர்த்த நண்ணிற் றுருக
முன்மணமா முரசொலியுஞ் சங்கத்தின்
பேரொலியு முன்றி லார்ப்ப
பொன்மலியு மங்கலநாண் தரித்திரதி
யுடன்மதன்போற் பொலிவு கூர்ந்து.

(இ - ள்.) தெய்வீகராசன் தென்மதுரை சேர்ந்து சுந்தர பாண்டியன் பெற்ற, இலக்குமி போன்றவளும், இனிய மொழி யுடையவளும், சிவந்தவாயினையுடையவளுமான குலபதி என்னுங் கன்னிகையை, நல்ல முகூர்த்தநாளில் நல்ல லக்கினத்தில் மணபேரிகை ஆரவாரிக்க, சங்கம் சப்திக்க, சகல வாத்தியங்களும் முழங்க, பொன்னுலாகிய திருமங்கிலியம் சூட்டி, மதனும் ரதியும் போலப் பிரகாசித்தனர்.

175. பன்மறையோர் வாழ்த்தெடுப்பப் பல்லோரும்
பல்லாண்டு பகரச் செந்தீ
நன்மைபெற வலங்கொண்டு பள்ளியறை
தனைநண்ணி நயந்து நல்லாள்
அன்மலியுங் குழற்காடு மரியபுள
கக்களப மணிந்த வாரப்
பொன்மலையு மரணுக வெற்றிமா
மதனனையும் புறகு கண்டு.

(இ - ள்.) திருமணமானபின், அந்தணர் வாழ்த்த, பெண்கள் பல்லாண்டு கூற, சிவந்த அக்கினியை வலஞ் செய்து பள்ளி யறையுள் சென்று, குலபதி கறுத்த கூந்தலுடன் அரிதான புளகம் பூரிக்க, களபமணிந்து மாலை தரித்து, தெய்வீகராசனின் பொன் மலை போன்ற தோளே அரணுக வெற்றி பெற்ற மன்மதனையும் இன்பத்தில் புறமுதுகிடச் செய்தாள்.

176. ஊடியு மவளுடலே காமத்துக்
குறியெனவு முயிரோன் ருகக்
கூடியுமன் னவனுடலம் அவளுடல
மிவனுடலம் கோமான் யாக்கை
ஆடியுங்கண் ணுடியிற்றுன் னிழலும்போல்
ஒருவரிற்கண் டனங்க வேதம்
பாடியவ னெறிதனிலும் பதின்மடங்கு
காமத்தின் பயன்துய்த் தார்கள்.

(இ - ள்.) தெய்வீகராசனுங் குலபதியும் கோபித்தும், அக்கோபமே இன்பமெனக் கூடியும், அவனுடலும், அவளுடலும் பிரித்தறியாதபடி கூடியும், விளையாடியும், கண்ணுடியும், நிழலும் போல ஒருவரையொருவர் கண்டுபிடித்தும்; மதனசாத்திரத்தைப் பாடியவன் நெறிதனிலும் பதின்மடங்கு காமஇன்பத்தை இருவரும் அனுபவித்தார்கள்.

177. இப்படிச்சின் ஞண்மதுரை யிடத்துறைந்தான்
அந்நாளில் இயல்பு செய்யா
மைப்பொலிமே னிச்செங்கண் வல்லோரி
யெனுமரக்கன் மாயம் வல்லான்
செப்பரிய வருணைகிரிக் கயலோர்வெற்
பிடத்திருந்து செய்யுந் தீமை
தப்பரிதென் றமைச்சர்விடுந் தூதர்களுந்
தெய்வீகன் தன்பால் வந்து.

(இ - ள்.) தெய்வீகன் மதுரையில் சிலநாள் தங்கியிருந்த போது, இயல்பாகச் செய்தது போன்ற கறுத்த சரீரமும், சிவந்த கண்களையுமுடைய வல்லோரி என்னும் அரக்கன் மாயவித்தையில் வல்லவன், சொல்லுதற்கு அரிய அருணசலத்திற்கு அடுத்துள்ள ஒரு மலையில் இருந்துகொண்டு, அவன் செய்யுங் கொடுமைகளிலிருந்து தப்புவது அரிது என்று திருக்கோவலூரிலிருந்து மந்திரிகள் தூதுவர்களை அனுப்பினர். அந்தத் தூதுவர்களும் தெய்வீகராசனிடம் வந்து சேர்ந்தனர்.

178. சொன்னார்கள் கேட்டளவிற் குலபதியாம்
பெண்ணணங்கின் துனியை யாற்றிச்
சின்னாளிங் கிருத்திநீ யென்றுரைத்துப்
பஞ்சவற்குச் செலவு கூறித்
தன்னுடற் பரியேறி கணப்போதிற்
கோவலூர் தன்னிற் சார்ந்தான்
பொன்னாடர்க் கரசனிலும் பதின்மடங்கு
காட்சியினாற் பொலியும் வேந்தன்.

(இ - ள்.) தெய்வீகராசனைக் கண்டு தூதுவர்கள் சொல்ல, அது கேட்டுக் குலபதி என்னும் பெண்தெய்வம் போல்பவள் பிரிவிற்கு ஆற்றாது கொண்ட அச்சத்தை நீக்கி, 'சிலநாள் நீ இங்கு இரு' என்று கூறிப் பாண்டிய அரசனிடமும் விடை பெற்றுக் கொண்டு, தன்னுடைய பச்சைக் குதிரையின்மேல் ஏறிக் கொண்டு க்ஷண நேரத்தில் திருக்கோவலூர் வந்து சேர்ந்தான், தேவலோகத்திலுள்ளோர்க்கு அரசனாகிய தேவந்திரனிலும் பதின் மடங்கு பிரகாசமாயிருக்கும் தெய்வீகமகாராசன்.

179. வேந்தனிரு பதமிறைஞ்சி யமைச்சர்களுந்
திறலசுரன் வெம்மை யெல்லாம்
சேந்துரைக்கக் கேட்டெழுந்து சதுரங்க
சேனையுடை செறிந்து சூழப்
பாந்தளணி யருணைகிரிப் பரம்பரனைக்
கண்களிக்கப் பணிந்து பின்னர்
காந்துமனத் திறல்வஞ்ச வல்லோரி
யுறைபொருப்பிற் கடிதிற் சென்றான்.

(இ - ள்.) அமைச்சர்கள் தெய்வீகராசனது பாதத்தில் வீழ்ந்து வல்லோரி என்னும் அரக்கன் செய்யும் கொடுமைகளை யெல்லாம் சொன்னார்கள். அதுகேட்ட தெய்வீகமன்னன் சதுரங்க சேனைகளுடன் புறப்பட்டு அரவணிந்த அருணாசலேசுவரரைக் கண்களிக்க வணங்கிப் பின், கொடிய மனமும், பலமும், வஞ்சனையுமுடைய வல்லோரி என்னும் அரக்கன் இருக்கும் மலையை விரைவாக அடைந்தான்.

180. வெந்திறல்வா ளசுரருடன் வல்லோரி
கல்லோல வேலை சூழ்ந்த
இந்தமா நிலத்தோருக் கிடர்விளைத்துத்
திரிந்துதன திருப்பிற் சார்வான்
வந்தான்வேந் தனைக்கண்டு வடவைபோற்
கொதித்தெழுந்து மருளப் போரின்
முந்தினுன் முடிவேந்து முனைந்தெழுந்தான்
விளைந்தவமர் மொழியற் பாற்றே.

(இ-ள்.) தெய்வீகன் சென்ற சமயத்தில் கொடிய வாளையுடைய அசுரர்களுடனே வல்லோரி என்பவன் சமுத்திர கோஷம் போலச் சேனைகள் சூழ இந்த உலகத்தினருக்குத் துன்பங்ளைச் செய்து திரும்பி வருகையில், தெய்வீகராசனைக் கண்டு, வடவா முகாக்கினி போல் கொதித்து மயக்க முண்டாகத் தக்க யுத்தஞ் செய்ய எதிர்ந்தான். முடியையுடைய தெய்வீகராசனும் அவன் மீது பாய்ந்தான். அவ்வாறு எவருஞ் சொல்ல முடியாதபடி சண்டை செய்தனர்.

181. எதிர்ப்பரெதிர் நகைப்பர்புகை யிணைவிழிகள்
கான்றியிடி யேறு போல
அதிர்ப்பர்கடங் கரிபரிதேர் அறுத்தறுத்துத்
துணித்துவிழுத் தடல்வாள் தன்னை
விதிர்ப்பர்கர வாளன்றி வெற்பெடுப்ப
ரெறிவரெறி வெற்பைத் தாங்கிப்
பிதிர்ப்பரொரு வருக்கொருவர் இடைவிடாத்
திறல்கொண்டு பெரும்போர் செய்தார்.

(இ - ள்.) இருவரும் ஒருவரையொருவர் எதிர்த்து நகைப்பார்கள். இரண்டு கண்களிலும் புகையெழ ஆணிடி போல் கர்ச்சிப்பார்கள். யானை, குதிரை, தேர், ஆள் இவைகளை அறுத்து அறுத்துத் துண்டமாக விழத்தள்ளி வெற்றி பெற்ற வாளாயுதத்தைச் சுழற்றுவார்கள். கையில் வாள் அல்லாமலும், மலைகளைப் பிடுங்கி, ஒருவர் மேலொருவர் வீசுவார். அந்த மலை மேலே படாமல் தடுத்து உடைத்து விடுவர். இப்படி ஒருவர் மேல் ஒருவர் பலங்கொண்டு இடைவிடாமல் யுத்தஞ் செய்தார்கள்.

182. இந்நிலேயி லிருவோரும் பொருமளவி
லிகலசுரன் இளேத்து வேந்தன்
முன்னெதிர்நின் றமர்புரிய மாட்டாம
லொருவரையின் முழஞ்சிற் சென்று
தன்னுயிருய் வான்புகுந்தான் சதுர்முடித்தா
ரவன்றனது தடக்கை வாளால்
அன்னமலே யசுரனுட லிருகூறும்
வகைவீசி யணிந்தான் வாகை.

(இ - ள்.) இப்படி இருவரும் யுத்தஞ் செய்யுமளவில் பகைமை மிக்க வல்லோரியும் இளேத்து அரசன் முன் நின்று யுத்தம் செய்ய மாட்டாமல் ஒரு மலே முழையிலே சென்று தான் உயிர் பிழைக்க லாமென எண்ணினன். நான்கு முடியுடைய அரசனும் அது சமயம் தன் கைவாளால் அந்தமலே போன்ற வல்லோரியின் உடலே இருதுண்டமாகப் பிளந்து தள்ளித் தான் வெற்றிமாலே சூடினன்.

183. வல்லோரி பட்டொழிந்தா னிருகூறுய்
நெடியதொரு வரைக்குப் பூமேல்
எல்லோருங் கவத்தியென விப்போதுங்
கட்டுரைப்பர் இகல்மூ வேந்தர்
மல்லோடே வென்றதிறல் மன்னவனு
மதிட்கோயில் வந்து சார்ந்தான்
நல்லோகை மறையவரும் முனிவர்களு
மிருபாலும் நயந்து வாழ்த்த.

(இ - ள்.) வல்லோரி என்னும் அரக்கன் இருகூறுய்ப் பிளவு பட்டு இறந்தான். அவனுடைய தேகம் பெரியதொரு மலே போல் கிடந்தது. அது கண்டு அந்த மலேக்குக் 'கவத்திமலே' எனப் பூமியில் எல்லோரும் புகலலாயினர். பகையான சேர சோழ பாண்டியர்களான மூவரசரையும் மல்யுத்தத்திஞல் செயித்த தெய்வீகராசனும் மதிள் சூழ்ந்த திருக்கோவலூருக்குச் சந்தோஷ மாக அந்தணரும், இருடிகளும் இருபுறமிருந்து துதிக்க வந்து சேர்ந்தனன்.

184. மாறுகடிந் தனைவர்க்கு முயிர்போன்று
தருமங்கள் வளர்வு கூரத்
தேறுமறை நாலுடனே மனுநூலுஞ்
சிவநூலுஞ் சிறப்பா யோங்கக்
கூறுமரன் திருக்கோயிற் பூசைதழைத்
திடவுண்மை குலவுந் தெய்வ
நீறுமுயன் றஞ்செழுத்தும் பதமுடனு
கக்கருத்து ணிறைய வாழ்ந்தான்.

(இ - ள்.) தெய்வீகன் பகைவர்களை அழித்துச் சகலருக்கும் உயிர்போலவிருந்து, தருமங்கள் வளர்ந்தோங்க, தெளிந்த நான்கு வேதங்களுடன் மனுநீதி சாஸ்திரமும், சிவாகம சாஸ்திரங்களும் சிறப்பாக வளர, சிவபெருமான் திருக்கோயில் பூசைகள் தழைக்க, உண்மையுடைய தெய்வீகத் திருநீறும், பஞ்சாக்ஷர மந்திரத்தையும் தியானித்துக்கொண்டு உலகம் தழைக்க வாழ்ந்து கொண்டிருந்தான்.

185. அந்நாளி லுயர்வசந்த காலமியைந்
தடுத்தலா லளியின் கூட்டம்
நன்னுதம் பலவெழுப்பு மலங்காரச்
சோலைதனை நயந்து நண்ணிப்
பொன்னுர முலைமடவார் பனிநீரா
டற்றொழிலும் புரிந்து பார்த்து
முன்னுரந் தருவளைகண் முழங்குமொரு
வாவியினை முயங்கிக் கண்டான்.

(இ - ள்.) தெய்வீகன் அரசு செலுத்தும் நாளில் சிறந்த வசந்தகாலம் வந்தது. வண்டுகள் பலவகையாக ரீங்காரம் செய்யும் பூஞ்சோலைக்குச் சென்று, அங்குப் பெண்கள் நீராடல் முதலியவற்றைப் பார்த்து, முத்துக்களையீனும் சங்குகள் ஆர வாரிக்கும் ஒரு தடாகத்தைக் கண்டான்.

186. புண்டரிக நாண்மலரக் கயலோடிப்
பாய்ந்தெழுந்து புரிவக் கண்டு
வண்டுலவுந் தார்நிருபன் தன்தேவி
குலபதிதன் மாருச் செவ்வி
கொண்டதிரு முகத்துலவும் விழியிணைகள்
போலுமெனக் குறித்து மோகம்
தண்தரள நகையாளை நினைந்துருகி
மாளிகையைச் சார்ந்தா னன்றே.

(இ - ள்.) அன்று அலரும் தாமரைப் புஷ்பத்தின்மேல் கெண்டை மீன்கள் தாவிக்குதிப்பதை, வண்டுகள் மொய்க்கும் மாலையணிந்த தெய்வீகராசன்கண்டு, தன் தேவியாகிய குலபதியின் குறையா அழகு கொண்டு திருமுகத்தில் உலவும் இருகண்கள் போலிருக்கிறதென்று எண்ணி, முத்துப்போன்ற பல்வரிசையை யுடைய அப்பெண்ணை நினைந்து மோகமுடையவனாய்த் தனது மாளிகை அடைந்தான்.

187. மன்னவர்க்கும் நாவலர்க்கும் மந்திரர்க்குந்
தந்திரர்க்கும் வந்து நின்றோர்
இன்னவர்க்கென் ஞதுவிடை கொடுத்ததற்பி
ஞெருவுரையு மியம்பா ஞகித்
தன்னகத்தே மோகமும் போர்புரியு
மன்மதனுந் தானு மாகப்
பொன்னகத்த மண்டபத்தோர் மலரமளி
மிசையடைந்தான் புவியாள் வேந்தன்.

(இ - ள்.) பூமியையாளும் தெய்வீகராசன் வந்தவுடன் அரசர், கவிவாணர், மந்திரிகள் சேனாதிபதிகள் ஆகியோர் அனைவருக்கும் இன்னின்னாரெனக் கவனியாமலே விடைகொடுத்து அனுப்பிவிட்டுத் தாணொருவருடனும் பேசாமல் தன் மனதில் எழுந்த மோகத்தினால் மன்மதனும் தானுமாகப் போர்புரிய பொன்னினாற் செய்த மண்டபத்திலுள்ள ஒரு புஷ்ப மெத்தையில் சயனித்தான்.

188. காவலர்மூ வரைக்கடிந்த வெற்றியினு
னிவனென்றுங் கருதிக் காமன்
நாவலராற் புகழ்வரிய மாயமோ
ராயிரமு நடத்தி நின்று
கோவலதி பதிதன்மேல் வில்வளைத்துத்
தொடுத்தகணைக் குழாங்க ளிந்தப்
பூவலயம் பிரமாண மெண்டிசையும்
பொழிமழைபோற் பொலிந்த தன்றே.

(இ - ள்.) மூவேந்தர்களை வென்று வெற்றி பெற்றவன் இவனென்று நினைந்து மன்மதன் கவிவாணர்களால் புகழ்தற்கும் அரிய மாயை ஆயிரம் விதமும் நடத்தி, கோவலூர் அதிபதியான தெய்வீகராசன் மீதில் கரும்புவில்லை வளைத்துப் புஷ்ப பாணங்களைத் தொடுத்து, பூமியிலும் எட்டுத்திக்கிலும் நிறையும்படி பிரமாணிக்கப்படாத மழை பொழிவது போல் பொழிந்தான்.

189. சதுர்முடியும் புனைமன்ன னுற்றதனை
வாக்கினுற் சாற்றற் பாற்றோ
மதுரவரிச் சிலைமாறன் மோகமலர்க்
கணையண்டம் வளைந்து மேலே
கதுவிடுதல் கண்டரசர்க் கிரங்கிநமை
யும்வளைத்தால் கடக்கப் போமோ
இதுபுதுமை யென்றஞ்சு வான்போல
மேற்கடல்வாய் இரவி சென்ருன்.

(இ - ள்.) மன்மதனின் புஷ்பாண மிகுதியினுல் நான்கு முடி தரித்த தெய்வீகராசன் பட்டவருத்தத்தை வாக்கினுற் சொல்ல முடியுமோ? இனிய கரும்பு வில்லையுடைய மன்மதன் மோகந்தரும் புஷ்பபாணத்தை ஒரு அரசனுக்காக, அண்டமுழுவதும் வளைந்து மேலும் செல்லும்படி விட்டான். அதுகண்டு சூரிய பகவான், நாம் அரசனுக்கு உதவியாக இரங்கினுல் நம்மீது பாணம் விடின் என் செய்வதென்று அஞ்சுபவனைப்போல் மேற்குக் கடலிற் சென்று மறைந்தனன்.

190. கங்குலிடை யண்டமெலா மூடுமிருள்
கைவாங்கக் காவ லோய்நீ
யெங்கள்குலக் கொடியாள்தன் குலபதியைப்
பிரிந்துநீ யிருந்த தென்ன
தங்களவின் வருத்தமுடன் மன்னர்பிரா
னுறும்வண்ணம் அலைதண் ணீர்மேல்
பொங்குதழ லெழுந்ததுபோல் எழுந்ததரும்
கலையாரப் பொலிவெண் திங்கள்.

(இ - ள்.) இரவில் அண்டங்களெல்லாம் இருள் மூடிக்கொள்ள தெய்வீகராசனே! எங்கள் குலத்துக்குக்கொடி போன்றவளின்ற குலபதி என்னும் பெண்ணைப் பிரிந்து நீ இருக்க வேண்டியது என்ன' என்று, முடிவிலாத வருத்தத்தை அவ்வரசன் அடையும்படி, சமுத்திரத்தின் மீது நெருப்பு எழுந்ததுபோல, கலை நிரம்பிய சந்திரன் உதயஞ் செய்தான்.

191. தன்தனிமை யாலந்தோ வெங்கள்நாட்
டரசன்மகள் தளர்ந்து வாடி
நின்றயர நாள்பலவு நினையாத
திண்மைபுரி நெஞ்ச னென்று
குன்றலிலாத் தமிழ்மலையின் மாருத
சீதமெலாங் கொண்டு லாவு
தென்றன்முத லாவந்தே திறல்வேந்தன்
பால்வெம்மை செய்த தன்றே.

(இ - ள்) தன்னுடைய பிரிவை நினைந்து ஐயோ! எங்கள் நாட்டுப் பாண்டியராசன் மகள் தளர்ச்சியடைந்து வாடி நின்று வருந்த, அநேகநாள் நினையாமலிருந்த வன்னெஞ்சனென்று குறையாத, பொதியமலையிலிருந்து குளிர்ச்சியெல்லாம் வீசப்பட்ட இளந்தென்றலும் முதன்மையாக வந்து வெற்றியினையுடைய தெய்வீகராசனுக்கு மிக்கவெம்மை யளிப்பதாயிற்று.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

192. பூமர் னிலமனு வெனவாழ் புரவலர்
பெருமா னயலொடு புகல்வான்முன்
தேமா வனமுறை குயில்காள் வழுதியர்
திருநா டன்தரு திருவன்னாள்
ஆமா மதுரித மொழிபோ லினிமையை
யவிருங் குரலொலி யந்தோவெங்
காமா யுதமென வுரையா நின்றது
யாதென் றென்னுட னுரையீரே.

(இ - ள்.) பூமியில் மனுவைப்போல் ஆட்சி செய்யும் தெய்வீகராசன், மோகவிகார முடையவனாய், ''இனிய மாமர வனத்தில் வாசஞ் செய்யும் குயில்களே! பாண்டிய ராசன் பெற்ற இலக்குமி போன்ற குலபதியின் மதுரம் பொருந்திய மொழிபோல இனிமையாகக் கூவும் நீங்கள் கொடிய காமம் என்னும் ஆயுதம் தாக்குவது போல் கூவுவது யாது காரணம்?'' எனக் கேட்டான்.

193. படையே றியவிழி யுடையாள் குலபதி
பணைமா முலைதழு வுறவெய்தா
திடைவேன் மிகுமயல் தவிரும் படியெனை
யெண்ணீ ரென்றிக லென்னேயோ
புடையே யலறிய குரலால் வழியினை
புணரா வகைதர லியல்போநீர்
பெடையோ டணைதுயில் சிறிதே நெகிழ்தரு
பிரிவா லுறுதுயர் நினைவீரால்.

(இ - ள்.) மீண்டும் குயில்களைப் பார்த்து, ''வேல்போலுங் கண்ணையுடைய குலபதியின் பூரித்த தனத்தைத் தழுவாமல் வருந்தும் என்னை, மயக்கம் நீக்க நினையாமல் பின்னும் பகைசெய்ய எண்ணினீர்கள். பக்கத்திலிருந்து கூவி, மறுபடியும் நான் சேராத வகைசெய்தல் நியாயமா? நீங்கள் பெண்குயிலுடன் தழுவி நித்திரையிலாவது பிரிந்ததில்லையா? அந்தப் பிரிவினால் வருந்துயரை அறியீர்களா? என்று தெய்வீகராசன் கூறினான்.

194. நின்னைச் சுவறிட வந்நா ளயில்கொடு
நினையுந் தென்னவ னருள்தெய்வக்
கன்னிப் பிடிநடை யுடையாள் குலபதி
கனமா முலைமலை பிரிவெய்து
மென்னைப் பிரிவுடன் மகிழா தருமய
லென்னே வளர்வுற வந்தோநீ
முன்னைத் தருமொலி யன்றிப் பெருகொலி
முதிர்வா யென்னைகொல் முந்நீரே.

(இ - ள்.) உன் நீர் சுவறும்படி அந்நாளில் வேலாயுதத்தை விட நினைந்த பாண்டியராசன் பெற்ற தெய்வக் கன்னியான, பெண்யானை போன்ற நடையையுடைய குலபதியின் தனமென்னும் மலையைப் பிரிந்திருக்கும் என்னைச் சந்தோஷப்படுத்தாமல் எனக்கு மயல் வளரும்படி ஐயோ நீ முன்னைவிட அதிகமாகச் சப்திக் கின்றனை: அது யாது காரணம்? என்று தெய்வீகராசன் கடலைப் பார்த்துக் கேட்டான்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

195. தன்றன் முகங்கொடு நின்றனை
வென்று தலத்தி லழைப்பிக்கும்
மன்றல் அருங்குழல் வல்லி
வருந்திட வந்து பிரிந்தாய்நீ
நன்று புரிந்தனை யின்றரு
ளன்புட னளிரொளி நல்காதே
சென்று சுடுங்கன னின்று
பொழிந்ததென் திங்காள் செப்பாயே.

(இ - ள்.) குலபதி தன் முகத்தால் ஜெயித்து, தன்னுடைத் தலத்திலழைப்பிக்கும் வாசனை வீசும் அளகபாரத்தையுடைய கொடி போன்ற பெண் வருத்தப்படப் பிரிந்து வந்தாய். நல்ல காரியம் செய்தனை. இப்போது அருளுடன் அன்பு கொண்டு குளிர்ந்த கிரணத்தை வீசாமலும், மறையாமலும் என் எதிர் நின்று அக்கினிக் கிரணங்களை வீசுகின்றது என்ன காரணம் என்று தெய்வீகன் சந்திரனைக் கேட்டான்.

எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

196. மலையந் தனிலினி துலவுந் தென்றலென்
மயல்கண் டேநிலை செயல்கண்டும்
உலைபொங் கனலென வருவா யொருவா
உலையா தென்னிடை யருள்செய்வாய்
முலைகொண் டெழுகொடி யனையாள் குலபதி
மோகம் பெறுமவள் பால்சென்றே
அலையுந் துயருற மிகநீ வெம்மையை
யருளா தவிர்நெறி யறமாகும்.

(இ - ள்.) பொதியமலையில் இனிதாகச் சஞ்சரிக்கப்பட்ட தென்றலே! என் ஆசை கண்டும், என்நிலை கண்டும், கொல்லன் உலையிலே எழும் அனலைப்போல நீ வருகிறாய். நானோ குலபதியை விட்டு வருந்துகிறேன். என்னிடம் தயவு செய். தனபாரங்களை யுடைய கொடி போன்ற குலபதி என் பேரில் மோகமடையும்படி யவளிடம் சென்று துயரமளிக்கும் காமவிகாரத்தையளிப்பாய். என்னிடம் வெம்மையளிக்காதிருப்பின் அதுவே தருமமாகும் என்று தென்றலை நோக்கிக் கூறினான் தெய்வீகராசன்.

197. எங்குஞ் சிலைமத னெங்குங் கணைமழை
எங்குங் குயில்பயி லிசையோசை
எங்குங் கடலொலி யெங்குங் கழையிசை
யெங்கும் பரவியெ ழுங்கங்குல்
எங்குஞ் சுடுமதி யெங்கும் விடைமணி
யெங்குங் கொடிய விளந்தென்றல்
எங்குந் துணையிலை யென்செய் குவதினி
யென்றென் றரசனு முரைசெய்தான்.

(இ - ள்.) எவ்விடத்திலும் மன்மதன், எவ்விடத்திலும் புஷ்ப பாணம், எவ்விடத்திலும் குயில்களின் ஓசை, எவ்விடமும் கடலோசை, எவ்விடமும் குழலோசை, எங்கும் இருள், எவ் விடத்திலும் சுடுகின்ற சந்திரன், எவ்விடத்திலும் ரிஷபங்களின் கழுத்திலுள்ள மணியோசை, எவ்விடத்திலும் கொடுமையான இளந்தென்றல், இப்படி எங்குச் சென்றாலும் துணையில்லை. இனி என் செய்வதென்று தெய்வீகன் வருந்தினான்.

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

198. இவ்வண்ணங் கங்குலிடை யிடருழக்கு
முடிவேந்தை இடர்க ளான
அவ்வண்ணந் தவிர்த்தஞ்ச லென்பார்போ
லாதவனும் அழிவி லாத
செவ்வண்ணக் கரநீட்டி யுதயஞ்செய்
தானரனைச் சிந்தை செய்வோர்
பொய்வண்ணம் புலர்ந்ததென நிறைந்தெழுந்த
விருளெல்லாம் போயிற் றன்றே.

(இ - ள்.) இவ்வாறு இரவில் துன்பமுறும் தெய்வீகராசனது துயரங்கண்டு, பயப்படாதே என்று சொல்லுபவரைப்போல் சூரியனும் அழிவில்லாத தனது சிவந்த கிரணங்களை நீட்டி உதய கிரியிலே தோன்றினன். அப்படித் தோன்றியதும் சிவத்தியானஞ் செய்வோரது பொய்மையாகிய இருண்ட பாவம் பறந்தோடுவது போல் உலகிலுள்ள இருள் நீங்கியது.

199. இருளகல மயற்கடல்வாய் அழுந்தியொரு
படியேவிட் டேறி நீங்கி
வருபுனனன் னீராடிச் சிவார்ச்சனையு
முன்போல மகிழ்ந்தி யற்றி
அருமறையோ ரரனடியார் முத்தமிழோர்க்
கருநிதிய மளித்துச் செல்வத்
திருமகிழோர் மண்டபத்தி லரியணைமேல்
வந்திருந்தான் செங்கோல் வேந்தன்.

(இ - ள்.) இருட்டு நீங்கிச் சூரியன் உதயமாகக் கண்டு, மயக்கமென்னுஞ் சமுத்திரந்திலழுந்தியவன் அதைவிட்டு ஒருவாறு கரையேறித் துயரம் நீங்கி, பினாகினி நதியில் நீராடிச் சிவார்ச்சனையை முன்போல் புரிந்து, வேதியர், சிவனடியார், கவிவாணர் முதலியவர்கட்கு அரிய திரவியங்களளித்துச் செல்வ மிக்கதும் இலக்குமி மகிழ்ந்திருக்கக்கப்பட்டதுமான ஒரு மண்டபத்தில் உள்ள சிம்மாசனத்தில் எழுந்தருளியிருந்தான் செங்கோல் தவறாத தெய்வீகராசன்.

200. மந்திரிகள் தம்வேந்தன் கங்குலிடைக்
குலபதியாம் மாதைச் சிந்தித்
தந்தியெழு காமநோய்க் கிடைந்ததனுக்
குளையாம லுள்ள வண்ணஞ்
சிந்தைதனைப் பேதிப்பார் வந்தரசன்
தனைப்பணிந்து செவ்வே நின்று
மந்தரநேர் திண்புயத்தாய் ஓர்வார்த்தை
கேட்டியென வழுத்திச் சொல்வார்.

(இ - ள்.) தெய்வீகராசனது மந்திரிகள், நம்முடைய அரசன் இரவில், குலபதியாகிய பெண்ணை நினைந்து தள்ளியெழும் காம நோய்க்குப் பயந்து பின்னிடாமல் அவர் மனதைத் திடப்படுத்த வேண்டுமென்று யோசித்துத் தெய்வீகராசனைக் கண்டு தெண்ட னிட்டு எதிரே நின்று மந்திரகிரி போன்ற தோளையுடைய அரசனே ஒரு வார்த்தை கேட்க வேண்டுமென்று துதிசெய்து சில வார்த்தைகள் சொல்லுவாராயினர்.

201. அண்டர்நா யகனுறையும் அரசவனத்
தருந்தவங்கள் ஆற்று வோர்கள்
கண்டபோ தும்பிரிந்து கேட்டபோ
துஞ்சிந்தை கலக்க மெய்தப்
பண்டெலா மில்லாத கொலைவிலங்கு
மிகுந்ததெனப் பகரக் கேட்டு
வெண்திறல்நான் முடிவேந்து மாவேட்டை
யாடவென விரைந்தெ ழுந்தான்.

(இ - ள்.) 'தேவர் தலைவனை சிவபெருமான் எழுந்தருளி யுள்ள அரசவனத்திலே அரிய தவம் செய்யும் முனிவர்கள் கண்ணால்கண்டபோது அதைக்காணமல் பிரிந்தும் காதால் கேட்டபோது சிந்தை கலக்கமடையவும், இதுவரையில்லாத கொலைக்குணமுடைய விலங்குகள் மிகுந்துள்ளன' என்று மந்திரிகள் கூறக்கேட்டு, வெற்றி பெற்ற நான்குமுடிகளுடைய அரசன் மிருக வேட்டையாடப் புறப்பட்டான்.

202. செந்தழல்சேர் யாகத்தோர் திறல்வேந்த
னுற்பவித்த செய்கை தன்னில்
வந்தபடி சிலசொல்லி வஞ்சனைதன்
னுதரத்தில் வந்து தோன்றி
ஐந்துமடக் கியமுனிவர் அஞ்சும்வகை
யிடுக்கண்விளைத் தாற்றல் பூண்ட
வெந்திறல்மா காரண்டன் மாய்ந்தவர
லாறதனை விளம்ப லுற்றும்.

(இ - ள்.) குக முனிவர் செய்த யாகத்தில் வந்து பிறந்து திருமணம் பூண்டு, வல்லோரியைக்கொன்று, பகையின்றி அரசு செலுத்திவரும் விஷயத்தைக் கூறினோம். இனி வஞ்சனை என்பவள் வயிற்றில் வந்து தோன்றி, பஞ்சேந்திரியங்களையும் அடக்கித் தவஞ் செய்யும் முனிவர்கள் அஞ்சும்படி துன்பம் விளைவித்த வல்லமையுடைய காரண்டன் என்னும் அரக்கனைத் தெய்வீகராசன் கொன்ற வரலாற்றைக்கூறுவோம்.

காருண்டன் வதைச் சருக்கம்

203. மந்திரிகள் வார்த்தைகேட் டெழுந்துசதுர்
முடிவேந்தன் வனத்தி னண்ணி
அந்தமுற வலையொழுக்கி விலங்கினமெல்
லாந்திரட்டி யடற்சா பங்கொண்
டிந்தவுல கத்திலருங் கொலைபுரியும்
விலங்கினங்கள் இல்லை யென்ன
உந்துகணை பலவீசி மாவேட்டை
புரிந்தங்க னுலவுங் காலை.

(இ - ள்.) மந்திரிகள் கூறிய மொழி கேட்டு நான்கு முடிகளுடைய தெய்வீகராசன் மிருக வேட்டைக்குச் சென்று, ஆரணியத்தில் அழகான வலைகளைக் கட்டி, மிருகங்களையெல்லாம் ஒன்று கூடத் திரட்டி வெற்றி பெற்ற வில்லைக்கொண்டு, இந்த உலகத்தில் கொலைபுரியும் அரிய விலங்குகளையெல்லாம் கொன்று, இனி இல்லையென்று சொல்லும்படி அநேக பாணங்களை விட்டு மிருக வேட்டையாடிக் கொண்டு அவ்விடமிருக்கும் சமயத்தில்.

204. முன்னிருக்கின் முடிவான அரசவனத்
தரனருளால் முதிர்ந்த செய்ய
பொன்னிறத்த வடிவுமணி நிறம்போலக்
குளம்புசெவி புரிகோ டேய்ந்து
நன்னிலத்தில் காணுத வனப்புடைய
தொருமதிமா னண்ணித் தோன்ற
தன்னிகரில் திறல்வேந்தன் தனிமானைப்
பிடித்துமெனத் தகவிற் சென்ருன்.

(இ - ள்.) பழைமையான வேதத்தின் முடிவான அரசவனத்தில் எழுந்தருளியுள்ள சிகரசிகாமணிநாதர் கிருபையால் முதிர்ந்த செம்பொன்னிறம் போன்ற வடிவுடையதும் மரகதமணி போன்ற குளம்பும், காதும், முருக்கிய கொம்புமுடைய, இவ் வுலகில் காணுதற்கும் அரிய அழகுடைய ஒரு இளமான் வந்து தெய்வீகராசன் முன் நின்றது. அதைக்கண்ட ஒப்பற்ற திறமை யுடைய அரசன் அந்த ஒப்பற்ற மானைப் பிடிக்க அதனைத் தொடர்ந்து சென்ருன்.

205. அகலுமெதிர் நிற்குமர சன்கைக்குக்
கிடைப்பதுபோ லாகுஞ் சென்ருல்
முகிலளவு மெழும்பாயும் நிலத்தின்மறித்
துப்பார்க்கும் மோக நல்கும்
சிகரசிகா மணியுறையுந் திருவுருப்புக்
கடுத்தவட திசையில் வந்து
பகர்வரிய பாறையின்மேல் மாயமான்
சென்றதுமுப் பகலுஞ் சென்று.

(இ - ள்.) அந்த மான் மறையும்; எதிர் தோன்றும்; அரசன் கைக்குக் கிட்டியது போலாகும்படி நிற்கும்; கிட்டிச் சென்ருல் மேகமண்டலம் வரையில் தாண்டிக் குதிக்கும்; எதிர் வந்து விழித்துப் பார்க்கும்; தேகம் பளபளவென்று மின்னுவதால் அதன்மீது ஆசை உண்டாகச் செய்யும்; இப்படி நடந்து சிகர சிகாமணி நாதர் சந்நிதிக்கு வடதிசையில் வந்து சொல்லுதற்கரிய பெரிய பாறைமீது நின்று பின்பு கண்ணுக்குத் தெரியாமல் மூன்ரும்நாள் மறைந்துவிட்டது.

206. தொடர்ந்தோடி வருமரசன் மானதனைக்
காணுமல் துளக்க மாகி
அடர்ந்தேறு மெய்ப்புடனே நன்னீர்வேட்
டப்பாறை யடைந்தி ருந்தான்
படர்ந்தோடி யமைச்சர்களும் படைக்கணமும்
அரைக்கணத்திற் பார்வேந் தெய்து
மிடந்தேடி வந்தணைந்தார் அவர்களும்நன்
னீர்த்தாகத் திளைப்பு மிக்கார்.

(இ - ள்.) மானைத் தொடர்ந்து வந்த அரசன் மானைக் காணுமல் கலக்கமடைந்து உடலில் இளைப்புமிக, தாகவிடாயு டையவனுய் அந்தப் பாறையில் தங்கியிருந்தான். அரசனைத் தேடிவந்த மந்திரிகளும், சேனைகளும் தாகமுடையவர்களாய் அரைக்ஷணத்தில் தெய்வீகராசனிருக்கும் பாறையை அடைந் தார்கள்.

207. உளப்பொலிவுந் தளர்ந்தரசன் ஏவலா
லேவலோ ரோடித் தேட
அளப்பரிய பரனருளால் அரசவன
மூங்கில்வன மாகி யோங்கித்
தளப்புதிய மலர்வாவி காணுது
முதலவற்றுள் தாகத் தோருங்
குளப்படிநீ ரளவுநீர் கிடையாமல்
அவரிளைப்புக் கொண்டு மீண்டார்.

(இ - ள்.) மனமகிழ்ச்சி தளர்ந்து அரசன் தாகமிகுதியால் ஏவலாளரை அனுப்பி நீர் தேடிக்கொண்டு வரும்படி சொல்ல, அவர்கள் தேடியபோது அளக்கமுடியாத சிவபிரானருளால் அரசவனம் மூங்கில்வனமாகி, புஷ்பங்கள் நிறைந்த தடாகமே காணுமல் அலைந்தனர். முதலாக, ஒரு பசுவின் குளம்படி பள்ளத் திலுள்ள நீரும் கிடையாமையால் அவர்களும் இளைப்புடன் திரும்பி வந்தனர்.

208. அடலரசன் நீர்வேட்டு வாடுதல்கண்
டரசவனத் தரிவை பாகன்
குடையொருகை தடியொருகை கொண்டு மறை
யவர்மூப்புக் கோலங் கொண்டு
நடைதளர வந்தரசர்க் காசிமொழிந்
திடவரசன் நயந்து நோக்கி
உடைசழுங்க வருமறையோய் உறையுளுனக்
கேதென்று னுணர்வு கூடி.

(இ - ள்.) நீர் கிடைக்காமையினால் வெற்றியுடைய அரசன் தளர்ச்சியடைந்தது கண்டு, அரசவனத்தில் எழுந்தருளியுள்ள பார்வதி பாகனை சிகர சிகாமணிநாதர் ஒருகையில் குடையும், ஒரு கையில் தண்டுமேந்தி, வயோதிக அந்தணர் வடிவங் கொண்டு தளர்ந்த நடையுடன் அரசன் முன் வந்து ஆசீர்வதித்தனர். அரசன் இளைப்பு நீங்கப் பெற்றவனாய் அன்போடு அந்தணரைப் பார்த்து, ''கட்டிய வஸ்திரம் அவிழ வரப்பட்ட தாங்கள் இருக்கும் இடம் யாது'' என்று கேட்டான்.

209. கேட்டுநீ செய்யுமதே னதுநிற்க
மிகவிளைப்புக் கிடைத்தி ருந்தாய்
வேட்டதுதா னேதென்ன வேந்தர்கோன்
தண்ணீர்மேல் விருப்ப முன்னிக்
காட்டுவையே லறமென்றான் காமவேள்
பொடியாகக் கண்ணாற் செய்த
நாட்டமுடன் சடைக்கரந்து நின்றருளும்
நாயகனும் நயந்து சொல்வான்.

(இ - ள்.) அதற்குச் சிவபெருமான் நம் ஊர் கேட்டுச் செய்வதென்ன நீ. நிற்க, நீ இளைப்பாய் இருக்கிறாய். இப்போது விரும்புவதென்ன? அரசன், சலமிருக்கும் இடம் காட்டினால் மிகுந்த தருமமென்றான். அதுகேட்டு மன்மதனை நெற்றிக் கண்ணினால் பொடியாகச் செய்த கண்ணையும் சடையையும் மறைத்து எழுந்தருளியுள்ள சிகரசிகாமணி நாதர் கூறுவார்.

210. மாதவத்தோர் மாதவத்துக் கிடையூருய்
வஞ்சனைதன் மதலை யாய
பாதகத்தோன் காரண்ட னெனும்பெயரோன்
இந்நகர்க்குப் பதியா யுள்ளோன்
மோதற்கோ ரெதிரிலோன் றனையின்று
வினைகொண்டு முடுகிப் போரிற்
காதியடுத் தவனுயிரைக் கொல்வாயே
னின்னிளைப்புக் களைவே னென்ருன்.

(இ - ள்.) மாதவம் செய்யும் முனிவர்கள் செய்யும் தவத்துக்கு இடையூறு செய்பவன்; வஞ்சனை என்னும் அரக்கி பெற்றவன்; மிகுந்த பாதகம் செய்பவன்; காருண்டன் என்னும் பெயருடையவன்; இந்நகரத்துக்குத் தலைவன்; சண்டைக்குப் பின் வாங்காதவன்; அவனை இன்று சண்டைசெய்து கொல்வதாகக் கூறின் உமது இளைப்பை நீக்குவோமென்று கூறினர்.

211. என்றபொழு தடல்வேந்த னிறைமறையோன்
றனைநோக்கி யிரக்க மில்லாத்
துன்றுகொலை வாளரக்க னிருக்குமிட
மேதென்று சொல்வா யென்ன
வன்றிறலாய் உயர்பிறையூர்க் குன்றயலே
யிருப்பிடமும் மருங்கு காண
ஒன்றியறி வரிதாய வஞ்சனையும்
வெஞ்சுரமும் உளதவ் வெல்லை.

(இ - ள்.) அவ்வாறு கூறியபொழுது வெற்றியுடைய அரசன் கடவுளாகிய அந்தணனைப் பார்த்து, 'இரக்கமில்லாதவன் மிகுந்த கொலை புரியும் வாளையுடைய அரக்கன் இருக்கும் இடம். மிக்க பலம் பொருந்திய அரசனே! இந்தப் பிறையூர்க் குன்றென்னும் மலைப்பக்கத்திலே இருக்கும் இடமாகும். சுற்றிலும் காடு நெருங்கி வழிகாணுதல் மிக அரியது; வஞ்சனை மிகுதி; வெப்பமுடைய சுடுநிலமும் நிறைந்துள்ளது அவ்விடமாகும் என்றனர்.

212. செல்லநீ துணிவாயேன் மருக்கொன்றை
பூவுதிர்ந்து சீற்ற மேய்ந்த
மல்லன்மா விடையடியு மேற்கேற
நடந்திருக்கும் வழிய தென்றூர்
சொல்லியிடு மன்றுமுதல் மேற்குமுகம்
விடையினெடு தோன்றி நின்றூர்
அல்லலறுத் தடியாரை முடியாத
வானந்தத் தழுத்தும் வள்ளல்.

(இ - ள்.) அரசே! நீ அங்குச் செல்லத் துணிந்தால் வழியில் வாசனையுடைய கொன்றைப் புஷ்பம் உதிர்ந்து கிடக்கும். அது வன்றி, கோபமுடைய ரிஷபத்தின் அடியும் மேற்காக நோக்கி நடந்திருக்கும். அது வழியின் அடையாளமாகும் என்றூர். அன்றுமுதலாகத் தாமும், ரிஷபமுமாக எழுந்தருளியிருந்தார். அடியாரது துன்பத்தை நீக்கி, முடிவில்லாத இன்பத்தில் மூழ்க வைக்கும் சிகரசிகாமணிநாதர்.

213. புரவலனுந் தப்பாநான் போர்புரிந்து
பேர்புனைந்து பொய்யுஞ் சூதும்
கரவுமக லாவரக்கன் றனைமாய்ப்பன்
வேட்டநீர் காட்டா யென்ன
அரவணிசெஞ் சடையானும் பொதிசோறங்
கவிழ்த்தடல்கூர் ஆடல் வேந்தன்
விரவியவெம் பசியாற்றி யமைச்சர்முத
லேனையர்க்கும் விருந்தா யீய்ந்து.

(இ - ள்.) அரசனும் தப்பாமல் நான் சண்டை செய்து பெயர் பெற்று, பொய், சூது, களவும் விலகாத காருண்டனைக் கொல்கிறேன். ஜலங்காட்ட வேண்டுமென்று கேட்க அரவம் அணிந்த சிவந்த சடையையுடைய பரமசிவன் தாம்கொண்டு வந்த கட்டமுதை அவிழ்த்து, வெற்றியும் சிறப்புமுடைய தெய்வீக ராசனது தீவிரமான பசியார அன்னங்கொடுத்து, மற்ற மந்திரிகள் முதலான சேனைவீரர்களுக்கும் விருந்து செய்வித்தனர்.

214. நின்றருளப் பாறைதனி லருளுதவுந்
திருக்கரமேல் நின்ற தண்டால்
வன்றிறமை யாற்கீறி வான்கங்கை
யவ்வெல்லை வந்து தோன்ற
அன்றுமிகுந் தாகமுட னரசனுட
னனைவோரும் அருந்தி னூர்கள்
மன்றுடைய நடராசன் திருவுருவங்
காணுமல் மறைந்து நின்றுர்.

(இ - ள்.) அன்னங் கொடுத்தபின், தான் நிற்கும் பாறையிலேயே கிருபை பொருந்திய தமது அழகிய கையிலிருக்கும் நீண்ட தண்டினுல் மிகுந்த பலங்கொண்டு கீறவும், அவ்வழியில் ஆகாய கங்கை போன்ற திவ்விய நீர் வந்து தோன்றிட, அது காலை தாகமிகுந்த அரசன் முதல் அனைவரும் உண்டு, களைப்பாறினர். சபையில் நடம் புரியும் நடராசப் பெருமானும் தமது திருவுருக்கரந்து நின்றனர்.

215. அந்தணனைக் காணுமல் அரசர்கோன்
ஆசலத்தை அடைந்து தேடி
எந்தைபரம் பரனருளா மிவையென்று
மனத்தெண்ணி யிரக்கமில்லாப்
புந்தியட லரக்கன்மேல் அமர்புரியப்
புறப்பட்டான் பொன்பூங் கொன்றைத்
தந்தவிதழ் உதிர்ந்தவிடை யடிச்சுவடுங்
கண்டிலகு தாரி தன்மேல்.

(இ - ள்.) அங்கு நின்ற அந்தணனைக் காணுமல் அரசன் துன்பமுற்றுத் தேடிப் பார்த்துக் கிடைக்காமையால் இது சிவபெருமான் அருளென்று எண்ணி இரக்கமில்லாத புத்தியும் பலமும் உடைய அரக்கன் மீது யுத்தத்திற்குப் புறப்பட்டான். அப்போது பொன்மயமான கொன்றைப் பூவும் ரிஷபத்தின் அடிச்சுவடும் கண்டு அந்த வழியாகவே மேலே நடந்து சென்றுன்.

216. சென்றுபிறை யூர்க்குன்ற மடுத்தபொழு
தினிதாகச் செருச்செய் போரு
மின்றுநமக் கெய்தியதிங் கெனவொருமூ
வேந்தரையு மியல்பால் வென்ற
வன்றிறல்வேந் தனுமகிழ்ந்தான் மந்திரருந்
தந்திரரும் வயமே பூண்டு
துன்றுபடைச் சேனையெல்லா மணியாக
வகுத்துநெறி தொடர்வா ரானுர்.

(இ - ள்.) அரசனும் சேனைகளும் பிறையூர்க் குன்றத்துக்குப் போய், இன்று யுத்தஞ் செய்ய, சமயம் கிடைத்ததேயென்று மூவேந்தரையும் வெற்றி கொண்ட பலம் பொருந்திய தெய்வீக ராசன் மகிழ்ந்தான். மந்திரிகளும் சேனுதிபதிகளும் சேனைகளை வரிசை வரிசையாக வகுத்து அவ்வழி சென்றனர்.

217. பொழிம தத்தன கிரியெ டுப்பன
புயலை யெற்றுவ புவியின்மேன்
மொழிம லைக்குல நிகர்ந டப்பன
முகப டத்தன புகைகளால்
விழிநெ ருப்பென நிழல்வெ றுப்பன
வெடிகுரற்கொடு திசைகள்சேர்
வழிய டைப்பன வுரக னெய்த்திடு
வகைந டப்பன கரிகளே.

(இ - ள்.) சண்டை செய்யச் செல்லும் யானைகள், மூன்று மதங்களும் பொழிவன; மலைகளையும் எடுக்கத்தக்கன; மேகங் களை எடுத்துப் பூமியில் மோதத் தக்கன; மலைகள் நடப்பன போல் நடக்கத்தக்கன; முகபடாம் உடையன; புகையும் நெருப்பும் கண்களில் பிறப்பிப்பன; தனது நிழலைக் கண்டு கோபிக்கத் தக்கன; இடி சப்தம் போல் பிளிறத் தக்கன; எட்டுத் திசைகளிலும் உலாவத் தக்கன; ஆதிசேஷன் முதுகு நெளிய நடக்கும் வல்லமை வாய்ந்தவைகளாகும்.

218. இரவி கிட்டிய பதம ளப்பன
விகல டுத்தபோர்ப் பரிகளான்
மருவி யுய்ப்பன வடவ ரைத்திரள்
வருவ தொப்பன மதியின்மேல்
உருவு பொற்றலை யணிகள் பெற்றன
உருளை யிற்பொலி வலியினுல்
இருநி லக்கொடி முதுகொ டிப்பன
வெவரு மெச்சிய விரதமே.

(இ - ள்.) இரதங்கள், சூரிய மண்டலத்தை யளக்கும் உயரமுடையன; பகை தீர்க்கும் குதிரைகள் கட்டப் பெற்று மேருகிரி வருவது போல்வன; சந்திரமண்டலத்தின் மேலும் உலாவப் பெற்ற பொற்பிரகாசமான நவரத்தினமாலைகள் தரித்தன. பெருமைபெற்ற பூமிதேவியின்)முதுகு ஒடியும்படி விரைவுடன் நடந்து சகலரும் மெச்சிக் கொள்ளப்பட்டவை களாகும். (ரதக்கூட்டங்கள்).

219. கதிப டைத்தன நொடிவ ரைக்கன
ககன முட்டவும் வருவபோல்
அதினு டக்கிய கடுமை பெற்றன
வமரெ திர்த்திடு மவர்கண்மேல்
விதிய ழிப்பன பலநி றத்தன
மிகும ணிக்குர லொலிகளான்
முதிரு மைப்புய லெனவு மொப்பன
முனைந டப்பன பரிகளே.

(இ - ள்.) குதிரைச் சேனைகள், வாயுகதி, மனோகதி, மயூரகதி மர்க்கடகதியென்னும் நால்வகை கதிகளையுடையன. ஒரு நொடியில் ஆகாயத்தைத் தாவி வேகமாகச் செல்வன; யுத்தத்தில் எதிர்த்தவர்களின் விதிவலியையும் கூட அழிப்பன; பல நிறமான வர்ணங்களுடையன; மணி முதலான நாதத்தொனி களுடனே முதிர்ந்த சூல்கொண்ட மேகம்போல் எதிர்த்து நடப்பவைகளாகும்.

220. பொறிமி குத்தெழு விழியர் வெற்பென
புனைபு யத்தினர் நினைவினால்
அறிய மட்டிய வலியர் வெற்றியர்
அமரி லிச்சையர் சமரின்மேல்
எறிவ யப்படை செறிக ரத்தினர்
இதழ்ம டித்தெவ ரெதிரெனா
வெறிப டைத்திடு மொழிகள் பற்பல
விருதர் மெச்சிய விருதரே

(இ - ள்.) படைவீரர்கள், அக்கினிப் பொறிவீசும் கண்கள் உடையவர். மலை போன்ற புயங்களை உடையவர்; நினைக்க வரிய வலிமையுடையவர்; வெற்றிப் பாடுடையவர்; யுத்தத்தில் இச்சை யுடையவர்; எறியப்பட்ட பலம் பொருந்திய வாள் முதலான ஆயுதங்கள் பிடித்த கையையுடையவர்கள்; உதட்டை மடித்து எமக்கெதிர்யாவரென்று வெறிகொண்டவர் போல் திரிந்து பேசும் வீரசூரரான பதாதிகள் பலர்.

221. நிலைவ யச்சமர் அடுப டைத்திர
ணிபிட மிட்டெழ வுலகெலாம்
அலைவ றக்கலி நெறிய றத்திகழ்
அரும்அ றத்தினை அமையவே
மலைவ றத்தனி யுருவ பற்பல
மருவு வெற்றிகொள் நிருபனுங்
கலைம திக்குரை யழகி ரிகழல்
கடுக டுத்தன மிடலினான்.

(இ - ள்.) நிலையான வெற்றி பெற்ற யுத்தம் செய்யப்பட்ட சேனைக் கும்பல்கள் நெருக்கமாக எழுந்து உலகம் அலைவு தீர அநீதி, எண்ணாமல் கலிதீர, தர்மமானது பிரகாசிக்க, உலகில் மயக்கமற ஒப்பற்ற கிரீடங்கள் தரித்த அநேகம் வெற்றியுடைய அரசர்கள் பிறையூர்க் குன்றத்துச் சமீபமாகப் போய் ஆரவாரித்தனர்.

222. இனைய விப்படை வரம தத்தினி
லெழுமு டிக்குல நிருபர்கோன்
வினைவ யச்சமர் புரிய வெற்பயல்
விரைவி லொற்றர்கள் விரவினர்
முனைய ரக்கர்த மதிப னுக்கிவை
மொழிய மெய்க்கட லொலிகளை
அனைய நெட்டொலி யெழந கைத்தன
னகில மச்சமோ டதிரவே.

(இ - ள்.) நால்வகைச் சேனைகளுடன் தெய்வீகராசன் யுத்தத்திற்கு மலைக்குச் சமீபமாக வந்ததைத் தூதர்கள் சீக்கிரமாகக் காருண்டனிடம் கூற, அது கேட்டுச் சமுத்திர கோஷம் போல ஒலிசெய்து நகைத்தான்; பூலோகமெல்லாம் பயந்து அதிரத் தக்கதாக அந்தக் காருண்டன் என்னும் அரக்கன்.

223. சமரெ னக்கெதிர் செயநி னைத்தொரு
சயம டுக்குல நிருபன்வந்
தமரர் பற்றிட வரிய வெற்பய
லணுக வற்புத மவனைநான்
இமைவ ரைப்பொழு தினில டர்த்துவ
மெழுக நற்கய மிவுளிதேர்
நமரெ னப்படை யுளபு றப்பட
நடவ லுற்றனன் நவையுளான்.

(இ - ள்.) எனக்கு எதிராக யுத்தம் செய்ய நினைத்துச்செயம் பெறத் தக்கதாக ஒரு அரசன் வந்து தேவர்களாலும் பிடிக்க அரியதான என்னுடைய மலையைக் கிட்டி வந்தது மிக்க அதிசயமாகும். நான் இமைகொட்டுவதற்கு முன் அவர்களைக் கொல்லுவேனென்று, யானை, குதிரை, தேர், காலாள் முதலிய நால்வகைச் சேனைகளுடனும் காருண்டன் என்னும் அரக்கன், புறப்பட்டான்.

224. மதம ழைக்குல முகிலெ னத்திரண்
மகித லத்தினில் வருவபோல்
விதம ணித்திர ளணியி னிற்பொலி
வியன்ம ழைத்திர ளணைவதே
கதமி குத்தெழு வடிவு பற்பல
கருகி ருட்டிரண் மருவல்போல்
திதவ யப்புட னெதிர்ந டப்பன
திறல்வி றற்கரி யணிகளே.

(இ - ள்.) மூவகை மதங்களை மழைபோலப் பொழிந்து கொண்டு மேகக்கூட்டங்கள் பூமியில் வருவது போலவும், இருபுறமும் மணிகள் சப்திக்க அழகிய மேகங்கள் யானையுருப் பெற்றது போலவும், இருட்டுத் திரண்டு யானையானது போலவும், கருத்த வடிவமும் பராக்கிரமமுமுடைய யானைக்கூட்டங்கள் யுத்தத்திற்கெழுந்து சென்றன.

225. பரியி ணக்கிய வுருளை யச்சுகள்
பலப டைத்தணி மணிதிகழ்
உரிய பொற்றுகி லணிகொ டித்திர
ளுலவி மட்டலர் மலர்ந்திடுந்
தெரியன் மிக்கெழின் மருவி மட்டறு
செருமு னைக்கள மலைகளென்
றரிய பொற்புவி மிசைந டப்பன
வளவில் சித்திர விரதமே.

(இ - ள்.) குதிரையின் மேலுமுயர்ந்த வண்டிகளையுடைய அச்சுகள் அநேகமிட்டதாய், அழகு பொருந்திய மணிகளநேகம் பிரகாசிப்பதாய், உரித்தான பொன் பிரகாசமுடைய கொடிச் சீலைகள் உலாவ, வாசனை வீசப்பட்ட புஷ்பமாலைகள் கட்டினதாய் மிக்க அழகுடையதாய், மிதமில்லாத யுத்தமுனையில் மலைகள்போல் அரிதான பூமியில் கணக்கில்லாத சித்திரத் தேர்கள் நடந்து சென்றன.

226. தரைந டத்தலை யருவ ருப்பன
தபன னுய்த்தெழு மிரதமென்
றுரைசெ யப்பரி தனைய ழிப்பன
வுயர்மு கிற்குல மரியமால்
வரைந டுக்குற மிகவ திர்ப்பன
மனநி கர்ப்பன கடலின்மேல்
நிரைய லைத்திர ளெனநடப்பன
நிமிட மிட்டுடல் இவுளியே.

(இ - ள்.) பூமியில் நடப்பதை அருவருத்து, சூரியனுடைய தேரை இழுக்கும் குதிரைகளைப்போல் ஆகாயத்தில் தாவி, அந்தக் குதிரைகளை இழிவுபடுத்துவன. மேகக்கூட்டமும் மலைகளும் நடுங்க ஆர்ப்பரிப்பன. மனோவேகத்திற்குச் சமானமாகவும், சமுத்திரத்து அலைகள் போலவும் நிமிஷ நேரத்தில் நடக்கும் குதிரைச்சேனைகளும் சென்றன.

227. பிறையெ யிற்றினர் அனல்த ழைத்தெழு
பெரும யிர்க்கொடு முடியவான்
உறையி டித்திரண் மிகவு முட்கிடு
முரையர் சற்றருண் மொழியிலர்
அறைக ழற்பத நிலமி தித்திடில்
அனலு தித்திட வருவராற்
பொறைய கற்றிய கதவு ருப்பொலி
பொரும தத்தருள் விருதரே.

(இ - ள்.) மூன்றும் பிறையைப் போலும் சிங்கப்பற்களை யுடையவர்கள். அக்கினிச் சுவாலை விட்டெரிவது போலும் பெரிய மயிர்த்தலை முடிகளையுடையவர்கள். மேகத்தினிடமுள்ள இடியையும் வெட்கப்படச் செய்யும் சொற்களையுடையவர்கள். சிறிதும் இரக்கமில்லாத வார்த்தைகளையுடையவர்கள். வீர தண்டையணிந்த கால்களால் பூமியில் அக்கினிப் பொறி பறக்க நடப்பார்கள். பொறுமையற்ற கோபமுடையவர்களாய்ச் சண்டை செய்ய காலாட் படைவீரர்கள் புறப்பட்டனர்.

228. வருக திச்சதுர் வகைவிதப்படு
வயமி குப்படை புடையெலாம்
இருள ணிக்குழு வெனவு வர்க்கட
லெனம தித்திட மருவவே
உருண்ம ணிக்கொடி யிரத முற்றன
னுலக முட்கிட நடவினுன்
அருளொ ழித்திடு மனவ ரக்கர்த
மகம்வி றற்படை மிடையுமே.

(இ - ள்.) வரும் வேகமுடைய ரதகஜ துரகபதாதியென்னும் நால்வகைச் சேனைகளான வீரமிகுந்த படைகள் பக்கத்தில் இருள் போல் அழகிய கும்பலாக, உவர்க்கடல் போலவும் நினைக்கும்படி நெருங்கவும் உருண்ட மணிகளையுடைய கொடிகள் கட்டின ரதங்களும், புறப்பட்டு உலகம் நடுங்க நடத்தினுன். தயையற்ற மனமுடைய அரக்கனுடைய பாவமும் வெற்றியுமுடைய சேனைத் திரளும் எங்கும் நெருங்கின.

229. அருண்மு டிக்குல நிருபன் அமர்ப்பொலி
யடர்ப டைத்திரள் அதனுடன்
மருண்ம னத்தடல் வலிய ரக்கர்தம்
வயவி றற்படை யிடையமேல்
இருதி ரைக்கட லெனவெ திர்த்தன
வெழுது கள்தரை மிசையெழா
பருதி விற்கிர ணமுமொ ளித்தன
பவன மற்றன திசைகளே.

(இ - ள்.) கருணையுடைய சதுர்முடித் தெய்வீகன் யுத்தத்திலே மிகுந்து நெருக்கிய சேனைகளுடனே, மயக்க மனமுடைய வெற்றியும் பலமுமுடைய காருண்டன் சேனைகளும் நடுங்கி, இரண்டு கடல்போல் எதிர்த்தபோது, எழுந்த தூளிகள் பூமியி னின்றுஎழுந்து ஆகாயத்திலுள்ள சூரிய கிரணங்களை மறைத்தன. காற்றும் எத்திசைகளிலும் வீசாமல் தடைப்பட்டு நின்றது.

230. பணையி சைத்தன படகொ லித்தன
பறைய திர்ந்தன குடமுழா
கிணைக லித்தன திமிலை கொட்டின
கிளரி டக்கையி ஞெலியினே
டணைத லைத்தலை முரசொ லித்தன
அடல்வ ளைக்குல முழங்கின
இணைக லித்தன மணியி ரட்டின
வெழுமு கிற்குல மிரியவே.

(இ - ள்.) குழல்கள் சப்தித்தன; இரணபேரிகைகள் ஒலி செய்தன; பறைகள் அதிர்ந்தன; குடமுழாக்கள் சப்தித்தன; திமிலை அதிர்ந்தது; பிரகாசமுடைய இடக்கை முழங்கின; அதோடு சேர முரசவாத்தியங்கள் ஒலித்தன; வெற்றிச் சங்குகள் கோஷித்தன; பேரிகைகள் இணைந்து ஒலித்தன; மணி நாதம்முழங்கியது; இந்த ஆரவாரத்தால் மேகக் கூட்டங்களும் பயந்தோடின.

231. வெங்க ளிற்றடு வீர ரோடுயர்
வெங்க ளிற்றடு வீரரே
தங்கு தத்திர தத்த ரோடெதிர்
தங்கு தத்திர தத்தரே
பொங்கு மெய்ப்பரி யாள ரோடெதிர்
பொங்கு மெய்ப்பரி யாளரே
செங்க ழற்பத விருத ரோடெதிர்
செங்க ழற்பத விருதரே.

(இ - ள்.) யானைவீரரோடு யானைவீரரும், தேர் வீரர்களுடன் தேர் வீரர்களும், குதிரை வீரர்களுடன் குதிரை வீரர்களும், சிவந்த தண்டையணிந்த காலாட்படை வீரர்களுடன் காலாட்படை வீரர்களும் எதிர்த்து யுத்தஞ் செய்தனர்.

232. சிலையெ டுத்தடு வீர ரோடெதிர்
சிலையெ டுத்தடு வீரரே
கலைப யிற்றிய வாள ரோடெதிர்
கலைப யிற்றிய வாளரே
இலைய போற்கொலை வேல ரோடெதிர்
இலைய போற்கொலை வேலரே
மலைக தைச்சம ராள ரோடெதிர்
மலைக தைச்சம ராளரே.

(இ - ள்.) வில் வீரர்களுடன் வில் வீரர்களும், வாள் வீரர்களுடன் வாள்வீரர்களும், வேல்வீரர்களுடன் வேல்வீரர்களும், கதையையுடைய வீரர்களுடன் கதையையுடைய வீரர்களும், எதிர்த்து யுத்தஞ் செய்தனர்.

233. குஞ்ச ரங்கண்மு ழக்கு பேரொலி
கொடிகொள் தேருருள் அரவமும்
விஞ்சு திண்பரி பரவு மோசைகள்
வெற்றி வீரர்கள் கனைகழற்
கஞ்ச மேவிய வோதை யங்கவர்
கழறு கம்மலை யும்பரூர்
அஞ்ச தாரணி யஞ்ச வூழியி
லாழி போலவெ ழுந்ததே.

(இ - ள்.) யானைக்கூட்டங்கள் வீரீடும் சப்தமும், கொடி கட்டிய தேர்கள் உருளும் சப்தமும், குதிரைகள் நடக்கும் ஓசையும், வெற்றி வீரர்களின் காலிலணிந்துள்ள வீர தண்டைகளின் சப்தமும், அவர்கள் பேசும் வீரஒலியின் முழக்கமும், தேவ லோகமும் பூலோகமும் அஞ்ச ஊழிக்காலத்தில் பொங்கியெழும் சமுத்திரம் போல ஆரவாரிக்க யுத்தஞ் செய்தனர்.

234. எங்க ணுங்கணை வாளு மாழிக
ளெங்க ணுங்கொலை வேலினம்
எங்க ணுங்கதை சூல மாமழு
வெங்க ணுங்கண மாமரம்
எங்க ணும்படை கொண்டு வீரர்க
ளெங்க ணும்பொரு மக்களும்
எங்க ணும்பொழி யுதிர வாழ்கட
லேழு மென்னவெ ழுந்தன

(இ - ள்.) எவ்விடங்களிலும் வில் அத்திரங்களும், வாளும், சக்கிராயுதங்களுமாயிருக்கும். எவ்விடங்களிலும் கொலை செய்யும் வேலாயுதங்கள்; எங்கும் தண்டாயுதம், சூலம், மழுவாயுதங்கள்; எங்கும் பெரிய மரங்களைப் பேர்த்தெறிதல்; எங்கும் ஆயுதங் கொண்டவீரர்கள்; எங்கும் யுத்தம் செய்வோர்; அந்த யுத்தத்தில் பெருகும் இரத்தம் எங்கும் ஏழு உதிரக் கடல்கள் ஒன்று சேர்ந்தது போல் எங்கும் பிரவாகமாயிருக்கும்.

235. ஏறு தந்தியி ழந்த வீர
ரெதிர்ந்த தந்தி யெடுத்துமுன்
மாறி யுந்திட வெழுவ வான்மிசை
வரைப றப்பநிக ராகுமால்
கூறு மந்தந லத்த யானைகள்
குவல யத்தினில் வீழ்வபோர்
வீறு மிந்திர னிறக றுத்திட
வீழும் வெற்பின மொக்குமால்.

(இ - ள்.) ஏறி வந்த யானையைப் பறிகொடுத்த யானைவீரர்கள், எதிரில் வரும் யானைகளைக் கைகளினால் எடுத்து ஆகாயத்தில் ஒன்றன்பின் ஒன்றாக எறிவார்கள். அப்படி எறியப்பட்ட யானைகள் ஆகாயத்தில் மலைகள் பறப்பது போல் தோன்றும். மீண்டும் அவைகள் பூமியில் வீழ்கின்றதானவை முன் இந்திரன் மலைகளின் சிறகுகளை அறுத்தபோது அவைகள் வீழ்ந்தன போல இருந்தன.

236. தேரி ழந்தவர் தம்முன் வந்தெதிர்
தேரி னங்களை டுத்தெடுத்
தேரி லங்குற வீச வானக
மெங்கு முற்றிழி வுற்றவெம்
போரி லுற்றிமை யோர்க ணங்கள்பு
ரிந்து கண்டிட வுந்திடுந்
தாரி லங்குவி மான மெண்ணில
தக்க பேர்நிறை யொக்குமால்.

(இ - ள்.) தேரிழந்த வீரர்கள், தங்களை வந்தெதிர்க்கும் தேரினங்களைக் கையினுலெடுத்து ஆகாயத்தில் எறிவர். அவ்வாறு எறியப்பட்ட ரதம் மீண்டும் பூமியிலிறங்குவது, தேவர்கள் இந்த யுத்தத்தைக் காண, தங்கள் விமானங்கள் மூலம் கீழிறங்குவது போலிருந்தது.

237. நடவும் வெம்பரி பட்டொ ழிந்திழி
நன்மை வீரர்கள் வண்மையால்
உடனெ திர்ந்திடு பரிகள் வான்மிசை
யூடு சென்றிட வீசினர்
கடவு மப்பரி யிரவி தேருறு
கதிமி குந்துர கங்கள்தன்
மிடல றிந்திட வேணு மின்றென
மேவு தன்மைகள் போலுமால்.

(இ - ள்.) நடக்கப்பட்ட வெவ்விய குதிரைப்படையில் குதிரையை இழந்த வீரர்கள் தம்மீது எதிர்த்து வரும் குதிரைகளை ஆகாயத்தில் வீசியெறிந்தனர். அந்தக் குதிரைகள் ஆகாயமார்க்க மாகச் செல்வது, சூரியன் இரதத்திலே கட்டியிருக்கும் வேகம் மிகுந்த பச்சைக் குதிரைகளின் சாமர்த்தியத்தைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று செல்வது போலிருந்தது.

238. விற்ற டக்கையர் வாளி சென்றெதிர்
வீரர் தங்கள்சி ரங்கள்முன்
செற்றி டத்துணி படுத லைத்திரள்
செல்வ மீள்வன கூளியால்
உற்ற வெம்படை மகிழ வெற்றியோ
டுள்ள முங்களி கூர்நலம்
பற்றி யச்செரு மங்கை யங்கெழு
பந்த டிப்பதை யொக்குமால்.

(இ - ள்.) வில்பிடித்த விசாலமான கையினையுடைய காலாட் படை வீரர்களின் பாணங்கள் போய், எதிர்த்த சேனைவீரர்களின் தலைகளைத் துணித்து வீசும். அவ்வாறு வீசுவது ஆகாயம்வரை சென்று விழுவது, பேய்க்கூட்டங்கள் நிரம்பிய அப்படை வெற்றியுற அந்த யுத்தகளத்தில் விஜயலட்சுமியானவள் பந்தடிப்பது போலிருந்தது.

239. சென்று கிட்டிந கைப்பர் மீள்வர்தி
ரிந்து சாரிகை பெயர்வர்வான்
மின்ற ழைத்திடு வாளை வீசுவர்
வீசும் வாளைவி லக்கிமேல்
ஒன்று பட்டெதிர் மலைவர் நிற்பரு
ரங்கள் கூறுவர் சமரமும்
இன்று பெற்றன மெனம கிழ்ச்சியோ
டெழுவர் தான்முனை வயவரே.

(இ - ள்.) ஒருவருக்கொருவர் நெருங்கிச்சென்று சிரிப்பார்கள். திரும்பி விலகுவர்; வலசாரி இடசாரி போய் வருவார்கள்; மின்போல் பிரகாசிக்கும் வாளை வீசுவார்கள்; வீசும் வாளை விலக்குவர்; நெருங்கி வந்து யுத்தம் செய்வார்கள். சற்று நிற்பார்கள்; வீரமொழிகளைக் கூறுவர்; இன்று யுத்தஞ்செய்யும் பாக்கியம் பெற்றோமென்று படைவீரர்கள் மகிழ்வாராயினர்.

240. விட்ட வாளிவி லக்கு வாரெதிர்
வீர வாளிகள் வீசுவார்
தொட்ட கையடல் விற்பி டித்தகை
துணிய வாளிது ரத்துவார்
முட்டு வாரிரு தோள்கள் மார்புற
மொத்து வார்தலை தத்தவே
வெட்டு வாரமர் கிட்டு வாரமர்
மேவு வார்விறல் கூறுவார்.

(இ - ள்.) விடப்பட்ட பாணங்களை விலக்கிக் கொள்ளுவார்கள்; எதிர்பாணங்கள் விடுவார்கள்; பாணம் தொடுக்கும் கையும், விற்பிடித்த கையும் துணிந்து விழ, பாணம் தொடுப்பார்கள்; ஒருவருக்கொருவர் முட்டிக் கொள்வர்; இரண்டு தோள்களும் மார்பும் இடித்துக் கொள்ளுவார்கள். தலைகள் தெறித்தோட வெட்டுவார்கள்; நெருங்குவார்கள்; வீரயுத்தம் செய்வார்கள்; வீரவாதம் புரிவார்கள்.

241. அந்த வேலைய ரக்கர் கோமகன்
ஆழி மேவிய தேரின்மேல்
வந்து கோடிய வில்லெ டுத்தெதிர்
வாளி கோடிகள் தூவினுன்
எந்த யானைக ளெந்த வாசிக
ளெந்த மாரதர் தங்கண்மேல்
உந்தும் வீரர்களும் நின்ற வீரர்களு
மும்பர் வானம டைந்தனர்.

(இ - ள்.) அச்சமயத்தில் அரக்கர்கட்கரசனுகிய காருண்டன் சக்கரம் பொருந்திய தேரின் மீதேறிக் கொண்டு யுத்தகளம் வந்து வளைந்த வில்லெடுத்து நாணேற்றிக் கோடிக்கணக்கான அஸ்திரங்களை விட்டனன். யானைகள், குதிரைகள், ரதங்கள், காலாட்கள் ஆகிய எல்லாவிதச் சேனைகள் மீதும் வீரர்கள் மீதும் பட்டுச் சொர்க்க முற்றனர்.

242. தலைக ளற்றனர் கைக ளற்றனர்
தாள்க ளற்றனர் வாகுமா
மலைக ளற்றனர் இடைக ளற்றனர்
மார்ப மற்றனர் ஆண்மைகூர்
நிலைக ளற்றனர் வாய்மை யற்றனர்
நெஞ்ச மற்றனர் கற்றவெண்
கலைக ளற்றனர் செயல்க ளற்றனர்
காவ லன்படை வீரரே.

(இ - ள்.) காருண்டனுடைய பாணத்தினால் அநேகர் தலைகள் அற்றார்கள்; அநேகருக்குக் கைகள் அற்றன; கால்கள் அறுபட்டவர் பலர். வாகுவலையந் தரித்த மலை போன்ற தோள்கள் அறுபட்டவர்கள் அநேகர்; இடுப்பும், மார்பும் அற்றவர்கள் அநேகர்; சௌரியம் பேசும் வல்லமை இழந்தவர்கள் அநேகர்; சத்தியவழி நீங்கினவர்கள் அநேகர்; நெஞ்சு கலங்கியவர் அநேகர்; கற்ற கலைகள் கலங்கினவர்கள் அநேகர்; செய்யுங் கிரியைகள் இழந்தவர்கள் அநேகராகத் தெய்வீகராசன் படையிலுள்ளோ ராயினர்.

243. இப்ப டிக்கடல் வாள ரக்கனெ
திர்ந்து வன்சமர் புரிதல்கண்
டொப்ப றப்புவி யாளு மாமனு
வொத்த மன்னவர் மன்னனுங்
கைப்ப டைச்சிலை கொண்டு தேரெதிர்க்
கடவு மாதவ னென்னவே
பொய்ப்ப டைத்திரள் வாள ரக்கர்கள்
புறகி டும்படி போர்செய்வான்.

(இ - ள்.) இப்படியாக வாள்பிடித்த காருண்டனை எதிர்த்து வலிய யுத்தஞ் செய்ததைக் கண்டு ஒப்பற்ற பூமியாளும் மனுவுக்குச் சமமான அரசர்க்கரசனான தெய்வீகராசனும் கையிற் பிடித்த வில்லை வளைத்து நாணேற்றிக்கொண்டு தேரின் மேலேறிச் சூரியன் தேரைப்போல வேகமாக நடத்தி, பொய்ப்படைக் கூட்டமான அரக்கர்கள் பின்னிடும்படி பெரிய யுத்தம் செய்யத் தொடங்கினான்.

244. ஊழி காலமெ ழுந்து மாமுகி
லுததி யேழையும் மொண்டுகொண்
டாழி மால்வரை கொண்ட வண்டமு
மழிக்கும் நாளென வகிலமுஞ்
சூழும் வெங்கன லப்பு மாரிதொ
டுத்த னன்மதி மரபினான்
வாழு மாமது ரேசன் நல்கிய
வல்லி புல்லிய மார்பினன்.

(இ - ள்.) யுகாந்த காலத்திலே யெழுந்து ஏழுமேகங்களும் சப்த சமுத்திரங்களையும் மொண்டுகொண்டு சக்கரவாளகிரி சூழ்ந்த அண்டங்களை அழிக்கும் நாள்போலப் பூலோகத்தை அக்கினியாஸ்திரத்தால் மழைதாரை போலப் பொழிந்தான். சந்திர வமிசத்தில் தோன்றிய பாண்டியன் மகளான குலபதியை அணையும் மார்பையுடைய தெய்வீகராசன்.

245. பரிகண் மேலடல் வாசி மேவிய
பரவு தேர்களின் மேன்மத
கரிகண் மேலடு வீரர் மேலவர்
கண்கள் மேலவர் தலைகள்மேல்
தெரியு மார்புகள் மேல்வி ளங்கிய
செங்கை மேலிருந் தோள்கள்மேல்
அரியும் வாளிக ளாய்நி றைந்தவ
ரரக்கர் வீரம்அ ழிந்தவால்.

(இ - ள்.) தெய்வீகன் குதிரைகள்மீதும், குதிரைகள் கட்டிய தேரின் மேலும், மதம் பொழியும் யானைகள் மீதும், கொலை செய்யும் காலாட்கள் மீதும், அவர்கள் கண்கள், தலைகள், மாலை தரித்த மார்பு, விளக்கமான கைகள், அருமையான புயங்கள் ஆகியவைகள் மீதும் விட்ட சுடுசரங்கள் அரக்கர் பலமெல்லா வற்றையும் அழித்தன.

246. தேர்க ளற்றன பரிக ளற்றன
செம்பு கர்கட விகடவெங்
கார்கள் பட்டன படைகள் விட்டன
கருதி யாண்மையை நிலையிடும்
பேர்கள் கெட்டனர் முகடு கிட்டிய
பேய்கள் தொக்கன பூதமும்
பார்க ளுட்கிட நடம்வி ளைத்தன
நமர ரக்கரைப் படுகளம்.

(இ - ள்.) தேர்கள் அழிந்தன; குதிரைகள் அழிந்தன; சிவந்த புள்ளிகளையும் மதமுமுடைய கருத்த யானைகளழிந்தன. பிடித்த ஆயுதங்களைக் கைவிட்டு வீரம் பேசிய வீரர்களும் மடிந்தனர். அப்படி விழுந்த பிணக்குவியல் ஆகாயத்தை மூடியது. அப்போது பேய்களும் பூதங்களும் பூலோகம் நடுங்க நடனம் செய்தன தெய்வீகன் அரக்கரை அழித்த படுகளத்தில்.

247. எண்ணி றந்தபி ணக்கு வைக்கரை
யிசைய வாளயில் கணையெலாம்
உண்ண யந்திரு கயலெ னப்பொலி
வுறம தித்திடு வீரர்தந்
தண்ணி றந்தொளிர் முகம லர்ந்தெழுந்
தாம ரைத்திர ளனையவும்
கண்ணி லங்கிய வுதிர நீர்கொடு
கயநி றைத்தது களமரோ.

(இ - ள்.) எண்ணிக்கையற்ற பிணக்குவியலே கரையாகவும், வாள், வேல், சூலம், அம்புகள் அக்கரைக்குள் இருக்கும் மீன்களாகவும், நிச்சயித்து வந்த வீரர்களுடைய குளிர்ந்த பிரகாசமுடைய முகமே தாமரை மலர்களாகவும், கண்ணுக்குப் பிரகாசமாகிய இரத்தமே குளத்தில் நிறைந்துள்ள தண்ணீர் போலவும் யுத்தகளம் விளங்கிற்று.

248. வெற்றியு டன்படு மாடவரே
வெய்யவன் மேனியை நாடவரே
பற்றர மாதர்கண் மாலைகளே
படைஞர்கண் மேலிடு மாலைகளே
யுற்றெழு மாகன துந்துமியே
யுதிரமுந் நீர்மோ துந்துமியே
செற்றுயிர் வெஞ்சம ஞர்களமே
செருமுயன் மன்னவ ஞர்களமே.

(இ - ள்.) ஜெயத்துடன் இறந்த புருடர்கள் சூரியன் திருமேனியைத் தேடிக்கொண்டு போகப்பட்டவராவர். அன்புடைய தேவமாதர்களின் கண்ணுகிய புஷ்பமாலைகள் ஆயுத மெடுத்து யுத்தம் செய்த சூரர்களின் மீது தரிக்கத்தக்க மாலைகளாகும். பொருந்தி எழுகின்ற யுத்த களத்திலே துந்துமி யென்னும் வாத்தியங்களே, இரத்தம் நிறைந்த கடல்அலைகள் அடிப்பதுவுமாம். இறந்தவுயிர்களைப் பிடிக்க வரும் கொடிய இயமன் களமே தெய்வீகன் செய்யும் யுத்தகளமாம்.

249. வயவர்கள் சாய்வன வப்பனையே
மயலிசை கொட்டுந யப்பனையே
இயலிசை பாடுவ பாரிடமே
யிகலமர் மருவிய பாரிடமே
வியலிட மேலப் பாறுகளே
விரியுதி ரத்தப் பாறுகளே
அயன்மடி வாரிசை வானவரே
யரமட வாரிசை வானவரே.

(இ - ள்.) சேனுவீரர்கள் பனைமரம்போல் சாய்ந்துகிடப்பர்; மயக்கமாய் இசைகள்பாடி சிலர் நயமாய்ப் பேசுவர்; இயலாக ராகங்களைப் பாடுவது பேய்க்கூட்டங்களே; பகை கொண்ட யுத்தம் நடக்கும் யுத்த களத்திலேயாம். பிரகாசமான அக் களத்தின் மேலெங்கும் கழுகுக் கூட்டங்களேயாம்; விரிந்த ரத்தங்கள் ஆறுகள்போல் செல்லும். அதன் பக்கத்தில் மடிந்து கிடப்பார்கள் இசைவானவர்கள்; தெய்வப் பெண்களிசைபாட தேவர்கள் அதனைப் பார்க்க யுத்தகளம் வருவார்கள்.

250. உடல்கள் சிதைந்தன வார ணமே
ஓசையொ ழிந்தன வாரணமே
இடமிகு மாலுதி ரத்தலையே
எடுத்திலர் வாள்கள் கிடத்தலையே
வடகிரி போலுறு மம்புயமே
வயவர்மு கந்திகழ் அம்புயமே
படையடல் கூர்வன வலகைகளே
பாரிட மாடிய வலகைகளே.

(இ - ள்.) சரீரங்கள் அழிந்தன; யானைகளும் சங்குகளும் ஓசை ஒழிந்தன. யுத்த பூமியில் இரத்தந்தோய்ந்த தலைகள் கிடந்தன; வாளாயுதங்கள் எடுப்பாரின்றிக் கிடந்தன; மகமேரு கிரிபோல் அழகிய புஜங்கள் கிடந்தன; அவர்கள் முகங்கள் தாமரைப் புஷ்பங்கள் போலிருந்தன; ஆயுத மேந்திய வலது கைகள் வல்லமை பேசுவது போல் ஆடிக் கொண்டிருந்தன; பிசாசுக் கூட்டங்கள் யுத்த பூமியில் ஆடிக்கொண்டிருந்தன.

251. வீரர் முகத்த வருங்கொடியே
மேன்மை குலைந்த வருங்கொடியே
வாருநி ணங்கடி னற்கழுதே
வந்துவெ றுத்ததி னற்கழுதே
சாரொலி போனவ ணிப்பறையே
சயமட மாதின ணிப்பறையே
ஊரிர தத்துடை யாழிகளே
யுதிரமு ணத்தொடை யாழிகளே.

(இ - ள்.) வீரர்களின் முகங்களில் காகமிருந்து கொண்டிருந்தன; மேன்மை குலைந்து கிடந்தன தேரிலுள்ள கொடிகள்; நீண்ட நிணங்களை யுண்பதற்கு அழுது கொண்டு வந்தன கழுகுகள்; தின்று வெறுப்படைந்தன அவைகள். குடமுழா முதலிய வாத்தியங்கள் ஓசையற்றுக் கிடந்தன. ஜெயலக்ஷ்மியின் அழகிய வாத்தியங்களே ஒலித்தன. இரத்தத்தின் மீது சென்ற தேர் உருளைகளெல்லாம் இரத்தம் பொழியத் தொடங்கின; அவை ரத்தம் புசிக்கும் சக்கிராயுதங்கள் போல் விளங்கின.

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

252. இப்படியத் திருப்பெண்ணை நாடாளும்
முடிவேந்தன் இகன்மேற் கொண்டு
செப்பரிய வரக்கர்தமைத் தொலைத்தமைகண்
டருங்கோபச் செந்தீ மூள
மைப்புயலோர் மலையேறி வருவதுபோல்
ஒருதேர்மேல் வந்து வேந்தன்
ஒப்பரிய திருமுன்ன ரமர்மூண்டான்
வஞ்சனையா லுலகை வெல்வான்.

(இ - ள்.) இப்படியாக அழகிய பெண்ணைநதி சூழும் நாட்டை ஆளும் சதுர்முடியுடைய தெய்வீகராசன் பகைமேற் சென்று சொல்லுதற்கரிய இராக்கதக் கும்பலைச் சங்கரித்தது கண்டு அரியகோபமென்னும் சிவந்த அக்கினி மூள; கரியமேகம் ஒருமலை மேல் ஏறி வருவதுபோல் ஒரு தேர் மேலேறிக் கொண்டு வந்து தெய்வீகராசன் முன் வந்து யுத்தம் செய்யத் தொடங்கினான், வஞ்சனையினால் உலகத்தை ஜெயிக்கலாமென எண்ணும் காருண்டன் என்னும் அரக்கன்.

253. கடுங்கனல்போல் எதிர்முனைந்து காருண்டன்
வந்ததனைக் கண்டு விண்டோய்
நெடுங்கனக முடித்தேரி னின்றருளுந்
திருப்பெண்ணை நீர்நாட் டண்ணல்
விடுங்கதிசேர் மதிவலவன் தேர்நடத்த
வரக்கனெதிர் விரைவிற் சென்றான்
அடுங்கொடிய விறுதிநா ளென்றெவரு
மச்சமுற அமரின் மூண்டார்.

(இ - ள்.) கொடிய நெருப்புப் போல் காருண்டன் என்னும் அரக்கன் யுத்தம் செய்ய முன்வந்ததை அறிந்து, ஆகாயமளாவிய நெடிய பொற்கலசம் வைத்த தேரிலிருக்கும் அழகிய பெண்ணைநதி நீர் சூழ்ந்த நாட்டையுடைய தெய்வீக மகாராசன், செலுத்தும் வேகம் மிகுந்ததாய்ப் புத்தியில் வல்லசாரதி தேரை நடத்த அரக்கனுக்கு எதிரில் வேகமாகச் சென்றான். கொலை புரியும் கொடூரமான முடிவுகாலம் இதுவென்று அனைவரும் அச்சமுற்றனர்.

254. ஒருசிலைகொண் டொருமேகம் ஒருமலைமேல்
இருந்தயலில் ஒருவெற் பெய்தப்
பருவமழை பொழிவதுபோல் காருண்டன்
முடிபுனைந்த பாராள் வேந்தன்
திருமருவு மிரதத்திற் பொழிந்திடலால்
தேர்வலவன் சிதைந்து வீழ
அருகொருதேர் தனிலேறி யரக்கன்மேல்
விழப்பொழிந்தான் அம்பு மாரி.

(இ - ள்.) ஒரு வில்லையெடுத்து ஒரு மேகம் ஒரு மலைமேலேறி மற்றொரு மலையின்மீது பருவகாலத்து மழை பொழிவது போல, காருண்டன் என்னும் அரக்கன் முடி புனைந்து பூமியாளும் தெய்வீக ராசனது லட்சுமி கடாக்ஷம் பொருந்திய தேரின் மேல் சரவர்ஷம் பொழிந்தான். அப்போது தேரழிந்து சாரதியும் பின்னப்பட்டு விழுந்தனன். அது கண்டு அரசன் பக்கத்தில் நின்ற வேறொரு தேரின் மீதேறி வந்து அரக்கன்மீது மாரியைப் போல அம்புகளை விடுத்தான்.

255. மன்னர்பிரான் விடுமம்பு மாரியினு
லரக்கர்பிரான் மான்தேர் இட்ட
பொன்னணியுங் கவசமுட னறவயலோர்
கடுந்தேரிற் புகுந்து வெற்றிக்
கொன்னவிலும் படைவேலொன் றெடுத்தரசன்
கடுங்கவசங் குறித்து விட்டான்
அன்னவயில் தானுமிரு துணிவாக
ஓரம்பால் அறுத்தா னன்றே.

(இ - ள்.) இராசாதிராசனுை தெய்வீகனுல் விடப்பட்ட சரமாரியினுலே அரக்கர் தலைவனுன காருண்டன் தேரும், பொன்னுற் செய்த கவசமும் அற்றுப்போக அதுகண்டு காருண்டன் சமீபத்திலிருந்த ஒரு வேகமான தேரிலேறி வெற்றி பெற்ற கூரிய ஒரு வேலாயுதத்தை எடுத்துத் தெய்வீகராசனது கவசத்தைக் குறிப்பாய்ப் பார்த்துவிட்டான். அந்த வேலாயுதம் இரண்டு துண்டுகளாக விழும்படி தெய்வீகராசன் ஒரு அம்பை விட்டு அதனை அறுத்தான்.

256. வேலற்று வீழ்ந்ததுகண் டரக்கர்கோன்
ஒருதனுவை விரைவின் வாங்கி
மாலுற்ற கணைகளா யிரமரசன்
நுதலெழுதி மதித்து விட்டான்
காலொத்து வருங்கணைக ளறுத்தொழித்தா
யிரம்பகழி காருண் டன்றன்
பாலத்தி லுறவிடுத்தான் தப்பாம
லவைசென்று பட்ட தன்றே.

(இ - ள்.) தன்வேல் அற்று விழுந்தது கண்டு காருண்டன் விரைவில் ஒரு வில்லை எடுத்து அழகிய பாணங்கள் ஆயிரமாகத் தொடுத்துத் தெய்வீகராசனுடைய நெற்றியைக் கிழிக்கத் தக்கதாக விடுத்தனன். வாயு வேகம் போல் அப்பாணங்கள் வருவதுகண்டு தெய்வீகராசன் ஆயிரம் பாணங்களைக் காருண்டன் நெற்றியைப் பிளக்க விட்டான். அப்பாணங்கள் காருண்டன் நெற்றியிற் சென்று தாக்கின.

257. பட்டிடலா லருங்கணைகள் நெற்றியினி
லாறுபோற் பரவிச் சோரி
விட்டுவிளங் கியவரக்க னிரவிகுட
பாலடைந்த வெற்பைப் போன்றான்
மட்டலரும் பொழிற்பெண்ணை திருநாட்டு
மன்னவனும் வாளி யைந்தாற்
கட்டுகொடி பரிவலவன் இரதமழித்
தானங்கோர் கணத்தி லன்றே.

(இ - ள்.) அம்புகள் நெற்றியில் பட்டதனால் ஆறுபோல் இரத்தம் பெருகி விளங்குவது மேற்குத் திசையை யடைந்த சூரியன் அஸ்தமன கிரியைப்போல் காருண்டன் தோன்றினான். வாசனை வீசும் சோலை சூழ்ந்த பெண்ணை நாட்டு மன்னவனை தெய்வீகனும் ஐந்து பாணங்களைத் தொடுத்துத் தேரின் கொடுங்கை, குத்துக்கால், தேர் முதலியவற்றை ஒரு க்ஷணத்தில் அழித்தான்.

258. தேரழிய வேறொருதே ரிடைப்புகுந்து
வாளரக்கன் சேனை சூழ்ந்து
பாரழிய விசும்பழியக் கடையுகத்தில்
வடவையனற் படர்ந்த தென்ன
காரழியப் பொழிவதுபோற் கணைபொழிந்தான்
புவிக்கிடராங் கார ரக்கன்
வேரழிக்கப் பிறந்ததிருப் பெண்ணைநாட்
டரசனவை விலக்கி நின்றான்.

(இ - ள்.) தன் தேர் அழிந்தது கண்டு காருண்டன் வேறொரு தேரின் மேலேறிக் கொண்டு, சேனைகளையும் சேர்த்துக் கொண்டு பூலோகம் அழிய ஆகாசம் அழிய யுகமுடிவில் வடவா முகாக்கினி யானது படர்ந்ததுபோலவும், சப்த மேகங்களும் யுகமுடிவில் பொழிவது போலவும் சரமாரி பொழிந்தான். அப்படிப் பொழிந்த கருத்த அரக்கனை வேரோடு அழிக்கப் பிறந்த பெண்ணை நாட்டுத் தெய்வீகன் அப்பாணங்களை யெல்லாம் விலக்கி நின்றான்.

259. பாரண்டந் திசைமுழுதும் பாதகனென்
றிடவாழும் படிறு பூண்ட
காரண்டன் கடுங்கோபத் தொருகதையை
வன்மைகொடு கடுத்து வீசச்
சீரண்டம் பொதிமதியத் திருமரபில்
வழுதிதரு தெய்வக் கற்பின்
வாரண்ட முலைக்கொடிநேர் குலபதிதன்
மகிணன்மேல் வந்த தன்றே.

(இ - ள்.) மறுபடியும் பூமி, ஆகாசம், எட்டுத்திக்கும் பாதகனென்று சொல்லத்தக்கதாக வாழும் பொய்யையுடைய காருண்டன் கோபங்கொண்டு, ஒரு தண்டாயுதத்தைத் தன் பலத்துடன் உக்கிரமாக வீசினான். அதுவும் சிறப்புடைய ஆகாய மெல்லாம் நிறைந்துவரும், சந்திர வமிசத்திலே பிறந்த பாண்டிய ராச குமாரியான தெய்வக் கற்புடைய கச்சணிந்த தனபாரத்தை யுடைய புஷ்பக்கொடி போன்ற குலபதிதன் கணவனை தெய்வீகராசன் பேரில் வந்தது.

260. வருங்கதையை யொருவேலா லறுத்தொழித்துத்
திரண்டெழுந்து வந்த வெள்ளக்
கருங்கடலை நிகரரக்கர் சேனையெல்லாம்
மடிவித்துக் காரண் டன்தன்
பொருங்கடிய தேரினையு மழிக்கவவன்
கடிதிலொரு பொருப்பை வாங்கி
யிருங்கனக முடிக்குரிசில் இரதத்தைப்
பொடியாக்கி யிடிபோ லார்த்தான்.

(இ - ள்.) காருண்டன் விட்ட தண்டாயுதத்தை வேலாயுதத்தினலே யறுத்தெறிந்து, கும்பலாக வெழுந்துவந்த கடல் போன்ற கரிய அரக்கர் சேனைகளையெல்லாம் கொன்று, காருண்டனது சண்டை செய்தற்குரிய வேகமுடைய தேரையும் அழித்தான். அதுகண்டு காருண்டனும் ஒரு மலையை எடுத்து வீசிப் பெருமையுடைய பொன்முடி தரித்த தெய்வீகராசனது தேரைப் பொடியாக்கி இடிபோலக் கர்ச்சித்து நின்றான்.

261. புரவலனும் பசும்புரவி மேற்கொண்டான்
அரக்கனொரு பொருப்பை வீசக்
கரமலரின் வாளினற் ககனமேற்
கண்டதற்பின் கடுங்கண் செக்கர்
சிரமொருமூன் றுடையரக்கன் செருபடைக
ளன்றியே சீற்றங் கொண்டு
நரபதிமுன் நில்லாமல் மண்மறைந்து
பலமாயம் நடக்க லுற்றான்.

(இ - ள்.) தெய்வீகராசன் பச்சைக் குதிரைமேல் ஏறிக் கொண்டு எதிர்த்தான். காருண்டன் மலையெடுத்து எறிய அதைக் கைவாளினல் ஆகாயம் செல்லும்படி தட்டி விட்டான். அது கண்டு கொடூரமான சிவந்தகண்ணும் மூன்று சிரமுமுடைய காருண்டன் தன் சேனைகளிறந்ததால் முன் நிற்காமல் பூமியிலே மறைந்து பல மாயம் செய்யத் தொடங்கினன்.

262. இந்திரன்போ லாயிரங்கண் படைத்தயிரா
வதத்தேறி எதிர்க்கு மோர்காற்
சந்திரன்போல் வடிவுகொடு தக்கபனிக்
கிரணங்கள் தழைக்கு மோர்காற்
சிந்துதிரைக் கடல்போல வெங்கும்வளைத்
தருள்வேந்தைச் செயிர்க்கு மோர்கான்
மந்தரம்போல் விண்ணளந்து கண்ணளவா
வரைவடிவாய் வளரு மோர்கால்.

(இ - ள்.) காருண்டன் இந்திரன் போல் ஆயிரங்கண்ணுடனே ஐராவதத்தின் மேலேறி ஒருதரம் எதிர்ப்பான். பின் சந்திரன் போல் ரூபங்கொண்டு குளிர்ந்த கிரணங்களை வீசுவான். அலை வீசும் கடல்போல நாலு திசைகளிலும் வளைத்துக்கொண்டு கிருபை பொருந்திய தெய்வீகராசனைக் கோபிப்பான். ஒருதரம் மந்தரகிரி போல் ஆகாயமளவும் வளர்ந்து, கண்ணுக்கெட்டாமல் மலை வடிவாய் வளர்ந்து நிற்பான்.

263. செங்கதிரின் வடிவாகிச் செங்கனலி
னுருவாகிச் செறியு மோர்காற்
பொங்குகதிர் காலாக்கினி காலன்போல்
எவ்வையும் புணரு மோர்கால்
இங்குளனோ வங்குளனோ வென்றுணர
வரிதாகி எண்ணின் மாயந்
தங்கரிய வஞ்சனைகள் செயவரச
னுமைபாகன் றனைநி னைந்தான்.

(இ -ள்.) சூரியனுடைய வடிவங்கொண்டும், சிவந்த அக்கினி சொரூபங் கொண்டும் வந்து எதிர்ப்பான் ஒரு தரம். பிரபல மான கிரணங்கள் வீசப்பட்ட யுகாந்த காலத்து அக்கினி போலவும், இயமனைப் போலவும் வந்து எதிர்ப்பான் ஒரு தரம். இங்கிருப் பானோ, அங்கிருப்பானோ என்று அரிதாகி, எண்ணிக்கையற்ற மாயவஞ்சனைகளைக் காருண்டன் செய்ய, அது கண்டு தெய்வீக ராசன் பார்வதி பாகனை பரமசிவனை நினைத்தான்.

264. அஞ்சலென வரனருளா லாகாசத்
துரையெழுந்த அரக்கன் செய்யும்
வஞ்சனைகள் தனைமாற்றுங் கதையொன்று
வந்துகர மருவக் கண்டு
நெஞ்சமகிழ்ந் தனன்வேந்தன் அக்கதையைக்
கண்டரக்கன் நிகரில் வந்த
வஞ்சமுறு மாயைதவிர்ந் திகில்புரிய
அரசனெதிர் மறித்து நின்றான்.

(இ - ள்.) சிவபெருமான் திருவருளால் 'பயப்படாதே' என்று ஆகாயத்திலிருந்து ஒரு சொல் கிளம்பியது. அதனுடன் அந்த அரக்கன் செய்யும் வஞ்சனைகளை நீக்கத் தக்கதாகத் தெண்டாயுத மொன்று வந்து கையில் சேர்ந்தது. அதுகண்டு அரசன் மகிழ்ந் தான். அந்தத் தண்டாயுதத்தைக் கண்ட மாத்திரத்தில் காருண்டன் செய்யும் நிகரில்லாதவஞ்சனை செய்யும் மாயை யொழிந்தது. மறுபடியும் அரக்கன் சுயரூபத்துடன் அரசன் முன் சண்டை செய்ய வந்து எதிர்த்து நின்றான்.

265. நின்றெதிர்க்கும் காருண்டன் மேற்கதையை
நிலம்புரக்கும் நிருபன் வீச
சென்றரக்கன் உடல்மீதிற் பட்டிடலு
மிகத்தளர்ந்து சிந்தை வாடி
வன்றலத்தில் வீழ்ந்தாகம் நிலந்தோயக்
குன்றினங்கள் வனங்க ளெல்லாம்
அன்றடுத் துகளாகக் கரந்துவரல்
கண்டரசன் அச்சங் கொண்டான்.

(இ - ள்.) எதிர் நின்று கர்ச்சிக்கும் காருண்டன்மீது அரசன் அத்தண்டாயுதத்தை வீசினான். அத்தண்டாயுதம் அரக்கன் உடலிற்பட்ட மாத்திரத்தில் மிகவும் கலங்கி, சித்தமிளைத்துப் பலம்பொருந்திய பூமியின்மீது விழுந்து சரீரம் புழுதியிற்பட அப்போது அஷ்டமாசித்தியினால் மாயா ரூபமாகப்பருவதங்கள், ஆரணியங்கள் எல்லாம் மறைய ஊழிக் காற்றுப் போல் அரக்கன் வந்தது கண்டு அரசன் அச்சமுற்றான்.

266. சத்தியாய்ச் சிவமாகி யுலகமெல்லாம்
படைத்தளித்துத் தவிர்த்து ஞான
முத்தியாய் நின்றருளும் முளைமதியந்
தவழ்வேணி முடியி னானைப்
பத்தியாய் நினைந்திடலால் மூவுலகும்
வெல்வதோர் பரசு வந்து
சித்தியாய்க் கணகரன்மேற் செறிந்திடக்கண்
டுளமகிழ்ந்தான் செங்கோல் வேந்தன்.

(இ - ள்.) சத்தியாகியும், சிவமாகியும் உலகமெல்லா வற்றையும், உற்பத்தி செய்தும், காப்பாற்றியும், அழித்தும், சதாசிவ ரூபமாய் விளங்கியும், மூன்றும்பிறை தரித்த சடாபா ரத்தையுடைய சிவபெருமானைத் திரிகரண சுத்தியாய்த் தியானித்த மாத்திரத்தில் தெய்வீகராசன் கையில் திரிலோகத்தையும் சயிக்கும் படியான ஒப்புவமையில்லாத ஒரு மழுவாயுதம் வந்து இருக்கவும் அது கண்டு தெய்வீகராசன் சந்தோஷமடைந்தான்.

267. குறிக்கரிய திறல்வேந்தன் நிறையருளால்
தன்கரத்திற் குலவிச் சேர்ந்த
பொறிகணிச்சி விடச்சென்று வடகிரியின்
முச்சிகரப் பொருப்பை வெங்கால்
பறித்ததெனக் காருண்டன் தலைகளொரு
மூன்றினையும் படிமேல் வீழத்
தறித்ததுயிர் ஒழியவவன் பேருடலம்
மைக்கிரிபோற் சாய்ந்த தன்றே.

(இ - ள்.) இவ்வளவென்று நிச்சயிக்கப்படாத பராக்கிரம முடைய தெய்வீகராசன் பரமசிவனின் அநுக்ரகத்தினாலே தன் கையில் பிரகாசமாய் வந்து கிடைத்த மழுவாயுதத்தைக் காருண்டன்மீது செலுத்த அதுசென்று மேருகிரியின் மூன்றுமுடி களை வாயுபகவான் முன்னாளில் பிடுங்கி எறிந்தது போல் காருண்ட னின் மூன்று தலைகளையும் பூமியிலே விழ வெட்டி அவனுயிரையும் வாங்கியது. அப்போது அவனுடைய தேகமானது நீலமலை போலச் சாய்ந்தது.

268. மலையுமதிற் காருண்டன் வாளரக்கன்
சேனையுடன் மடிந்தா னாகக்
கலைமறையின் கடலெடுத்த மனுநீதி
யுளங்களித்த களவும் பொய்யுங்
கொலையுமறைந் தொழிந்தவருண் மாதவத்தோர்
இதையங்கள் குளிர்ந்த மாறு
அலைகடல்சூழ் புவியாளுந் தெய்வீகன்
வயவாகை யணிந்தா னன்றே.

(இ - ள்.) சண்டை செய்யும்போது காருண்டன் சேனைகளுடன் மடிந்தான். கலைஞானங்களும், வேதங்களும் மநுநீதியும் மகிழ்ந்தன. திருட்டு, பொய், கொலையும் தெரியாமல் மறைந்தன. கிருபையுடைய தபசிகள் மனம் குளிர்ந்தனர். ஓயாமல் அலைவீசும் சமுத்திரஞ் சூழ்ந்த பூலோகமாளும் தெய்வீகராசனும் வெற்றியாகிய வாகைமாலையைத் தரித்தனன்.

269. காரொத்த கருமேனிக் காருண்டன்
பட்டொழிந்தான் கணக்கில் லாத
போரொத்த சிலவறிந்த வகைவிளம்பி
யரசவனப் புனிதன் வாச
தாரொத்த மணிமவுலி தெய்வீகன்
பாலடைந்து தடக்கை தன்மேல்
நீரேற்ற முறைமையுல கோரறிய
வுணர்ந்தவரை நிகழ்த்த லுற்றாம்.

(இ - ள்.) சூல் கொண்ட மேகம் போன்ற நிறத்தையுடைய காருண்டன் என்னும் அரக்கன் இறந்து ஒழிந்த யுத்தத்தின் பிரதாபத்தை அறிந்தவரையில் சிறிது கூறினோம். இனி அரசவனத் தெழுந்தருளிய புனிதனை சிகரசிகாமணி நாதர் வெற்றிமாலையும், நவரத்தினகிரீடமும் தரித்த தெய்வீகராசனிடம் வந்து விசாலமான தனது கையினால் சலத்தைத் தத்தமாக வாங்கிய முறைமைமையை யுலகத்தார் அறிய, தெரிந்தவரையில் சொல்லத் தொடங்குவோம்.

கலி விருத்தம்

270. மோதமர் களத்தினின் முடித்த முத்தலை
தீதினை வளர்த்தவத் திறல ரக்கன்முன்
வேதிய ளுதலின் வேந்தர் கோன்றனை
ஓதுதற் கரும்பிர்ம ஹத்தி யுற்றதால்

(இ - ள்.) நெருங்கிய யுத்த களத்திலே மடித்த மூன்று தலைகளையுடையவனும் தீமையை வளர்த்த பலமான காருண்டன் என்னும் அரக்கன் முன் சென்மத்தில் பிராமணனைபடியினாலும் தெய்வீகராசன் கொன்றதால் அவருக்குச் சொல்லுதற்கு அரிதாகிய பிரமஹத்தி தோஷம் வந்து பிடித்துக் கொண்டது.

271. உருத்துமேல் வந்திடும் ஓடுங் கூடுமுன்
செருப்பது போல்வருஞ் சிரிக்குஞ் சூழ்ந்தழும்
பொறைத்துயில் கொள்ளுமார் பூடு போய்ப்புகும்
இறைப்பொழு தளவுமங் கிடைவி டாததால்.

(இ - ள்.) கோபித்துக்கொண்டு மேலே வந்து விழும்; ஓட்டம் பிடிக்கும்; மறுபடியும் வந்து சேரும்; கொல்பவனைப் போல் எதிரே வரும்; வாய்திறந்து சிரிக்கும்; வளைந்துகொண்டு அழும்; வருத்தந் தீர நித்திரை செய்யும் வேளையிலும் மார்போடு நெஞ்சினிடத்திலே வந்து புகுந்து கொள்ளும். இப்படியாக க்ஷண நேரமும் விட்டு நீங்காமல் தெய்வீகராசனைப் பிரம்ம ஹத்தி தொடர்ந்தது.

272. மன்னனும் கொடும்பிர்ம ஹத்தி தான்தன்னைத்
துன்னிமுன் வருத்தலாற் றுலங்கு மாதவர்
பொன்னடித் தாமரை போற்றி யிவ்வினை
யென்னைவந் தடைந்ததென் னியம்பு மென்றனன்.

(இ - ள்.) தெய்வீகராசனும் இப்படிக் கொடுமையான பிரம ஹத்தி தோஷம் தன்னைத் துன்பப்படுத்துவதால் தவமுடைய முனிவர்களின் பொன்போன்ற அழகிய திருவடித் தாமரைகளை வணங்கி, இந்தப் பிரமஹத்தி தோஷம் என்னை வந்தடைந்த காரணம் யாது? அதைக் கூற வேண்டுமென்று கேட்டுக் கொண்டனன்.

273. புரவலன் வருத்தமும் புலர்வும் கண்டருள்
வரன்முறை முனிவரும் மன்ன வன்றனக்
கரனருள் பெருகவென் றுசி கூறியங்
குரமுடன் வினைவழி யுணர்த்தன் மேயினர்.

(இ - ள்.) தெய்வீகராசனது வருத்தமும், முகவாட்டமும், இளைப்பும் கண்டு அநுக்கிரகசித்தராய்ப் பரம்பரையான முனிவர்களும், அரசனுக்குச் சிவானுக்கிரகம் பெருகும்படி ஆசீர்வதித்துப் பின்பு அந்தப் பிரமஹத்தி தொடர்ந்த பலம்பெற்ற வினையினுடைய வரலாற்றைச் சொல்லத் தொடங்கினர்.

274. அரசமா வனத்தரற் கருச்ச னைக்குமுன்
பிரசமா மலர்தர பிரம சாரியாம்
உரைசெய்மா மறைக்குல ஒருவற் போக்கினர்
கரைசெயா வருண்மிரு கண்டு மாமுனி.

(இ - ள்.) அரசவனத்தில் எழுந்தருளிய சிகரசிகாமணி நாதரின் அருச்சனைக்காகத் தேன் துளிக்கா நின்ற சிறந்த புஷ்பங்களை எடுத்துக் கொண்டுவர, சொல்லப்பட்ட மகத்தான பிராமண குலப் பிரம்மச்சாரியான ஒரு சீடனை, கிருபாநோக்க முடைய மிருகண்டு முனிவர் அனுப்பினர்.

275. அனையவ னந்தன மடையும் வேளையில்
முனைவழி வஞ்சனை முதல ரக்கியர்
சினைபயில் நந்தனஞ் சிதைத்த ழித்துவெவ்
வினையுடன் றமதிடம் மேவி னரவர்.

(இ - ள்.) அந்தப் பிரமசாரி அந்தவனத்திற்குச் சென்ற சமயத்தில் முன்னமே வழிவழியாகக் கொடுமை செய்யும் வஞ்சனை யென்னும் பெயருடைய அரக்கி முதலாகப் பல அரக்கியர் நந்தவனம் வந்து கொம்பு செடி முதலானதை யொடித்தும் அழித்தும் கொடிய செயல் செய்து, தமதிருப்பிடம் சென்றனர்.

276. அன்பறு மவர்செயற் ககந டுங்கிநின்
றின்புறு மலரெடுத் தேக மாமுனி
முன்பரன் பூசனை முடித்தி ருந்தனன்
பின்புசென் றடுத்தனன் பிரம சாரியே.

(இ - .) அன்பற்ற அரக்கியர் செய்த செயலைக் கண்டு மனங்கலங்கி நின்று, பின் சிறிது நேரஞ்சென்றபின் வேறு இடஞ்-சென்று இன்பமான புஷ்பங்களை எடுத்துக் கொன்டு போக, அதற்கு முன்பே மிருகண்டு முனிவர் சிவபூசையை முடித்திருந் தார். பின்பு பிரம்மசாரி போய்ச் சேர்ந்தார்.

277. பிரமசா ரியையருள் பெருகு மாமுனி
விரைவின்வா ராததென் விளம்பு வாயென
திரமுறு மரக்கியர் செய்த தீங்கெலாம்
உரைசெய்தான் செவியிலவ் வுரையு றுமுனம்.

(இ - .) வந்த பிரம்மசாரியை அருளுடைய மிருகண்டு முனிவர்பார்த்து, 'அரன்பூசைக்கு விரைவில் மலர்கொண்டு வராத காரணம் என்ன? என்று கேட்டனர். பிரம்மசாரி வஞ்சனை முத லான அரக்கியர் செய்த தீமைகளையெல்லாம் கூறினான். அச் சொல்காதில் படுவதற்கு முன்பே..

278. வெஞ்சினங் கொண்டிணை விழிநெ ருப்பெழ
வஞ்சனை வயிற்றிடை மருவித் தோன்றிமுன்
நஞ்செனெ யாவரும் நடுங்க வாழ்ந்துநின்
றெஞ்சுவா யெனமுனி யியம்பி னனரோ.

(இ-ள்.) மிருகண்டு முனிவர் கொடிய கோபங்கொண்டு இரண்டுகண்களும் அக்கினி வீச, பூசைக்குத்தாமதித்து வந்தது கண்டு 'நீ வஞ்சனையென்னும் அரக்கியின் கருப்பத்தில் பிறந்து முன்தோன்றிய விஷம்போல யாவரும் நடுங்கும்படி வாழ்ந் திருப்பாய்' என்று சாபமிட்டார்.

279. அன்றிவஞ் சனையுமோர் அரக்க னைப்புணர்ந்
தொன்றுமச் செயலினு லுதிக்கப் பெற்றவன்
கன்றிய முனிசொலாற் காயம் விட்டுயர்
சென்றவ ளுதரத்திற் செறிந்து வந்தனன்.

(இ - ள்). வஞ்சனையென்னும் அரக்கி ஒருஅரக்கனைக்கூடிய செயலினுல் பிறந்தவன். கோபித்த மிருகண்டுமுனிவர் சொற்படி அப்பொழுதே பிரம்மசாரிதனது யோக சக்தியினுல் சரீரத்தை விட்டு ஆகாயத்திலெழும்பிப்போய் அந்த வஞ்சனை வயிற்றில் நிறைந்திருந்தனன்.

280. ஆதலின் நின்னைவந் தடைந்த திவ்வினை
நீதவ றுடையையு மல்லை நீணில
மாதவர் பொருட்டவன் மடிய மாய்த்தனை
வேதிய னென்பது விளங்க வில்லையால்.

(இ - ள்.) ஆனபடியினுல் காருண்டன் முன்ஜன்மத்தில் பிராமணனுயிருந்ததனுலும், அவனைக் கொன்றதனுலும் அந்தப் பிரம ஹத்தி உன்னைவந்து சேர்ந்தது. நீ ஒரு தப்பிதமும் செய்த தில்லை. பூமியிலுள்ள முனிவர்கள் பொருட்டு அவனைக் கொன்றனை. அவன் பிராமணன் என்பது உனக்குத் தெளிவாகத் தெரிந்தசெயல் அல்ல.

281. அந்தண னென்பதை யறிந்து தன்கையால்
வந்திடுங் கொலைசெயில் வந்து சூழ்வினை
பந்தமெவ் வுயிர்களும் பரனே டுதவுவான்
முந்திவந் தந்தநாண் முடிந்து நீங்குமால்.

(இ - ள்.) பிராமணன் என்பது அறிந்து தன்னுடைய கையினுல் கொலைசெய்தால் வினையானது வந்து சுற்றிக் கொள்ளும். எந்தஉயிர்களையும் சிவபிரான் அனுபவிக்கத் தக்கதாகச்செய்து அடக்குவார். ஆதலினுல் ஜெனனமுதலாக மறுஜனனங்களிலு மனுபவித்து முடிந்துநீங்கிப்போகும்.

282. அப்படி நின்மன மறியச் செய்ததன்
றிப்பொழு தஞ்சல் நீ யிறைவன் பாதமே
மெய்ப்பொரு ளெனத்துணி வேத வாய்மையாற்
செப்பருந் தீவினை தீர்த்தல் கேட்டியால்.

(இ - ள்). இந்தத் தீவினை, உன்மனம் அறியச்செய்ததல்ல· இப்போதும் நீ பயப்பட வேண்டாம். பரமசிவன் பாதங்களை உண்மைப்பொருளென்று துணிவு கொண்டு, வேதவாக்கிய பிரமாணத்தினுலே சொல்லுதற்கரிய அந்தப் பாவத்தைத் தீர்த்துக்கொள்ளும் வகையைக் கேட்பாயாக.

283. நோக்கருந் தவத்துநா னூறு வேதியர்
ஆக்கரும் பதிகள்நன் கமைத்த வெல்லையிற்
தீக்கனல் மேனியான் சிவால யங்களும்
பாக்கிய மடைவுறப் பணிந்து செய்குதி.

(இ - ள்.) பார்த்தற்கு அருமையான தவத்தையுடைய நானூறு பிராமணர்களுக்குச் செய்தற்கு அருமையான கிருகங்கள் அமைத்து, அதன் மத்தியில்அக்கினிபோன்ற திருமேனியையுடைய சிவபெருமானுக்குச் சிவாலயம் எடுப்பித்துச் செல்வம் உண்டாகப் பணிவுடன் செய்வாயாக.

284. மாற்றரும் மகம்புரி வாழ்வு தேருமெண்
ணூற்றுவர் வேதியர் நுடங்கு மாமதி
ஆற்றிய சடையினு னரச மாவனத்
தேற்றுதி விருத்தியு மீதி யீய்ந்தபின்.

(இ - ள்.) மாற்றுதற்கரிய யாகஞ்செய்து வாழ்ந்து தெளிந்த வைதீக பிராமணர்கள் எண்ணூறுபேர்களை வளைந்த பிறையணிந்த சடாபாரத்தையுடைய சிகரசிகாமணி நாதர் எழுந்தருளியுள்ள அரசவன க்ஷேத்திரத்தில் குடியேற்றி அவர்களுக்கு விருத்தியும், சருவமானியமும் சீவனத்திற்கு விட்டபிறகு.

285. கொங்கலர் கொன்றையான் கோயி லானவை
யெங்கணும் பூசனை யியல்பி னுக்குதி
பொங்கிமேல் வரும்பிர மத்தி போமென
அங்குரை செய்தனர் அரிய மாதவர்.

(இ-ள்.) வாசனை வீசும் கொன்றை மாலைதரித்த சிகரசிகாமணி நாதருக்கு ஆலயஞ்சமைத்து அவர் பூசனையைச் சிவாகமவிதிப்படி செய்விப்பாய். அப்படிச்செய்யின் உன்மீது வரப்பட்ட பிரம்ம ஹத்திதோஷம் நீங்குமெனத் தெய்வீகராசனைப் பார்த்து முனிவர்கள் கூறினர்.

286 முந்தைமா முனிவர்கள் மொழிதல் கேட்டெழுந்
துந்திய காதலா னுலக மன்னவன்
நந்திய கங்கைவான் கரையை நண்ணிமுன்
அந்தரு வேதிய ரணுகி னனரோ.

(இ - ள்.) முதன்மையாகிய சிறந்தமுனிவர்கள் சொன்னதைக் கேட்டு எழுந்திருந்து, தூண்டப் பட்ட அன்பினலே தெய்வீக ராசன் சங்குகள் உலாவும் கங்கைக்கரையை அடைந்து முதன்மை யான பிராமணர்களை அணுகினன்.

287. சீருறு வேதியர்த் திரளைக் கண்டுவந்
தாருறு சடையவ னருளி னுலருட்
பேருடை மாதவர் பேசு மந்தணர்
ஈரறு நூற்றவ ரென்ப தெண்ணிலான்.

(இ - ள்.) சிறப்புடைய பிராமணர்களின் கும்பலைக்கண்டு சந்தோஷித்து, ஆத்திமாலை தரித்த சடையையுடைய சிகரசிகா-மணி நாதர் கிருபாகடாக்ஷத்தினல் பேர் பெற்ற மகாதவமுடைய முனிவர்கள் சொல்லியபிராமணர்கள், ஆயிரத்திருநூறுபேர் என் பதை மறந்துவிட்டனன் அரசன்.

288. விள்ங்கிய வரந்தரு வேத வேதியர்
அளந்திட வரியவர் அடிவ ணங்கியான்
தளர்ந்திட வருவினை தணர நீர்நினைந்
துளங்களி தரும்வகை யுன்னி யன்பினால்.

(இ - ள்.) விளங்கும்படியான வரத்தைத் தரும் வேதமுணர்ந்த பிராமணர்கள் இவ்வளவென்று கணக்கிட முடியாதவர்களுடைய பாதத்திலேவணங்கி நான் வருந்தும்படி வந்தபாவமானது நீங்கத் தக்கதாக நீங்கள் நினைந்து, மனம் மகிழ்வுண்டாகும் வகையைச் செய்ய வேண்டுமென அன்பினால்.

289. தேறுமா தவஞ்செய் நும்திருக்க ணத்திலெண்
ணூறுமா மறையவர் நுவலு மித்தலப்
பேறுபோல் விளங்கிடும் பெண்ணை நாட்டில்வந்
தேறுமா நினையுமென் றிரந்தி யம்பினான்.

(இ - ள்.) தெளிந்த மகாதவஞ்செய்யும்உங்கள் திருக்கூட் டத்தில் எண்ணூறுபேர், சிறந்த பிராமணர்கள் மேன்மையாகக் கூறும் இந்தக் காசித்தலத்திலும் பாக்கியம் பெற்று விளங்கும் பெண்ணை நாட்டிலே வந்து வாசம் பண்ணும் படியாகநினையுங்கள் என்று யாசித்துக்கேட்டுக் கொண்டான் தெய்வீகமகாராசன்.

290. சீலமா ரங்கவர் சிந்தை யாய்ந்து வெவ்
வேலணி கடுந்திறல் வேந்தன் தன்னுடன்
நூலணி மார்பரெண் ணூறு வேதநூல்
கோலவே தியர்தமிற் கூடி னாரரோ.

(இ - ள்.) நல்லொழுக்கமுடைய அந்தப் பிராமணர்கள் யோசித்துக்கொடிய வேல்பிடித்த, வெற்றியினையுடைய அரசனுடன் முப்புரிநூலணிந்த மார்பையுடைய பிராமணர்கள் வேதாப்பியா சராய் அழகினையுடையவர்கள் தங்களில் ஒன்று சேர்ந்து தெய்வீக ராசனுடன்வர எண்ணினர்.

291. நீற்றணி மேனியர் நீல கண்டனைப்
போற்றிய நாவினர் புனித பூரணம்
ஏற்றிய வறிவினர் இயல்பி னின்றவெண்
ணூற்றுவர் சிவநெறி நுணங்கு கேள்வியால்.

(இ - ள்.) வர எண்ணிய அந்தணர்கள் விபூதிதரித்த திருமேனியை யுடையவர்கள்; கருத்த கண்டத்தினையுடைய சிவபெருமானைத் துதிக்கும் நாவினையுடையவர்கள். பரிசுத்தமாய் எங்கும்நிறைந்த பரப்பிரமத்தை அறிந்தவர்; ஒழுக்கந் தவறுதவர்; எண்ணூறு பேர் சிவாகம நுட்பங்களை யறிந்த கேள்வி யுடையவர்கள்.

292. பன்னிகள் பின்வர பசுக்கள் எண்ணில
நன்னல முடன்வர நயந்தி யாகத்தில்
வன்னிகள் கலசமேல் வயங்கிச் சூழ்வர
இன்னியற் றென்றிசை யெய்த வந்தனர்.

(இ - ள்.) புறப்பட்ட பிராமணர்களுடனே அவரவர்களுடைய பத்தினிமார்கள் பின் தொடர்ந்துவரவும், பஞ்சகவ்யத்திற் கேற்ற நல்ல பசுக்கள்வரவும், ஆகவனீயம், காருகபத்தியம் தக்ஷிணுக்கினீயம் என்னும் மூன்று வகையான யாகாக்கினி களையுமுடைய கலசங்களை எடுத்துக்கொண்டு இனிமையான தமிழ் வழங்கும் தெற்கிலுள்ள தென்பெண்ணை நாட்டை அடைந்தனர்.

293. அருமறை யவர்கணத் தமரர் காவலன்
பொருவறப் பொலிவது போல வங்குடன்
வருமறை யவர்வர மன்னன் வந்தனன்
பெருகிய வளந்தரு பெண்ணை நாட்டிலே.

(இ - ள்.) தேவர் கூட்டத்துடன் தேவேந்திரன் விளங்கி வருவதுபோல அரிய வேதமுணர்ந்த அந்தணர்களுடன் தெய்வீகராசனும் கூடிக்கொண்டு வளப்பம் மிகுந்த பெண்ணை நாட்டை அடைந்தனர்.

294. அந்நாட்டுக் கணிகல ஞன கோவலூர்
தன்னிடை யிருந்துபின் தக்க வெல்லைகள்
இன்னதென் றமைச்சர்க ளியம்பக் கேட்டருள்
முன்னுற நற்றின முகூர்த்த மொன்றிலே.

(இ - ள்.) அந்தப் பெண்ணை நாட்டுக்கு ஆபரணம் போலும் பிரகாசமான திருக்கோவலூர் வந்து சேர்ந்து, தங்கியிருந்து தகுந்த இடங்களும், எல்லைகளும் இன்னதென மந்திரிகளுடன் ஆலோசித்து, அவர்கள் சொல்லக் கேட்டுச் சிவானுக்கிரகத்தினுலே நல்ல தினம் பார்த்து நல்ல சுபமுகூர்த்தத்தில்

295. கள்ளாரு மலர்ச்சோலை கரைபெண்ணை
நன்னுட்டிற்
தெள்ளாறு குழப்பலூர் சித்திங்கூர் கோவலென
எள்ளாதப் பதிநான்கி னீரிருநூ றந்தணரை
உள்ளார்வ முறவேற்றி யுயர்விர்த்தி களுமீய்ந்து.

(இ - ள்.) தேன் துளிக்கும் சோலை சூழ்ந்ததென்பெண்ணை நாட்டில் தெள்ளாறு, குழப்பலூர், சித்திங்கூர், கோவலூர் என்று கூறும் குற்றமற்ற நான்குஊர்களிலும் வீடுகள் கட்டி நானூறு பிராமணர்களை உள்ளங்களிக்கத் தெய்வீகராசன் குடியேற்றினன்.

296. சிவத்திரு வாலயநான்கு செவ்விதிற்கண்
டருட்பூசை
நவத்துவமா மறைச்சைவ நன்னூலின் படிநடத்தி
அவத்தொடக்கை யறவிடுப்பா னரசவனந்
தனின்முன்னை
தவத்தொடர்பான் மற்றுயருஞ் சதுர்மறையோ
ருடன்சார்ந்தான்.

(இ - .) அந்தணர்களைக் குடியேற்றிய பின் நான்கு ஊர் களிலும் நான்கு சிவாலயங்கள் எடுப்பித்து, சிவபூசையை நூதன மாய்ச் சைவாகமப்படி நடப்பித்துப் பாவத் தொடர்பைப் பற்றற விடுக்க எண்ணி ,மற்றைய தவத்தின் மிகுந்த நானூறு அந்தணர் களையும் அழைத்துக்கொண்டு தெய்வீகராசன் அரசவனம் வந்து சேர்ந்தனன்.

297. முன்னமறைந் திறைவான
முதற்கங்கை நதியழைத்துத்
தன்னடைந்த விளைப்பாற்று
தடப்பாறை தனிலெய்திப்
பின்னணைந்த நானூறு
பேரன்றி மாமறையோர்
இன்னமொரு நானூற்றோ
ரெங்கெய்து மெனவெண்ணி

(இ - ள்.) தெய்வீகராசன் முன் வேட்டைக்கு வந்தபோது, மறைந்து, சிகரசிகாமணிநாதர் ஆகாயத்திலுள்ள முதன்மையான கங்காதீர்த்தத்தை வரவழைத்துத் தன் இளைப்பைத் தவிர்த்த இடமாகிய பாறையின்மீது வந்ததும், முனிவர்கள் கூறிய ஞாபகம் வர, நம்முடன் வந்த நானூறு பேரன்றி இன்னும் நானூறு பேருக்கு என்ன செய்வது என்று ஆலோசித்து,

298. அறவோர்கள் முன்னெண்ணூ
றருமறையோ ரேற்றுதியென்
றுறவோது மொழிமறந்தேன்
என்னேயென் றுண்ணடுங்கி
மறமேவு கடும்பச்சை
வாவுபரி மன்னவனுந்
துறவோருந் தொடர்வரிய
சோதிமலர்த் தாணினைந்தான்.

(இ - ள்.) முனிவர்கள் முன் சொன்ன எண்ணூறு பிராமணர்களை யழைத்துக் கொண்டு வர மறந்து போனேனேயினி யென்ன செய்வேனென்று மனம் நடுக்கங் கொண்டு, வீரமும் வேகமுமுடைய குதிரையையுடைய தெய்வீகமகாராசன், பிரம்மரிஷிகளும் தங்கள் மனம் வாக்கு காயங்களாலும் அறிதற்கரிய சிகர சிகாமணிநாதரின் திருவடிகளை நினைத்தனன்.

299. உறமேனி மிகநடுங்க
வொளிகுடையுந் தண்டுமணி
நிறமேனி கரந்தன்பர்
நினைவுடனே நடைதளர
நறவோதி யொருபாகன்
நரைதிரைமூப் படைந்ததொரு
மறைவேத வேதியர்போன்
மன்னவர்கோன் முன்னணைந்தார்.

(இ - ள்.) பொருந்திய திருமேனி நடுக்கமெடுக்க பிரகாசத்தையுடைய குடையும், தண்டும் கொண்டு, மாணிக்கம் போன்ற சிவந்த நிறமுடன், தன் வடிவத்தை மறைத்து அன்பர் நினைவுடன் நடைதளர, வாசனை வீசும் அளக பாரத்தையுடைய பார்வதியை ஒரு பாகத்திலுடைய சிகரசிகாமணிநாதர் நரை, திரை, மூப்புடைய ஒருவராய் வேதமுணர்ந்த பிராமணர் போல் தெய்வீகராசன் முன் வந்து சேர்ந்தார்.

300. அந்தணனைப் பார்த்தரசன்
அந்தணனே யெங்குற்றாய்
வந்ததுவென் னென்றுரைக்க
வாவுமரிப் பரியாய்கேள்
இந்தவனத் திருப்பேன்யான்
எப்போதும் உனைக்காண்பான்
உந்தியகா தலில்வந்தேன்
எனவேந்தன் உரைக்கின்றான்.

(இ - ள்.) வந்த விருத்த பிராமணரை அரசன் பார்த்து அந்தணரே! நீர் எங்கு வந்தீர்? வந்த காரியம் என்னவென்று கேட்க அந்தணன், தாவுகின்ற மரகத நிறமுடைய குதிரையையுடைய அரசனே! நான் இந்த அரசவனத்தில் இருப்பவன். நெடு நாளாக உன்னைக் காண வேண்டுமென்று எண்ணிய ஆசையினால் இங்கு வந்தேனென்று கூற, அரசன் கூறுவான்.

301. இத்தலத்தில் மறையவர்கள்
எண்ணூறு பேர்கள்தமை
வைத்திடென மாதவத்தோர்
வகுத்துரைத்த தைமறந்து
மெய்த்தவத்து நானூறு
வேதியரைக் கொண்டணைந்தேன்
அத்தகைய ஏனையோர்
அணையும்வகை யேதென்ன.

(இ - ள்.) இந்த அரச வனத்திலே எண்ணூறு பிராமணர்களைக் குடியேற்றுமாறு மகாதவத்தையுடைய முனிவர்கள் கூறினர். நான் அதை மறந்து, உண்மையான தவமுடைய நானூறு பிராமணர்களை அழைத்துக்கொண்டு வந்தேன். மற்ற நானூறு வேதியர்கள் வரும் வகை யாது? என்று விருத்தப் பிராமணரை நோக்கி அரசன் கேட்டான்.

302. அற்றைநாள் மறந்ததுநீ
யருள்காணென் றருமறையோன்
மற்றையொரு நானூறு
மறையோர்கள் பெறும்விருத்தி
இற்றைநா ளெனக்குதவி
யீரேழு புவனமும்நீ
பெற்றுதகங் கொடுத்தபலன்
பெறுவாயென் றருள்செய்தான்.

(இ - ள்.) அதற்குப் பிராமணர் அன்றைய தினம் நீ மறந்தது சிவபெருமான் திருவருளாகும். மற்ற நானூறு பிராமணர்களுக்குக் கொடுக்கும் விருத்திகளை இன்றைய தினம் எனக்குக் கொடுத்தால் பதினான்கு உலகமும் நீ பெற்று, தானங்கொடுத்த பலனையும் பெறுவாயென்று கூறினார்.

303. மாமறையோ ராசைக்கு
மட்டாக விலையென்று
கோமகனும் நகைபுரிந்து
குனியாக்கை மூப்புடையாய்
நாமுதவு நானூறு
நன்மறையோர் விருத்தியெலாம்
நீமகிழ்வாய்ப் பெற்றபின்
செய்வதென் நிகழ்த்தென்றான்.

(இ - ள்.) பிராமணர்கள் ஆசைக்கு அளவில்லை போலும் என்று தெய்வீகராசன் நகைத்து, வளைந்த சரீரமுடைய விருத்தாப்பிய முடையவரே! யானளிக்கும் நானூறு பிராமணர்களுடைய சருவமானியங்களை நீர் ஒருவர்மட்டில் தனியாகப் பெற்றுச் செய்வது யாது? சொல்லும் என்று கேட்டான்.

304. நானொருவ னெனதுமனை
வியரிருவர் நற்புதல்வர்
ஈனமிலா நாற்பத்தெண்
ணாயிரவ ரெனக்கடியர்
ஊனமறத் தருவிருத்தி
வளம்மூத்த வுயர்புதல்வன்
போனகத்திற் கொருபகற்கும்
போதுமோ போதாதால்.

(இ - ள்.) அந்தணர் விடை பகர்வார். நானொருவன்; எனக்கு இரு மனைவியர் உண்டு. இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர். அன்றி எனக்கு நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் அடிமையானவர்கள். அன்றி நீ தரும் விருத்தி வருமானம் என் மூத்தபிள்ளையின் ஒரு பகல் போசனத்துக்குப் போதாது.

305. அருகிருக்கு மீரிருநூற்
றருமறையோர்க் கொருபங்கும்
ஒருவனென நின்றவெனக்
கொருபங்கு முலகறியத்
தருதியென வருள்செய்து
சடைமுடியு மிளம்பிறையும்
திருமருவு நுதற்கண்ணுஞ்
சிறந்தவுரு வாய்நின்ருன்.

(இ - ள்.) சமீபத்திலிருக்கப்பட்ட நானூறு பிராமணர்களுக்கு ஒரு பங்கும், ஒருவனுக நின்ற எனக்கு ஒரு பங்கும், கொடுக்க வேணுமென்று அனுக்கிரகஞ் செய்து உடனே சடைமுடியும், அதில் மூன்ரும் பிறைச் சந்திரனும் தரித்து நெற்றிக் கண் சிறப்பாகத் தோன்ற தனது உண்மைத் திருக்கோலத்துடன் சிகரசிகாமணிநாதர் காட்சியளித்தனர்.

306. அங்கவரைக் கண்டஞ்சி
யந்தணர்நா னூற்றுவருந்
தங்களுக்கு மொருபாகந்
தனியாய்நீ வேண்டுதலால்
இங்குனக்கு மொருபாக
மிப்பதியென் றருள்வேந்தன்
பொங்குசுனே நீரள்ளிப்
புனிதர்கரத் திடைபொழிந்தான்.

(இ - ள்.) சிகர சிகாமணிநாதரின் உண்மைச் சொரூபத்தைக் கண்டு பயந்து, நானூறு பிராமணர்களுக்கு ஒரு பங்கும், ஒருவராகிய நீரும் ஒருபங்கு வேணுமென்றபடியினுல் உமக்கு இந்தப் பதியின் வருமானத்தில் ஒரு பாதிபாகங் கொடுத்தேன் என்று கூறித் தெய்வீகராாசன் நிறைந்த சுனேநீரையள்ளிப் புனிதரான சிவபெருமான் கையில் தத்தஞ் செய்து கொடுத்தனன்.

307. சந்ததமுந் திருநடன
மறவாத திறல்வேந்தன்
பந்தமுற வளித்திடவூர்ப்
பாகங்கொண் டருளினன்
இந்திரன்மால் அயன்பதமு
மிறவாத மெய்ப்பதமும்
அந்தமிலா வடியவருக்
கருள்புரியு மொருமுதல்வன்.

(இ - ள்.) எப்பொழுதும் அழகிய நடனஞ்செய்யும் பாதத்தை மறவாத வெற்றி பொருந்திய தெய்வீகராசன் அன்பினெடு கொடுக்க ஊர்ப்பாகங் கொண்டருளினர் என்றும், அந்த வூரிலே பாதி பங்கு வாங்கினர். இந்திரன், விஷ்ணு, பிரம்மா இவர்கள் பதவிகளைவிட ஒரு காலமும் அழியாத நிச்சயமான மோக்ஷ பதவியை முடிவில்லாத அடியார்களுக்கு அளிக்கும் சிவபெருமான்.

308. அன்றுமுத லச்சுனைப்பே
ரந்தண்நீர்ப் பாறையெனும்
இன்றளவுந் தராதலமேல்
யாவோரும் எடுத்துரைப்பார்
துன்றுவிழி நுழையாத
தொடர்மூங்கில் வனந்தன்னிற்
சென்றரச வனத்திறைமுன்
திருவுருவுற் றமர்ந்திருந்தார்.

(இ - ள்.) தானஞ் செய்த நீருள்ள பாறைக்கு அன்று முதல் ''நீர்ப்பாறை'' என்று இன்றுவரை பூமியிலுள்ளோர் சொல்லுவார்கள். கண்கள் நுழையாதபடி நெருங்கியமூங்கில் வனத்தில் சென்று அரசவனத்திலெழுந்தருளிய சிகரசிகாமணி நாதர் சிவலிங்கவடிவாக எழுந்தருளினர்.

309. கண்டார்கள் அதிசயிக்குங்
காரணனைக் காணுமல்
தண்டாமத் திறல்வேந்தன்
தளர்வெய்தித் தையலிடங்
கொண்டாயூ ரொருபாகங்
கொண்டாயுட் கொள்ளாதார்
அண்டாய்நீ யெங்குற்று
யந்தோவென் றலமந்து.

(இ - ள்.) சிவன் திருமேனி மறைந்ததைக் கண்டு, அதிசய மான காரணனுன சிவனைக் காணுமல், குளிர்ந்த மாலையணிந்த வெற்றியுடைய தெய்வீகராசன் தளர்ச்சியடைந்து, பார்வதிக்கு இடப்பாகம் அளித்தவனே! ஊரிலொருபாகமுங் கொண்டாய். உன்னை நெஞ்சிலே நினையாதவர்களிடம் அண்டாதவனே! நீர் எங்குச் சென்றீர் என்று வருத்தமெய்தியிருந்தான்.

310. விழிமழைநீர் பொழியமொழி
மிகக்குழற மெய்ந்நடுங்க
அழியுமடல் முடிவேந்த
னண்ணலா ரருட்பார்வை
கழிவரிய விவ்வனத்தே
காரணனைக் காண்குவனென்
றெழின்மருவு செங்கரமே
லிகன்முனைவாள் கொண்டெழுந்தான்.

(இ - ள்.) விழிகளிலிருந்து மழை போல் சலம் பெருக, வசனங்கள் குழற, சரீரம் நடுங்க, சஞ்சலப்பட்ட வெற்றி யுடைய முடிதரித்த தெய்வீகராசன், சிவபெருமான் கிருபையாகிய பார்வை விட்டு, நீங்காத இந்த வனத்தில் அந்தச் சிவனைக் கண்டு பிடிப்பேனென்று அழகியகையில் பகையை வெல்லும் கூர்மை பொருந்திய வாளாயுதத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டனன்.

311. எழுந்துவளர்ந் தறநெருங்கு
மமைத்திரளை யிமைப்பொழுதில்
விழுந்திடமுன் தடிந்துவர
முத்திநிலை வித்தான
செழும்பவள சிகரசிகா
மணிப்பெருமான் திருமேனி
அழுந்தவடி வாளுருத்த
வரத்தரத் தம்பொழிய.

(இ - ள்.) தெய்வீகராசன் வளர்ந்து நெருங்கிய மூங்கில்களை க்ஷணநேரத்தில் பூமியில் விழ வெட்டிக் கொண்டுவர, முத்தி நிலையை அளிக்கும் விதைபோல் செழித்த பவளம் போன்ற திருமேனியையுடைய சிகரசிகாமணிநாதர் திருமேனியில் அந்த வாள் அழுந்தியது. அதனுல் சிவந்த ரத்தம் பிரவாகமாகப் பெருக்கெடுத்தோடியது.

312. ஒன்றுநினைந் திடவொன்றிங்
கெய்தியதென் றுண்ணடுங்கி
யென்றுமரு வினையெம்பா
லெய்துவதே யியல்பென்று
தென்றமிழ்நா டுய்யவருந்
தெய்வீகத் திறல்வேந்தன்
தன்றடக்கை வாளதனுற்
றன்கழுத்தை யறுத்திடலும்.

(இ - ள்.) ஒன்று நினைத்தால் மற்றென்றாக முடிந்ததே யென்று மனம் நடுங்கி, எப்போதும் அரியவினைகள் அடியேனுக்கு வருவதே இயல்பாகவிருக்கிறதென்று அழகிய தமிழ்நாடு பிழைக்க உற்பவித்த தெய்வீகமகாராசன் தன்விசாலமான கையிற்பிடித்த வாளினுலேயே தன் கழுத்தை அறுத்துக்கொண்டனன்.

313. அண்டமுண ராமுதலா
யருவாகி யுருவாகித்
துண்டமதி நதியரவஞ்
சூழ்சடையோன் வெளிநின்று
கண்டமரி வாளதனைக்
கைமலரால் மாற்றிநெறி
கொண்டமுடி வேந்தன்மனங்
குளிரும்வகை யருள்புரிந்தான்.

(இ - ள்.) அண்டங்களெல்லாம் அறியப்படாத முதலாகியும், அரூபமாகியும், உருவமாகியும், மூன்றாம்பிறை, கங்கை, பாம்பு இவைகளைத் தரித்த சிவபெருமான் பிரத்தியக்ஷமாகி, கழுத்தை யரியும் வாளைத் தன் மலர் போன்ற கையினால் விலக்கி, நீதி வழி நடக்கும் கிரீடாதிபதியாகிய தெய்வீகராசனது மனம் குளிரும்படி அநுக்கிரகஞ் செய்தனர்.

314. வானத்தி னிடைமறைந்து
மன்னவர்கோன் மறைமுனிவோர்
ஊனெக்கோ டுயிர்நெக்கு
முளமுருகிச் சாத்தியிடுந்
தேனெக்கு மலர்தனிலுஞ்
செவ்விதுநின் வாளெனக்கின்
றேனெய்த்தா யிதனாலோ
ரிடருமுனக் கிலையதனால்.

(இ - ள்.) வாளை விலக்கின சிவபிரான் வானத்தில் மறைந்து, 'தெய்வீகராசனே! கேள், வேதமுணர்ந்த முனிவர்கள் சரீரம் நெக்குவிடவும் உயிருடன் மனமும் உருகி அர்ச்சிக்கும் புஷ்பத்திலும் மென்மையாயிருந்தது, உன் கைவாள் இன்று எனக்கு. இதற்கு நீ வருந்தவேண்டாம். இதனால் உனக்கு யாதொரு இடையூறு மில்லையென்று பின்னும் கூறுவார்.

315. அஞ்சல்நீ நம்பூசை
யார்பெறும்பே றுனக்குளதால்
விஞ்சியவிப் பதிமுன்னாள்
விரிஞ்சன்மால் முதலோர்கள்
தஞ்சமென வந்தடைந்து
தாழ்ந்துநமக் கருச்சனைசெய்
தெஞ்சலிலா வினைநீங்கி
எண்ணரிய பலமடைந்தார்.

(இ - ள்) நீ பயப்படாதே நம்மைப் பூஜை செய்தவர்கள் பெற்ற பாக்கியம் உனக்கு உண்டாவதாக! இந்தப்பதியில் முன்னாள் பிரமன், விஷ்ணு முதலியோர் வந்து பூஜித்துப் பாவம் நீங்கப் பெற்று எண்ணிக்கை யற்ற பலனையடைந்தார்கள்

316. மற்றுமுனக் காகநாம்
வரவழைத்த சிலாதலநீர்
உற்றுடல நனைத்தோர்க
ளுலகெலா மரசாளப்
பெற்றுமறு பிறப்பதனிற்
பிறைமருப்பு நாலுடைய
கற்றைவெள்ளை வாரணத்தோன்
கடநகர மரசாள்வார்.

(இ - ள்.) உனக்காக நாம் வரவழைத்த தீர்த்தத்தில் சென்று நீராடினோர், உலகமாளும் அரசராய்ப் பிறந்து மறுபிறப்பில் சந்திரனைப்போன்ற, நான்கு கொம்புகளையுடைய வெண்மை நிற முடைய ஐராவதத்தையுடைய தேவலோகத்தையும் அரசாட்சி செய்வார்கள்.

317. தெண்டிரையே நிகரான
சிலாதலதீர்த் தக்கரையின்
மண்டுதழல் வலஞ்சுழிக்கும்
மகஞ்செய்தோர் நம்பதவி
தண்டலிலா தடைகுவார்
சதுமறையோர்க் கமுதளிப்போர்
அண்டர்நா யகன்போல
வவனிமுழு தாளுவரால்.

(இ - ள்.) கடலுக்குச் சம்மான அந்தச் சிலாதல தீர்த்தக் கரையில் நெருங்கிய அக்கினி வலஞ்சுழித்தெழும் யாகஞ்செய் தோர் நமது பதவியைக் குறைவின்றி அடைவார்கள். அன்றி அந்தக் கரையில் வேதமுணர்ந்த பிராமணர்களுக்கு அன்னமளித் தோர் தேவேந்திரனைப் போல் இவ்வுலக முழுதும் ஆளுவார்கள்.

318. கருதுசிலா தலதீர்த்தக்
காற்றணைந்த கொடிமரம்புல்
மிருகபற வைகள்யாவும்
விண்ணடைவா ரெனிற்படிந்தோர்
பரவைசூ ழுலகாளப்
படுவதற்கு மையமுண்டோ
மருவியமா னிடரந்நீர்
மகிழ்ந்தருந்திற் சிவனுவார்.

(இ - ள்.) எண்ணுகின்ற அந்தத் தீர்த்தத்திலே மோதின காற்றுப்பட்ட செடிகள், மரங்கள், புற்கள், மிருகங்கள், பறவைகள் எல்லாம் தெய்வப்பதவி அடைவார்களெனில் அதில் ஸ்நானஞ் செய்தோர் பூலோகம் ஆளுவதற்கு ஐயம் உண்டோ! அந்நீரை உண்ட மானிடர் சிவசொரூபம் அடைவார்கள்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

319. கண்ணு லொருகாற் சிலாதலநீர்
கண்டா ரவரே கடலுடுத்த
மண்ணுள் வார்க ளதிற்கைகால்
மருவ நினைத்தோ ரிந்திரனாய்
விண்ணுள் வார்க ளதின்மூழ்கில்
வெள்ளை மதியம் மிலைந்தசடைப்
பெண்ணோர் பாகன் திருவடியைப்
பிரியா திருப்ப ரெந்நாளும்.

(இ - .) அந்தப் பாறை நீரைக் கண்ணால் ஒருதரம் கண்டவர்கள் சமுத்திரஞ் சூழ்ந்த உலகத்தையாள்வார்கள். அந்தத் தீர்த்தத்தில் கைகால் அலம்பநினைத்தவர்கள் இந்திரராகித் தேவலோகத்தை யாள்வார்கள். அதில் நீராடினோர் வெண்மையான சந்திரனையணிந்த சடாபாரத்தையுடையவரும், பெண்ணொரு பாகமுடையவருமான சிவபெருமான் திருவடியில் பிரியாமல் இருப்பார்கள்.

கலிவிருத்தம்

320. தீராத பிறவியகற்
றிடுசிலா தலத்தீர்த்தம்
நீராடி லொருதரந்தா
னிலமாள்வர் பலநாளும்
பேராக மூழ்கிடுவோர்
பிறவியகற் றுவர்பிறரைச்
சீராக நினைத்தா லுந்
திண்ணமதாய்க் கதியடைவார்.

(இ - ள்.) நீங்காத பிறவியை நீக்கும் சிலாதலத் தீர்த்தத்தில் ஒருதரம் நீராடினோர் பூலோகமெல்லாம் ஆள்வர். பலநாள் மூழ்கினோர் பிறவியை நீக்கிக் கொள்வர். அன்றி, பிறரை நினைத்து மூழ்கினாலும் அவர்களும் நிச்சயமாய் மோக்ஷமடைவார்கள்.

அறுசீராசிரிய விருத்தம்

321. சொல்லுந் தண்ட தீர்த்தமெனச்
சுருதி புகலுஞ் சிலாதலநீர்
வெல்லும் பகையை மிடியறுக்கும்
வெறுக்கை யுதவு மலடறுக்கும்
நல்ல மகவைத் தருமரசை
நாட்டு மிறைவர்க் கருவிடத்தைத்
தொல்லை பஞ்ச பாதகமுந்
தொலைந்து போகு மருந்தினர்க்கே.

(இ - ள்.) தண்டதீர்த்தமென வேதம் சொல்லும் சிலாதலத் தீர்த்தத்தை அள்ளி உட்கொள்ளின் அப்பொழுதே பகை வெல்லும் சக்தி தரும்; தரித்திரம் நீங்கும்; செல்வம் உண்டாகும்; மலடு நீங்கி நல்ல புத்திரப்பேறு உண்டாகும். அரசிழந்த அரசர் ஆட்சியை மீண்டும் பெறுவர். விஷத்தின் தோஷம் போகும். பஞ்ச மகாபாதகங்களும் நீங்கும்.

322. பெருகுந் தண்ட தீர்த்தத்திற்
பிதிரர் களுக்குக் கடன்கழித்தோர்
கருது முவாவிற் கதிர்மதியங்
கலக்கு நாளின் மதிபிறப்பில்
உரிய மீன மதிமுழுது
முவந்து மூழ்கின் மனத்தெண்ணும்
அரிய விருப்பா கியபொருள்க
ளனைத்தும் பெற்றே கதியடைவார்.

(இ - ள்.) பெருகிவரும் தண்டதீர்த்தத்தில் பிதிர்களுக்குத் தர்ப்பணாதிகள் செய்தவர்களும், கருதுகின்ற பௌர்ணமியன்றும், அமாவாசையன்றும், மாதப்பிறப்பிலும், உரித்தான பங்குனி மாதம் முழுவதும் அதில் ஸ்நானம் செய்தவர்கள் தங்கள்மனத்தில் எண்ணிய அரிய பொருள்களையெல்லாம் பெற்று அனுபவித்துப் பின்னர் மோக்ஷமடைவார்கள்.

323. தண்ட தீர்த்தந் தனிலாடித்
தக்க பிதிர்க்கள் தமைக்குறித்துப்
பிண்ட மந்தக் கரையிலிட்டோர்
பிரம னுலகந் தனையடைவார்
மண்ட லங்க ளெங்கிருந்து
மகிழ்ந்தே நினைக்கிற் பிறப்பறுமாற்
குண்டி கையினீர் எடுத்தேகின்
அடிக்கோர் யாக பலன்கூடும்.

(இ - ள்.) அந்தத் தண்ட தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து, பிதிரர்களை நினைத்து அந்தக்கரையிலிருந்து சிரார்த்தம் முதலாகிய கர்மங்களை நிறைவேற்றினவர்கள், பிரம்மாவினுடைய உலகத்தையடைவார்கள். அன்றி, பூவுலகத்தில் எவ்விடமிருந்து மகிழ்ச்சியுடன் அதனை நினைத்தாலும் பிறப்பினை அறுக்கும். பாத்திரத்தில் அந்நீரை எடுத்துக்கொண்டு நடந்தால் நடந்த அடி ஒன்றுக்கு ஒரு யாகம் செய்தபலன் உண்டாகும்.

கொச்சகக் கலிப்பா

324. அந்நாளி லரசவன
மருமறையோ ருடன்பாக
மிந்நாளில் யாம்பெறலா
லெழிலிறையா னறையூராம்
நின்னால்நீ ரேற்றிடலால்
நீரேற்ற புரிவேய்கள்
தன்னால்வேய் வனமென்னத்
தக்கபெயர் பெறுமிவ்வூர்.

(இ - ள்.) முன்னாளையில் 'அரசவனம்' என்னும் பெயருடைய இத்தலத்தில், வேதமுணர்ந்த அந்தணர்களுடன் இந்த நாளையில் பாதிப் பாகத்தை நாம் பெற்றதனால் இறையானறையூர்' என்றும், நீ தத்தம் செய்தநீரை ஏற்றதால், 'நீரேற்றபுரி' என்றும், மூங்கில்கள் நிறைந்த வனமாயிருப்பதால் 'மூங்கில்வனம்' என்றும் இத்தலத்திற்குப் பெயர் விளங்கும்.

325\. சரியைகிரி யாயோகந்
தற்பரமெய்ஞ் ஞானநிலைக்
குரியர்களல் லாரெனினு
மிப்பதியி லுறைவாரேல்
அரியபெரு முத்தியினை
யடைகுவர்தாம் தருமங்கள்
புரியிலவை யொன்றொருகோ
டிக்கதிகம் பொலிவுபெறும்.

(இ - ள்.) சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை அனுஷ்டானமில்லாதவர்களானாலும் இத்தலத்தில் வாசஞ் செய்வார்களாயின் அரிய பெரிய் மோக்ஷத்தை அடைவார்கள். தங்களா லியன்ற தருமம் புரிந்தவர்கள் ஒன்றுக்கு ஒரு கோடியதிக பலன் பெற்றுப் பிரகாசமாக வாழ்வார்கள்.

326\. நீயுமினி யிவ்வனமே
நேயமிகுத் தகலாமல்
வேயடரு மிவ்வனத்தே
விளங்கியவா லயமாக்கி
ஆயதிரு வாலயத்திற்
கயல்சூழ மாநகர்கண்
டேயதவம் புரிந்திருப்பா
யென்றுரைத்தான் மன்றுடையான்.

(இ - ள்.) அரசனே! நீயும் இனிமேல் இந்த அரசவனத்தில் அன்பு மிகுந்தவனாய் விட்டு நீங்காமல் மூங்கில் நெருங்கிய இவ்விடத்தில் பிரகாசமான சிவாலயம் கட்டிச் சிவாலயத்தைச் சுற்றி நகரம் அமைத்து அவ்விடம் தவம் செய்து கொண்டிருப்பாய் என்று நடனம்புரியும் சிவபெருமான் கூறினார்.

327. அத்திருவாக் ககல்வானத்
தகத்தெழலு மவையெல்லாம்
நித்தவரு ளுடன்கேட்டு
நேயமுடன் புளகமெழக்
கைத்தலங்கள் தலையேறக்
கண்ணருவி நீர்சோர
மெய்த்தகைய கருணைதனை
மிகநினைந்து வீழ்ந்திறைஞ்சி.

(இ - ள்.) அந்தத் திருவாக்கானது விசாலமுடைய ஆகாயத் தினிடத்திலிருந்து தோன்றுதலும், அவற்றை நித்தியமாகிய அருளால் கேட்டுத் தெய்வீகராசன் அன்பு மேலிட, சரீரம் மயிர்க் கூச்செறிய இருகரங்களையும் சிரமேற் கூப்பிக் கும்பிட்டு இருகண்களிலிருந்து நீரானது அருவிபோல வழிய இறைவன் திருவருளை எண்ணிக்கீழ் வீழ்ந்து வணங்கினான்.

328. அளவுமறை காணாத
ஆனந்த நறுந்தேறல்
வளருமறை சிகரசிகா
மணியாகி வடிவுகொடு
கிளருமுயர் திருவுருவைக்
கேண்மையுடன் பணிந்தரசன்
உளமகிழ்ந்து திருப்பணிகள்
ஊனமறச் செய்விப்பான்.

(இ - ள்.) வேதங்களால் அளவிட முடியாத ஆனந்தமாகிய இனிய தேன்போல் வளரும் வேத வடிவான சிகரசிகாமணியின் சிறந்த சிவலிங்க உருவத்தை அன்புடன் அரசன் வணங்கி உள்ளம் மகிழ, குற்றமறத் திருப்பணிகள் செய்யத் தொடங்கினான்.

329. சிகரசிகா மணியுறையுந்
திருவிருப்புத் தமனியத்தாற்
பகரவரும் படையெழுப்பி
பத்திமணி யிட்டித்து
நிகரிலருந் தூபியொளிர்
நித்திலத்தா லொப்பனைசெய்
சிகரமா மண்டபங்கள்
இயற்படியே இயற்றுவித்து.

(இ - ள்.) சிகரசிகாமணி நாதர் எழுந்தருளியுள்ள மூலஸ்தானத்திற்கு அரிய தங்கத்தினல் அடிப்படை போட்டு மதில் எழுப்பி அதில் வரிவரியாக மாணிக்கக் கற்களை இழைத்து, கருப்பக் கிருகத்தின் தூபியைப் பிரகாசமான முத்துக்களால் அலங்கரித்து விமானமுஞ் செய்வித்து மகாமண்டபங்களும் சாஸ்திரப்படி செய்து,

330. உலகமுடன் கலைமறையு
முதவுமொரு கன்னியாம்
நலமுடைய வருள்பெரிய
நாயகிதன் திருக்கோயில்
இலகுதம னியந்தன்னல்
எண்ணிறந்த மணிக்குவையால்
தலமருவு கடவுள்விமா
னம்போலச் சமைப்பித்தான்.

(இ - ள்.) பூலோகமும், சீவராசிகளும், சாத்திரங்களும், வேதங்களும் தந்த ஒப்பற்ற கன்னிகையாகிய நலமுடைய கிருபையுள்ள பெரியநாயகிஅம்மனுக்கு அழகிய கோயிலை, பிரகாசமான தங்கத்தினலேயும் மாணிக்கத்தினலேயும் தெய்வ விமானம் போலச் செய்வித்தான்.

331. வானளக்குங் கோபுரமும்
மஞ்சுதவழ் மாமதிலும்
தேனலர்பங் கயமலரும்
திருக்குளமும் கூவல்களும்
நானிலத்தோ ரதிசயிப்ப
நவில்கோயிற் குண்டான
தானதிருப் பணிசெய்வித்
தாலயத்துக் கயலெல்லாம்.

(இ - ள்.) ஆகாயத்தை அளக்கும் கோபுரமும், மேகம் தவழும் மதில்களும், தேன் நிறைந்த தாமரைமலரும், குளங்களும், கிணறுகளும், பூலோகத்தார் அதிசயிக்கச் சொல்லும் ஆலயங் களுக்கு உண்டான உக்கிராணம், மடைப்பள்ளி முதலிய திருப் பணிகளும் செய்வித்து அந்த ஆலயத்தின் பக்கங்களிலெல்லாம்.

332. நீளுநெறி நாற்சதுரம்
நிகழ்வித்துப் பலகண்டு
சூளிகையுஞ் சாளரமுஞ்
சோதிமணி வாயில்களும்
நாளுலவு மரமியமும்
நல்வளமும் புனைந்தொளிரும்
மாளிகைக ளெண்ணிறந்த
மறுகயலெல் லாங்கண்டு.

(இ - ள்.) நீண்ட ஒழுங்காக நாற்சதுரமாக நிரவல் செய்து, அதில் பலவிதமான மலைபோன்ற உப்பரிகைகளும், மாடிகளும், சாளரவாயில்களும், பிரகாசமான மாணிக்கங்களிழைத்த தலைவாயில்களும், நக்ஷத்திரங்கள் உலாவும் நிலாமுற்றங்களும், நல்லவளமையுடன் நவரத்தினங்களால் அலங்கரிக்கப்பெற்ற மாளிகைகளையும் எண்ணிக்கையின்றி அமைத்து அதன் அருகில் வீதிகளையும்அமைத்தான்.

333. தெற்றிகளுங் கோபுரமுஞ்
செய்குன்றும் நிலைத்தெருவும்
மற்றுமுள வீதிக்காம்
வளமெல்லா மமைப்பித்துத்
துற்றபொழில் நந்தனங்கள்
சுடர்கமலத் தடங்களிவை
முற்றுமவை களையெல்லாம்
முடிவின்றிக் கண்டதற்பின்.

(இ - ள்.) கொத்தளங்களும், கோபுரங்களும், சிவந்த மலை போன்ற நிலைமையான தெருக்களும், மற்றும் திருவீதிக்கான சிறப்பு வளங்களெல்லாம் செய்வித்து நெருங்கிய தோப்பும், நந்த வனங்களும், பிரகாசமான தாமரைத் தடாகங்களும் முதலான தெல்லாம் இவ்வளவென்று முடிவில்லாததாகச் செய்வித்தனன் தெய்வீகராசன்.

334. ஆதிபரா பரன்றனுட
னன்பினூர்ப் பாதிபெறும்
வேதமுணர் நானூறு
வேதியர்கள் களிகூரக்
கோதிலிறைக் கோயிலுக்குக்
குடதிசையில் நானூறு
சோதிமனை யமைப்பித்துச்
சுடர்நிதிக் குவையுதவி.

(இ - ள்.) முதன்மையான சிகரசிகாமணி நாதருடனே அன்பினாலே ஊர்ப்பாதி பெற்றுக்கொண்ட வேதங்களுணர்ந்த நானூறு பிராமணர்களுக்குச் சந்தோஷமுண்டாகக் குற்றமற்ற சிவபிரான் ஆலயத்திற்கு மேற்குத் திசையில் நானூறு வீடுகளைப் பிரகாசமாய்க் கட்டி முடித்து ஒளிவீசும் திரவியக் குவியலும் அளவில்லாமல் கொடுத்துதவினன்.

335. வேதியர்மன் னவர்வணிகர்
வேளாளர் என்னுமுயர்
சாதிகளும் அவர்பினெனுஞ்
சாதிகளும் பலவேற்றித்
தீதகலப் பலசிறப்புஞ்
செய்திடலால் அந்நகரி
போதலர்கற் பகமருவும்
பொன்னகரிற் பொலிந்தனவால்.

(இ - ள்.) அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகை உயர்ந்த வருணத்தாருக்கும், அவர்கட்குந் தாழ்ந்த சாதியினருக்கும் வீடுகளமைத்துக் குடியேற்றி, தீமைகள் நீங்க, பல சிறப்புக்களும், தெய்வீகராசன் செய்தமைத்ததால், அந்த நகரமானது, புஷ்பங்கள் நிறைந்த கற்பக விருக்ஷங்களையுடைய தேவ லோகத்திலும் அதிகமாக அழகுபொருந்தி விளங்கியது.

336. சத்தியஞா னச்சைவ
சாத்திரங்கள் ஆராய்வார்
உத்தமனை யருச்சிப்பார்
உத்தமன்றன் அடியார்க்கும்
பத்தியுட னமுதளிப்பார்
பரனைநினைந் துண்ணெகிழ்வார்
சித்தசனைப் புறங்காணச்
செய்தவத்தோர் தெருவெல்லாம்.

(இ - ள்.) சத்தியமான ஞானத்தையுடைய சைவ சமயாசாரியர் மடங்களி லிருந்துகொண்டு காமிகம் முதல் வாதுளம் ஈருகவுள்ள சைவ சாத்திரங்களை விசாரணை செய்வர். உத்தமனுகிய சிவனை அருச்சிப்பர்; சிவனடியார்கட்கு அன்னங்கொடுப்பர்; சிவபெருமானை நினைந்து மனமிளக நோக்குவார்கள். மன்மதன் தன் வலிமையைக் காட்ட முடியாதபடி தவஞ்செய்து கொண்டிருக்கும் வீதிகளும் உண்டு.

337. அருமறைகள் பலபயில்வார்
ஆகமங்க ளாராய்வார்
தருமநெறி தலைநிற்பார்
தருப்பைசமித் துடன்வருவார்
பருவரலின் மகம்புரிவார்
பசுக்கொணர்வார் செலவிடுப்பார்
ஒருவருடன் வேட்டருள்வார்
உயர்மறையோர் தெருவெல்லாம்.

(இ - ள்.) அரிதாகிய ருக்கு, எசுர், சாமம், அதர்வண மென்னும் நான்கு வேதங்களையும் பாராயணஞ் செய்வார்கள். ஆகமங்களையும் விசாரணைசெய்வார்கள்; தருமமார்க்கத்தில் தலைசிறந்து விளங்குவார்கள்; தருப்பைப்புற்களும், ஓமவிறகுகளும் கொண்டுவருவார்கள்; யாகஞ் செய்து, துன்பங்களை நீக்குவார்கள்; பசுக்களைக் கொண்டுவருவார்கள்; சில பசுக்களைத் தானமளிப் பார்கள்; உண்மைச் சம்மதமாய் மணம்புரிவார்கள் அந்தணர் வீதியிலுள்ளவர்கள்.

338. செஞ்சொன்மறை கலைதெரிவார்
திறல்புரவி தனையுகைப்பார்
குஞ்சரங்கள் நடத்திடுவார்
கூரயில்வாள் வில்முதலாம்
விஞ்சைபல பயின்றிடுவார்
மெய்த்தானங் கொடுப்பார்அம்
பஞ்சுடையோ னெனப்பெயர்வார்
அரசரா வணமெல்லாம்.

(இ - ள்.) தமிழ், வேதம், அறுபத்துநான்கு கலைஞானம் முதலியவற்றை அறிந்து கொள்வார்கள்; பலம் பொருந்திய குதிரை, யானை முதலியவற்றை ஏறி நடத்துவார்கள்; கூர்மை யுடைய வேல், வாள், வில் முதலிய ஆயுதங்கள் பிரயோகிக்கும் வித்தையை அப்பியசிப்பார்கள்; தானம் கொடுப்பார்கள்; பஞ்சபாணமுடைய மன்மதன்போல் சஞ்சரிப்பார்கள்; அரச வீதியிலுள்ளவர்கள்.

339. பொன்னணிகள் பலநிறைப்பார்
புவனப்பட்டா டைகள்விரிப்பார்
மின்னிவரு நவமணிகள்
வெவ்வேறு பிரித்திடுவார்
உன்னியறம் பலசெய்வார்
உயர்செல்வத் தாலளகை
மன்னனைப்போல் விளங்கிடுவார்
வணிகரா வணமெல்லாம்.

(இ - ள்.) பொன்னுபரணங்களைப் பரப்பிவைப்பார்கள்; பூலோகம் நிறையப் பட்டு வஸ்திரங்கள் விரிப்பார்கள்; மின்னல் போல் பிரகாசிக்கும் நவரத்தினங்களை வேறு வேருகப் பிரித்து வைப்பார்கள்; நினைத்துப் பல தருமங்கள் செய்வார்கள்; உயர்ந்த செல்வத்தால் அளகாபுரி வேந்தனை குபேரனைப்போல் விளங்கியிருப்பார்கள் வணிகர் வீதியிலுள்ளவர்கள்.

340. வயல்வளமும் புறவளமும்
வகைவகையா யெடுத்துய்ப்பார்
இயல்இசைநா டகந்தெரிவார்
எதிர்விருந்து கண்டுவப்பார்
செயவரிய அறம்புரிவார்
திகழ்மரபி னறம்வளர்ப்பார்
வியலருளே தழைத்திடுவார்
வேளாளர் தெருவெல்லாம்.

(இ - ள்.) வயல்களில் விளையும் நெல் முதலான தானியங்களையும், காடுகளில் விளையும் தானியங்களையும் வேறு வேருக உயர்ந்த கும்பலாகப் போட்டுவைப்பார்கள். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் இயற்றமிழும், குரல், துத்தம், கைக்கிளை, உழை, விளரி, தாரம் ஆகிய இசைத்தமிழும், இவை இரண்டுஞ் சேர்ந்ததான நாடகத் தமிழும் ஆராய்வார்கள். விருந்தினரைக் கண்டு மகிழ்வார்கள்; தருமம் புரிவார்கள்; குல தருமத்தை வளர்ப்பார்கள்; அதிக இரக்கத்துடன் சுகமாயிருப்பார்கள்; வேளாளர் வீதியிலுள்ளோர்.

341. இவரன்றிப் பின்னுள்ள
இருமைபுனே சாதிகளும்
அவமன்றித் தமக்குளதா
மாசாரம் வழுவாமல்
நவமொன்றுந் தருமங்கள்
நாடோறும் புரிந்தருள்கூர்
சிவனன்பர் செய்தவம்போற்
சிறந்ததா லந்நகரி.

(இ - ள்.) நால்வகைச் சாதியாரன்றிப் பின்னுந் தாழ்ந்ததும் உயர்வுமாகிய சாதிபேதங்களும், குற்றமற்ற தமக்குண்டாகிய குலாசார தருமங்கள் பிசகாமல் எப்போதும் புதிய தருமங்களை நித்தியமுஞ்செய்துவர அன்பு கூர்ந்து சிவனடியார்கள் செய்யும் தவம்போல அந்நகரம் சிறப்புற்று விளங்கியது.

342. காரொலியும் பரியொலியுங்
கரியொலியுந் திறல்வீரர்
சாரொலியுந் தேரொலியுஞ்
சங்கொலியு மணமுரசப்
பேரொலியும் மதனகலைப்
பெண்கொடியார் பண்பாடுஞ்
சீரொலியும் நடத்தொலியுந்
திசையெங்கு மிசையெங்கும்.

(இ - ள்.) மேக கர்ச்சனையும், குதிரையின் சப்தமும், யானை யினுடைய சப்தமும், பலம் பொருந்திய வீரர்கள் சப்தமும், தேரின் சப்தமும், சங்கின் சப்தமும், கலியாண பேரிகையின் சப்தமும், மன்மதனுடைய கலைகளைக் கற்ற கொடி போன்ற பெண்கள் இசைபாடும் சப்தமும், அவர்கள் நடனம் செய்யும் சப்தமும் எட்டுத் திசையும் பரவிக் கீர்த்தியுடையதாக விளங்குகின்றது.

343. இசையெங்கும் இயலெங்கும்
ஏற்றவருக் கினிதுதவும்
நசையெங்கும் விருந்தினர்பால்
நயமெங்கும் மாடங்கண்
மிசையெங்கு மலங்காரம்
மேலெங்கு மணியொலிகள்
திசையெங்கு மலர்ச்சோலை
தெருவெங்கும் பூங்கொடிகள்.

(இ - ள்.) எவ்விடங்களிலும் ஏழிசை பாடுவர்; இயற்றமிழ் எவ்விடங்களிலும் கேட்பர்; யாசிப்பவருக்கு எங்கும் இன்பமாக அளிப்பர்; விருப்பமுடன் விருந்தினரைத்தேடுவார்; மாடிகள் மேல் எங்கும் அலங்காரம் செய்திருப்பர். தோரணங்களிலுள்ள மாணிக்கக் கோவையின் ஒளிகள் எங்கும் வீசும்;நாலுதிக்கிலும் புஷ்பங்களையுடைய சோலைகள்; வீதிகளெங்கும் அழகியகொடிகள் பறக்கும்.

344. இப்படியே யந்நகரிக்
கியலான வகையமைப்பித்
தொப்பரிய வரசவனத்
தூர்ப்பாகற் குயர்பூசை
முப்பொழுதும் புரிந்தொழுகு
முந்நூலோர் நன்னூலோர்
செப்பரிய வறுபதின்மர்
சிவமறையோர் தமையமைத்து

(இ - ள்.) இவ்வாறு அந்த நகரத்திற்கு இயல்பாகிய வகைகளெல்லாம் செய்வித்து, உவமையற்ற அரசவனத் தெழுந்தருளிய ஊர்ப்பாகங்கொண்ட சிகர சிகாமணி நாதருக்கு உயர்ச்சியாக மூன்று காலமும் பூசை செய்ய, முப்புரிநூல் தரித்தவரும் சிவாகம விதியுணர்ந்தவருமான சொல்லுதற்கரிய அறுபது சிவப்பிராமணர்களை அமர்த்தினன்.

345. இறைவற்குத் திருவந்திக்
காப்புமுத லேவலுக்கோர்
அறுபத்து நால்வரா
மரிவையரை யமைப்பித்துக்
குறைவற்ற திருச்செல்வங்
கோவிலுக்கு மெய்க்காவல்
மறுவற்ற வைந்நூறு
வயவீரர் தமையமைத்து.

(இ - ள்.) சிகரசிகாமணி நாதருக்குப் பள்ளியறை காவல் முதலியவற்றிற்கும், ஆபரணுதிகளைத் திருத்துவதற்கும், பணி விடை செய்வதற்கும், ஒப்பற்ற அறுபத்து நான்கு பேர் பெண் களையும் அமர்த்தி வைத்துப் பின்னும் குறைவில்லாத செல்வத்தை யுடைய சிவாலயத்திற்கு மெய்க்காவற்காரர்கள் ஐந்நூறு பேர்கள் பலம் பொருந்திய வீரர்களாக அமர்த்தினன்.

346. தூயதிரு மஞ்சனமுஞ்
சுரும்படையா மாலைகளும்
மேயநெறி தனிலுதவி
வியன்மாந்தர் சிலர்க்கருளி
நாயகனு ருடன்பெரிய
நாயகியார் சந்நிதிக்கும்
ஆயநிமித் தம்பலவு
மடைவுபெற வமைப்பித்து.

(இ - ள்.) பரிசுத்தமான திருமஞ்சனத் தீர்த்தமும், வண்டுகள் முகராத புஷ்பமாலைகளும் காலந்தவறுமல் கொடுக்கத்தக்க சிறந்தவர்கள் சிலரை, திட்டஞ் செய்து, சிகரசிகாமணி நாதர் சந்நிதியில் நடப்பது போலவே, பெரிய நாயகியம்மன் சந்நிதி யிலும் நடக்கும் வண்ணம் வேண்டியவற்றையெல்லாம் ஒழுங்காக அமைத்தனன்.

347. பங்குனிமா மதியதனிற்
பகர்வரிய கார்த்திகைநாள்
துங்கமணிக் கொடியுயர்த்தித்
தூய்சுடரா முத்திரநாள்
தங்குபுகழ் தீர்த்தமா
தக்கவா கமப்படியே
எங்களிறை திருவிழா
வியல்பிஞ லேயமைத்தான்.

(இ - ள்.) பங்குனி மாதம் கார்த்திகை நக்ஷத்திரத்தில் சிகர சிகாமணி நாதருக்குப் பரிசுத்தமான துவஜாரோகணம் செய்வித்து, உற்சவம் நடத்தி அதுமுதல் பத்தாம் நாளாகிய உத்திரநக்ஷத் திரத்தில் கீர்த்தியுள்ள தீர்த்தவாரியும் சிவாகமப்படியே செய் வித்தான்.

348. சைவநெறி மறைவழக்கந்
தவருதூர்ப் பாகற்கு
மெய்வளரும் பூசைநெறி
மிகுந்ததிரு நாள்பலவுங்
கைவருமன் புடன்செய்தான்
கலைமறையா கமத்தருளால்
தெய்வமுடி யுடன்பிறந்த
செய்தவத்துத் தெய்வீகன்.

(இ - ள்.) சைவமார்க்கங்களில் கூறும் வேதாகம விதி தவருமல் ஊர்ப்பாகங்கொண்ட சிகர சிகாமணி நாதருக்கு உண்மை யாக வளரப் பட்ட பூசாமார்க்கம் மிகுந்த திருவிழாக்கள் பலவும் அன்புடன் செய்வித்தான், கலைஞான வேதாகமத்தருளால் தெய் வீகமாகிய கிரீடத்துடன் பிறந்த தெய்வீகமகாராசன்.

349. அந்நகரிற் சிவாலயமிவ்
வணிதழைக்கக் கண்டெவர்க்கும்
உன்னரிய திருவுருவ
ரூர்ப்பாகர் திருக்கோயிற்
சந்நிதியிற் போய்ப்பணிந்தான்
சார்ந்துதொடர் பிரமஹத்தி
மின்னணிபூண் மணிவேந்தை
விட்டொழிந்து போயினதால்.

(இ - ள்.) அந்த அரசவனத்தில் சிவாலயமமைத்து விழாக்களும் செய்வித்து எவராலும் நினைத்தற்கரிய திருவுருவத்தையுடைய 'ஊர்ப்பாகர்' என்னும் சிகர சிகாமணிநாதர் ஆலய சந்நிதியிற் சென்று வணங்கினன். அப்போது அவனைத் தொடர்ந்து நீங்காதிருந்த பிரமஹத்தியானது மின்னலைப்போலப் பிரகாசிக்கும் மாணிக்கமாலை தரித்த தெய்வீகராசனை விட்டு நீங்கிப் போயிற்று.

350. விரிக்குமறை மிருகண்டு
மென்முனிவன் சாபத்தால்
அரக்கனாய்ப் பிறந்துவினை
யளவிறந்த செய்தவெலாம்
இரக்கமுடன் மன்னவன்பா
லெய்தலா லவைநீங்கி
வரக்கலைநூல் மறையவனும்
வானவர்தம் பதமடைந்தான்.

(இ - ள்.) அதன்பின் வேதபாராயணரான மிருகண்டு முனிவனிட்ட சாபத்தினால் அரக்கனாகப்பிறந்து அளவிறந்த வினைகள் செய்ததெல்லாம் சிவனருள் பெற்ற தெய்வீகராசன் கருணையாலும் அவனைச் சேர்ந்ததனாலும் பிரம்மசாரியின் சாபமும் பாபமும் தீர்ந்து தெய்வப்பதவியை அடைந்தான்.

351. சேரன்மா மகள்பதுமா
பதிதன்னைத் திருமணஞ்செய்
தாரவையீ ரைம்பதின்ம
ரரும்புதல்வ ரைப்பயந்தான்
வீரவே ளனையாரை
மிகுமலைய மானென்பார்
தாரணியின் மகத்துதித்த
சதுர்முடித்தார் தெய்வீகன்

(இ - ள்.) உலகில் குகமுனி யாகத்தில் முடியுடனும் மாலையுடனும் பிறந்த தெய்வீகராசன் பின்னர் சேரன்மகள் பதுமாபதி என்னும் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு அன்புடன் நூறு அருமையான புதல்வர்களைப் பெற்றான். வீர மிகுந்த மன்மதன் போன்ற அவர்களை யாவரும் மலையமான் என அழைப்பாராயினர்.

352. வடமதுரை யாயர்மன்னன்
மகிழ்வீர வர்மன்றன்
தடமுலையாள் கமலவல்லி
தனைமணந்திட் டறுபதெனும்
அடன்மிகுமைந் தர்களீன்றா
னுங்கவர்நத் தமர்நான்கு
சுடர்முடியா றிரண்டுதார்
தோளிலணி தெய்வீகன்.

(இ - ள்.) நான்கு பிரகாசமான முடிகளையும், பன்னிரண்டு மாலைகளையுமணிந்த தோளையுடைய தெய்வீகமகாராசன் மீண்டும் வடமதுரா புரியிலே ஆயர் குலத்து அரசனான வீர வர்மனுடைய மகள் பூரித்த தனபாரங்களையுடைய 'கமலவல்லி' என்னும் பெண்ணை மணந்து வெற்றியையுடைய அறுபது பிள்ளைகளைப் பெற்றான். அவர்கள் 'நத்தமன்னர்' என்னும் பெயர் பெற்றனர்.

353. அவனிபுக ழயோத்திதனி
லந்தணமன் சுருதிமகள்
நவமதியா மளகைதனை
நன்மணமாற் றிப்பயந்தான்
எவருமகிழ் வுறுமறுபத்
தெண்பரவர் சுருதிமான்
தவமருவுங் குகமுனிவன்
தருஞ்சதுர்மா முடியோனே.

(இ - ள்.) தவத்தையுடைய குகமுனிவரின் யாகத்திற் பிறந்து நான்கு முடிகளைக்கொண்ட தெய்வீகராசன் பின்னும் உலகம் புகழும் அயோத்தியிலே சுருதியந்தண அரசனின் மகள் பூரணசந்திரன் போன்ற 'அளகை' என்னும் பெண்ணை மணம் புரிந்து கொண்டு அவளிடமாக எல்லோரும் மகிழும்படி அறுபத்தெட்டுப் பிள்ளைகளைப் பெற்றான். அவர்கள் 'சுருதிமன்னர்' என அழைக்கப்படுவர்.

354. நலமருவுந் தெய்வீக
நராதிபனும் வழுதிதரும்
குலபதியாம் பெண்ணணங்கைக்
கூடன்மா மதுரைநின்றுஞ்
சலமகன்ற முதியோர்கள்
தமையேவி யழைப்பித்துச்
சிலபகலங் கவளுடனே
சேர்ந்துகலந் தின்புற்றான்.

(இ - ள்.) நன்மை பொருந்திய நரர்களுக்குத் தலைவனான தெய்வீகமகாராசன் பாண்டியராசன் குமாரத்தியாகிய 'குலபதி' யென்னும் பெண்ணை, கோபமற்ற முதியோர்களை மதுரைக்கு அனுப்பி, அழைப்பித்து, அவளுடன் சிறிதுநாள் கலந்து சுகமனுபவித்துக் கொண்டிருந்தான்.

355. ஈசனுர் திருவருளா
லிகல்வேந்தன் தனக்குரிய
நேசமிகு மொருபுதல்வன்
நிலஞ்செய்யும் தவமென்ன
தேசுமிகும் புகழுடனே
திருவவதா ரஞ்செய்தான்
மாசகலுந் தருமந்தான்
வளர்வதென வளர்ந்தனனுல்.

(இ - ள்.) தெய்வீகராசன் பாண்டியராச குமாரியோடு கூடிவாழுங் காலத்தில் ஈசனுடைய திருவருளினுலே, தெய்வீக ராசனின் அரசாட்சிக்கு ஏற்ற அன்பு மிகுந்த ஒரு புத்திரன், பூமி செய்த தவமென்று சொல்லும்படி புகழுடனே அவதரித்தனன். அக்குமரன் குற்றமற்ற சற்பாத்திரற்குச் செய்த தருமமானது வளர்வது போல் வளர்ந்து வந்தனன்.

356. வளர்குமரன் தனக்குரிய
மறைநூல்கள் முதலாய
உளமகிழுஞ் சிவநூல்க
ளுள்ளதெல்லாம் வருவித்துப்
பளககலக் கரிபரிதேர்
படைபயிற்று வித்தவனுக்
கிளவரசென் றணிமவுலி
யீரெட்டாண் டினிற்புனைந்து.

(இ - ள்.) வளரும் அந்தக் குமாரனுக்குத் தக்க வேதங்களும், சாஸ்திரங்களும் உள்ளம் மகிழும்படியாகச் சிவாகமநூல்களையும் வருவித்து, குற்றந்தீர யானை, குதிரை, ஆயுதப் பயிற்சி முதலானதும் பழக்குவித்து, பின்னர் இளவரசென்று அழகிய முடியையும் பதினுறும் வயதில் அணிவித்தான்.

357. கொங்கர்மக தர்துளுவர்
குலிங்கர்கே கயர்கலிங்கர்
வங்கர்போ சலர்குகுதர்
மாளுவர்ஆ ரியர்சீனர்
கங்கர்கோ சலர்வடகர்
கவுடர்பாஞ் சாலமுதல்
துங்கமா முடியரசர்
தொழுதுதிறை கொடுத்தனரால்.

(இ - ள்.) கொங்கதேசாதிபர், மகததேசாதிபர், துளுவ தேசாதிபர், குலிங்கதேசாதிபர், கேகயதேசாதிபர், கலிங்க தேசாதிபர், வங்கதேசாதிபர், போசலதேசாதிபர், குகுததேசா திபர், மாளுவதேசாதிபர், ஆரியதேசாதிபர், சீனதேசாதிபர், கங்கதேசாதிபர், கோசலதேசாதிபர், வடகதேசாதிபர், கவுட தேசாதிபர், பாஞ்சாலதேசாதிபர், முதலான முடியுடைய அரசர்கள் திறைப்பணம் செலுத்தும் வண்ணம் ஆட்சி புரிந்து வந்தான் தெய்வீகராசன்.

358. கொலைகளவு பொய்யொளிப்ப
கூறியமெய் வளர்ந்தேற
தொலைவருசீர் சேடன்முடி
சுமையாறப் புவிமாதும்
அலைவகலத் திங்கள்தொறும்
அன்புறமும் மழைபொழிய
சிலைமலையார் கோயிலெலாந்
திருப்பணிபூ சைகள்தழைக்க.

(இ - ள்.) கொலை, களவு, பொய் இவைகள் மறைந்தன. மெய் தழைத்து வளர்ந்தது. கீர்த்தியுடைய ஆதிசேஷன் சிரசின்பாரங் குறையவும், பூமிதேவியின் கனம் தீரவும் மாதமும்மாரி அன்புடன் பொழிந்தது. மலையை வில்லாக வளைத்த சிகர சிகாமணிநாதர் ஆலயங்களில் பணிவிடையும் பூசையும் தழைத்தோங்கின.

359. அஞ்செழுத்துந் திருநீறும்
அவனிமேற் றழைத்தோங்க
விஞ்சுமகத் தாகுதியும்
வேதமும்மெய் யும்விளங்க
இஞ்சொல்புனே மனுநெறியும்
இல்லறமும் மிகவளர்த்துத்
தஞ்சமென வுயிர்க்கெல்லாந்
தந்தைதாய் எனப்புரந்தான்.

(இ - ள்.) பஞ்சாக்ஷரமும்,விபூதியும் பூலோகத்தில் தழைத்து வளரவும், மேலான யாகமும், அவிர்ப்பாகமும், வேதமும், சத்தியமும் பிரகாசிக்கவும் இனிய சொற்களுடன் அரசநீதியும், இல்லற தர்மமும் மிகவும் வளர அடைக்கலமென்ற உயிர்களை யெல்லாம் தாய் தந்தை போலிருந்து தெய்வீகராசன் இரக்ஷித்து வந்தான்.

360. தன்னுயிர்போ லெவ்வுயிருந்
தாங்குநான் மாமவுலி
மன்னவனு மமைச்சர்தமை
வரவழைத்து மறுதேநீர்
என்னுடைய புதல்வனைக்கொண்
டிவ்வுலகம் புரப்பீரென்
றன்னவரை யுடன்படுத்தி
யருந்தவங்கள் தனின்முயன்றான்.

(இ - ள்.) தன்னுயிரைப் போலவே மற்றவர்களையும் காப் பாற்றும் நான்கு சிறந்த முடிகளையுடைய தெய்வீகராசன் மந்திரிகளை அழைப்பித்து நீங்கள் என் சொல்லை மறுக்காமல் என்னுடைய புத்திரனைக் கொண்டு இந்த உலகத்தை ஆட்சி செய்து வருவீர்கள், என்று கூறி அவர்களை இசையச் செய்து தான் அரிதாகிய தவம்செய்யத் தொடங்கினான்.

361. கரணங்கள் ஐம்புலன்கள்
கருதரிய தத்துவங்கள்
மரணங்கள் உறமென்மேல்
வந்தலையா வகையொதுங்கா
அரணங்கள் வேறிலையென்
றரிவையொரு பாகனிரு
சரணங்கள் நினைந்திருந்தான்
சருகுநீ ருங்கொண்டு.

(இ - ள்.) மனம், புத்தி, சித்தம், அகங்காரமென்னும் அந்தக்கரணங்களையும், சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம், ஐம்புலன்களையும், மெய், வாய், கண், மூக்கு, செவி, ஐம்பொறிகளையும், வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என்னும் கருமேந்திரியங்களையும், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களும் அடங்கிய இருபத்து நான்கு வித்தியா தத்துவமுங் கடந்து, மறுபடியும் மரணசேஷ்டைகள் உலகத்தில் பந்தப்படுத்தாவண்ணம் விலகிப்போக அடைக்கலம் வேறில்லையென்றறிந்து பெரியநாயகியை ஒரு பாகத்திற்கொண்ட சோதி லிங்க சிகரசிகாமணி நாதருடைய இரண்டு திருவடிகளையும், தியானித்துக்கொண்டு, சருகுகளையும், சலத்தையும் ஆகாரமாகக் கொண்டு தவஞ்செய்தான்.

362. எண்ணிறந்த நாளிவ்வா
றிருந்தவஞ்செய் காவலன்முன்
உண்ணிறைந்த நேயத்தா
லூர்விடைமே லொருபாகம்
பெண்ணிறைந்த திருவுருவும்
பெருமானுங் கணங்களுடன்
விண்ணிறைந்த தேவருடன்
விளக்கமுற மிகநின்றான்.

(இ - ள்.) எண்ணிக்கையற்ற நாட்கள் இவ்வாறு ' பெரிய தவம் செய்யும் தெய்வீகராசன் முன் உள்ளம் நிறைந்த அன்புடன் ரிஷபவாகனத்தின் மேல் ஒரு பாகத்தில் பெரியநாயகி யம்மை எழுந்தருளியிருக்க சோதிலிங்க சிகர சிகாமணிநாதர் சிவகணங்களுடனும், ஆகாயத்திலே நிறைந்த தேவர்கள் கூடி யிருக்க, எதிரில் தோன்றி காட்சியளித்தருளினார்.

363. சடைமுடியு மிளம்பிறையுந்
தயங்குவிழி யொருமூன்றும்
இடமருவு மலைக்கொடியும்
எழிற்புயங்கள் ஒருநான்கும்
உடையவொரு பவளவரை
யொளிர்வெள்ளி வரைவரல்போல்
அடல்விடைமேல் கண்டரசன்
ஆனந்தத் தழுந்தினனல்

(இ - ள்.) சடைமுடியும், அதில் மூன்றும்பிறையும், சோம சூரியாக்கினி என்ற மூன்று கண்களும், இடதுபாகத்தில் பர்வத ராஜகுமாரியாகிய பெரியநாயகி அம்மையும், அழகுபொருந்திய நான்கு புஜங்களுமுடைய ஒரு பவள மலையானது வெள்ளி மலையின் மேல்ஏறிக்கொண்டு வருவது போல் வெற்றியை யுடைய ரிஷப வாகனத்தில் ஏறிக்கொண்டுவந்து காட்சியளித்த சிவபெருமானைக் கண்டு அரசன் ஆனந்தத்தில் அழுந்தினன்.

கலிவிருத்தம்

வேறு

364. புலனாதிகள் கரணாதிகள்
போயங்கர னெய்த
உலையாததோர் பெருவாழ்வுக
ளுடையானரு ளுருவே
நிலையாகிய நெஞ்சங்கொடு
நின்றானவை நம்பித்
தொலையாதவர் கண்ணன்பொடு
தோயத்துதி செய்தான்.

(இ - ள்.) ஐம்புலன்களும், அந்தக்கரணங்களும் சேஷ்டை நீங்கிச் சிவகடாக்ஷம் கைகூட, கெடுதலில்லாத பெரிய வாழ்வை யுடைய சிகரசிகாமணிநாதர் திருவுருவை நிலைத்தமனமுடன் நின்று, அதனையே நம்பி, நீங்காத அருளுடைய அவர்பால் மனம் கலக்கத்துதி செய்யலானன்.

365. அருவேயரு ளுருவேமனம்
அறியாவகை நிறையும்
திருவேயடி யார்நெஞ்சுறை
தேவேவய மின்றி
மருவேயறி யாவன்பொடு
வாழ்வேயுல குக்கோர்
கருவேயென நின்றாய்சிவ
கங்காதர சரணம்.

(இ - ள்.) மனம், வாக்கு, காயங்களுக்கெட்டாத அருப மானவரே! அருள் சொரூபமானவரே! மனம் அறியாவண்ணம் நிறைந்திருக்கும் செல்வமே! பற்றற்ற அடியார்களின் இருதய கமலத்தில் வாசஞ் செய்யுங் கடவுளே! சைவ ஒழுக்கத்தின்வச மின்றியும் அடியார்களையும் சேர்ந்தறியாத அன்பர்களுக்கும் வாழ்வு தரும் தெய்வமே! செகத்துக்கு மூல வித்தானவனே! சிவனே! கங்கையைத் தரித்தவனே! உனது திருவடிகளே துணை.

366. அரிநான்முக னறியாவகை
யழன்மேனிய சரணம்
தெரியாவரு ளுருவாகிய
சிவசங்கர சரணம்
எரியாடிய பரமான்மழு
வியல்செங்கர சரணம்
கரியாருரி புனைநாயக
கருணாகர சரணம்.

(இ - ள்.) விஷ்ணு, பிரம்மா ஆகிய இருவரும் அறிய முடியா தபடி அக்கினி சொரூபமாக நின்றவரே நின் அடைக்கலம்; எவரும் அறிதற்கரிய அருள் உருவான சிவசங்கரா! நின் அடைக்கலம்; அக்கினியாகிய சுடலையிலே நடனம் புரியும் பரமனே! மான் மழு வேந்திய சிவந்த கரங்களையுடையவனே! நின் அடைக்கலம்; யானைத் தோலையணிந்த நாயகனே! கருணைக்கு இருப்பிடமான வனே! நின் அடைக்கலம்.

367. மறையார்முடி மேனின்றென
மருவும்பத சரணம்
குறையாவெளி நிறைவாயொரு
குலவும்பத சரணம்
இறையானறை யூர்தங்கிய
வெங்கோமக சரணம்
கறையார்மிட றுடையாயுயிர்
கருணகர சரணம்.

(இ - ள்.) நிறைந்த வேதத்தின் சிரசில் நடனஞ் செய்யும் பாதத்தையுடையவனே! நீயே துணை. குறைவில்லாத வெளியாய் நிறைந்தவனே! ஒப்பற்ற அடியார் இதயத்தில் சஞ்சரிக்கும் பாதத்தையுடையவனே! நீயே துணை. இறையானறையூர் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிறந்த தலைவனே! நீயே துணை. விஷம் பொருந்திய கண்டத்தினையுடையவனே! உயிர்களைக் கிருபையால் ரக்ஷிப்பவனே நீயே துணை.

368. மலைமாமகள் மலையாம்முலை
மருவும்புய சரணம்
சலமாமகள் புனைநாயக
தலைநாயக சரணம்
சிலையாலெயி லெய்தாயுயர்
தேவாதிப சரணம்
கலைமாமதி நதிசூடிய
கருணகர சரணம்.

(இ - ள்.) பர்வத ராசகுமாரியாகிய பெரியநாயகியம்மையின் மலைபோன்ற தனபாரங்களை யணையும் புஜத்தையுடையவரே! சரணம்; கங்கையைச் சிரசில் தரித்தவரே! ஒப்பற்ற தலைவரே! சரணம்; மகமேருவை வில்லாகக் கொண்டு திரிபுர சம்மாரஞ் செய்த தேவதேவனே சரணம்; கலைகளையுடைய மகத்தான சந்திரனையும் கங்கையையும் தரித்த கருணகடாக்ஷமுடையவனே சரணம்.

369. பந்தந்தனை யறவீசிய
பரிபூரண சரணம்
சந்தந்திரு நீறுயணி
தருமாகம சரணம்
எந்தம்பவ வினைபோயற
விங்கெய்தினை சரணம்
கந்தன்றனை யன்பாலருள்
கருணாகர சரணம்.

(இ - ள்.) பாவங்கள் எவ்வளவும் இல்லாமல் வெட்டியெறிந்து, எங்கும் நிறைந்தவனே! சரணம்; சந்தனுதிகளைத் திருநீறு போல் அணிந்து ஆகமவிதியை யளித்தவனே! சரணம்; எங்களுடைய பாவங்கள் தீர இங்கு எழுந்தருளிய நாதனே! சரணம்; முருகக் கடவுளை அன்பினாலே அளித்த கருணாகடாக்ஷமுடையவனே! சரணம்.

370. குன்றந்திகழ் சிகைவந்தருள்
குளிர்மாமணி சரணம்
அன்றங்கரி பெறவாழி
யளியாரண சரணம்
துன்றுங்கலை யயனார்தலை
துணிசெய்பர சரணம்
என்றென்றுரை குழறப்பரி
வெய்தத்துதி செய்தான்.

(இ - ள்.) வெள்ளி மலைபோலும் ரிஷபத்தின் மீது ஏறிவரா நின்ற குளிர்ச்சியுடைய சிறந்த மாணிக்கம் போன்றவரே சரணம்; முன்னாள் விஷ்ணுபெற்றுக்கொள்ளச் சக்கராயுதத்தை அளித்த வேதசொரூபமானவரே! சரணம்; நெருங்கிய கலைஞானமுடைய பிரம்மாவின் சிரசைக் கிள்ளிய பரப்பிரம்ம சொரூபனே! சரணம்; என்று இவ்வாறு மொழிகள் தடுமாற இறைவனுக்கு அன்புண்டாகும்படி தெய்வீகராசன் துதி செய்தனன்.

கொச்சகக்கலிப்பா

371. தொழுதான்மெய் மயிர்முகிழ்த்தான்
தூயதிரு வருளைநினைந்
தழுதான்பன் முறைபணிந்தான்
அருமறைகள் நிலங்களெலாம்
முழுதாகிப் படைத்தளித்து
முற்றுவித்து மப்பாலாம்
எழுதாத மணிவிளக்கை
யின்றருள்வா யெனமொழிந்தான்.

(இ - ள்.) வணங்கினான். சரீரத்திலுள்ள ரோமங்கள் சிலிர்க்க, சுத்தமான திருவருளை நினைந்து அழுதான். பலமுறை தெண்டனிட்டான். அரியவேதங்கள் பூமிகளாகியவெல்லாம் ஆகியும், சிருஷ்டி, ஸ்திதி, சம்மாரம் ஆகிய முத்தொழிலும் இயற்றியும், அதற்கு அப்பாலாகியுமுள்ள எழுதாத ரத்தினதீபம் போன்றவரை இன்று எனக்குத் தங்கள் திருவடி நீழல் தரவேண்டுமென்று தெய்வீகன் கூறினான்.

372. அங்கவனைப் பார்த்தருளி
யருளிமவான் காரணமுன்
தங்குமொரு சாபத்தால்
தலத்திடைவந் துதித்தாய்நீ
பொங்குவினை கழித்தொழித்தாய்ப்
போதுவா யெனப்புகன்று
துங்கவரு மறைமுழங்கச்
சுரர்முனிவர் கணமார்ப்ப.

(இ - ள்.) துதித்துவணங்கிய தெய்வீகராசனைச் சிவபெருமான் பார்த்து, கிருபையுடன் ''நீ முன் சென்மத்தில் தயவுடைய பர்வதராசன்; ஒரு காரணத்தினால் சாபம் நேரிட்டு அதனால் இந்தப் பூமியில் வந்து பிறந்தாய். உனது முன்வினை நீங்கிவிட்டது. இனி நீ உன்னுடைய பதவிக்குச் செல்வாய்'' என்று திருவாய் மலர்ந்தனர். அதுகாலை பரிசுத்தமும் அருமையுமுடைய வேதங்கள் கோஷித்தன; தேவர்களும், முனிவர்களும் ஆரவாரித்து, ஆசீர்வாதஞ் செய்தனர்.

373. தெய்வமுடி நிருபனுடன்
சென்றடைந்தான் மாயாத
பொய்வளரும் பெருமாயை
பூதங்கள் தனைநீங்கி
யைவரா யைந்தொழிற்கு
மதீதனாய் நாதாந்த
மெய்வளரும் பேரொளிக்கும்
விளக்கான விரிசடையோன்.

(இ - ள்.) தெய்வீகமாகிய நான்கு முடிகளையுடைய தெய்வீகராசனுடனே, அழிவில்லாத பொய்வளரும் பெரிய மாயையையும், பூதங்களையும் விட்டு நீங்கி ஐந்து வடிவாய், ஐந்து தொழிலுக்கும், அப்பாற்பட்டதாய் நாதாந்தமென்னும் மோக்ஷப் பொருளாய், சத்தியமாய் வளரும் பெரிய சோதிக்கும் சோதியான விரிந்த சடையையுடைய சோதிலிங்கப் பெருமானும் சென்று மறைந்தருளினார்.

வாழி விருத்தம்

374. உலகு மைந்தெழுத் தோதினர் வாழ்கவே
நிலவு நீறுடன் நீதியும் வாழ்கவே
குலவு நான்மறை கோமனும் வாழ்கவே
இலகு சைவமும் இன்பமும் வாழ்கவே.

(இ - ள்.) ஏழுகடலும், ஏழுதீவும், அஷ்டகுல பர்வதமும், மகாமேருவும், அதைச் சூழ்ந்த சக்கரவாளகிரியும் கூடிய உலகமும், பஞ்சாக்ஷர உபதேசம் பெற்ற பேர்களும் வாழ்க; விபூதியும், மனுநீதியும் வாழ்க; நாலுவேதமும், உலகையாளும் மன்னனும் வாழ்க; பிரகாசமான சைவசமயமும் ஆன்மகோடிகள் விரும்பும் இன்பசுகங்களும் மேன்மேலும் அபிவிருத்தியாகி வாழ்வதாக.

அநுபந்தம்
அறுசீர் விருத்தம்

1. வடமொழியாற் சூதமுனி புகலிறைவா
னறையூரின் மகிமைத் தீம்பாற்
கடலதனைத் திருமலைநா யகன்றமிழால்
துதிசெய்தான் கடைந்தெ டுத்தே
விடலரிய வுரையென்னும் நெய்த்தீபங்
கவிஞர்சபை மேவ வைத்தான்
திடமுதுகுன் றினின்மருவு சுப்புரா
யக்கவிஞன் செகத்தின் மீதே.

(இ - ள்.) வடமொழியினால் சூதமகா முனிவர் சொல்லிய இறையானறையூர் என்னும் க்ஷேத்திரத்தின் மகத்துவமாகிய திருப்பாற்கடலைத் திருமலைநாயகன் என்னும் புலவர் சிகாமணி காய்ச்சிப்பிறையிட்டுத் தமிழ்ப்பாடலாகிய தயிராகச் செய்தான். அந்தத் தயிரைக் கடைந்து வெண்ணெய் ஆக்கி உருக்கிவிட்டு நீங்காத அரிய உரையென்னும் நெய்த் தீபத்தைக் கவிவாணர்கள் நிறைந்தசபையில் பிரகாசிக்கும்படி, மேலான விருத்தாசலத்தில் வாசமாயிருக்கும் வீரசைவ **சுப்புராய தேசிகர்** என்னும் வித்துவான் பூலோகத்தில் விளங்க வைத்தனன்.

2. இறைவனறை யூர்புரா ணங்கடவுள்
வணக்கம்பத் தெழில்நாட் டெட்டும்
அறைநகரெட் டருச்சனைமுப் பத்திரண்டு
காரண்டன் அறுபத் தெட்டு
மறைபுகழ்தெய் வீகனெழு பத்துநான்கு
காரண்டன் வதையெட்டெட்டுமூன்று
நிறைநீரேற் றதுநூற்றைந் தாகமுந்நூற்
றெழுபதின்மே னிறைநாற் செய்யுள்.

(இ - ள்.) இறைவானறையூர் புராணம் கடவுள் வணக்க பாட்டு பத்து; அழகிய நாட்டுச் சருக்கம் பாட்டு எட்டு; நகரச் சருக்கம் பாட்டு எட்டு; அருச்சனைச்சருக்கம் முப்பத்திரண்டு பாட்டு; காரண்டன் உற்பவச்சருக்கம் பாட்டு அறுபத்தெட்டு; வேதம் புகழும் தெய்வீகன் உற்பவம் பாட்டு எழுபத்து நான்கு; காரண்டன் வதை பாட்டு அறுபத்தேழு; நீரேற்றச்சருக்கம் பாட்டு நூற்றைந்து ஆகச் செய்யுட்கள் முந்நூற்று எழுபத்து நான்கு ஆகும்.

இறைவாசநல்லூர்த்தல புராணம்

செய்யுண் முதற்குறிப்பகராதி

எண்-செய்யுளெண்

அருஞ்சொல் அகராதி

எண் - செய்யுளெண்

தல புராணங்கள்

செய்யுள்

பெயர்	ஆசிரியர்
திருவதிகைப் புராணம்	ஸ்ரீ அப்பாவையர்
அப்பரமேசர் தலபுராணம்	இளையான்கவிராயர்
திருஅம்பர்ப் புராணம்	மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள்
அம்பைத் தலபுராணம்	அரிகரமையர்
திருவரத்துறைப் புராணம்	அரங்காசாரி (ரங்கசாமி ஐயங்கார்)
அரிமழத் தலபுராணம்	மு. ரா. கந்தசாமிக் கவிராயர்
அருணகிரிப் புராணம்	சிதம்பரம் மறைஞான தேசிகர்
அருணாசல புராணம்	சைவ-எல்லப்பநாவலர்
அவிநாசிப் புராணம்	வயித்திய நாதன் இளையான்
அன்னதான மகத்துவ புராணம் (கூவலப்புரம்)	பெரிய சுப்பாரெட்டியார்
ஆச்சாபுரத் தலபுராணம்	கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்
திருவாடானைப் புராணம்	சாமிநாத தேசிகர்
திருவாப்பனூர்ப் புராணம்	கந்தசாமிப் புலவர்
திருவாமாத்தூர்த் தல புராணம்	ஸ்ரீமத் தண்டபாணி சுவாமிகள்
திருவாரூர்த் தியாகராச லீலை	மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள்
திருவாரூர்ப் புராணம்	சம்பந்த முனிவர்
கமலாலயச் சிறப்பு என்னும் திருவாரூர்ப் புராணம்	மறைஞான சம்பந்த நாயனார்
திருவாலங்காட்டுப் புராணம்	தியாகராஜ கவிராயர்
ஆற்றூர்ப் புராணம்	மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்
திருவானைக்காப் புராணம்	ஸ்ரீ கச்சியப்ப சுவாமிகள்
இலக்குமிபுரஸ்தல புராணம்	சுப்பிரமண்ய ஐயர்
இலுப்பைக்குடிப் புராணம்	தஞ்சை சுப்பிரமணிய ஐயர்
இளைசைப் புராணம்	கணேச பண்டிதர்
ஈழத்துச் சிதம்பர புராணம்	புலவர்மணி சோ. இளமுருகனார்
திருவுத்தர கோசமங்கைத் தல புராணம்	மாசிலாமணி ஞான சம்பந்த தேசிகர் சிஷ்யர்

உவரியூர்த் தலபுராணம்	கவிஞர். சா. வேலப்பன்
உறையூர்ப் புராணம்	மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்
திருஎறும்பியூர்ப் புராணம்	காஞ்சி நாகலிங்க முனிவர்
திருவேடகப் புராணம்	தஞ்சை. சுப்பிரமணிய ஐயர்
திருவையாற்றுப் புராணம்	ஸ்ரீ ஞானக் கூத்தர்
திருவொற்றியூர்ப் புராணம்	திருவொற்றியூர் ஞானப் பிரகாசர்
திருவோத்தூர்ப் புராணம்	கருணுகரக் கவிராயர்
திருக்கச்சூர் ஆலக் கோயிற் புராணம்	வெண்பாப்புலி வேலுசாமிப் பிள்ளையவர்கள்
திருக்கடகப் புராணம்	கனக சபாபதி ஐயர்
திருக்கடந்தைப்புராணம்	....
கடம்பநாத புராணம்	ஈசான்தேசிகர்
கடம்ப வனப் புராணம்	வீமநாத பண்டிதர்
கண்ட தேவிப்புராணம்	மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்
கதிர்காம புராணம்	சி. நாகலிங்க பிள்ளை
திருக்கருப்பறியலூர்த் தல புராணம்	மருதூர் அம்பலவாணர்
கருவூர்ப்புராணம்	சத்தியஞானியார் மாணுக்கர்
திருக்கருவைத் தலபுராணம்	திருமலை வேற்கவிராயர்
திருக்கழிப் பாலைப் புராணம்	ச. சிவப்பிரகாச பண்டிதர்
திருக்கழுக்குன்றப் புராணம்	அந்தகக்கவிவீரராகவ முதலியார்
திருக்களர்ப் புராணம்	களந்தை ஆதியப்பனுர்
கன்னியாகுமரித் தல புராணம்	ஸ்ரீ சங்கர நாவலர்
காசி ரகசியம்	மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்
காஞ்சிப்புராணம்-முதற்காண்டம்	சிவஞான யோகிகள்
காஞ்சிப் புராணம் இரண்டாம் காண்டம்	கச்சியப்ப முநிவர்
பழைய காஞ்சிப் புராணம்	கச்சிக்கச்சாலை தேசிகர்
காஞ்சிப் புராணக் கலித்துறை	பதிப்பாசிரியர்: காஞ்சி நாகலிங்க முனிவர்
சீகாழித்தல புராணம்	அருணுசலக் கவிராயர்
சீகாளத்திப் புராணம்	கருணைப் பிரகாச சுவாமிகள் சிவப்பிரகாச சுவாமிகள் வேலைய சுவாமிகள்

திருகாளத்திப் புராணம்	ஆனந்தக் கூத்தர்
காளையார் கோயிற் புராணம்	தஞ்சை. சுப்பிரமணிய ஐயர்
திருக்காறாயிற் புராணம்	சிதம்பரச் செட்டியார்
திருக்குடந்தைப் புராணம்	மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்
கும்பகோணப் புராணம்	சொக்கப்பப் புலவர்
குடியேற்ற நல்லூர்ப்புராணம்	ஆ. க. குமாரசாமி பண்டிதர்
குருகை மான்மியம்	திருக்குருகைப் பெருமாள் கவிராயர்
திருக்குற்றாலத் தலபுராணம்	திரிகூட ராசப்பக் கவிராயர்
திருக்குறுக்கைப் புராணம்	மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்
திருக் கூடலையாற்றூர்ப்புராணம்	ந. சந்திர சேகர நாயகர்
கூடற் புராணம்	....
திருக்கூவப் புராணம்	சிவப்பிரகாச சுவாமிகள்
கேதாரீஸ்வர புராணம்	முருகப்ப செட்டியார்
திருக்கேதீச்சரப் புராணம்	ச. கு. வைத்தீசுவரக் குருக்கள்
கோட்டூர்ப் புராணம்	தஞ்சை. சுப்பிரமணிய ஐயர்
கோயிற் புராணம்	ஸ்ரீ உமாபதி சிவாசாரிய சுவாமிகள்
சிதம்பர புராணம்	புராணத்திருமலைநாதர்
சிதம்பர சபாநாத புராணம்	சபாபதி நாவலர்
புலியூர்ப் புராணம்	வித்துவான். சிவானந்தையர்
திருச்சித்திர கூட புராணம்	ஏ. வே. இராமாநுஜ நாவலர்
கோயிலூர்ப் புராணம்	மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்
கோலாசலஸ்தல புராணம்	ஓரியன்டல் மேனஸ்கிரிப்ட் லைப்ரரி வெளியீடு
திருக்கோவலூர்ப் புராணம்	....
திருக்கோளபுரப் புராணம்	வேலாயுத தேசிக சுவாமிகள்
சங்கர நாராயண சுவாமி	சீவல மாற பாண்டியர்
கோயிற் புராணம்	முத்து வீரப்பக் கவிராயர்
சங்கரவிலாசம்	சிதம்பர நாதகவி
சாயாவன புராணம்	கவிராஜ நாயகம் பிள்ளையவர்கள்
சித்தவட மான்மியம்	சொக்கலிங்கச் செட்டியார்
சிவசயிலத் தலபுராணம்	வீரப்ப முதலியார்
சிவமலைப் புராணம்	அம்பலவாணக் கவிராயர்
சுசீந்திரஸ்தல புராணம்	முத்தமிழ்க் கவிராயர்
சுதரிசனகிரி புராணம்	ஆராவமுதாசாரியர்

திருச்சுழியற் புராணம்	ஸ்ரீமத் அம்பலவாண நாவலர்
சூதவனப் புராணம்	ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியார்
சூரைமாநகர்ப் புராணம்	மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்
திருச்செங்கோட்டுப் புராணம்	தென்காசி கவிராஜ பண்டிதர்
திருச்செந்தூர்ப் புராணம்	வென்றிமாலைக் கவிராசர்
செவ்வந்திப் புராணம்	சைவ. எல்லப்ப நாவலர்
சென்னிமலைத் தலபுராணம்	சரவணவிரத முனிவர்
சென்னை ஸ்ரீ செல்வக் கந்த நாதர் தலபுராணம்	வரகவி ஸ்ரீ கிருஷ்ணப்ப செட்டியார்
சேது புராணம்	நிரம்பவழகிய தேசிகர்
சேறைத் தலபுராணம்	பொன்னுயிரங்கவிராய மூர்த்திகள்
திருச்சோற்றுத்துறை தல புராணம்	அம்பலவாண தேசிகர்
ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணம்	பண்டிதராசர்
தணிகாசல புராணம்	திருத்தணிகைக் கந்தப்பையர்
தணிகைப் புராணம்	கச்சியப்ப முனிவரர்
தந்திவனப்புராணம்	கமலைஞானப்பிரகாசர்
திருத்தலையூர்ப் புராணம்	ஸ்ரீநிவாச பாரதி
திருத்தவத்துறைப் புராணம்	பழூவூர் குமாரசுவாமி முதலியார்
தனியூர்ப் புராணம்	மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்
தாராபுரத்தலபுராணம்	வேலாயுத பண்டிதர்
தாருகாபுரத் தலபுராணம்	ஸ்ரீ அ. பிச்சையா நாவலர்
திரிசூலகிரி புராணம்	திரிகூடராசப்பக்கவிராயர்
திரிமூர்த்தி மலைப்புராணம்	வேலாயுத பண்டிதர்
திருத்துடிசைப் புராணம்	பதிப்பாசிரியர்: துடிசைகிழார் அ. சிதம்பரனுர்
திருத்துருத்திப் புராணம்	மீனுட்சி சுந்தரம்பிள்ளையவர்கள்
தீர்த்தகிரி புராணம்	சைவ எல்லப்ப நாவலர்
தேவதாரு வனத்தலபுராணம்	பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்
திருவாஞ்சியத்தல புராணம்	களந்தை-குமரன்
திருவாலவாயுடையார் திரு விளையாடற் புராணம்	பெரும்பற்றப்புலியூர் நம்பி
திருவிளையாடற் புராணம்	பரஞ்சோதி முனிவர்

14

தில்லையாளி ஸ்தலபுராணம்	ஸ்ரீ நா. தம்பியப்ப செட்டியார் ஸ்ரீ தெ. வேதியப்ப பிள்ளை
நல்லூர்ப் புராணம்	வைத்தியநாத தேசிகர்
திருநள்ளாற்றுப் புராணம்	....
நாகூர்ப் புராணம்	குலாம்காதிறு நாவலர்
திருநாகேச்சுரப் புராணம் (உரைச் செய்யுள்)	ப. சிங்கார வேற்பிள்ளை
திருநாகைக்காரோணப் புராணம்	மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்
திருநாவலூர்ப் புராணம்	இராசப்பக் கவிராயர்
திருநீடூர்த்தல புராணம்	இறையூர் வடமலை நாரணக் குடைமன்னர்
திருப்பத்தூர்ப் புராணம்	ஆ. க. குமாரசுவாமி முதலியார்
திருநெல்வாயிற் புராணம்	சி. நாகலிங்க பிள்ளை
திருநெல்வேலித் தலபுராணம்	நெல்லையப்பபிள்ளையவர்கள்
பட்டீச்சரப் புராணம்	ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்
திருப்பரங்கிரிப் புராணம்	ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகர்
பவாநி கூடற்புராணம்	வாசுதேவ முதலியார்
பழனித்தல புராணம்	வால சுப்பிரமணியக் கவிராயர்
பள்ளியகரப் பழங்கதை	மெய்யறியா முனிவர்
திருப்பறியலூர்ப் புராணம்	பின்வேலப்ப தேசிகசுவாமிகள்
திருப்பனந்தாள் தலபுராணம்	ஸ்ரீமத் செஞ்சடை வேதிய தேசிகர்
திருப்பனைசைப் புராணம்	நாராயண முதலியார் எல்லப்ப முதலியார்
திருப்பாசூர்ப் புராணம்	சே. கந்தசாமி முதலியார்
திருப்பாண்டிக் கொடுமுடிப் புராணம்	வெங்கடரமண தாசர்
திருப்பாதிரிப் புலியூர்ப் புராணம்	இலக்கணம் ஸ்ரீ சிதம்பர நாத முனிவர்
பாவநாசத் தலபுராணம்	அட்டாவதானம்-சொக்கலிங்கப் புலவர்
திருப்புட்குழி மணிகண்டேசுவரர் மான்மியம்	திருப்புட்குழி பட்டாபிராம பிள்ளை
திருப்புத்தூர்ப் புராணம்	ரா. ம. சொ. சொக்கலிங்கச் செட்டியார்
புதுவைத்தல புராணம்	வயித்தியலிங்கம் பிள்ளை

புள்ளிருக்கு வேளூர்ப்புராணம்	வடுகநாத தேசிகர்
திருப்புன்கூர்ப் புராணம்	கனகசபைக் கவிராயர்
திருப்புனவாயிற் புராணம்	திருவாரூர் தியாகராஜ கவிராஜ தேசிகர்
திருப்பூவணப் புராணம்	கந்தசாமிப் புலவர்
பூவாளூர்ப் புராணம்	ஸ்ரீ கச்சியப்ப முனிவர்
திருப்பெருந்துறைப் புராணம்	மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்
திருப்பெருந்துறைப் புராணம்	சுந்தரலிங்க முனிவர்
பெருந்தோட்டத்து அத்தீச்சுர புராணம்	ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியார்
பேரூர்ப் புராணம்	ஸ்ரீ கச்சியப்ப முநிவரர்
திருப்பைஞ்ஞீலி புராணம்	மதுரை மெய்ப்பாத புராணிகர்
மண்ணிப்படிக்கரைப் புராணம்	மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்
திருமயிலைத் தலபுராணம்	புராண ரத்னகரம் மயிலை நாதமுனி முதலியார்
திருமயிலைத் தலபுராணம்	அமிர்தலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
மயூரகிரி புராணம்	வேதாந்த சுப்பிரமணிய பிள்ளை
மயூராசல புராணம்	தியாக ராஜக்கவிராயர் (விருத்தாசலம்)
மருதவனப் புராணம்	கொட்டையூர்-ஸ்ரீ சிவக் கொழுந்து தேசிகர்
திருமழுவாடிப் புராணம்	ஸ்ரீ கமலை ஞானப் பிரகாச தேசிகர்
மாயூரப் புராணம்	மகாவித்துவான். ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்
திருமுட்ட புராணம்	ஸ்ரீமாந் இராமாநுஜ நாவலர்
திருமுருகன் பூண்டிப் புராணம்	வாசுதேவ முதலியார்
திருமுல்லை வாயிற்புராணம்	திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளை
திருமுல்லை வாயிற்புராணம்	சீகாழி வடுகநாத தேசிகர்
திருவரன்குளப்புராணம்	ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்
வல்லஸ்தல புராணம்	சிவானந்த மூர்த்தி நாயனர்
திருவாட்போக்கிப் புராணம்	வைத்தியநாத தேசிகர்
திருவாளொளி புற்றூர்ப் புராணம்	மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்

திருவான்மியூர்ப் புராணம்	பூவை. கலியாண சுந்தர முதலியார்
வானரவீர மதுரைப்புராணம்	மதுரை சுப்பிரமணியம்
திருவிடையூர்த் தலபுராணம் முதற்காண்டம்	அசலாம்பிகையம்மாள்
திருவிடையூர்த் தலபுராணம் இரண்டாம் காண்டம்	குழந்தை வேலுப்பிள்ளை
திருவிரிஞ்சைப் புராணம்	சைவ. எல்லப்ப நாவலர்
விருத்தாசல புராணம்	ஞானக் கூத்த சிவப்பிரகாச தேசிகர்
வில்லைப் புராணம்	வீரராகவகவி
வில்வாரண்யஸ்தல புராணம்	வேலைய சுவாமிகள்
விளத்தொட்டிப் புராணம்	ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்
வீரசிங்காதன புராணம்	வேலைய சுவாமிகள்
வீரவனப் புராணம்	மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்
வீரைத்தல புராணம்	கைலாச பண்டாரம்
வெஞ்சமாக் கூடற்புராணம்	முத்துச்சாமிக் கோனார்
திருவெண்காட்டுப் புராணம்	சைவ. எல்லப்ப நாவலர்
திருவெண்ணெய் நல்லூர்த்தல புராணம்	திரு. வடிவேல் முதலியார்
திருவெற்றியூர்ப் புராணம்	சிந்நயச் செட்டியார்
திருவேங்கடஸ்தல புராணம்	வீரராகவ ஸ்வாமி ஐயங்கார்
தென் திருப்பதி புராணம்	விருபாட்சலிங்கையர்
திருவேட்டீசுரர் புராணம்	வேங்கடாசல பிள்ளை
வேணுவன புராணம்	....
வேதாரணிய புராணம்	பரஞ்சோதி முனிவர்
வேதாரணிய புராணம்	அகோர தேவர்
திருவேற்காட்டுப் புராணம்	பூவை. கலியாண சுந்தர முதலியார்
திருவேற்காடு ஸ்ரீ தேவிகருமாரி அம்மன் புராணம் முதற்பகுதி ஓம் சக்தி காண்டம்	அருட்கவி ஸ்ரீ தேவி கருமாரி தாஸர்
திருவேற்காடு ஸ்ரீ தேவி கருமாரிஅம்மன் புராணம் இரண்டாம் பகுதி கருமாரி காண்டம்	அருட்கவி ஸ்ரீ தேவி கருமாரி தாஸர்
திருவைகற் புராணம்	சி. நாகலிங்க பிள்ளையவர்கள்
திருவைகாவூர்ப் புராணம்	சி. வேலைய தேசிகர்
வைரவன் கோயிற்புராணம்	வி. நடராச கவிராயர்

தலபுராணங்கள் (உரைநடை)

திருவகீந்திர புரஸ்தல மகாத்மியம்	ஸ்ரீ. உப. ரங்கராகவாசாரியார்
திரு அல்லிக்கேணி மஹாத்மியம்	மயிலை. கொ. பட்டாபிராம முதலியார்
அரிய துறை தல புராணம்	பூவை-கலியாண சுந்தர முதலியார்
அழகர் கோயில் ஸ்தல மான்மியம்	ஆத்தான் சடகோப ராமாநுஜ ஜீயர் சுவாமிகள். திருவடி சம்பந்தர்
அன்பிலாலந்துறை என்னும் பிரேமபுரி ஸ்தலமான்மியம்	அ. நரசிம்ம பாரதியார்
ஸ்ரீபுரம் என்னும் திருவாரூர் ஸ்ரீ தியாகராஜ லீலை முதல்பகுதி தேவலீலை ஐம்பது	
ஸ்ரீபுரம் என்னும் திருவாரூர் ஸ்ரீ தியாகராஜலீலைகள் இரண்டாம் பிரிவு-உத்தராயண லீலைகள் முதற்பாகம் (51 முதல்130 லீலை முடிய)	
திருவாரூர் ஸ்ரீ தியாகராஜ லீலைகள் இரண்டாம் பிரிவு- உத்தராயண லீலைகள் இரண்டாம் பாகம்(131 முதல் 211 லீலை முடிய)	
ஸ்ரீ புரம் என்னும் திருவாரூர் ஸ்ரீ தியாகராஜ லீலைகள் மூன்றாம் பிரிவு தக்ஷிணயனலீலை (212 முதல் 364 முடிய)	
திருவிடவெந்தை மாகாத்மியம்	எஸ். வி. வரதராஜ ஐயங்கார்
திருவிடும்பாவனம் திருக்கோயில் வரலாறு	வித்துவான் சோம சுந்தரனார்
திரு. இரும்பூளை என்னும் ஆலங்குடி தலவரலாறு	கோ. சிவஞானம்
திரு இலஞ்சி குமாரர் கோயில் வரலாறு	திரு. ஏ. நாறும்பூ நாததேசிகர்
ஸ்ரீ உத்தமர் கோயில் வரலாறு	திரு. ஆர். பஞ்சநதம்பிள்ளை
ஒப்பிலியப்பன் கோயில் தல புராணம்	ஸ்ரீமான். வ. ந. ஸ்ரீராமதேசிகாசார்ய ஸ்வாமிகள்

கங்கை கொண்ட சோழ புரம் ஸ்ரீ பிருகதீஸ்வரர் (பெருவுடையார் கோயில் வரலாறு	திரு. ஆர். பஞ்சநதம்பிள்ளை
திருக்கடவூர்ப்புராணம்	பாலகிருஷ்ண தீக்ஷிதர்
திருக்கண்ண புரத்தலவரலாறு	ஸ்ரீ டி. கே. முத்துஸ்வாமி சாஸ்திரிகள்
கருப்பத்தூர் சிம்மபுரீசுவரர் ஸ்தல புராணம்	துரைசாமி சாஸ்திரி
திருக்கல்லங் குறிஞ்சி-கலியுக வரதராஜப்பெருமாள் ஸ்தல புராணம்	என். கனகராஜையர்
கழுகுமலைத் தலவரலாறு	திருக்கோயில் நிர்வாகம் வெளியீடு:
திருக்கன்றுப்பூர்ப் புராணம்	ஆலங்குடி அ. கோபாலையர்
காசி மாஹாத்மியம்	வ. சு. செங்கல்வராய பிள்ளை
திருக்காட்டுப்பள்ளித் தல வரலாறு	வித்துவான் தி.கி. சுந்தரமூர்த்தி வித்துவான் தி.ச. சுப்பிரமணியம்
காமக்கூரென வழங்கும் காம நகர்ப்புராணம்	காமக்கூர் மங்களக் கவிராயர்
காரைநகர் மான்மியம்	வித்துவான் F. X. C. நடராசா
குங்கும வனஸ்தலபுராணம்	மு. சுவாமிநாத தேசிகர்
திருக்குட வாயிற்புராணம்	பதிப்பாசிரியர் வ. சு. சண்முகம் பிள்ளை
திருக்குமர கோட்டத்தல வரலாறு	புலவர். ச. சதாசிவம்
குமார வயலூர்க் கோயில் வரலாறு	திரு ஆர். பஞ்சநதம்பிள்ளை
திருக்குவளைத்தல வரலாறு	வித்துவான். இராமலிங்கத் தம்பிரான்
கொட்டையூர்த் தலமான்மியம்	வித்துவான் வை. சுந்தரேச வாண்டையார்
திருக்கொள்ளம்பூதூர் கோயில் வரலாறு	திரு. ஆர். பஞ்சநதம்பிள்ளை
கோகர்ண புராணசாரம்	வ. சு. சண்முகம் பிள்ளை
கோணேஸ்வரர் ஆலயவரலாறு	....
திருச்சக்கரப்பள்ளி முதலிய ஏழூர்க் கோயிற் பெருமை	திரு. சாமி. வேலாயுதம்பிள்ளை

திருச்சிற்றேமச் சிவக்ஷேத்திர விளக்கம்	தி. மு. சுவாமிநாத உபாத்தியாயர்
திண்டிமாநகர்த் தலபுராணம்	பி. கே. ஷண்முகநாதன்
திரிசிராமலை மான்மிய சங்கிரகம்	தி. வீ. ஷண்முகம் பிள்ளை
துறைசைப்புராணம்	ஞானனந்தா
திருநறையூர்த் தலபுராணம்	நா. ஸ்ரீகாந்தராமாநுஜர்
நன்னிலம் ஸ்தலபுராணம்	பி. எஸ். நடேசையர்
திருநாட்டியத்தான்குடி தலவரலாறு	திரு. ப. இராமநாத பிள்ளை
நீடாமங்கலம் ஸ்ரீ சந்தானராம சுவாமி கோயில் ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி கோயில்வரலாறு	திரு. ஆர். பஞ்சநதம்பிள்ளை
திருநீர்மலைஸ்தலபுராணம்	தி.லிட்டில் ப்ளவர் கம்பெனி
திருநெல்லிக்கா தலபுராணம்	சுந்தரேச பாரதியார்
திருநெல்வாயிற் புராணம்	சி. நாகலிங்கபிள்ளை
திருப்பயற்றூர் என்னும் திருப்பயத்தங்குடித் தலவரலாறு	வித்துவான். மு. இரத்தின தேசிகர்
பரிதிநியமம் ஸ்ரீ பரிதியப்பர் கோயில்வரலாறு	திரு பஞ்சநதம்பிள்ளை
திருப்பழனத் தலபுராணவசனம்	வ. சு. சண்முகம் பிள்ளை
கோடம்பாக்கம் வடபழனி ஆண்டவர் திருக்கோயில் வரலாறு	ஆ. சுப்பிரமணிய நாயகர்
திருப்பனையூர் தலவரலாறு	சி. கோவிந்தராசனார்
திருப்பாச்சிலாச்சிரமக் கோயில் வரலாறு	திரு. ஆர். பஞ்சநதம்பிள்ளை
திருப்பிடவூர்க் கோயில்வரலாறு	திரு. ஆர். பஞ்சநதம்பிள்ளை
திருப்புல்லாணி மான்மியம்	மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலைப்பதிப்பு
திருபுவனத் தலவரலாறு	தருமபுர ஆதீன வெளியீடு:
திருப்பூவனூர்ப்புராண வசனம்	. . . .
ஸ்ரீ பெரும்புதூர் மஹாத்மியம்	மயிலை. கொ. பட்டாபிராம முதலியார்
தென் திருப்பேரை திருப்பதி வரலாறு	அடியன் மணிவாசகன்
திருப்போரூர்த்தல புராணச் சரித்திரச் சுருக்கம்	புரசை. சபாபதி முதலியார்
மதுரைத்தலவரலாறு	செந்தமிழ்ப்பிரசுரம்

மல்லாபுர க்ஷேத்திரத்தின் மாஹாத்மியச் சுருக்கம்	ஈகை. வரதாசாரியார் சுவாமிகள்
ஸ்ரீ ரங்கமகத்துவம்	....
இக்ஷ்வாகு குலதனம் என்னும் ஸ்ரீரங்க மாஹாத்மியம்	தி. லிட்டில் ப்ளவர் கம்பெனி
வடரங்க ஸ்தலபுராணம்	டி. சுந்தரேச ஆச்சாரியார்
ரிஷிவந்தியம் ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் தேவஸ்தான சிறப்புநூல்	தேவஸ்தான வெளியீடு
திருவலஞ்சுழி	திரு. அடிகளாசிரியர்
திருவலிதாய புராணம்	பூவை. கலியாண சுந்தர முதலியார்
வழுவூர்க் கோயில்வரலாறு	திரு. ஆர். பஞ்சநதம்பிள்ளை
திருவாதவூர்த் தலபுராணம்	கு. க. ஸ்ரீ. ரசபதி
திருவாய்மூர்ஸ்தலபுராணம்	திரு. இராமசுப்பையன்
திருவிற் குடித்தலவரலாறு	திரு. மு. இரத்தினதேசிகர்
திருவீழிமிழலைப்புராணவசனம்	
தேஜிநீவன மாஹாத்மியம்	
திருவெங்கை மான்மியம்	வெங்கனூர் சிவப்பிரகாச சுவாமிகள்

நூல் நிலைய வெளியீடுகள்

		ரூ.	பை
1	ஐங்குறுநூறு மூலமும் பழைய உரையும்	12	00
2	பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும்	10	00
3	பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும்	15	00
4	மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும்	30	00
5	காஞ்சிப்புராணம்	25	00
6	இறைவாச நல்லூர்த்தல புராணம்	10	00
7	சமணாலயச் சிறப்பு	5	00
8	நவநீதப்பாட்டியல்-மூலமும் உரையும்	2	00
9	அபிநய தர்ப்பணம்-2 ஆம் பதிப்பு	15	00
10	குமாரலிங்கர் குறவஞ்சி	6	00
11	நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதி	10	00
12	சங்கர ராசேந்திர சோழன் உலா	5	00
13	வாட்போக்கியுலா	7	50
14	ஆதிவராகப் பெருமாள் வருக்கக்கோவை	12	00
15	அழகர் கிள்ளைவிடுதூது	3	00
16	தமிழ் விடுதூது	3	00
17	மான் விடுதூது	3	00
18	மூவரையன் விறலி விடுதூது	12	00
19	சொர்ணபுரி அம்பிகை பிள்ளைத்தமிழ்	7	00
20	தனிப்பாடல்கள்	20	00
21	அகராதி நிகண்டு	15	00
22	வடமலை நிகண்டு	15	00
23	வாகட அகராதி	5	00
24	சைவ சித்தாந்த உரைநடை	5	00
25	என் சரித்திரம் 3 ஆம் பதிப்பு	48	00
26	என் ஆசிரியப்பிரான்	12	00
27	சங்கத்தமிழும் பிற்காலத்தமிழும்	8	00
28	நான் கண்டதும் கேட்டதும்	5	00
29	உதயணன் சரித்திரச் சுருக்கம்	2	[illegible]
30	திருக்குறள் (ஸம்ஸ்கிருத மொழிபெயர்ப்புடன்)	15	00

[illegible]